# நிழலாக நானிருப்பேன்

அமுதவல்லி கல்யாணசுந்தரம்



Optimized by www.ImageOptimizer.net

# நிழலாக நானிருப்பேன்!

## 1

திருவான்மியூரில், கிழக்கு கடற்கரை சாலையை ஒட்டி, அமைந்து இருக்கும் திருவள்ளுவர் நகர், வாக்கிங் போக அனைத்து வயதினரும் தயாராகிக் கொண்டு இருக்கும் காலை ஆறு மணி. இளங்காலைச் சூரியன் இதமான வெளிச்சத்தை, சூடு இல்லாமல் பரப்பி உலகத்தினரைத் துயில் எழுப்ப, தனது உடற்பயிற்சியை முடித்து, வியர்வையில் உடலோடு ஒட்டிய உடையுடன் ஓடி வந்து, அப்போதுதான் திறக்கப்பட்டு கொண்டு இருந்த அந்த பல்பொருள் அங்காடி முன்பு மூச்சு வாங்க நின்றது ராஜீவன்.

"குட்மார்னிங் தாத்தா, என்ன இன்னிக்கு நான் வருவதற்கு முன்னாடியே கடை திறந்துட்டீங்க? நான்

Optimized by www.ImageOptimizer.net

லேட்டா?'' என்று சிரிப்புடன் கேட்டபடி நின்றவனின் வயது இருபத்தி எட்டு. அப்பா மணிகண்டன். அம்மா விமலா. பெரும்பான்மையான ஆண்கள் தேர்ந்தெடுக்க தயங்கும் படிப்பான கேட்டரிங் மேனேஜ்மென்ட், முடித்து, கல்லூரியில் விரிவுரையாளராக மூன்று ஆண்டுகளாக பணி புரிகிறான்.

ராஜீவன் கேட்டரிங் படிப்பை எடுத்ததனால், அம்மாவை எதிர்பாராமல், வேலை நிமித்தம் சென்னையில் தனிக் குடித்தனம் நடத்த, இந்திய விமான படையில் வேலை செய்யும் அப்பாவிற்குத் துணையாக பெங்களூரில் வாசம் செய்கிறார் அம்மா. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பெற்றோர்களைப் பார்த்து வருவான்.

''நீ மிலிட்டரிகாரர் மகனாச்சே? லேட் என்று சொல்ல முடியுமா? நான் தான் முன்னாடி கடை திறக்க வந்து விட்டேன்...''

''சரியா தூங்கலையா தாத்தா? கொசு தொந்தரவு இருந்தால் மருந்தடிங்க. ஊர் எல்லாம் காய்ச்சலா இருக்கு...'' என்றபடி, ஸ்டாண்டில் இருந்த ஹிந்துவை உருவினான்.

''நீ பேப்பர்ல புகார் எழுதி போட்ட பின் மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து மருந்தடிக்க வராங்க. கொசு இல்லை. இன்று யாரோ விருந்தாளி வராங்க, ரயில்வே ஸ்டேஷனுக்கு கூப்பிடப் போகணும் என்று நாலரை மணிக்கு பக்கத்துக்கு வீட்டில் இருக்கும் ஆட்டோ டிரைவர் குமார் எழ, அந்த சத்தத்தில் நானும் எழுந்து கொண்டேன். அப்புறம் எங்கே தூங்குவது?'' என்று புன்னகை செய்தார்.

''என்ன தாத்தா! ஒரு சின்ன ஈ-மெயில். அதையே நீங்க இன்னும் நூறு வருஷத்துக்கு சொல்லிட்டு இருப்



பீங்க போல? பால், ப்ரெட், எல்லாம் கூடையில் வச்சுடுங்க தாத்தா'' என்று சொன்னபடியே ஸ்போர்ட்ஸ் பக்கத்தை பிரித்துப் பார்வையிட்டான்.

''ம்ம், இன்று என்ன சமையல்? வெண்டைக்காய் பிரெஷா இருக்கு. கால் கிலோ போடட்டுமா?'' என்று கேட்டபடி அவன் வழக்கமாக வாங்கும் பொருட்களை எடுத்து ஒரு கூடையில் அடுக்கினார்.

''காய் வேண்டாம் தாத்தா. சமையல் இல்லை. ப்ரெட் ஆம்லேட் மட்டும் தான். ஊருக்குப் போறேன்...''

''அம்மாவைப் பார்க்கப் போறியா? உங்க அம்மா இங்கே இருந்தால், வெள்ளிக்கிழமை முட்டையை தொடக் கூடாது என்று சொல்லி இருப்பாங்க. நீ ஆம்லேட் என்று சொல்ற?''

''ஓ! இன்று வெள்ளிக் கிழமையா? சனி, ஞாயிறு லீவ் தானே என்று ஊருக்குப் போக டிக்கெட் போட்டாச்சு. ஊருக்கு போகணும் என்பது ஞாபகம் இருக்கு. முட்டை சாப்பிடக்கூடாது என்பது ஞாபகம் இல்லை பாருங்க. சரி முட்டை எடுத்துடுங்க. அம்மாவிற்கு தெரிந்தால் பீல் பண்ணுவாங்க...'' என்று சிரித்தான்.

''கண் முன்னால் இருக்கும் பெற்றோர்களையே சில பிள்ளைகள் கண்டு கொள்வதில்லை. எங்கோ இருக்கும் அம்மா வருத்தப்படுவாங்க என்று முட்டையை மறுக்கும் பிள்ளையைப் பார்க்கவே ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா.''

''ஆஹா! அப்படி எல்லாம் ரொம்ப சந்தோஷ படக் கூடாது தாத்தா. கண்ணில் இல்லாத போது தான் அம்மாவுக்கு மரியாதை. கண்ணில் கண்டு விட்டாலோ எட்டிக்கு போட்டி தான். எல்லாச் சண்டையும் நடக்கும் தாத்தா.'' என்று தன் பொருட்களுக்கு கை நீட்டினான்.

Optimized by www.ImageOptimizer.net

''பொய் சொன்னாலும் பொருத்தமாச் சொல்லணும் ராஜீவ்...''

''பொய் இல்லை தாத்தா, உண்மை தான். நான் படித்த படிப்பே எங்க அம்மா விருப்பத்துக்கு விரோதமானது தான். போதுமா?''

''உன் படிப்புக்கென்ன? படிப்புக்கும், பார்க்கும் வேலைக்கும் சம்பந்தமே இல்லாமல் எத்தனையோ பேர் இருக்காங்க. அப்படி இல்லாமல் படிச்ச படிப்பையே வேலையா வச்சு இருக்கும் உன்னைப் பார்த்து உங்க அம்மா பெருமை தான் படுவாங்க. உன் முன்னால் சொல்லிக்க மாட்டாங்களா இருக்கும். உங்க அம்மாவைப் பார்த்தால் நானே கேட்கிறேன்...''

''தாராளமாக் கேளுங்க. எங்க அம்மாவே இங்கே வந்து நான் குடித்தனம் நடத்தும் அழகை பார்க்கணும் என்று சொல்லிட்டு இருக்காங்க. ஊரில் இருந்து வரும் போது கூட்டிட்டு வருகிறேன். சரி தாத்தா நீங்க வேலையைப் பாருங்க'' என்று தனக்கு அவர் எடுத்து வைத்து இருந்த பொருட்களை எடுத்து கொண்டு படி இறங்கினான்.

''உனக்காக நான் சொல்லி வைத்து, கீரைக்காரன் முடக்கத்தான் கீரை கொண்டு வந்து இருக்கானே, வேண்டாமா ராஜீவ்?''

''கொடுங்க தாத்தா, அது எனக்கு இல்லை. பக்கத்து வீட்டு பாட்டிக்கு தான். கூடவே கொஞ்சம் தக்காளி கொடுங்க. மூட்டு வலிக்கு ரசம் வைத்து சாப்பிட்டால் நல்ல நிவாரணம் கிடைக்கும்...'' என்று சொல்லி அதையும் வாங்கி தன் கூடையில் போட்டு, ஹிந்துவின் ஸ்போர்ட்ஸ் பக்கத்தை படித்தபடி, நடந்தான்.



லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு வீரர்களை தேர்ந்தெடுப்பது குறித்த அகில இந்திய டென்னிஸ் அசோசியேஷனின் செயல்பாடுகளின் மீது தன் அதிருப்தியை தெரிவித்து இருந்த சானியாவின் பேட்டியை படித்துவிட்டு, 'வெல் செட் சானியா' என்று தன் சந்தோஷத்தை தெரிவித்தவன், யார் மீதோ மோதி, தன் கையில் இருந்த பேப்பரையும் கூடையையும் தவற விட, கூடையில் இருந்த பால் பாக்கெட், தக்காளி, கீரை கட்டு என ஒவ்வொன்றும் ஒரு ஒரு மூலைக்குச் சிதறியது.

* * *

கோவை ரயில் நிலையம். இரவு எட்டு மணி. தோளில் ஒரு பெரிய பை, கையில் ஒரு சிறு கைப்பை என்று அழுத்தி பிடித்தபடி, மிரண்ட கண்களுடன் நின்ற சந்தியாவைப் பார்த்து முறைத்தாள் பவித்ரா.

''சந்தியா, இப்படி முழிப்பதை நிறுத்து. உன்னை ஒரு முறை பார்த்தால் போதும், நல்லவனா இருப்பவனுக்கு கூட ஏமாற்ற தோன்றும். தைரியமா இரு. நிமிர்ந்து பாரு. கண்ணை பார்த்து பேசு. புரியுதா?'' என்று அதட்ட மெல்ல தலை அசைத்தாள்.

அவள் தலை அசைத்த விதத்திலேயே பவித்ராவின் அனுதாபம் கூட, நீலகிரி எக்ஸ்ப்ரஸ் வண்டி நின்று இருந்த பிளாட்பாரத்தில் பரபரப்பாக நகர்ந்து கொண்டு இருந்த போர்ட்டர்களில், வயதான ஒருவரை பிடித்து தனியே அழைத்தாள் பவித்ரா.

''தாத்தா, இது எங்க அத்தை பொண்ணு. அவசரமா சென்னைக்கு ஒரு இன்டர்வியூவிற்கு போகணும். அன்ரிசர்வ்ட் கம்பார்ட்மெண்டில் ஒரு சீட் கிடைக்குமா?'' என்று கெஞ்சலாக கேட்க அவர் யோசித்தார்.

Optimized by www.ImageOptimizer.net

''தனியா போகும் வயசு பொண்ணு தாத்தா. பஸ்ல போனால் நிறையச் செலவாகும். உங்களுக்கே தெரியுமில்லையா? வசதி கம்மி தாத்தா. உங்க பேத்தி மாதிரி நினைத்து உதவி பண்ணுங்க.. ப்ளீஸ்..'' என்று மீண்டும் அழுத்த, அவர் மனம் இளகியது.

''நீ சொல்றியேன்னு கொடுக்கிறேன். இந்த பொண்ணு என்னிடமே பேச இப்படி யோசித்தால் நாளைக்கு அங்கே பரிட்சையில் என்ன பேசும்? தைரியமா பேசச் சொல்லி அனுப்பு...'' என்றவர், தான் பிடித்து வைத்து இருந்த ஜன்னலோர இருக்கையை கொடுத்து, நூறு ரூபாய் பெற்று கொண்டார்.

''ரயில் டிக்கெட்டே, தொண்ணூற்றி எட்டு ரூபாய் தான். இவருக்கு நூறு ரூபாயா?'' என்று முனகிய சந்தியாவின் கை பற்றி இழுத்து ரயிலின் உள்ளே ஏறினாள் பவித்ரா.

''இந்த நூறு ரூபாயோட அவசியம் உனக்கு இப்ப புரியாது. ரயில் கிளம்பிய உடனே புரிந்து கொள்வாய். எழுபத்தி இரண்டு பேர் அமர கூடிய இந்த பெட்டியில் முன்னூறு பேருக்கும் அதிகமா பயணம் செய்வாங்க. இன்னிக்கு வியாழன் என்பதால் நூறு ரூபாய். நாளைக்கு நைட் வந்தால் நூறு ரூபாய் போதாது. ஆனால் யார் என்ன சொன்னாலும் இந்த இடத்தை விட்டு எழுந்திரிக்கக் கூடாது. புரிந்ததா?'' என்று அதட்டியபடி அவளை அமர வைத்தாள்.

''அப்பா இல்லாத பொண்ணு என்று உன்னை பொத்திப் பொத்தி வச்சு அத்தை ரொம்ப கெடுத்துட்டாங்க. நாலு இடம் போக வேண்டாமா? நல்லது கெட்டது தெரிஞ்சுக்க வேண்டாமா? நானும் அப்பா இல்லாத பொண்ணு தான். உன்னை மாதிரியா இருக்கேன்? எஞ்சினியரிங்



படிக்கலை. இது வேண்டும், இது வேண்டாம் என்று சொல்லலை. நீயும் வாயைத் திறந்து சொல்வதற்கென்ன?'' என்று அதட்டினாள்.

''சும்மா சத்தம் போடாதே பவி, நான் வேலைக்குப் போகிறேன் என்று நீ சொன்னதால் தானே சொன்னேன். என்ன ஆச்சு?''

''நீ இப்படி முகத்தை உம்மென்று வைத்து கொள்ளும் அளவிற்கு கெடுதல் ஒன்றும் நடக்கவில்லை. நல்ல விஷயம் நடந்து இருக்கு. அந்த கூண்டில் இருந்து உனக்கு விடுதலை கிடைத்தது. அது உனக்கு இப்ப புரியாது. போகப் போக புரிந்து கொள்வாய்...''

''இருந்தாலும்.. இந்தப் பணம்...'' என்று அவள் ஆரம்பிக்க, 'உஷ்!' என்று உதட்டில் கை வைத்து அடக்கினாள்.

''உன்னிடம் பணம் இருக்கிறது என்பது கூடிய வரையில் யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொள். ஜாக்கிரதை. பஸ்-க்காக காத்திருக்க வேண்டாம். ஒரு முறை, பங்கஜம் அக்கா வீட்டிற்கு போவதற்கு மட்டும் ஆட்டோ பிடித்து கொள். சென்ட்ரல் ஸ்டேஷனில் இருந்து இருநூறு ரூபாய் கேட்கலாம். ஸ்டேஷனில் இருந்து இறங்கும் போது, ஆட்டோ பிடித்த உடனே நம்பரை நோட் பண்ணிக்கோ...''

''ம்ம்ம்...'' என்று முனகலாக சொன்னவளின் கண்களில் தனியாக வெளியூருக்கு செல்வதில் பயமும், சற்று முன்பு மாமா வீட்டில் நடந்த வாக்குவாதத்தை எண்ணி கவலையும் குழப்பமும் மிச்சம் இருந்தது.

''அம்மா கோபமா பேசினாங்க என்று குழப்பிகிட்டே இருக்காதே. அம்மாவிற்கு என் கல்யாணம் முடிக்க இந்த பத்து பவுன் நகை தேவை படுது. அதுக்காக உன்

Optimized by www.ImageOptimizer.net

வாழ்க்கையில் விளையாடலாமா? என்னைப் பற்றிக் கவலைப் படாதே. நான் வேலைக்கு விண்ணப்பித்து இருக்கேன். அதிக பட்சம் இரண்டு மாசத்தில் நானும் சென்னைக்கு வந்து விடுவேன். அம்மா கோபம் தீர்ந்த உடனே அழைத்து வருகிறேன்...'' என்று சொல்லும் போதே ரயில் நகர பதறினாள் சந்தியா.

''ஹையோ.. ட்ரெயின் கிளம்பிடுச்சு.. இறங்கு.. இறங்கு...''

''காலேஜில் எட்டு மாடி கட்டிடம் கட்டும் போது வெறும் மூங்கில் சாரத்தில் ஏறி நின்று பார்த்தவள் நான். உனக்கு ரொம்ப மனசு கஷ்டமா இருக்கும் போது இதை படி. நான் பக்கத்தில் இருப்பது மாதிரி இருக்கும். வாழ்த்துக்கள்'' என்று அவளின் கன்னத்தில் தட்டி கையில் ஒரு காகிதத்தை திணித்து விட்டு மெல்ல நகர துவங்கி இருந்த ரயிலில் இருந்து லாவகமாக இறங்கினாள் பவித்ரா.

பவித்ரா கண்ணை விட்டு மறைந்த பிறகும், அவளின் ஆதரவான தைரியமூட்டும் வார்த்தைகள் காதில் ஒலிக்க புன்னகையோடு அந்த காகிதத்தை பிரித்தாள். இளநீல வண்ண பேப்பரில் அழகான கையெழுத்தில் ஒரு கடிதம் இருந்தது.

சந்தியா,

சிறு வயதிலேயே மாமா இறந்து விட்டதால், அத்தையும் நீயும் இங்கே வந்து கடந்த பத்து வருடங்களாக பட்ட கஷ்டம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது. முன் கால கட்டத்தில் அம்மாவின் பிரிவினையே எனக்குப் புரியவில்லை. புரிந்து இருந்தால் ப்ளஸ் டூவோடு உன்னை நிறுத்தி விடாமல் உன் மேல் படிப்பைத் தொடர முயற்சி எடுத்து இருப்பேன்



இப்போது புரிந்ததனால் என்னால் முடிந்த சின்ன உதவி, சிவானந்த குருகுலத்தில், என் ப்ரெண்ட் மூலமா சொல்லி இந்த ஸ்டோர் கீப்பர் வேலை வாங்கித் தந்து இருக்கேன்.

இரண்டு லட்சம் ரூபாய் டெபாசிட் பணம் அங்கே கட்டாயம் என்று சொல்லி விட்டதனால் தான் அம்மாவிடம் சண்டை போட்டு உன் நகையை வங்கியில் அடகு வைக்க வேண்டியதாக போய்விட்டது.

இப்ப அத்தையும் இல்லை. இனி அம்மா உனக்குச் செய்வாங்க என்று நீ எதிர்பார்க்க முடியாது. நீ உன் சொந்தக் காலில் தான் நிற்க வேண்டும். முதலில் தைரியம் வேண்டும். நிமிர்ந்து நில். கடவுள் ஒரு கதவை சாத்தினால் ஜன்னலை திறப்பார் என்று நம்பு. எது நடந்தாலும் நன்மைக்கே என்று நினை.

இந்த வேலை உனக்குப் புதிய வழியையும், வாழ்க்கையையும் அளிக்கட்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்புடன் பவித்ரா.

என்று இருந்த அந்தக் கடிதத்தை அன்று இரவு எத்தனை ஆயிரம் முறை படித்து இருப்பாள் என்று சந்தியாவிற்கே தெரியாது.

* * *

சென்னை சென்ட்ரல் நிலையம். அதிகாலை ஐந்தரை மணிக்கு கூட பரபரப்பாக நூற்றுக்கணக்கான மக்கள் இங்கும் அங்கும் விரைந்து ஓட்டமும் நடையுமாக சென்று கொண்டு இருக்க, பெண்கள் கம்பார்ட்மெண்டின் கூட்ட கசகசப்பில் இருந்து விடுபட்டு இறங்கிய சந்தியாவிற்கு கண்ணை கட்டி காட்டில் விட்டது போல இருந்தது.

Optimized by www.ImageOptimizer.net

தடுமாற்றத்துடன் வந்தவளை, கை பற்றி இழுக்காத குறையாக ஆட்டோக்காரர்கள் வட்டமிட, "திருவான்மியூர் தானே? வாங்க. போகலாம்" என்று தனித்து ஒலித்த அந்த குரலில் நிமிர்ந்தாள்.

"திருவள்ளுவர் நகர் போகணும்..." என்று இயல்பாக சொன்னவள் தான் போகும் இடம் இவருக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்கக் கூட இல்லாமல், அவன் பின்னால் சென்று ஆட்டோவில் ஏறும் முன்பு, அந்த பதிவு எண்ணை மனனம் செய்து கொண்டாள்.

"ஜெராக்ஸ் கடை இருந்தால் கொஞ்சம் நிறுத்துங்க. சர்ட்டிபிகேட் காப்பி எடுக்கணும்" என்று மருண்ட விழிகளுடன் அவள் வேண்டுகோள் விடுக்க டெலிபோன் பூத் ஒன்றை காட்டி, "ஜெராக்ஸ் இருக்கா என்று விசாரித்து பாரும்மா" என்று இறக்கி விட்டான்.

அவள் உள்ளே விசாரித்து கொண்டு இருக்கும்போதே அந்த ஆட்டோ கிளம்புவதை பார்த்து பதறி ஓடி வந்தவள் யார் மீதோ மோதி நின்றாள். அவள் கையில் இருந்த நகல் எடுக்க வேண்டிய சர்ட்டிபிகேட் கீழே விழுந்து சிதற, அவன் கையில் இருந்த கூடையில் இருந்த காய்கறிகள் பால் பாக்கெட், எல்லாம் சிதறி மூலைக்கொன்றாக ஓடியது.



## 2

சென்ட்ரல் ஸ்டேஷனில் இருந்து தான் செல்ல வேண்டிய இடத்திற்கு பயணம் செய்த ஆட்டோ தன் உடமைகளோடு, கிளம்பியதை பார்த்து பதறி ஓடி வந்த சந்தியா, இடையில் பேப்பரில் கண் பதித்தபடி வந்தவன் மீது மோத, இருவரின் கையில் இருந்த பொருட்களும் சிதற அவள் பதறினாள்.



"ஹையோ! சாரி சாரி.. சார்.. நான் வந்த ஆட்டோ... கிளம்பியதால்.." என்று முகம் சிவக்க, தொண்டையில் இருந்து வரும் வார்த்தைகள் தெளிவில்லாமல் தந்தியடிக்க பதட்டத்துடன் பேசியவளை பார்க்க ராஜீவனுக்குப் பாவமாக இருந்தது. நியாயமாக பார்த்தால், அவள் தன் மீது பாய்ந்து இருக்க வேண்டும்.

"ஹலோ... மிஸ்டர்.. ரோட்டை ஒழுங்கா பார்க்காமல் பேப்பர் படிக்க நடு ரோடு தான் கிடைத்ததா?" என்று சத்தம் போட்டு இருக்க வேண்டும். பயந்த சுபாவம் உள்ள பெண் என்றால் ஒரு முறைப்பாவது இருக்க வேண்டும். அவள் இப்படி வார்த்தைகளுக்குத் திணறுவது, அவனுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

"ஹேய்! நீங்க என்ன பேசுறீங்க என்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கொஞ்சம் தெளிவா பேசறீங்களா...?" என்று பாதி கவனத்தை அவளிடம் பதித்து, மிச்ச கவனத்தை அவளின் கோப்பில் இருந்து பறந்த பேப்பர்களை அவசரமாக சேகரிப்பதில் செலுத்தினான்.

தான் கேட்ட கேள்விக்கு அவளிடம் பதில் இல்லை என்பதோடு, அவள் தனது பொருட்களையும் எடுக்கக் கூட முனையவில்லை என்பதை உணர்ந்து நிமிர்ந்தவன் அவள் பார்வை எதிரே வந்த ஆட்டோவில் நிலைத்து நிற்க மேலும் குழப்பம் அடைந்தான்.

"என்னம்மா ஜெராக்ஸ் எடுத்தாச்சா? போகலாமா?" என்று கேட்டபடி அருகே வந்து நின்ற ஆட்டோவை கண்டதும் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. இவன்



Optimized by www.ImageOptimizer.net

கிளம்பி விட்டான் என்று தானே அப்படி பதறி ஓடியது. ஒரு நிமிஷம் முடிவதற்குள் திரும்பி வந்து நிற்கின்றானே?

''அண்ணா.. நீங்க.. கிளம்பிட்டீங்க என்று.. பயந்து போய்..'' என்று திணறி நிறுத்த அவனும் ராஜீவனும் சேர்ந்தே விழித்தனர்.

''நீ ஜெராக்ஸ் எடுப்பதற்குள் ஆட்டோவை திருப்பிடலாமே என்று போனேன். ஜெராக்ஸ் எடுக்கத்தான் மெயின் ரோடு வந்தோம். நாம் போக வேண்டிய இடம் இந்த பக்கம் இருக்கு. ஏன் என்ன ஆச்சு?'' என்று குழப்பத்தோடு கேட்க ராஜீவனுக்கு விஷயம் புரிந்தது.

''என்ன அண்ணா! அவங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிட்டு போய் இருக்கலாம் இல்லையா? நீங்க நடு ரோட்டில் நிறுத்தி விட்டு லக்கேஜோடு போயிட்டீங்க என்று பயந்துட்டாங்க போல! என்ன மேடம் அப்படித் தானே?'' என்று கேட்க அப்போது தான் அவனை திரும்பி முழுதாக பார்த்தாள்.

''ஆ.. ஆமா..'' என்று வார்த்தைகள் தந்தியடிக்க, அவள் வேகமாக தலை அசைத்ததை வைத்தே அவள் என்ன சொல்கிறாள் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது. அவளின் கண்கள் அவன் கையில் இருந்த சர்ட்டிபிகேட்டில் பதிந்ததும் தான், தான் மோதி அவன் கையில் இருந்த பொருட்கள் சிதறியது என்பதையும், அதை அவன் இன்னும் எடுக்கவில்லை என்பதையும் உணர்ந்தாள்.

''நான்... தெரியாமல்... தாங்க்ஸ்... சாரி..'' என்று மன்னிப்பு வேண்டுதலையும், நன்றி அறிவித்தலையும் சேர்த்து குழப்பி அடித்தவள், அவசரமாக குனிந்து அவன் கூடையில் இருந்து விழுந்த பொருட்களை சேகரிக்க ஆரம்பித்தாள்.



''பரவாயில்லை, அதை எல்லாம் நான் எடுத்து கொள்கிறேன். தக்காளியும் வெங்காயமும் எங்கேயும் ஓடிப் போகாது. பேப்பர் பறந்து விடலாம், சர்ட்டிபிகேட் எல்லாம் இருக்கா என்று செக் பண்ணுங்க..'' என்று அவளிடம் தன் கையில் இருந்த பேப்பரை நீட்டினான்.

''தாங்க்யூ..'' என்று முணுமுணுத்தபடி சர்ட்டிபிகேட்களை வாங்கியவள் ஆட்டோவில் திரும்பி ஏற, அவன் புன்னகைத்தான்.

''அப்பாடி! முதன் முதலாக நீங்க பேசிய ஒரு வார்த்தை ஊகத்திற்கு இடமில்லாமல் புரிந்து விட்டது. அதற்கு நான் தான் நன்றி சொல்லணும்..'' என்று சிரிப்போடு சொன்னவன் தன் நெற்றியில் வலது கை விரல்களின் நுனியை வைத்து சலாமிட அவள் பயத்தையும் மீறி சின்ன புன்னகை இதழ்களில் மலர்ந்தது.

ஆட்டோ கண்களில் இருந்து மறைந்து சில வினாடிகள் ஆன பின்னும், அது சென்ற திசையை பார்த்தபடி நின்றவனுக்கு, விழிகளில் நிரம்பி இருந்த பயத்தை தாண்டி இதழ்களில் லேசாக எட்டி பார்த்த அந்த புன்னகையை மறக்க முடியவில்லை.

ராஜீவன் குனிந்து தன் கூடையை எடுத்து நிமிர்ந்த போது சற்று தூரத்தில் ஆடிக் கொண்டு இருந்த பேப்பர் கண்ணில் பட்டது. ஹிந்து பேப்பரோடு சேர்ந்து, புதிதாக நகல் எடுத்து இருந்த அந்த பெண்ணின் சர்ட்டிபிகேட்டும் இருந்தது. பெயர் சந்தியா, ஊர் அம்மாச்சி பாளையம். கோவைக்கு பக்கமோ? இல்லை ஈரோடாக இருக்கலாம். 'ஆமா! இப்ப எதுக்கு இந்த ஆராய்ச்சி? அதை தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்? வேலையை பாருடா!'

Optimized by www.ImageOptimizer.net

என்று மானசீகமாக குட்டி கொண்டவன் வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

குறிப்பிட்ட முகவரிக்கு சென்று ஆட்டோவில் இருந்து இறங்கிய சந்தியாவிற்கு பவித்ராவின் தோழியுடைய உறவினர் தன்னை எப்படி வரவேற்பார்கள்? அழையா விருந்தாளியாக வந்து விட்டதாக நினைப்பார்களோ? என்று மனம் குழம்பியது.

''இங்கேயே தான் நிரந்தரமாகத் தங்கப் போவதில்லை. இந்தப் பணத்தைக் கொடுத்து ஒரு வரைவோலை வாங்கி, அத்துடன் சான்றிதழ்களையும், அழைப்புக் கடிதத்தையும் சிவானந்த குருகுலத்தில் கொடுத்து பணியில் சேர்ந்து விட்டால் போதும். அதுவரை சென்னை பழகிய ஒரு நபரின் துணை தேவை. தங்குமிடம் உணவு எல்லாம் அங்கேயே இருக்க போகிறது. தைரியமா போ. நம்பிக்கையோடு பேசு'' என்ற பவித்ராவின் வார்த்தைகள் நினைவு வர, தயக்கத்தை உதறி மாடிப்படிகளில் ஏறினாள்.

''ஹலோ.. சந்தியா..'' என்று எதிரே இறங்கி வந்த அந்த நாற்பது வயது மதிக்க தக்க மனிதரை கண்டதும் தயங்கி நின்றாள்.

''இங்கே பங்கஜம் அக்கா...'' ''நான் கோவையில் இருந்து..'' என்று ஒரு முறை வீட்டில் இருப்பவரை விசாரித்து, ஒரு முறை தன்னை அறிமுகப்படுத்த முயன்று, கோர்வையாக ஒரு வாக்கியத்தைக் கூட அவளால் முடிக்க முடியவில்லை.

''பவித்ராவுடைய பிரெண்ட் சொன்ன சந்தியா நீங்க தானே?'' என்று கேட்க வேகமாக தலை அசைத்தவளின் கண்களில் மின்னலாக ஒரு நிம்மதி பரவியது.



''வாங்க உங்களுக்காக தான் காலையில் இருந்து காத்திருக்கிறேன்...'' என்று திரும்பி நடந்தவர், வலது பக்கம் இருந்த வீட்டின் கதவை சட்டை பையில் இருந்து சாவி எடுத்து திறக்க அவள் விழித்தாள்.

இது என்ன வீடு பூட்டி இருக்கிறதே? அங்கே கணவர் குழந்தைகளுடன் இருப்பதாக தானே பவித்ரா உறுதியாக சொன்னாள்? அவருக்கு தான் வருவது தெரியுமா? தெரியாதா? தனியாக இங்கே தங்க வேண்டாம் என்றாலும் வேறு எங்கே செல்வது?

''பங்கஜம் இன்று காலையில் ஒரு டெத் நியூஸ் வந்து செங்கல்பட்டு வரை தவிர்க்க முடியாமல் போய் இருக்காங்க. நீங்க வருவீங்க, உங்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும் என்று நூறு முறை சொல்லிட்டு போய் இருக்காங்க. உள்ளே வாங்க...'' என்று அழைக்க அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

''செங்கல்பட்டா? அப்ப வீட்டுல... வேறே யாரும்... இல்லையா?''

''அருண் பூஜா, இரண்டு பேரும் பாட்டி வீட்டிற்கு போய் இருக்காங்க. உள்ளே வாங்க, வாசலிலேயே நின்று இருந்தால், பார்ப்பவங்க என்னைத் தப்பா நினைப்பாங்க'' என்று சொல்ல சந்தியாவிற்கு அவனை நம்புவதா வேண்டாமா என்ற குழப்பம் வந்தது.

''ஒரு போன்... பண்ணிக்கட்டுமா?'' என்றவளின் குரலில், அவனைத் தப்பாக நினைத்து விட்டோம் என்று அவனுக்குத் தெரிந்து விடக்கூடாதே என்ற பதட்டம் இருந்தது.

''கோவைக்கா...?'' என்று கையில் இருந்த மொபைலை நீட்டினான்.

Optimized by www.ImageOptimizer.net

தனியாக ஒரு அறிமுகம் இல்லாத ஆணுடன், புது இடத்தில், ஒரு வீட்டில் தனியாக இருக்கிறோம் என்று நிரம்பி வழிந்த பயத்துடனும், அந்த பயத்தை அவன் அறிய விடக் கூடாது என்ற கவனத்துடனும் பவித்ராவை அழைத்தாள்.

''சொல்லு சந்தியா, இப்பதான் நினைத்தேன், இன்னும் போனை காணோமே? பொண்ணு அட்ரஸ் கண்டு பிடிச்சு ஒழுங்கா போய் சேர்ந்தாளா என்று பயந்து கொண்டே இருந்தேன். கரெக்டா வந்துட்டியா?'' என்று உற்சாகமான குரல் கேட்டதும் மூச்சு வந்தது.

''ம்ம்ம்... வந்துட்டேன்...''

''என்ன இழுக்கிற?''

''அது வந்து.. இங்கே..'' என்றவளுக்கு இங்கே எதிரில் நிற்பவனை பார்த்தால் பயமாக இருக்கிறது என்று சொல்ல ஒரு மாதிரி இருந்தது.

''ப்ச்! என்ன சந்தியா? பங்கஜம் அக்காவை பார்த்து விட்டாயா இல்லையா?''

''அவங்க செங்கல்பட்டு வரை போய் இருக்காங்களாம்....'' என்றவளின் குரல் வெளியே வரவே இல்லை.

''அதனால் என்ன? அவங்க வீட்டில் இருந்து தானே பேசுகிறாய்? சும்மா எதுக்கு எடுத்தாலும் பயந்து கொண்டு எல்லாரையும் சந்தேகப் பட்டுக் கொண்டு இருக்காதே. கொஞ்சம் மனுஷங்களை நம்ப பழகு. முதலில் தொடை நடுங்கியா இருக்காதே. உன்னை பிடித்த கெட்ட காலம் இன்றோடு தொலைந்தது என்று, தலைக்கு குளித்து விட்டு ஜம்முன்னு கிளம்பி பேங்க் போய் டி.டி எடுத்துட்டு, வேலையில் போய் சேரும் வழியைப் பாரு.



எனக்கு காலேஜிற்கு நேரமாச்சு. பை...'' என்று போனை அவள் வைத்தே விட்டாள்.

''ம்ம்ம்... சரி...'' என்று துண்டிக்கப்பட்ட போனில் முனகலாக சொன்னவள் அலைபேசியை அவனிடம் நீட்டினாள்.

''நான் வெளியே போய் உங்களுக்கு சாப்பாடு வாங்கிட்டு அரை மணி நேரத்தில் வருகிறேன். நீங்க வீட்டை உள்ளே பூட்டி குளித்து ரெடியாகுங்க. அப்புறம் பேங்க் போய் உங்க வேலை பார்க்கலாம்'' என்று சொல்ல அவள் திகைத்து விழித்தாள். தான் சொல்லாமலேயே தன் வேலை என்ன என்று அவனுக்கு எப்படி தெரியும்?

''என்ன பார்க்கறீங்க? உங்க பவித்ரா, உங்களுக்காக ஐந்து முறை போன் பண்ணி பங்கஜம் அக்காவிடம் பேசி இருக்காங்க. உங்க குணம், சுபாவம் எல்லாம் விலாவாரியா சொன்னாங்க. அதனால் தெரியும்...'' என்று சிரிக்க அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

''வீட்டை பூட்டிக்கோங்க...'' என்று அக்கறையாக சொன்னவன் அரை மணி நேரம் கழித்து வரும் போது உணவு வாங்கி வந்து இருக்க அதை மறுத்து விட்டாள். குடும்பமாக இருக்கும் இடத்தில் திடீர் என்று குடும்ப தலைவி வெளியே கிளம்பும் சமயத்தில் பிரிட்ஜ் எப்படி காலியாக இருக்கும் என்பதையோ, குழந்தைகள் இருக்கும் இடத்தில், விளையாட்டு பொருட்கள் ஒன்று கூட கண்ணில் படாமல் இருக்குமோ என்பதையோ கவனிக்கும் நிலையில் சந்தியா இல்லை.

'என்ன சந்தியா பணம் போடும் ஸ்லிப்புக்கும், எடுக்கும் ஸ்லிப்புக்கும் கூட வித்தியாசம் தெரியாதா?'' ''வங்கி கணக்கு இல்லாமல் டி டி. கிடைக்காதே!'' ''பணத்தை

Optimized by www.ImageOptimizer.net

என் கணக்கில் போடு. என் கணக்கில் இருந்து டிடி எடுத்துத் தருகிறேன்'' என்று அவளை மூளை சலவை செய்து அவனே முன்னின்று பணத்தை போட வைத்தான்.

டி.டி. எடுக்கும் போது இரண்டு லட்சத்திற்கு பதிலாக இருபதாயிரத்திற்கு சலான் நிரப்பி, அவளிடமே கையொப்பம் பெற்று, அவளின் கண் முன்னால் டோக்கன் பெற்று அவள் கையில் தந்துவிட்டு, ''இதோ வருகிறேன்'' என்று காணாமல் போனவன் பங்கஜத்தின் கணவன் இல்லை.

பங்கஜத்தின் வீட்டிற்கு வந்த போது, காதில் விழுந்த தகவலையும், பக்கத்தில் விற்பனைக்கு இருந்த முழுமையாக பர்னிஷ் செய்யப்பட்ட வீட்டு சாவியை வாடகைக்கு பார்க்க வருபவர்களுக்குத் திறந்து காட்ட, அவரிடம் கொடுத்து வைத்து இருந்ததை நகலெடுத்து, தனது கூட்டாளியான ஆட்டோ ஓட்டுனருடன் சேர்ந்து சில மணி நேரத்தில் ஒரு லட்சத்தி எண்பதாயிரம் ரூபாய் சம்பாதித்த புண்ணியவான்.



## 3

குறைந்த பணத்திற்கு டி.டி. வாங்கி இருக்கிறோம் என்பதை கூட உணராமலேயே அதை வங்கி கைப் பைக்குள் பத்திரப்படுத்தி விட்டு இருபது நிமிடங்களுக்கும் மேலாக அந்த பெயர் அறியாதவருக்காக காத்திருந்த சந்தியா நேரம் செல்லச் செல்ல தவித்தாள்.

எவ்வளவு நேரம் காத்திருப்பது? பதினோரு மணிக்குள் சிவானந்தா குருகுலம் செல்ல வேண்டும். முகவரி



இருக்கிறது. ஆட்டோ பிடித்து போய் விடலாம் என்றாலும், தனக்கு உதவி செய்தவரை சொல்லாமல் கொள்ளாமல் விட்டு விட்டு போவதா? அவருடைய போன் நம்பர் இல்லை என்று குழம்பி தவித்தாள் சந்தியா.

பொது தொலைபேசி பூத்தில், தன்னிடம் இருந்த பங்கஜத்தின் வீட்டு எண்ணுக்கு, அது எடுக்கப்படாது என்ற தயக்கத்தோடு முயன்றவள், எடுக்கப்பட திகைத்தாள்.

''ஹலோ... அங்கே... பங்கஜம் அக்கா...?'' என்று கேட்டு முடிக்கும் முன்னரே அவரின் அக்கறையான குரல் ஓங்கி ஒலித்தது.

''சந்தியா.. நீயா? எங்கே இருக்க? ஏன் இவ்வளவு நேரமா வீட்டுக்கு வரலை? உனக்காகப் பார்த்துப் பார்த்து பயந்து போய் எட்டரை மணிக்கு பவித்ராவுக்கு போன் பண்ணி கேட்டால், சந்தியா என்று யாரும் இல்லை. அவள் நேற்றே செத்து போய் விட்டாள் என்று கோபமா சொன்னாங்க. நான் என்ன பண்றது என்று தெரியாமல் தவிச்சுட்டு இருக்கேன்...''

''அத்தையாக இருக்கும். அவங்களுக்கு நான் இங்கே வருவது பிடிக்கலை'' என்று சொல்லும்போதே விழிகளில் நீர் கோர்த்தது.

''அதை விடு. நீ எங்கே இருக்க? ஏன் வீட்டுக்கு வரலை?''

''என்னக்கா சொல்றீங்க? நான் உங்க வீட்டில் வந்து குளிச்சுட்டு.. நீங்க செங்கல்பட்டில் இருந்து எப்போ வந்தீங்க?'' என்று குழப்பத்தோடு கேட்டாள் சந்தியா.

''செங்கல்பட்டு எப்போ போனேன்? காலையில் இருந்து நான் இங்கேயே இருக்கேன். நீ எப்படி எனக்கு

Optimized by www.ImageOptimizer.net

தெரியாமல் இங்கே வந்து குளிக்க முடியும்? நீ சந்தியா தானே பேசற?''

''அக்கா, பவித்ராவோட மாமா பொண்ணு. சந்தியா தான் பேசுறேன். நான் ஏழு மணிக்கு உங்க வீட்டுக்கு வந்தேன். நீங்க இல்லை...''

''இதென்ன புது கதை? பசங்களை ஸ்கூலுக்கு அனுப்பும் வரைக்கும் இந்த பக்கம் அந்த பக்கம் திரும்பக் கூட முடியாது. எட்டரைக்கு பசங்களை அனுப்பின பிறகு தான், நீ வரலை என்பதையே கண்டு பிடித்தேன். அப்புறம் கோவைக்கு போன் போட்டேன்.''

''ஸ்கூலா? பசங்க லீவுக்கு பாட்டி வீட்டுக்கு போய் இருக்காங்க என்று உங்க வீட்டுக்காரர் சொன்னாங்களே...''

''ச..ந்..தி..யா...! என் வீட்டுக்காரர் இந்த நாட்டிலேயே இல்லை. பவித்ராவுக்கு தெரியுமே. நீ இப்போ எங்கே இருக்கிறாய்?'' என்று அதட்டிய பங்கஜத்தின் குரலில் திகைத்து விழித்தாள்.

''ஓ! சாரிக்கா.. அப்ப உங்க ப்ரதர்...''

''ச..ந்..தி..யா..! நீ இப்போ எங்கே இருக்கிறாய் என்று சொல்லு. எனக்கு தலை சுத்துறது...''

''இந்தியன் பேங்க் நீலாங்கரை... ஏன் என்ன ஆச்சக்கா?''

''முதலில் நீ வீட்டுக்கு வா. அட்ரஸ் இருக்கா? நீயே வந்து விடுவாயா? இல்லை நான் வரட்டுமா?''

''நானே வந்து விடுவேன் அக்கா. நான் சிவானந்த குருகுலம் பதினோரு மணிக்கு வருகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். வேலையில் சேர்ந்து விட்டு மூன்று மணிக்கு வருகிறேன்'' என்று சொல்ல பங்கஜத்திற்கு



குழப்பமாக இருந்தாலும் சந்தியாவின் குரலில் இருந்த நம்பிக்கை நிம்மதி தந்தது.

சிவானந்த குருகுலத்திற்கு சென்று தன் அழைப்பு கடிதத்தை காட்டியதும், ''பதினோரு மணிக்கு வர சொல்லி இருந்தால், ஏன் சரியான நேரத்திற்கு வர வில்லை? முதல் நாளே இப்படி காலம் தவறி வந்தால் எப்படி?'' என்று கறாராக சொன்னவரை பார்த்த உடனே அச்சம் கலந்த மரியாதை வந்தது. இவர்தான் அந்த சந்தானமாக இருக்க வேண்டும். புரவலர்களில் ஒருவர், இங்கே வருவதை சேவையாக ஏற்று செய்பவர்.

''பேங்க் போய் இருந்தேன் சார். டி.டி. எடுக்க கொஞ்சம் லேட் ஆகிவிட்டது...'' என்று பொய் சொல்கிறோம் என்ற குற்ற உணர்வில் உள்ளே போய் விட்ட குரலில் சொன்னாள்.

''முன் தினமே எடுத்து வைக்க வேண்டாமா? இனி இப்படி நடக்காமல் பார்த்து கொள்...'' என்று முன்பாதி அதட்டலாக சொன்னாலும், அவளின் உடையில் இருந்த எளிமையை பார்த்ததும், பணம் சேகரிக்க சிரமப்பட்டு இருக்கலாம் என்ற எண்ணத்தில், பின்பாதி வாக்கியம் தன்மையாகவே வந்தது.

''இங்கேயே தானே சார் இருக்க போகிறேன். முழு நேரமும் வேலை செய்ய தயங்க மாட்டேன் சார்...''

''இதையே மேடத்திடம் சொல்லு. சர்டிபிகேட் காப்பி, டி.டி. எல்லாம் ரெடியா எடுத்து வச்சுக்கோ. சுறுசுறுப்பா எடுத்து கொடுக்கணும்'' என்று அவர் கோடி காண்பிக்க, பையில் இருந்து எல்லாவற்றையும் எடுத்து அடுக்கி வைத்தவளுக்கு டி.டி. தொகை குறைவாக இருப்பது கண்ணில் பட தூக்கி வாரி போட்டது.

Optimized by www.ImageOptimizer.net

இதை எப்படி அவள் முன்பே கவனிக்காமல் விட்டாள்? வங்கியில் கவன குறைவாக கொடுத்து இருக்கலாமா? ஆனால் தொகையை எண்ணாலும் எழுத்தாலும் எழுதி இருக்கும்போது எப்படி கவனிக்காமல் இருப்பார்கள்? இந்த குருகுல நிர்வாகிக்கு என்ன பதில் சொல்ல போகிறோம்? கண்கள் இருட்டிக் கொண்டு வர மயங்கி சரிந்தாள் சந்தியா.

* * *

இரவு ஏழரை மணி அளவில் பைக்கை பிளாட்டில் நிறுத்திய ராஜீவனுக்கு எரிச்சலாக இருந்தது. ஈசிஆரில் வெள்ளிக் கிழமை என்றால் சென்னையில் இருக்கும் மொத்த வாகனங்களும் இங்கே வந்து விட்டதோ என்று தோன்றியது. அப்படி ஒரு ட்ராபிக் ஜாம்.

ரயிலை பிடிக்க, மறுபடி போக்குவரத்துக்கு நெரிசலில் நீந்தி ஒரு மணி நேரம் பயணிக்க வேண்டும். சாப்பிட ஏதாவது வாங்க வேண்டும். சமைக்க தெரியும் என்பதாலேயே ஹோட்டல் சாப்பாடு பிடிக்கவும் இல்லை. சமைப்பதை விட அந்த பாத்திரங்களை கழுவுவது அதிகம் நேரம் பிடிக்கும். இரண்டு நாட்கள் கிடக்கட்டும் என்று விட்டு போகவும் பிடிக்காது. 'பைக் என்றாலும் பரவாயில்லை. சென்னையில் இருந்து பெங்களூருக்கு ஏ.சி கோச்சில் டிக்கெட் அறுநூறு ரூபாய் என்றால் ஆட்டோவிற்கு முன்னூறு ரூபாய் கேட்பான்' என்று எண்ணியவன் சிந்தனை அங்கே நின்றது.

காலையில் பார்த்த அந்த ஆட்டோக்காரன் நல்லவனா? அந்த பெண்ணை குறிப்பிட்ட இடத்தில் கொண்டு போய் சேர்த்து இருப்பானா என்ற கவலை தோன்ற அவனுக்கு வியப்பாக இருந்தது. அவளின் நினைவு ஏன் வந்தது? சென்னை பட்டணத்தில் இப்படி மருண்ட



விழிகளுடன் திக்கிப் பேசும் ஒரு பெண்ணைப் பார்ப்பது அபூர்வம். அதான் மனசில் தோன்றுகிறது என்று எண்ணியவன் விழிகள் விரிந்தது.

அந்த பொது தொலைபேசி பூத்துக்குள் நுழைவது அவள் தானே? நினைத்த உடனே கண் முன்னால் வந்து விட்டாளே! இங்கே இருந்து சென்ட்ரல் போவதற்கு ஒரு மணி நேரம் போதாது? ஒரு பத்து நிமிஷம், ஹலோ சொல்லிட்டு போய்டலாம்!

டெலிபோன் பூத்தில் இருந்து தலை கவிழ்ந்தபடி வெளியே வந்தவளை, ''ஹாய் சந்தியா...'' என்று சிநேகமாக அழைத்தவன் அவளிடம் இருந்து அதிர்ச்சியையோ, என் பெயர் உங்களுக்கு எப்படி தெரியும் என்ற ஆச்சரியத்தையோ எதிர்பார்த்தான்.

அதற்கு பதில் சொல்ல தயாராக இருந்தான். ஆனால் தான் அழைத்ததே காதில் விழாத மாதிரி, பிரமை பிடித்தது போல சென்றவள், அருகில் இருந்த பேருந்து நிறுத்தத்தின் இருக்கையில் சரிந்து அமர்ந்து கண்ணை மூடிக் கொள்வாள் என்பதையோ, மூடிய கண்களில் இருந்து கண்ணீர் வழியும் என்பதையோ, அவள் காலையில் ஆர்வமாக பதறி காப்பாற்ற நினைத்த ஆட்டோவில் இருந்த அந்த பை தற்போது கவனிப்பார் இன்றி அனாதையாக அருகில் கிடக்கும் என்பதையோ நிச்சயம் எதிர்பார்க்கவே இல்லை.



## 4

தொலைபேசி நிலையத்தில் இருந்து வெளியே வந்த சந்தியாவுக்கு கண்களை இருட்டிக் கொண்டு

Optimized by www.ImageOptimizer.net

வந்தது. பவித்ரா தன் நலம் நாடியே சென்னைக்கு அனுப்பினாள் என்றாலும், அது தன் நிலையை மேலும் மோசமாக்கி விட்டதே என்று வருத்தமாக இருந்தது.

சிவானந்த குருகுலத்தின் நிர்வாகி மதியம் சொன்ன வார்த்தைகள் மீண்டும் காதுகளில் ஒலித்து கண்களை கரிக்க வைத்தது. நடந்த சம்பவங்களை மறக்க முயன்றாலும் மீண்டும் மீண்டும் நெஞ்சில் நிழலாடியது. அவர் பேசிய கடுமையான வார்த்தைகள் நெஞ்சத்தை அறுத்தது. அவர் சொன்னதில் தப்பில்லை. தான் என்ன குற்றம் செய்தோம் என்று தனக்கு இப்படி இடி மேல் இடி விழுகிறது என்ற எண்ணம் அவளை மேலும் பலவீனமாக்க, பெருகிய கண்ணீரை வெளி வர விடாமல் தடுத்தபடி வேகமாக நடந்தவளை அவசரமாக பின் தொடர்ந்தான் ராஜீவன்.

''மேடம்... ஹலோ... எக்ஸ்கியூஸ் மீ...'' போன்ற வார்த்தைகள் அவளை திசை திருப்பவோ, என் நிற்க வைக்கவோ இல்லை. இவளுக்கு என்ன ஆயிற்று? தன்னை தெரியாவிட்டால், கோபமாக நின்று ஏதாவது பேசலாமே? அது கூட இல்லை என்றால்...

''சந்தியா.. சந்தியா...'' என்று அவளை பின் தொடர்ந்தபடி அழைத்தவன் குரல் அவளை எட்டவில்லை. அவள் இந்த உலகிலேயே இல்லை என்பதை உணர்ந்த ராஜீவனுக்கு சங்கடமாக இருந்தது. பேருந்து நிறுத்த இருக்கையில் அமர்ந்து பக்கவாட்டு சுவற்றில் சாய்ந்து கண்களை மூடி கண்ணீர் பெருக்க, மனசுக்குள் பிசைந்தது. துயரத்தில் இருக்கிறாள். அந்த துயரத்தை துடைக்க தன்னால் ஆன உதவியை செய்ய வேண்டும் என்ற உறுதி பிறந்தது.



''சந்தியாம்மா...'' என்று அழைத்தபடி அவளின் உச்சியை வருடினான். அந்த அம்மா சேர்ந்த அழைப்போ, அவனின் மென்மையான குரலோ, அந்த உச்சியை வருடிய ஸ்பரிசமோ, ஏதோ ஒன்று அவளை அவசரமாக இந்த உலகத்திற்கு அழைத்து வந்தது.

கண் விழித்த வினாடியில், ஒருவன் தன் தலையில் கை வைத்து இருக்கிறான் என்று அவசரமாக பின் வாங்கினாள். அவளுக்கு தன்னை நினைவில்லை என்பது ராஜீவனுக்குப் புரிந்தது. சுற்றிலும் பரவி இருந்த இருள், நடமாட்டம் குறைவான தெருக்கள், இரவு எட்டு மணியைத் தாண்டிய நேரத்தில் ஆள் அரவமில்லாத பேருந்து நிறுத்தம், என்ற சூழ்நிலை அவளை மருட்டி இருக்க வேண்டும்.

''காலையில் பார்த்தோமே சந்தியா? ஞாபகம் இல்லையா?''

அவனின் இள வயது தோற்றமும் சுற்றிலும் இருந்த சூழலும் அவளை மிரட்ட, மறுப்பாக தலை அசைத்தபடி, கீழே வைத்து இருந்த பையை எடுத்து கொண்டு அங்கே வந்து நின்ற பேருந்தில் ஓட்டமாக சென்று ஏறினாள். இதென்ன இப்படி ஓடுகிறாள்? பயத்தில் சரியான பேருந்து தானா என்பதை கவனித்தாளா தெரியவில்லையே என்ற கவலை வர, அவனும் ஓடி வந்து அதே பேருந்தில் ஏறினான்.

''மேடம், இது திருவொற்றியூர் செல்லும் பேருந்து. நான் கேட்ட கேள்விக்கு எனக்கு பதில் சொல்லாவிட்டால் பரவாயில்லை. நீங்க போக வேண்டிய இடத்திற்குரிய பேருந்து தானா என்பதை சரி பார்த்து கொள்ளுங்க...'' என்று சொல்லி விட்டு ஆண்கள் பகுதியில் காலியாக இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

Optimized by www.ImageOptimizer.net

அவள் தன்னை பார்த்து நடுங்கி விலகி ஒடும்போது அவளைப் பார்க்கக் கூடாது, அவளைப் பற்றி நினைக்கக் கூடாது என்று பல முறை தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டாலும் கண்களோ, மனமோ அவன் சொல்வதைக் கேட்கத் தயாராக இல்லை.

அவள் என்ன செய்கிறாள் என்பதை சில வினாடிகளுக்கு ஒரு முறை பக்க வாட்டில் திரும்பிப் பார்த்த கண்களையும், அவளுக்கு அப்படி என்ன சோகமாக இருக்கும் என்பதை ஊகிக்கவும் முயன்ற மனதை என்ன செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

திருவான்மியூரில் இருந்து சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிற்கு வந்து சேர ஆன முக்கால் மணி நேரத்தில், ராஜீவன் அவளைத் திரும்பிப் பார்த்த அத்தனை முறையும் அவளின் மூடிய கண்களை தாண்டி, கன்னத்தில் கண்ணீர் வழிந்து கொண்டு இருந்தது அல்லது அவள் கைக்குட்டையால், கண்களை துடைத்துக் கொண்டு இருந்தாள்.

சென்ட்ரல் ஸ்டேஷன் வந்து சேரும் வரையில் அவளைப் பற்றிய கவலையிலேயே மூழ்கி இருந்தவன், அவளும் அங்கே இறங்க ஆயத்தமானதை கண்டதும் வியப்படைந்தான். எந்த ஊருக்குப் பயணம் செய்வாள் என்ற யோசனையுடன் இடைவெளி விட்டு தொடர்ந்தான்.

அவள் பயணச்சீட்டு வாங்கும் இடத்தில் வரிசையில் நிற்க, அந்த நீண்ட வரிசை அவள் வெளியே வர பத்து நிமிடம் ஆகும் என்பதை சொன்னது. சுற்று முற்றும் பார்த்தவன் கண்களில், உணவகம் பட நடந்தான். ஒரு பிரைட் ரைஸ், நாலு இட்லி பார்சல் வாங்கி கொண்டு அவளின் வருகைக்காக காத்திருந்தான். அவன் தனக்காக



காத்திருக்கிறான் என்பதை உணர்ந்ததாலேயே சந்தியாவிற்கு கால்கள் பின்ன, கடந்து செல்ல முடியவில்லை.

''ஏதாவது... சொல்லணுமா?'' என்று சாதாரண குரலில் கேட்க அவன் ஒப்புதலாக தலை அசைத்தபடி அவளிடம் இட்லி பார்சலை நீட்டினான்.

''முதலில் சாப்பிடுங்க. ரயிலுக்கு நேரமாச்சு என்றால் அதில் ஏறிய பின் சாப்பிடுங்க..'' என்று நீட்ட அவள் கண்ணில் கலவரம் தோன்றியது.

''இல்லை... வேண்டாம்...''

''ஹலோ... மிஸ்.. பயப்பட வேண்டாம். சும்மா சாப்பிடுங்க. இதில் எதுவும் கலக்கவில்லை என்பதை நிரூபிக்க நீங்க தேர்வு செய்யும் ஏதாவது ஒரு இட்லியை நான் சாப்பிட்டு காட்டட்டுமா?'' என்று வேகமாக கேட்க இம்முறை அவளின் பதட்டம் கூடியது.

''அதெல்லாம் தேவை இல்லை... நம்பிக்கை இல்லாமல் இல்லை... ஆனால்...'' என்று வாங்கத் தயங்கினாள்.

''காலையில் பார்த்தது நினைவிருக்கா இல்லையா சந்தியா?'' என்று அவளை கண்களுக்குள் பார்த்து அழுத்தமாக கேட்க அவள் 'நினைவு இருக்கிறது' என்ற ரீதியில் மெல்லத் தலை அசைத்தாள்.

''என் பெயர் ராஜீவன். பாலாஜி இன்ஸ்டிடியூட் ஆப் கேட்டரிங் டெக்னாலஜியில் லெக்சரரா இருக்கேன். வயிறு காலியா இருந்தால் சின்ன பிரச்சனை கூட பூதாகரமா தெரியும் சந்தியா. சும்மா வாங்கிக் கொள்ள இஷ்டம் இல்லை என்றால், முப்பது ரூபாய் கொடுத்துட்டு வாங்கிக்கோங்க'' என்று வற்புறுத்த அவள் தயக்கத்துடன் வாங்கிக் கொண்டாள்.



Optimized by www.ImageOptimizer.net

"நீங்க எந்த ஊருக்கு போறீங்க? எத்தனை மணிக்கு ரயில்..." என்று ஆரம்பித்தவன் அவள் முகத்தில் தெரிந்த சந்தேக குறியை பார்த்ததும் கைகளை உயர்த்தினான்.

"நீங்க சொல்ல வேண்டாம். பின்னால் சந்தர்ப்பம் கிடைத்தால் பார்க்கலாம். நான் பெங்களூர் மெயிலில் போவேன். பதினோரு மணிக்கு ரயில்..." என்று சொல்லி விட்டு டிவி பார்க்கக் கூடிய இடம் நோக்கி நகர்ந்தான்.

நீலகிரி எக்ஸ்ப்ரஸ். நிற்கும் நடை மேடையை கண்டு பிடித்து சென்றவளுக்கு முன் பதிவு வசதி இல்லாதவர்கள் பயணம் செய்யும் பெட்டியில் இருந்த கூட்டத்தை பார்த்து அவளுக்குத் தலை சுற்றியது. நின்று இருக்கும் ரயிலில், மூச்சு திணறும் கூட்டத்தில் உள்ளே ஏறி சிரமப்படுவதை விட இங்கேயே கொஞ்ச நேரம் உட்காரலாம் ரயில் கிளம்பும்போது ஏறி கொள்ளலாம் என்று கல் பெஞ்சில் அமர, மீண்டும் கண்களில் நீர் கோர்த்தது.

கடந்த ஒரு மணி நேரமாக தூரத்தில் என்றாலும் கண் பார்வை படும் தூரத்திற்குள் அவன் இருந்தான். இப் போது அவனும் வரவில்லை. அவன் விசாரிக்கத் தயாராக இருந்தான். தனக்கு தான் அவனிடம் தன் துயரத்தை பகிர்ந்து கொள்ள மனம் வரவில்லை.

பத்து வயதில் அப்பாவை இழந்தாள். தாய் வழி மாமாவின் வீட்டிற்கு வந்து ஒண்ட வேண்டிய கட்டாயம் ஐந்தாம் வகுப்பு வரை அவள் படித்த கான்வென்ட் படிப்பு பண பற்றாகுறையால் நின்று போனது. மாமா இருந்த வரை படிப்பிற்கு தடை விழவில்லை. ஆறில் இருந்து ப்ளஸ் டூ வரை அரசு பள்ளியில் நன்றாகவே படித்தாள் வீட்டில் கூடுதல் வேலைகள் இல்லாமல் இருந்



இருந்தால் இன்னும் கூடுதல் மதிப்பெண்கள் பெற்று இருக்கலாம். அது நடக்கவில்லை.

செலவு அதிகம் பிடிக்காத, அதே சமயம், மக்களுக்கு சேவை செய்ய கூடிய மருத்துவம் சார்ந்த செவிலியர் படிப்பு அல்லது வேலை வாய்ப்பு அதிகம் இருக்கக் கூடிய ஆசிரிய பணிக்கான பயிற்சி எடுக்கலாம் என்று ஆசை இருந்தது. அந்த வருட கோடை விடுமுறை சமயத்தில், ப்ளஸ் டூ மார்க் லிஸ்ட் வரும் முன்பே மாமா மாரடைப் பால் காலமாகி விட அவளின் மேற்படிப்பு கனவு கானல் நீராக போனது.

அடுத்த நான்கு வருடங்கள் அவர்களின் வீட்டில், வேலை செய்தாலும், அம்மா இருந்த வரை, ஓரளவிற்கு அம்மாவிடமாவது தன் விருப்பத்தை தெரிவிக்கவும், சிணுங்கவும், சண்டை போடவும் சுதந்திரம் இருந்தது. ஆறு மாதத்திற்கு முன்பு அந்த வழியும் அடை பட்டு விட்டது.

இப்போது... புது வாழ்வு மலரப் போகிறது என்ற எண்ணத்துடன் வேலை தேடி வந்த இடத்தில், அந்த வேலையே கேள்விக் குறியாகி விட்டது. இனி என்ன நடக்குமோ? மாலை ஏழு மணிக்கு அத்தை பேசிய கடுமையான வார்த்தைகள் இப்போதும் நெஞ்சத்தை ரணமாக்கியது.

"இப்பவும் உன்னை கடிச்சுக் குதறணும் போல ஆத்திரம் வந்தாலும், அதனால் பிரயோஜனம் இல்லை என்பதால் பேசாமல் இருக்கிறேன். நீ பேசாமல் கிளம்பி வந்துடு. அம்மா திட்டுவது என்ன புதுசா? வயசு பொண்ணு அறிமுகம் இல்லாதவர்கள் வீட்டில் எத்தனை நாள் தங்க முடியும்? ராத்திரி பத்து மணிக்கு மேல், பக்கத்தில

Optimized by www.ImageOptimizer.net

இருக்கும் யாரிடம் இருந்தாவது எனக்கு போன் பண்ணு. நம்பரை வாங்கி கொண்டு திரும்ப நான் அதே எண்ணில் அழைக்கிறேன். அம்மா தூங்கிய பிறகு நிதானமாப் பேசலாம். கவலைப்படாதே சந்தியா'' என்று பவித்ரா சொன்ன ஆறுதல் மொழிகள் கொஞ்சம் மனதை ஆற்றியது.

தன் சிந்தனையில் மூழ்கி எவ்வளவு நேரம் இருந்தாளோ? மணி இப்போது என்ன என்று கையை திருப்பி பார்த்தவள் திடுக்கிட்டாள். ரயில் கிளம்ப இருந்த நேரம் தாண்டி பத்து நிமிடங்கள் ஆகி இருந்தது. ரயில் அதே இடத்தில் இன்னும் நின்று இருக்க அரை மணி நேரம் முன்பு நிரம்பி வழிந்த பெட்டியில் இப்போது காலி இருக்கைகள் இருக்க வியப்புடன் உள்ளே ஏறி அமர்ந்தாள்.

''என்ன ஆச்சு? ஏன் இன்னும் ரயில் கிளம்பவில்லை?'' என்று அருகில் இருந்த பயணியிடம் விசாரித்தாள்.

''அரக்கோணம் பக்கத்துல ஏதோ கூட்ஸ் ட்ரெயின் தண்டவாளத்தை விட்டு இறங்கிடுச்சாம். சரி செய்ய மூன்று மணி நேரம் ஆகும் என்று சொன்னாங்க. அவங்களே மூன்று மணி நேரம் என்றால் நிஜத்துல மேலே நாலு மணி நேரம் தான். அதான் அவசரமா போறவங்க இறங்கி போய்ட்டாங்க...'' என்று சொல்ல அவளுக்குச் சிரிப்பு வந்தது.

தனக்கு இடம் பிடித்து கொடுப்பதற்காகவே இந்த சம்பவம் நடந்தது போல! காலை அஞ்சு மணிக்கு கோவை போய் அவசரமா கிழிக்க வேண்டிய வேலை ஒன்றும் இல்லை. சென்னையிலும் தனக்காக யாரும் காத்திருக்கப் போவதில்லை. ரயில் எப்போது கிளம்புகிறதோ அப்போது கிளம்பட்டும். அதுவரை இங்கேயே இருக்கலாம்.



காலையில் பேங்க் வாசலில் ஒரு டீ. ஆசிரமத்தில் ஒரு டம்ளர் மோர் என்று உள்ளே சென்று இருந்ததால் வயிறு ஓலமிட்டு அழும் குரல் கேட்டது. முதலில் அதை கவனிக்கலாம் என்று அவன் கொடுத்த கவரை பிரித்தவளுக்கு சாப்பாட்டு பார்சலின் மேல் இருந்த அந்த எண் கண்ணில் பட்டது. இது ராஜீவனுடைய நம்பராக இருக்கலாம்!

அவனும் பெங்களூருக்கு செல்வது என்றால், அவனுடைய ரயிலும் தாமதமாக தானே செல்லும். தனியாக இருப்பதை விட, கொஞ்ச நேரம் பேசிக்கொண்டு இருக்கலாமா என்று எழுந்தவள் ஒரு அடி எடுத்து வைக்கும் முன்பே மனசாட்சி குட்டியது.

மீண்டும் அதே இடத்தில் அமர்ந்து அவன் வாங்கி தந்த உணவை சாப்பிட்டவளுக்கு மனம் முழுக்க அவன் இந்நேரம் சாப்பிட்டு இருப்பானா? வீட்டுக்கு போய் இருப்பானா? இங்கேயே இருப்பானா? என்ற கேள்விகள் தோன்றியது. அவனை இரு முறை சந்தித்த போது, அவன் அணிந்து இருந்த உடை, வைத்து இருந்த பொருட்கள், பேசிய பேச்சுக்கள், அவளின் அனுமதி இன்றி மனதில் உலா வந்தது.

# 5

பத்து மணிக்கு பவித்ராவுடன் பேசுவதாக சொன்னோமே, தான் தொலைபேசி எண் கொடுத்தால் தானே பேச முடியும் என்ற நினைவு வர, இருக்கையில் இருந்து

Optimized by www.ImageOptimizer.net

எழுந்தாள். பொது தொலைபேசி எண்ணை கொடுத்து அதில் வெளியில் இருந்து உள்ளே கால் வர அனுமதிப்பார்களா? வேறு யார் எண்ணை கொடுக்கலாம் என்று எண்ணியபடி நடக்கும் போதே, அந்த உணவு பொட்டலத்தில் மீது எழுதி இருந்த எண் மனதில் ஓடியது.

ப்ச்! முதலில் அது தொலைபேசி எண்ணாக இருக்கணும் என்ற அவசியம் இல்லை. இருந்தாலும் அவனுடையதாக இருக்க வேண்டும் என்று நினைக்க அதில் பெயர் இல்லை. அவனுடையதாக இருந்தாலும், இங்கே இருக்கானோ? கிளம்பி விட்டானோ? இருப்பதாக வைத்து கொண்டாலும் அவனை இந்த ஜன சமுத்திரத்தில் எப்படிக் கண்டு பிடிப்பது? கண்டு பிடித்தாலும், அவன் தன்னிடம் அந்த போனை பவித்ராவுடன் பேச கொடுப்பான் என்று என்ன கட்டாயம்?

சில அடிகள் தூரம் நடப்பதற்குள் கேள்விகளை அடுக்க, அதற்கு பதில் கொடுப்பது போல அவன் முதுகில் பையுடன் நடந்து வர அவளின் கால்கள் அதே இடத்தில் நின்றது.

''சந்தியா, அரக்கோணம் வழியா போகும் எல்லா ரயில்களுமே கிளம்பத் தாமதமாகும் என்று சொன்னாங்க. ஏதாவது உதவி தேவையா என்று விசாரிக்க வந்தேன். தப்பா நினைத்து கொள்ள வேண்டாம்...''

''இ..ல்..லை..''

''இல்லை என்றால் உதவி தேவை இல்லையா?'' என்று அவள் பதில் சொன்ன வேகத்திலும், முக பாவனையிலும் என்ன சொல்ல வருகிறாள் என்பதை ஊகிக்க முடிந்தாலும் மாற்றி கேட்டான்.



''ஹய்யோ! உங்களைத் தப்பா நினைக்கலை என்று சொன்னேன்...''

''அப்ப உதவி தேவையா?''

''உங்க போன் கொடுக்குறீங்களா? கோயம்பத்தூருக்கு பேசணும்...''

''இதுக்கா இப்படித் தயங்கினாய்?'' என்ற ரீதியில் அவன் தன் தலையில் கை வைத்து அவளை பரிதாபமாக பார்க்க, ''பயப்படாதீங்க. ரொம்ப செலவாகாது. உங்க நம்பரை சொல்லிட்டால் போதும். அவங்களே திருப்பி கூப்பிடுவாங்க...'' என்று சேர்த்துச் சொல்ல அவனுக்கு இப்போது சிரிப்பு பொங்கியது.

''இப்போதைக்கு உலகத்தில் சுலபமாகவும் சீப்பாவும் கிடைக்கக் கூடிய விஷயம் இந்த தொலை தொடர்பு வசதி தான். ஒரு ரூபாய் இருந்தால் தமிழ்நாட்டில் எங்கே வேண்டுமானாலும் பேசலாம். மொபைலில் நீங்க அரை மணி நேரம் கோயம்பத்தூருக்கு பேசினால் முப்பது ரூபாய் ஆகலாம். நான் ஓட்டாண்டியாகி விடுவேனோ என்ற கவலை இல்லாமல் பேசி முடிங்க. நான் வெயிட் பண்றேன்'' என்று தன் சட்டை பையில் இருந்து மொபைலை எடுத்து கொடுத்தான்.

''உங்க போன் நம்பர் என்ன என்று சொல்லவே இல்லையே...''

''என் போன் நம்பர் ஏற்கனவே உங்களுக்கு நான் சொல்லி விட்டேன். எப்படி என்று யோசிச்சு பாருங்க'' என்ற அவனின் குரல் பின் தொடர அவள் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

''அது தானா... என்பதை உறுதி சொல்ல தான் கேட்டேன்...'' என்று சந்தியா சொல்ல இப்போது ஆச்சரியத்

Optimized by www.ImageOptimizer.net

தில் வாய் பிளந்தது ராஜீவன். காலையில் இருந்து நம்பிக்கையோடு, அழுத்தம் திருத்தமாக அவள் பேசிய ஒரே வாக்கியம் இதுதான். இது இவளின் இயல்பா? அப்படி என்றால் வார்த்தைகளை முழுங்கி அவள் தவித்தது சாதகமற்ற, சூழ்நிலையின் வீரியத்தாலா? அப்படி என்ன சிரமம்? தெரிந்து கொள்ள வேண்டும் போல இருந்தது.

இரண்டாவது ரிங்கில் போனை எடுத்த பவித்ரா "சந்தியா..?" என்று ஆர்வமாக அழைத்தாள்.

"ஆமா பவி. அத்தை தூங்கிட்டாங்களா?"

"ம்ம்ம், தூங்கிட்டாங்க. நீ ரயிலில் வந்து கொண்டு இருக்கிறாயா? உட்கார இடம் கிடைத்ததா?"

"இல்லை பவி, அரக்கோணம் பக்கத்தில் ஏதோ பிரச்சனை என்று இன்னும் ரயில் கிளம்பலை."

"ஓ! இன்னும் சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே இருக்கிறாயா? ஏதாவது சாப்பிட்டாயா? அழுதுட்டே இருக்கிறாயா?" என்று விசாரித்தாள்.

"அழுகை நின்று ரொம்ப நேரமாச்சு. நாலு இட்லியும் சாப்பிட்டேன்..."

"நீயா கடையில் போய் தனியா சாப்பிட்டாயா? ஆச்சரியமா இருக்கே?"

"கடையில் சாப்பிடலை பவி. இந்த போன் ஓனர் வாங்கி தந்தாங்க..."

"ஓனர்..! ஓ மை காட்! பேசிட்டே இருக்கேன் பாரு. நம்பர் சொல்றியா? நான் திருப்பி கூப்பிடுகிறேன்."

"நம்பர் சொல்றேன்... குறிச்சுக்கோ. ஆனால் நீ கூப்பிட வேண்டாம்.. பரவாயில்லை பேசு..."



"எதுக்கு சந்தியா அவங்களுக்கு வீண் சிரமம்?" என்று கேட்டபடியே அவள் எண்களை சொல்லச் சொல்ல குறித்தவள், "இது கேட்டரிங் காலேஜ் லெக்சரர் ராஜீவ் போனா சந்தியா?" என்று கேட்டாள்.

"ராஜீவை உனக்கு தெரியுமா?" என்று திருப்பி கேட்ட சந்தியாவுக்கு அவளுக்கு எப்படி இவனைத் தெரியும் என்று திகைப்பாக இருந்தது.

"வண்டி எப்போது கிளம்புமாம்?" என்று அதை கண்டு கொள்ளாமல் தவிர்த்தவள் மனதில் லேசான கவலை இருந்தது.

"எப்படியும் பனிரெண்டு ஒரு மணி ஆகிவிடும் என்று நினைக்கிறேன். அங்கே வர பத்து மணியாவது ஆகும். சும்மாவே அத்தை திட்டுவாங்க. இப்ப பணத்தையும் தொலைத்து விட்டு அங்கே வந்து நின்றால்..."

"ஒண்ணு பண்ணு. அங்கேயே சென்னையில் தங்கி, அந்த பணத்தை எடுத்த ஆள் யார் என்பதை போலீஸ் ஸ்டேஷனில் ஒரு புகார் கொடுத்து புலன் விசாரணை செய்து, பணத்தை வாங்கி கொண்டு அதற்கு பிறகு வா... சரியா?" என்று அதட்ட, அதுவரை நின்று இருந்த கண்ணீர் முணுக் என்று மீண்டும் கண்ணில் பூத்தது.

"எ..ன்..ன பவி.. நீயே இப்படி சொல்ற?"

"பின்னே என்ன செய்யச் சொல்கிறாய்? அம்மா திட்டத்தான் செய்வாங்க. பையனாக இருந்தால் அங்கேயே பிளாட்பார்மில் படு என்று சொல்லலாம். பிச்சை எடுத்து சாப்பிடு. எங்கேடும் கேட்டு ஒழி என்று சொல்லலாம். உன்னை அப்படிச் சொல்ல முடியுமா? ஒரு விதத்துல உன்னுடைய இந்த நிலைக்கு நானும் ஒரு காரணம். ப்ச்!

Optimized by www.ImageOptimizer.net

ரொம்ப மண்டையை குழப்பி கொள்ளாமல் வந்து சேரு சந்தியா, என்ன புரிந்ததா?'' என்று கோபமாக ஆரம்பித்து கனிவாக முடித்தாள்.

''ம்ம்ம்...''

''ம்ம்ம்.. தவிர வேறே ஏதாவது சொல்லி போனை வை...'' என்று பவித்ரா கேட்க, அவளின் அக்கறை புரிந்து, 'குட்நைட் பவி, காலையில் பார்க்கலாம்...' என்று போனை வைத்தாள்.

போனை வைப்பதற்கு சில நிமிடங்கள் முன்பு, பவித்ரா சொன்ன வார்த்தையால் கண்ணில் துளிர்த்த நீரை கைக்குட்டையால் துடைத்த பிறகு திரும்பி, ''தேங்க்ஸ்...'' என்று போனை நீட்டினாள்.

''அவ்வளவு தானா?'' என்று அவளையே பார்த்த படி கேட்டான்.

''வேறென்ன...?'' என்று கேட்டவளின் கண்ணில் குழப்பம் இருந்தது.

''ஒரு பத்து ரூபாய் இருக்குமா?'' என்று சிரிப்போடு கேட்டபடி தன் வலது கையை அவள் புறம் நீட்ட, அவள் கைப்பையில் இருந்து பத்து ரூபாய் எடுத்து அதில் வைத்தாள். அவள் தந்த பணத்தை சட்டை பையில் வைத்தவன், தன் போனில் ஹெட்செட்டை செருகி, அவளிடம் நீட்டி, ''அஞ்சு நிமிஷத்துல வரேன். அது வரை இதை கேட்டுட்டு இருங்க....'' என்று சொல்லி விட்டு வேகமாக நடந்து போனான்.

இதில் என்ன இருக்கிறது என்ற தயக்கத்தோடு ஹெட்செட்டை காதில் செருகியவள், அதில் ஒலித்த பாடல் வரிகளை கேட்ட முதல் வினாடி உறைந்து போனாள்.

விடியாத இரவென்று எதுவுமில்லை...

முடியாத துயரமென்று எதுவுமில்லை...



வடியாத வெள்ளமென்று எதுவுமில்லை...

வாடாத வாழ்க்கையென்று எதுவுமில்லை...

இந்த பாட்டை ஏன் தனக்கு எடுத்து கொடுத்து போனான். தன்னை பார்த்தால் துயரத்தில் சிக்கி தவிப்பது மாதிரி முதல் பார்வையிலேயே தோன்றி விட்டதா? நேரில் அறிமுகம் இல்லாத ஒரு இளம் பெண்ணிடம் எப்படி ஆறுதல் வார்த்தைகளை நேரில் சொல்வது என்று இப்படி சொல்கிறானா? என்ன ஒரு நாகரீகம்!

அங்கே பேருந்து நிறுத்தத்தில் தன்னை உச்சி வருடி அழைத்த போது அதில் அக்கறையும் அன்பும் மட்டுமே இருந்தது. ஆசை இல்லை. காலையில் ஒருத்தன் வந் தானே? கையெழுத்து வாங்க, தோளில் தட்டி... நுனி விரல் தான் தோளில்... உள்ளங்கை சொல்ல கூசும் இடத் தில்... ச்சே! கர்மம்... தொடர்ந்து அந்த கேவலமான பிறவியை பற்றி யோசிக்க விடாமல் காதில் ஒலித்த பாடல் வரிகள் அவளை இங்கே அழைத்து வந்தது.

ஹே! அச்சம் அச்சம் இல்லை! இனி அடிமை எண்ணம் இல்லை!

நம் காலம் இங்கே கூடிப்போச்சு! கண்ணீர் மிச்சமில்லையே!

'உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும்

அச்சம் என்பதில்லையே!'

என்ற புரட்சி கவிஞரின் வார்த்தைகளையே கொஞ்சம் மாற்றி, எழுதிய இந்த பாடலை கேட்கும்போதே கண் ணீர் விடுவது தப்பு போலத் தோன்றுகிறது.

இனி எந்தக் காலத்திலும், என்ன மாதிரி சூழ்நிலை யிலும் கண்ணீர் விடுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி அழ வேண்டும் போலத் தோன்றினால் இவனை எண்ணி

Optimized by www.ImageOptimizer.net

மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டியதுதான்! 'கடவுள் ஒரு கதவை சாத்தினால், ஒரு ஜன்னலை திறப்பான்' என்ற பவித்ராவின் வார்த்தைகள் நினைவில் வந்தது.

**காலம் மாறிப்போச்சு நம் கண்ணீர் மாறிப்போச்சு**

**நாளை நல்ல நாளை என்ற நம்பிக்கை உண்டாச்சு.**

மொபைல் போனில் இருந்து ஒலித்த பாடல் வரிகள், அவளின் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச குழப்பத்தை ஓட்டி, வருங்காலம் பற்றிய நம்பிக்கையை விதைத்தது. பாடல் வரிகள் இன்னும் காதில் ஒலித்துக் கொண்டு இருக்க அருகில் வந்தவன் அருகில் நாகரீகமான இடை வெளி விட்டு அமர்ந்து சாக்லெட்டை நீட்டினான்.

''இதுக்குதான் பத்து ரூபாய் கேட்டீங்களா?'' என்று விசாரித்தவளின் குரலிலேயே இளநகை இருந்தது.

''ஆமா! எந்த நல்ல காரியம் ஆரம்பிக்கும் முன்னாடியும் ஸ்வீட்டோடு ஆரம்பிக்கணும் என்று சொல்லும் இந்த விளம்பரம் பார்த்து இருக்கீங்களா?'' என்று சிரிப்போடு கேட்டான்.

''நாம் இப்போ என்ன நல்ல காரியம் பண்ணப் போகிறோம்?''

''நாம் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்ததே நல்ல விஷயம் தானே? இன்று நம்முடைய நட்பு துவங்குகிறது. சரிதானே?'' என்றவனுக்கு புன்னகையோடு தலை அசைத்தாள்.

''அவ்வளவு தானா? சரி என்று பதில் கூடச் சொல்ல மாட்டீங்களா? சரி போகட்டும். உங்க மாமா பொண்ணு பவித்ரா என்ன சொல்றாங்க?'' என்று அவன் சர்வ சாதாரணமாக விசாரிக்க அவள் விழித்தாள்.



''உங்களுக்கு எப்படி பவியை தெரியும்?''

''நீங்க இப்ப அவங்க கிட்டே பேசும்போது சொன்னீங்களே! பவி சொன்னீங்க. அத்தை சொன்னீங்க...'' என்று ஆரம்பித்தவன் அவளின் முகம் போன போக்கைப் பார்த்து பேச்சை நிறுத்தினான்.

''சாரி.. அது தற்செயலா... காதில் விழுந்தது...'' என்று விளக்கம் சொல்ல முயன்றவனை கை காட்டி நிறுத்தினாள்.

''பவியை வைத்து பவித்ரா. அத்தையை வைத்த மாமா பொண்ணு சரி. ஆனால் என் பேர் சந்தியா என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்க அதுவரை தீவிரமான முக பாவனையில் இருந்தவன் கண்கள் குறும்பில் மலர, ''அது சஸ்பென்ஸ்'' என்று புன்னகைத்தான்.

''சஸ்பென்சா..'' என்று திகைத்தவளின் காதுகளில் அவனின் மொபைலில் இருந்து ஒலித்த பாடல் வரிகள் ரீங்காரம் செய்து புன்னகையை மலர வைத்தது.

**இன்பக்காற்று வீசட்டும் எட்டுத்திக்கும் பரவட்டும்**

**பரவட்டும் பரவட்டும் பரவட்டும் பரவட்டும்**

**மனிதப்பூக்கள் மலரட்டும் மனங்கள் இன்னும் விடியட்டும்**

**விடியட்டும் விடியட்டும் விடியட்டும் விடியட்டும்**



# 6

அன்று பொழுது விடியும் போது, இரவு பத்து மணிக்கு பொது இடத்தில், அன்று அறிமுகமான இள வயது

Optimized by www.ImageOptimizer.net

ஆண்மகனுடன் தனியாக அமர்ந்து பேசி, சாக்லே... சாப்பிடுவாள் என்று கோடி ரூபாய் கொடுத்து சத்திய... பண்ணி இருந்தாலும் சந்தியா நம்பி இருக்க மாட்டா... ஆனால் அது நடந்தது. இவனிடம் நட்பு பாராட்டுவோ... என்று காலையில் இவனை பார்க்கும் போது தோன்... வில்லை.

அதே சமயத்தில் தனக்கு மிக முக்கியமான உதவி... செய்ய போகிறான் என்று நம்பி சென்றவள், த... கழுத்தை அறுத்து விட்டு மாயமாகி விட்டான். இது தா... வாழ்க்கையின் நிதர்சனம். அவள் சிந்தனையில் மூழ்... இருப்பதை அறியாமல், "ரயில் கிளம்ப இன்னும் ஒ... றரை மணி நேரம் ஆகும். அம்மாவிற்கு ஒரு போ... பண்ணி விடுகிறேன். வர லேட் ஆனால் கவலைப் ப... வாங்க.." என்று அம்மாவை அழைத்தான்.

"என்ன ராஜீவ்? ஸ்டேஷனுக்கு வந்தாச்சா? சாப்பி... டாயா?" என்று போனை எடுத்த உடன் அக்கறையா... விசாரிக்க, இளநகை மலர்ந்தது.

"சாப்பிட்டாச்சு. ஸ்டேஷன் வந்தாச்சு. ஆனால் உங்... வேகத்திற்கு ரயில்வேயால் ஈடு கொடுக்க முடியலை. ரயில் கிளம்ப இன்னும் இரண்டு மணி நேரம் ஆகுமாம்.."

"ஹய்யோ! ஏன்டா, என்ன ஆச்சு?"

"யாருக்கும் ஒன்றும் ஆகலை. அரக்கோணம் பக்க... துல ஒரு சின்ன பிரச்சனை. காலையில் வர லேட் ஆகு... பயப்பட வேண்டாம் என்று சொல்லத் தான் போன் ப... ணினேன்..."

"பயமா? எனக்கா? நீ வரலை என்றால், இந்த வா... மும் ஏதோ புதுசா கதை சொல்லி அம்மா அப்பாவை பார்க்க வராமல் டிமிக்கி அடிக்கிறாய் என்று தா...



நினைப்பேனே தவிர எதற்குப் பயப்படணும்?" என்று அலட்சியமாகச் சொன்ன விமலாவின் குரல் கேட்டு சிரித்தான்.

"நான் சொல்லும் காரணம் கதை என்றா நினைக்கறீங்க? கடவுளே!"

"கடவுள் பொய் சொல்பவர்களுக்கு துணைக்கு வர மாட்டார். அவரை தொந்தரவு பண்ணாதே! ரயில் கிளம்ப எவ்வளவு லேட் ஆனாலும் சரி, இந்த வாரம் வந்தே தீரணும். உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும். போனை வை" என்று வைத்து விட அவன் புன்னகையோடு சந்தியாவின் புறம் திரும்பினான். அவள் தூரத்து தண்டவாளத்தை வெறித்து கொண்டு இருந்ததை பார்த்ததும், ஏன் இப்படி சோகமே உருவாக இருக்கிறாள்? கடைசியாக அவளிடம் என்ன பேசினோம் என்று யோசித்தான்.

"ஹலோ.. சந்தியா...மேடம்... இங்கே இருக்கீங்களா?" என்று குரல் உயர்த்த, ராஜீவனின் குரலில் திரும்பியவளின் கண்களில் வருத்தமும் ஏமாற்றமும் இருந்தது.

"பேர் சஸ்பென்ஸ் என்று சொன்னதற்கா இவ்வளவு யோசனை? காலையில் உங்க சர்ட்டிபிகேட் பறந்த போது, உங்க பெயரை படித்தேன். அவ்வளவு தான்."

"அது.. இல்லை..." என்றவளின் தலை இன்னும் கவிழ்ந்து இருந்தது.

"என்னங்க! இப்பதான் நாலு வரி சேர்ந்தாற் போல பேசினீங்க என்று நினைத்தேன். மறுபடியும் சைலன்ட் ஆகிட்டீங்க. அப்படி உங்க மனசு கஷ்டப்படும்படி என்ன நடந்தது?"

Optimized by www.ImageOptimizer.net

''......''

''காலையில் பார்த்த ஒரு மனிதனிடம் எப்படி தங் சொந்த விஷயத்தை சொல்வது என்று நீங்க தயங்குவது புரியுது. ஆனால் மனசு பாரமா இருக்கும் போது, யாரிடமாவது மனசுவிட்டுப் பேசினால் ரிலீப் கிடைக்கும். நான் எங்க அம்மா கிட்டே பேசுவேன். நீங்களும் அது போல பேசலாமே?'' என்ற அவன் மென்மையான குரலில் அதுவரை சிரமப்பட்டு அடக்கி வைத்து இருந்த கண்ணீர் வெளியே வந்தது.

''சந்தியா! சாரி. உங்களுக்கு அம்மா இல்லையா?'' என்று பதட்டமாக விசாரித்தான்.

''இல்லை.. அப்பா முன்னாடியே.. பத்து வயசாக இருக்கும்போதே... அம்மா.. இப்போ ஆறு மாசம் முன்னாடி...''

''ஓ..!'' என்று சொன்னவனுக்கு உடனே பேச்சைத் தொடர முடியவில்லை. அவனே பின் சமாளித்து பேச்சை ஆரம்பித்தான். ''கடவுள் ஒன்றை எடுத்தால் இன்னொன்று தருவாருங்க. உங்க அம்மாவிற்கு சமமான, அல்லது அதை விட உசத்தியான ஒன்றை உங்களுக்குத் தர தான் உங்க அம்மாவின் மரணம் நிகழ்ந்தது என்று மனதை தேற்றிக் கொள்ளுங்க. சென்னை உங்க சொந்த ஊரா...?'' என்று இதமான குரலில் விசாரித்தான்.

''ம்ஹூம்...''

''என்ன விஷயமா இங்கே வந்தீங்க.. படிப்பு.. வேலை....?''

''வேலை விஷயமா தான் வந்தேன். வந்த வேலை முடியலை. சென்னைக்கும் எனக்கும் ராசி இல்லை



போல...'' என்று பெருமூச்சு விட்டவளை வருத்தத்துடன் பார்த்தான்.

''மனுஷங்க செய்யும் செயலுக்கு ஊர் என்னங்க பண்ணும்? வேலை கிடைக்கலையா? அதுக்கா அப்செட் ஆனீங்க? இந்த வேலை இல்லாவிட்டால் இன்னொரு வேலை...''

''வேலை கிடைச்சது. ஆனால், அதைப் பற்றிப் பேசி இனிமேல் ஒன்றும் ஆகப் போவதில்லை.''

''சந்தியா, தவறுவது எல்லோருக்கும் இயற்கை. தவறில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளத் தயாரா இருந்தால் வெற்றி நிச்சயம் வந்து சேரும். உங்க தகுதி அனுபவம் சொல்லிட்டு ஊருக்குப் போங்க. ஏதாவது வேலை ஏற்பாடு பண்ணிட்டு தகவல் சொல்கிறேன்...''

''வேலை இருக்கு. அதுக்கு டெபாசிட் கட்ட கொண்டு வந்த பணம் காணாமல் போய் விட்டது.''

''பெரிய தொகையா?''

''இரண்டு லட்சம்...'' என்று அவள் சொல்ல இப்போது அவன் வாய் அடைத்து போனான்.

''எப்படி...அவ்வளவு பணத்தை...'' என்று நம்பாமல் விசாரித்தவன் அவள் தன் விரல் நகத்தை ஆராய்ந்தபடி சொன்ன விஷயங்களை கேட்டதும் மேலும் அதிர்ந்தான்.

''வங்கிக்கு ஒரு வேலையாக போனால்... அதை சரி பார்க்காமல்...!''

''ப்ச்! ஒருத்தரை நம்பிய பிறகு சந்தேகப் படக்கூடாது என்பது எனக்கு சொல்லிக் கொடுத்த பாடம்...''

''ஆனால் ஒருத்தரை நம்புவதற்கு முன்னால், அவர் நம்பத் தகுந்தவர் என்று செக் பண்ண வேண்டாமா?

என்னிடம் இட்லி வாங்க எவ்வளவு யோசித்தீங்க? அதுல பாதியை. அவர் யார், என்ன செய்கிறார், எங்கிருந்து வருகிறார் என்று கேட்டு இருந்தால்...''

''இதைப் பற்றிப் பேசி நான் நிறையத் திட்டு வாங்கியாச்சு. நீங்க புதுசா ஆரம்பிக்க வேண்டாம்'' என்று சொல்லப் பாவமாக இருந்தது.

''ஒகே! எங்கே என்ன வேலை? அதுல நான் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்...'' என்று விசாரிக்க அவள் நம்பாமல் பார்த்தாள்.

''முதலில் பணம் கட்ட கால அவகாசம் கேட்கலாம். அதற்குள் இந்த பணத்தை எடுத்தவனை கண்டு பிடித்து வசூல் பண்ண பார்க்கலாம்...''

''கால அவகாசம் அடுத்த வெள்ளிக் கிழமை வரை இருக்கு. ஆனால் பணம் எடுத்தவனை எப்படிக் கண்டு பிடிப்பது?'' என்று கேட்டவளின் முகத்தில் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் மாறி மாறி சுடர்விட்டது.

''முயற்சி பண்ணலாம் சந்தியா. ஏதாவது வழி கிடைக்கும். முதலில் உங்களுக்கு என் மீது நம்பிக்கை இருந்தால், இன்று என்ன நடந்தது என்பதை அப்படியே சொல்றீங்களா?''

இவனிடம் சொல்வதனால் புதிதாக நஷ்டம் வரப் போவதில்லை. ஆனால் ஒரு வேளை எல்லாம் நல்ல படியாக இவன் மூலம் நடந்தால், தான் தொலைத்த பணம் திருப்பி கிடைக்க வாய்ப்பு இருக்கும். முயன்று பார்ப்பதில் தப்பில்லை என்று நிமிர்ந்தாள்.

''டிடி கம்மியான தொகைக்கு இருக்கிறது என்பதை எப்போ பார்த்தீங்க சந்தியா?''



''ஆசிரமத்துல பார்த்தேன்...''

''ஆசிரமமா? வேலைக்கு போனதா சொன்னீங்களே...''

''சிவானந்த குருகுலத்தில் ஸ்டோர் கீப்பர் வேலைக்கு சேர இரண்டு லட்சம் டெபாசிட் கட்டச் சொல்லி இருந்தாங்க. அந்த பணத்தை தான்...''

''சிவானந்த குருகுலத்தில் டெபாசிட்டா...? அதுவே ஆதரவு இல்லாத குழந்தைகளுக்காக நடத்தப் படுவது தானே? அங்கே ஏன் டெபாசிட்...?''

''இந்த சந்தேகம் இங்கே வருவதற்கு முன்னால் எனக்கும் இருந்தது. அங்கே மேடம் பேசியதை கேட்ட பின்னால்...'' என்று ஆசிரமத்தில் மயக்கம் தெளிந்த பிறகு நடந்ததை விவரிக்க ஆரம்பித்தாள்.

''இங்கே பாரு சந்தியா. இது வறியவர்களுக்கான புகலிடம். இங்கே சேவையாக வேலை செய்பவர்களுக்கு தான் முன்னுரிமை அளிக்கப்படும். இந்த ஸ்டோர் கீப்பர் வேலையை உனக்கு கொடுக்க நான் சம்மதித்தற்கு காரணமே. இந்த ஆசிரமம் நல்ல படியாக நடக்க உதவும் ஒரு புரவலரின் பரிந்துரைக்காக தான். அதுவும், ஒரு பெரிய தொகையை வைப்பாக கட்ட வேண்டும் என்ற நிபந்தனை வைத்தது ஏன் என்று தெரியுமா?'' என்று கேட்க அவள் விழித்தாள்.

''உன்னை பார்த்தால் உலக அனுபவமே அற்றவள் போல இருக்கிறது. நானே சொல்லி விடுகிறேன். இங்கே நாங்கள் அதிகம் சம்பளம் கொடுப்பதில்லை. ஆனால் அதை சரிக்கட்ட, இங்கிருந்து சட்ட விரோதமான முறையில் பணம் ஈட்டும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையை விதைப்பதற்காக தான் அப்படி ஒரு நிபந்தனை விதித்தது...''

Optimized by www.ImageOptimizer.net

"சட்ட விரோதமாக என்ன செய்ய முடியும்?'' என்ற குழப்பத்தோடு பார்த்தவளை அனுதாபத்தோடு நோக்கினார்.

"இங்கே பணமாக வருபவற்றிற்கு கணக்குகளை எளிதில் பராமரிக்க முடியும். ஆனால் பொருளாக வருவதில் சிலவற்றை மறைத்து விட்டால் கண்டு பிடிப்பது சுலபமில்லை. அதை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை இது...'' என்று அவர் சொன்ன விளக்கமும் புரியாத மாதிரி இருந்தது.

அவளின் முக பாவனையை பார்த்து மேலும் உஷ்ணம் ஏற, "சந்தியா, ஏழையாக இருக்கலாம். ஆனால் விழிப்பாக இருக்க வேண்டாமா? முன்பின் தெரியாத ஆளின் வங்கி கணக்கில் இரண்டு லட்சத்தை டெபாசிட் செய்து விட்டு அவன் டி.டி.யாக இருபதாயிரம் எடுத்துக் கொடுத்து ஏமாற்றி விட்டான் என்று நீ சொல்வதை எப்படி நான் நம்புவது?'' என்று அவர் கேட்ட கேள்விக்கு அவளிடம் பதில் இல்லை.

"என்னைப் பார்த்தால் பொய் சொல்பவள் மாதிரியா தெரிகிறது?'' என்ற அவளின் பரிதாபமான முகத்தை பார்த்து அவரின் வேகம் குறைந்தது.

"சரி உன்னை நான் நம்புகிறேன் என்று வைத்து கொண்டாலும், உன்னை நம்பி, எப்படி இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைப்பது என்று சொல் பார்க்கலாம்...''

"மேடம், என்னை நம்பலாம். இங்கேயே இருபத்தி நாலு மணி நேரமும் இருந்து குழந்தைகளுக்கு என்னால் ஆன உதவிகளை நிச்சயம் செய்வேன்'' என்று சொன்னவளை பார்க்கப் பாவமாக இருந்தாலும், அவளின் திறமை மீது நம்பிக்கை வர மறுத்தது.



"இங்கே இருநூறு குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மூன்று வேளை உணவுக்கான மாதாந்திர பொருட்களை நீ நிர்வாகம் செய்ய வேண்டும். நீ கணக்கு எழுதுவாயா? பொருட்களின் இருப்பை சரி பார்ப்பாயா? இந்த வேலையை உனக்கு கொடுக்க எனக்கு இஷ்டம் இல்லை என்பதை விட இந்த வேலைக்கு நீ பொருத்தம் இல்லை என்று சொல்வது தான் சரி'' என்று அவர் சொன்ன போது தான் அவளுக்கு அவரின் பேச்சின் போக்கும் நோக்கமும் புரிந்தது.

"ப்ளீஸ் மேடம், எனக்கு இந்த வேலை கட்டாயம் வேண்டும். நீங்க நினைப்பது மாதிரி இந்தக் குழந்தைகளுக்கு வரும் பொருட்களை வெளியே விற்கும் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஒரு காலமும் ஈடு பட மாட்டேன். என்னை நம்புங்க மேடம்'' என்று பதட்டத்தோடு கெஞ்சினாள் சந்தியா.

"சந்தியா, உனக்கு அடுத்த வெள்ளி மாலை வரை அவகாசம் தருகிறேன். நீ டி.டி-யோடு வந்து வேலையில் சேர்ந்து கொள்ளலாம்'' என்று முடித்து விட்டார். பங்கஜத்தின் வீட்டில் ஆரம்பித்து, வங்கியிலும், ஆசிரமத்திலும் நடந்தவற்றை சந்தியா விளக்கி முடித்த பிறகு அழுத்தமான அமைதி நிலவியது.

"சந்தியா, ஒரு வார காலம் உங்களுக்கு சென்னையில் தங்க ஒரு பாதுகாப்பான இடம் இருக்கா?'' என்று நீண்ட அமைதியை கலைத்து விசாரித்தான் ராஜீவ்.

"ஒரு வாரம்... என்றால்... பங்கஜம் அக்கா வீட்டில்... தங்கலாம்.. ஏன் கேட்கறீங்க?'' என்று தயக்கத்தோடு எதிர் கேள்வி கேட்டாள்.

"இதே மாதிரி ஒவ்வொரு விஷயத்திற்கும், நாலு கேள்வி கேட்கணும் என்ற பாலிசி வைத்துக் கொண்டால்

Optimized by www.ImageOptimizer.net

சீக்கிரமே முன்னுக்கு வந்து விடுவீர்கள்'' என்று சொல்லிவிட்டு போனை எடுத்து, ''ரயில் இன்னும் கிளம்பவில்லை. அதனால் இப்போது வீட்டிற்கு திரும்பிச் செல்கிறேன். அடுத்த வாரம் வர பார்க்கிறேன்'' என்று அம்மாவிற்கு செய்தி அனுப்பி விட்டு அவளை பார்த்து புன்னகை செய்தான் ராஜீவன்.

# 7

''சென்னையில் தங்க முடியுமா என்று ஏன் கேட்கிறாய்?'' என்று தான் கேட்டதைத் தவறாக எடுத்துக் கொண்டானா என்ற சந்தேகம் சந்தியாவிற்கு வந்தது. சில வினாடிகள் கழித்து நிமிர்ந்தவன், ''ஊருக்கு வரவில்லை என்று மெசேஜ் அனுப்பினேன்'' என்று ராஜீவன் சொல்ல அவளுக்கு வியப்பாக இருந்தது.

''என்ன அப்படி பார்க்கறீங்க வீட்டுக்கு போவது அம்மா அப்பாவிற்கு ஹலோ சொல்லத்தான். வேறே எந்த முக்கியமான வேலையும் இல்லை. அதை இந்த வாரமும் சொல்லலாம். அடுத்த வாரமும் சொல்லலாம்...'' என்று சொல்லும் போதே அம்மாவின் 'டிமிக்கி அடிக்காமல் வந்து சேர்' என்ற அதட்டல் நினைவுக்கு வந்தது.

''அம்மா அங்கே இருக்கிறாங்க என்றால் இங்கே உங்க கூட...'' என்று இழுத்து விட்டு நாக்கை கடித்துக் கொண்டாள். யார் இருக்காங்க என்று தெரிந்து என்ன செய்யப் போகிறாள்?

''இப்போதைக்கு நானே ராஜா, நானே மந்திரி, நானே சேவகன். வீட்டில் யாரும் இல்லை...'' என்று சிரிப்புடன்



சொல்ல, ''அப்ப காலையில்...'' என்று ஆரம்பித்து மீண்டும் நிறுத்தினாள்.

''காலையில் என்ன..?'' என்று கேலியாக கேட்டவனுக்கு பதில் சொல்லும் முன்பே அவனின் மொபைல் அழைத்தது. அம்மா!

''பாவம் அம்மா, ராத்திரி தூங்க விடாமல் தொந்தரவு பண்ணக் கூடாது என்று மெசேஜ் அனுப்பினால் தூக்கத்தில் இருந்து எழுந்து, 'ஏன்டா வரலை?' என்று சண்டை போட உடனே கூப்பிட்டுட்டீங்களா?'' என்று போனை எடுத்த ராஜீவன் சிரிக்க விமலா பாய்ந்தார்.

''டேய்! சிரிக்காதே. நான் கடுப்பில இருக்கேன்... அங்கே வந்தேன்...''

''அம்மா..! இப்படி சத்தமா பேசினால் உங்க பி.பி. தான் கூடும். எனக்கென்ன காதா கேட்காது? மெதுவா பேசுங்க...''

''இரண்டு மாசம் கழித்து கிளம்பி பெற்றவங்களை பார்க்க வர முடியாமல் அங்கே என்னடா வெட்டி முறிக்க போகிறாய்?''

''வேலை நமக்கு எப்ப இல்லாமல் இருந்து இருக்கு? என்னை கேட்கறீங்களே! நான் இங்கே மூணு வருஷமா தனியா இருந்த போது, நீங்க ஏன் இங்கே என்னை பார்க்க ஒரு தடவை கூட வரலை?''

''நான் அங்கே வந்தால், இங்கே அப்பாவுக்கு யார் சாப்பாடு போடுவா? உனக்குச் சமைக்கத் தெரியும். அப்பாவுக்குச் சமைக்கத் தெரியாது. உனக்கு வாரத்துல ரெண்டு நாள் லீவு. அப்பாவுக்கு விடுமுறை நாளே கிடையாது. நாங்க அங்கே வரணும் என்றால் ரெண்டு பேர் பயண

Optimized by www.ImageOptimizer.net

செலவு. நீ இங்கே வந்தால் ஒரு செலவு. விளக்கம் போதுமா? இன்னும் வேண்டுமா? இந்த ஆராய்ச்சி எல்லாம் இப்ப எதுக்கு? ரயில் லேட் ஆனால் வர மாட்டாயா? முக்கியமான விஷயம் பேசணும் என்று சொன்னதை மறந்து விட்டாயா?''

''என்னம்மா எனக்குத் தெரியாத முக்கியமான விஷயம்? ஏதாவது பொண்ணு பார்த்து வச்சு இருப்பீங்க அதானே...!''

''அதெல்லாம் வக்கணையா பேசு. பதில் ஒன்றும் சொல்லிடாதே...''

''கல்யாணம் தானேம்மா? பண்ணிட்டால் போச்சு. நீங்க சொல்வதை மீறியா நான் செய்யப் போகிறேன். பொண்ணை நான் பார்க்கணும். பேசணும். அதுக்குப் பிறகு முடிவு பண்ணுங்க. அவ்வளவு தான்...''

''தாராளமா பாரு. யார் வேண்டாம் என்று சொல்றாங்க? அதுக்கு தான் போட்டோ காட்ட கூப்பிட்டேன்...''

''போட்டோவில் பார்த்தால் போதாது. நேரில் பார்க்கணும். பேசணும்...''

''அப்ப அடுத்த வாரம் வரோம் என்று அவங்களிடம் சொல்லி விடவா? அப்புறம் வர முடியலை என்று புதுசா காரணம் சொல்லக் கூடாது...''

''அடேங்கப்பா! அடுத்த வாரம்... இன்னும் ஏழு நாள், நூற்று அறுபத்து எட்டு மணி நேரம், பத்தாயிரத்து எண்பது நிமிஷம்...''

''ஆறு லட்சத்து நாலாயிரத்து எண்பது செகண்ட் இன்னும் இருக்கு...'' என்று அவசரமாக விமலா இடைமிட அவன் பலமாக சிரித்தான்.

''ஆஹா! உங்க மெமரி ஷார்ப்பா ஆகிடுச்சும்மா. தூக்கத்துல எழுப்பினால் கூட செகண்ட் கணக்கு கரெக்டா சொல்றீங்க.''



''இந்த ஐஸ் எல்லாம் இங்கே விக்க வேண்டாம். பெங்களூர் ஏற்கனவே குளிராதான் இருக்கு. கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு.''

''இதே கேள்வியை அடுத்த வெள்ளிக் கிழமை கேளுங்க. அப்ப இருக்கும் நிலை பார்த்துச் சொல்றேன்...''

''ராஜீவ்! நீ நழுவுவதை பார்த்தால் எனக்கு சந்தேகமா இருக்கு. ஏற்கனவே ஏதாவது பெண்ணைப் பார்த்து விட்டாயா?''

''ஆமாம் என்று சொன்னால் என்னம்மா செய்வீங்க?''

''ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று இருப்பது ஒரு பிள்ளை. உன் ஆசையை வேண்டாம் என்றா சொல்ல முடியும்? விதியே என்று நொந்து கொண்டு, கல்யாணம் பண்ணி வைத்துவிட்டு, கல்யாணம் முடிந்த கையோடு அந்த இடத்தில் இருந்து திரும்பி பார்க்காமல், அப்பாவை அழைத்து கொண்டு பெங்களூருக்கு வந்து விடுவேன்...''

''உங்க கற்பனைக் குதிரையை கொஞ்சம் கட்டி வையுங்க. அந்த அளவுக்கு உங்க மனசு நோகும்படி நான் எதுவும் செய்ய மாட்டேன்...''

''அப்படித்தான் இந்த நிமிஷம் வரைக்கும் நம்பிட்டு இருக்கிறேன்...''

''அதை அப்படியே கெட்டியா பிடிச்சுக்கோங்க. 'இவன் இந்த வாரமும் வரலை. எல்லாம் நீங்க கொடுக்கும் செல்லம். அவனை ஒரு வார்த்தை கேட்கறீங்களா?' என்று வேலைக்கு போயிட்டு வந்து அசந்து தூங்கும் அப்பாவை பிடுங்காமல் சமத்தா படுத்து தூங்குங்க...''

''நான் கேட்டுட்டாலும் உங்க அப்பா பதில் சொல்லிட்டு தான் மறு வேலை பார்ப்பாங்க...''

Optimized by www.ImageOptimizer.net

''அதான் அப்பாக்கும் சேர்த்து நான் பதில் சொல்றேனே!'' என்று விடாமல் வம்பு வளர்த்தவன் கண்ணில் வியப்போடு தான் பேசுவதை பார்த்துக் கொண்டு இருந்த சந்தியா கண்ணில் பட, ''ஓகே மா. காலையில் பேசுகிறேன்...'' என்று பேச்சை முடிக்க முயன்றான்.

''டேய்! நில்லு. என்ன வேலை என்று கேட்டதற்கு பதில் சொல்லவே இல்லையே?''

''காலையில் சொல்றேன்மா. குட்நைட்'' என்றவள் குரல் தாழ்ந்து இருந்ததோடு விளையாட்டுத் தனமும் குறைந்து இருக்க, போனை வைத்த விமலாவுக்கு தூக்கம் தொலை தூரம் ஓடிப் போனது.

''வீட்டுக்கு வரலை என்று சொல்லிட்டேன். நீங்க தங்க போற வீட்டுக்கு தகவல் சொல்ல வேண்டாமா? போன் பேசுறீங்களா?'' என்று நீட்ட, அவள் கைக்கடிகாரத்தை பார்த்தாள்.

''மணி பத்தரை ஆச்சே! இப்ப போய்...''

''ஆனால் நாம் அங்கே போய் சேர இன்னும் ஒரு மணி நேரம் ஆகுமே? நடு ராத்திரி பதினொன்றரை மணிக்கு போய் கதவை தட்டுவது மட்டும் நாகரீகமாக இருக்குமா சந்தியா?'' என்று கேட்க, அவள் விழித்ததை பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''அவங்க வேலை செய்யறாங்களா?'' என்று கேட்க 'ம்ஹூம்!' என்று வேகமாக அவள் தலை அசைத்தாள்.

''அப்ப கவலையே படாதீங்க. விழித்து தான் இருப்பாங்க. சீரியல் பார்த்துட்டு இருப்பாங்க...'' என்று சொல்ல அவள் தயக்கத்துடன் போனை வாங்கி பங்கஜம் அக்காவின் நம்பரை அழுத்தினாள். அவன் சொன்னது உண்மை!



சில வினாடிகளில் போன் எடுக்கப்பட்டது. ரயில் தாமதமான தகவல் கேட்டதும் பதறி, தவித்தாள்.

''இல்லைக்கா. இங்கே திருவான்மியூர் வரை கூட வர ஒருத்தர் இருக்கார். அவரோட வரேன். அவருடைய போனில் இருந்து தான் பேசுகிறேன். நம்பர் குறிச்சுக் கோங்க...'' என்று சொல்லி நம்பரையும் கொடுக்க அவரின் பதட்டம் கொஞ்சம் குறைந்தது.

''என் நம்பர் கொடுக்கறீங்க. நாளைக்கு ஏதாவது பிரச்சனை என்றால் என்னை தூக்கி போலீஸ் ஸ்டேஷனில் வைக்க போறாங்க...'' என்று கேலி செய்தபடி அவன் போனை வாங்க அவள் பதறினாள்.

''இரண்டு லட்சம் ரூபாய் தொலைந்ததற்கே நான் போலீஸ் ஸ்டேஷன் போகலை. இனிமேல் எதை தொலைத்து விட்டு, உங்க மேலே புகார் கொடுக்க போகிறேன்?'' என்று சொல்ல, அவன் புன்னகை செய்தான்.

''பணத்தை விட பெரிதாக உங்களிடம் எதுவும் இல்லையா சந்தியா?'' என்று கேட்ட அவனின் குரலில் முதலில் குழம்பினாள்.

''அப்படி ஏதாவது நடந்தால், அதை புகாராக சொல்வதற்கு நான் நிச்சயம் உயிரோடு இருக்க மாட்டேன் சார். அதனால் அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்...''

''ஹேய்! நான் என்ன சொன்னால் நீங்க என்ன சொல்றீங்க..? ஹலோ, நான் அந்த மாதிரி அர்த்தத்தில் சொல்லவில்லை. நான் அந்த மாதிரி ஆளும் இல்லை. பணம் அழியக் கூடிய செல்வம். அழியாத செல்வம் கல்வி, தைரியம், தன்னம்பிக்கை அந்த மாதிரி சொன்னால்... கடவுளே!'' என்று பதறினான்.

Optimized by www.ImageOptimizer.net

''பரவாயில்லை சார், எனக்கு தெரிந்தது அவ்வளவு தான்..''

''எங்க உங்களை நீங்களே தாழ்த்திக்கறீங்க? இந்த ஒரு முயற்சி தோல்வி அடைந்ததால் இந்த வாழ்க்கையே முடிந்து விட்ட மாதிரி உணர்வு தேவை இல்லை. உலகத்தில் ஒவ்வொரு மனுஷனுக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும். உங்களுக்குள்ளும் ஏதாவது இருக்கும். அதை கண்டு பிடிங்க. அப்புறம் அதில் ஒரு இலக்கு நிர்ணயம் செய்து, அந்த இலக்கை அடைய முயற்சி செய்தால் வெற்றி அடையலாம்...''

''ப்ச்!... வெற்றியா... எனக்கா? ஹூம்...'' என்று சொன்னவள் கண்ணில் ஈரம் இருந்தது.

''சந்தியா... ஒரு நிமிஷம் என்னைப் பாருங்க...'' என்று அதட்டலாகச் சொன்னவன் நின்று இருந்தான். இப்போது ரயில் நிலையத்தின் நடமாட்டம் குறைவாக இருந்த வெளியிடத்திற்கு வந்து இருந்தனர்.

''ஏதோ ஒரு நேரம், தவிர்க்க முடியாத துயரத்தில், நெருங்கிய உறவின் மரணத்தில் அழுகை இருக்கலாம். தொட்டதற்கெல்லாம் அழுபவர்களை எனக்குப் பிடிக்காது...'' என்று அவன் சொன்ன தொனியில் நிமிர்ந்து, ''சாரி...'' என்று முணுமுணுப்பாகச் சொன்னாள்.

''எனக்கு சாரி வேண்டாம். இனிமேல் அழ மாட்டேன் என்ற உறுதி தான் வேண்டும்...'' என்று தீர்மானமாக சொல்ல அவள் தலை கவிழ்ந்தாள்.

''வெளியில் இருந்து என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் சார். அவங்கவங்க நிலை அவங்களுக்குத் தான் தெரியும்..''



''இப்ப நீங்க அழுததற்கு என்ன காரணம் சொல் லுங்க..''

''.....''

''நான் சொல்லட்டுமா? ஒண்ணு ஏற்கனவே மறைந்து விட்ட பெற்றோரை நினைத்து, துணையாக யாரும் இல்லை என்று அழுது இருக்கலாம். அல்லது காலையில் தொலைந்து விட்ட பணத்தை நினைத்து இருக்கலாம். இரண்டும் இல்லை என்றால் நான் சொன்னதை தவறாகப் புரிந்து கொண்டு, நடக்கவே இல்லாத ஒன்றைப் பற்றி நினைத்து வருந்தி இருக்கலாம். சரிதானா?''

''.....''

''உங்க மௌனமே சரி என்று சொல்கிறது. கடந்த காலத்தை மாற்றும் சக்தியோ எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை அறியும் சக்தியோ நமக்கு இல்லை. நிகழ்காலத்தை சந்தோஷமா அனுபவிக்கணும். இனி மேல் அழ மாட்டேன் என்று எனக்கு சத்தியம் பண்ணித் தாங்க...'' என்று தன் கையை நீட்டினான்.

அவள் தயக்கத்துடன் அவன் கை மீது விரல்களை பட்டும் படாமல் வைத்து, ''அழாமல் இருக்க முயற்சி பண்ணுவேன்'' என்று சொல்ல அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

''நல்லது, முயற்சியாவது பண்றேன் என்று சொன்னீங் களே! இனிமேல் அழுகை வரும் போலத் தோன்றும் போது எனக்கு செய்து கொடுத்த சத்தியம் நினைவு வரும் அல் லவா..?'' என்று சந்தோஷமாகச் சொல்லியபடி நடந்தவன் நின்று திரும்பினான்.

''மேடம், சத்தியம் செய்து கொடுத்தால் அதைக் காப் பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கும் தானே?

Optimized by www.ImageOptimizer.net

இல்லை சத்தியம் சர்க்கரை பொங்கல் என்று கண்டு கொள்ளாமல் போய் விடுவீர்களா?'' என்று கேலியாக கேட்க அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''அப்படி கண்டு கொள்ளாமல் இருந்தால் சத்தியம் பண்ண அவ்வளவு நேரம் தயங்க வேண்டியதில்லை அதோடு நீங்க கேட்ட வாசகத்தை மாற்ற வேண்டிய அவசியமும் இல்லையே?'' என்று சொல்ல அவன் சந்தோஷமாகப் புன்னகைத்தான்.

''செய்றீங்களோ இல்லையோ! முயற்சி பண்றேன் என்று சொன்னதே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. அதற்குத் தகுந்த பலன் கட்டாயம் கிடைக்கும்...'' என்று சொன்னவன் அடுத்த முப்பது நிமிடங்களில் ஆட்டோ பிடித்து பங்கஜம் அக்காவின் வீட்டில் அவளை இறக்கி விட்டு, புன்னகை செய்தான்.

''நான் நாளை காலையில் ஒன்பதரை மணிக்கு வருகிறேன். முதலில் பங்கஜம் அக்காவிடம் பேசி உங்களை அழைத்து சென்ற நபர் யார் என்று ஏதாவது தகவல் கிடைக்கிறதா என்று பார்த்து விட்டு பேங்க் போகலாம். பயப்படாமல் நிம்மதியா தூங்குங்க. உள்ளே போயிட்டு இந்த பால்கனி வந்து கை காட்டி சொல்றீங்களா?'' என்று கேட்க அவள் தலை அசைத்தாள்.

அவள் பத்திரமாக உள்ளே சேர்ந்து விட்டாள் என்பதை அறிந்த பிறகே தன் வீட்டுக்கு வந்து பனிரெண்டு மணி அளவில் படுக்கையில் சரிந்த ராஜீவனுக்கும் சந்தியாவிற்கும், அன்றைய பொழுதின் நிகழ்வுகள் மிக வித்தியாசமாக இருந்ததோடு, முக்கியமானதாகவும் இருந்ததால் அன்றைய தூக்கம் முழுமையாக இல்லை. இருவருமே அடுத்தவரின் நினைவுகளிலும் கனவுகளிலும், உலா வந்தனர்.



# 8

காலை எழு மணிக்கு படுக்கையில் இருந்து ராஜீவன் கண் விழிக்கும் முன்பே அவனின் அலைபேசி ஒலி எழுப்பி அவனை துயில் கலைத்தது. அவனின் தூக்கம் கலையாத குரலில், ''ஹலோம்மா... குட்மார்னிங்...'' என்ற குரலில் வியப்படைந்தார் விமலா.

''டேய்! என்ன இது? இன்னும் படுக்கையிலா இருக்கிறாய்? ஜாகிங் போகலையா?'' என்ற கேள்வியில் அவசரமாக எழுந்தான்.

''நைட் படுக்கும்போது மணி பனிரெண்டு. ஒரு நாள் மிஸ் ஆனால் என்னம்மா?''

''பனிரெண்டா! நீ எனக்கு போன் பண்ணும்போது பத்தரை தானே?''

''நான் எங்கே பண்ணினேன்? நீங்க தான் எனக்கு பண்ணினீங்க...?''

''இந்த வியாக்கியானம் எல்லாம் வேண்டாம். என்ன வேலை என்று காலையில் சொல்கிறேன் என்று கதை அளந்தாயே! அதைச் சொல்லு...''

''அப்பா கிளம்பியாச்சா? காலங்கார்த்தாலே இப்படி வம்பு வளர்க்கறீங்க?''

''ம்ம்ம்... பூனை கண்ணை மூடிக் கொண்டு இருந்தால் உலகம் இருட்டாவே இருக்குமா? மணி ஏழரை. அப்பா கிளம்பியாச்சு. நீ பேச்சை மாற்றாமல் சொல்லு...''

Optimized by www.ImageOptimizer.net

''ஒரு சின்ன சம்பவம். மனசை ரொம்ப பாதிச்சது... பெற்றவர்களை பார்க்க வரும் திட்டத்தை கை விட்... நேற்றுதான் அறிமுகமான ஒரு இளம் பெண்ணுக்... உதவி செய்கிறேன் என்பதை அம்மா வித்தியாசமா... எடுத்து கொள்ளாமல் எப்படி சொல்வது என்று லேசா... தடுமாறினான்.

''என்ன ஆச்சு? ஏதாவது விபத்தா? இரத்த தா... செய்யணுமா...?''

''விபத்துதான்... ஆனால் யாருக்கும் உயிருக்... ஆபத்து இல்லை...''

''புரியுற மாதிரி சொல்லேன் ராஜீவ்? யாருக்கு விபத்து...

''ஒரு திருட்டு சம்பவம் நடந்து விட்டது. பாதிக்க... பட்ட பெண்ணுக்கு உதவி பண்ண...''

''திருட்டு என்றால் போலீசில் புகார் கொடுக்... வேண்டியது தானே? நீ என்ன செய்யப் போகிறாய்... அந்த பெண் உனக்கு அறிமுகமா?''

''நேற்று தான் பார்த்தேன்...''

''ஓ!'' என்றவரின் பேச்சு நின்று சிந்தனை துவங்கியது... ''இப்ப அந்த பொண்ணு எங்கே இருக்கா?'' என்... அம்மாவின் கேள்வியில் ஒரு நிமிடம் உறைந்தான்.

''ராஜீவ், உன் மேல் நம்பிக்கை இல்லாமல் கேட்கல... அந்த பெண்ணின் எதிர்காலம் குறித்த கவலையி... கேட்கிறேன்...'' என்று அவன் எண்ணம் புரிந்தாற் போ... விமலா சொல்ல அவன் தளர்ந்தான்.

''அந்த அளவு நானும் யோசிக்க மாட்டேனம்மா... அந்தப் பெண்ணுக்கு தெரிந்தவர்கள் வீட்டில் இரு... கிறாள். என்னுடன் இல்லை. போதுமா?''



''உன் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதனால் நீ அந்த பெண்ணுக்கு என்ன உதவி செய்வதாக இருந்தாலும் அதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் ஏற்கனவே இரண்டு மாதம் தள்ளி போட்ட மாதிரி இந்த வாரமும் காரணம் சொல்லாமல் இந்த சனி ஞாயிறை எங்களுக்காக ஒதுக்க வேண்டும். இரண்டு நாள் இல்லாவிட்டாலும், ஞாயிறு ஒரு நாள் மட்டுமாவது நீ கோவை வர வேண்டும். நீ அங்கே வரவில்லை என்றால் அப்படியே அம்மா அப்பா என்று இரண்டு பேர் இருப்பதையும் மறந்து விடு...''

''எதற்கு இவ்வளவு டென்ஷன் ஆறீங்க? பெங்களூர் வருவதாவது கஷ்டம். கோவை வருவது ஈசி. நிச்சயமா வரேன்.''

''எதுக்கு கோவைக்கு போகணும் என்று கேட்கவே இல்லையே?''

''இவ்வளவு பிடிவாதமா சொல்லும் போது வேறே என்ன காரணம் இருக்க முடியும்? பொண்ணு பார்க்கத் தானே?'' என்று சொல்லும் போதே சந்தியாவின் சொந்த ஊர் கோவை என்ற எண்ணம் வந்தது.

''உனக்குப் பிடிக்காமல் கல்யாணம் நடக்கப் போவதில்லை. ஆனால் நேரில் பார்க்க வருகிறோம் என்று ஒரு மாசமா சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்து போய் விட்டது. இந்த வாரம் கட்டாயம் போகணும்'' என்று சொல்லி விட்டு போனை வைத்தார் விமலா.

* * *

காலை ஒன்பதரை மணிக்கு சந்தியாவை இறக்கி விட்ட பிளாட் வாசலில் பைக்கில் வந்து இறங்கிய ராஜீவனுக்கு அந்த வீட்டிற்குள் போவதா வேண்டாமா



Optimized by www.ImageOptimizer.net

என்ற சின்ன குழப்பம் தோன்றியது. தயக்கத்துடன் அழைப்பு மணியை அடித்தான். மணி ஒலித்த அடுத்த வினாடியே கதவு திறந்து சந்தியாவின் ஆவல் நிறைந்த முகம் தென்பட்டது.

''குட்மார்னிங் சந்தியா..'' என்ற ராஜீவன் குரல் அவளின் முகத்தை மேலும் பிரகாசமாக்கியது.

''உட்காருங்க. அக்காவை கூட்டிட்டு வரேன்'' என்று உள்ளே போக அவளின் பின்னால் அவனின் பார்வையும் சென்றது.

''வாங்க தம்பி...'' என்று தன் புடவை முந்தானையில் கையை துடைத்தபடி அடுக்களையில் இருந்து வந்த பங்கஜம், அவனைப் பார்த்ததும் முகம் மலர்ந்தாள்.

''உங்களை நான் பாலாஜி ஸ்டோர்ல பார்த்து இருக்கேனே! உங்களை பற்றி நிறைய கேள்விப் பட்டு இருக்கிறேன். காலேஜ் இல்லையா?'' என்று விசாரிக்க அவனுக்கும் இலகுவாக மூச்சு வந்தது.

''சனி ஞாயிறு லீவு தான். என்னை பற்றி என்ன கேட்டீங்க? நல்ல விதமா தானே?''

''தப்பா ஒன்றும் இல்லை. பராமரிப்பு பணிகளுக்காக ஒருநாள் முழுவதும் மின்சாரம் தடை செய்ததனால், கடையில் இருந்த தோசை மாவு புளித்து விட்டது என்று சிலர் புலம்பிய போது, பச்சரிசி மாவு கலந்து சுட்டால், புளிப்பும் தெரியாது, மொறு மொறுவென்று வரும் என்று சொன்னீங்க என்று சொன்னாங்க...''

''அதை விடுங்க மேடம். சந்தியா விவகாரம் பற்றிப் பேசலாம். நீங்க தப்பா நினைக்கவில்லை என்றால், இதுல உங்களிடம் ஒரு விஷயம் கேட்கணும்...'' என்று இழுத்து நிறுத்தினான்.



''கஷ்டப்படும் ஒரு பொண்ணுக்கு உதவி பண்ண தயாரா வந்து இருக்கிறீங்க. உங்களை தப்பா நினைக்க என்ன இருக்கு?''

''சந்தியாவை வங்கிக்கு அழைத்து போன நபர் இங்கே அடிக்கடி வருபவராக, உங்களுக்கு ரொம்ப பழகியவராக, இருக்க வேண்டும் என்று நான் ஊகிக்கிறேன்...''

''எனக்கும் அந்த சந்தேகம் வந்தது. ஆனால் இதே மாடியில் இரண்டு வீடு தள்ளி காலியாக இருக்கும் வீட்டை பயன்படுத்தி இருப்பதனால் வீட்டு ப்ரோக்கர்கள் சம்பந்தப் பட்டு இருப்பாங்களோ என்று தோணுச்சு. வீட்டு சொந்தக்காரர்களிடம் விசாரிக்க நினைத்தேன்.''

''ப்ரோக்கர்களுக்கு வீட்டு சாவி கிடைத்ததற்கு உங்க விளக்கம் சரியா இருக்கும். ஆனால் இவங்க வருகை தெரிவதற்கு சான்ஸ் கம்மி. இது உங்க வீட்டிற்கு வரும் போனை எடுத்து பேசக் கூடிய நெருங்கிய நபராக இருக்க வேண்டும். அவங்க மாமா பொண்ணு உங்களிடம் பேசிய அழைப்பினை அட்டென்ட் பண்ணி இருக்க வேண்டும் அல்லது நீங்க பேசும் போது கேட்டு இருக்க வேண்டும். இந்த இரண்டு மூன்று நாளில் உங்க வீட்டுக்கு யார் வந்தாங்க என்று யோசித்து பாருங்க...''

''முந்தா நாள் வயரிங் கொஞ்சம் ரிப்பேரா இருக்கு என்று வேலை செய்ய வர சொல்லி இருந்தேன். அப்ப பவித்ராவிடம் போன் பேசியதை கேட்டு இருக்கலாம். ஆனால் வீட்டு சாவி அவனுக்கு எப்படிக் கிடைக்கும்?'' என்று யோசனையோடு இழுத்தாள் பங்கஜம்.

''அவர் யார் எங்கே இருக்கிறார் என்று சொல்லுங்க. நான் மேலே விசாரிக்கிறேன். அந்த வீட்டு சாவி கொடுக்கிறீங்களா? அதை ஒரு பார்வை பார்த்து விடுகிறேன்''

Optimized by www.ImageOptimizer.net

என்று ராஜீவ் கேட்டதும், பங்கஜம் சாவியை எடுத்து கொடுத்தாள்.

''அங்கே என்ன பார்க்க போறீங்க? அங்கே இன்னும் அந்த ஆள் ஒளிஞ்சு இருப்பாரா என்ன?'' அவன் கண்ணால் விட்ட அழைப்பை ஏற்று பின் தொடர்ந்த சந்தியா விடம் புன்னகை செய்தபடி கதவை திறந்து பார்த்தான்.

ஒரு குடும்பம் நடத்த தேவையான அனைத்து பொருட்களும் நிரப்பி இருந்த அந்த வீட்டில் உடனே குடி புகலாம். ஆனாலும் காலியாக பூட்டப்பட்டு இருக்கும் ஒரு வீட்டிற்கு உரிய அனைத்து அடையாளங்களும் அங்கே இருந்தது. இழுத்து விடப் பட்டு இருந்த திரை சீலைகள், மூடி இருந்த ஜன்னல்கள், பூட்டி இருந்த அறைகள், ஒழுங்காக இருந்த சோபாக்கள், காலியாக இருந்த பிரிட்ஜ், சுத்தமான அடுக்களை...

''என்ன சார், வீடு ரொம்ப பிடிச்சு இருக்கா? விலைக்கு வாங்க போறீங்களா? இப்படி சுத்தி சுத்தி பார்க்கறீங்க?'' என்று ஆச்சரியமாக கேட்டவளை திரும்பி பார்த்தான்.

''பத்திரிகைகள் படிக்கும் பழக்கம் உண்டா சந்தியா?''

இதென்ன நான் கேட்ட கேள்விக்கு சம்பந்தமே இல்லாமல் இன்னொரு எதிர் கேள்வி கேட்கிறாய் என்ற அவளின் பார்வையை லட்சியம் செய்யாமல், ''பதில் சொல்லுங்க...'' என்று வற்புறுத்தினான்.

''ம்ம்ம்... குமுதம்... வாரமலர்... மங்கையர் மலர் படிப்பேன்.. என் கேட்கறீங்க?''

''அதில ஆறு வித்தியாசம் கண்டு பிடிக்க கிட்டத்தட்ட ஒரே மாதிரியான படங்கள் போட்டு இருப்பாங்க. பார்த்து இருக்கீங்களா?''



அவன் என்ன கேட்க வருகிறான் என்று இன்னமும் அவளால் நிர்ணயம் செய்ய முடியாததால், 'பார்த்து இருக்கிறேன்' என்ற அர்த்தத்தில் ஒப்புதலாக தலை அசைத்தாள்.

''இந்த வீட்டுக்கும், பங்கஜம் அக்கா வீட்டுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கு. ஒரே அட்ரஸ், ஒரே தளம், ஒரே அளவுள்ள வீடு. இரண்டு வீட்டிலும் பொருட்கள் இருக்கு. இப்படி நிறைய ஒற்றுமை இருக்கு. இந்த இரண்டு வீட்டுக்கும் நூறு வித்தியாசம் இருக்கு. ஆனால் முதன் முறையா வருகை தரும் ஒரு வீட்டில் அத்தனை வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது. இப்ப நீங்க எனக்கு குறைந்தது ஆறு வித்தியாசம் சொல்லுங்க. உங்களுக்கு ஒரு நிமிடம் அவகாசம்...'' என்று சொல்லியபடி கடிகாரத்தை பார்த்தான்.

''திடீர் என்று இப்படி கேட்டால்...''

''பத்து செகண்ட் போயாச்சு சந்தியா... குவிக்...''

''எதுக்கு என்றே சொல்லாமல்...''

''இருபது செகண்ட் போயாச்சு...''

''காலியான டைனிங் டேபிள், பால்கனியில் கொடி கயிறு இல்லை. பிரிட்ஜ் சுவிட்ச் ஆப். பாத்ரூம் காய்ஞ்சு இருக்கு. அங்கு இருப்பதை விட வெளிச்சம் கம்மி. வேறே...'' என்றவளின் கண்கள் இன்னமும் அலைபாய, அவன் கடிகாரத்தில் இருந்து கண்களை எடுத்தான்.

''ஒரு நிமிஷம் ஆகி விட்டது. ஐந்து வித்தியாசம் சொல்லி இருக்கீங்க. இதுக்கு என்ன காரணம் என்று ஒரு இரண்டு நிமிஷம் யோசிங்க..'' என்று சோபாவில் அமர்ந்தான்.

அவளின் பார்வை மேலும் அந்த வீட்டைச் சுற்றி வ[...] காலியாக கிடந்த சிங்க், ஒன்றுமே இல்லாத சமைய[...] மேடை, எல்லாம் கண்ணில் பட்டு, ஆட்கள் புழங்கு[...] வீட்டுக்கும், பூட்டி இருக்கும் வீட்டுக்கும் இடையி[...] உள்ள வித்தியாசம் புரிந்தது. இறைந்து கிடைந்[...] துணிமணிகள், விளையாட்டு சாமான்கள் எதுவும் இங்[...] இல்லை.

இப்போது அவனுடைய கேள்வியின் நோக்க[...] புரிந்தது. அந்த ஏமாற்றுக்காரன் இது பங்கஜத்தின் வீ[...] என்று சொன்ன போது இதை தான் கவனித்து இருக்க[...] வேண்டும். பங்கஜம் அவசரமான இறப்பு செய்தி வந்[...] போய் இருக்கும் பட்சத்தில், இவ்வளவு நீட்டாக வீ[...] இருக்க முடியுமா? அவளின் முகம் வாட, எதிரே இருந்[...] ஒற்றை சோபாவில் தொய்ந்து அமர்ந்தாள். சில நிமிட[...] கள் முன்பு அவனைப் பார்த்த உடனே வந்த மலர்ச்[...] இப்போது காணாமல் போய் இருந்தது.

''சந்தியா, இப்படி இடிந்து உட்கார்வதில் எந்[...] பிரயோஜனமும் இல்லை. இனிமேல் உங்களுடை[...] பார்வையை, கேள்வி கேட்கும் திறனை வளர்த்து[...] கொள்ள வேண்டும் என்பதைச் சொல்ல தான் இங்[...] அழைத்து வந்தேன். ஒரு தோல்வியில் துவண்டு போ[...] கூடாது. ஒவ்வொரு தோல்வியில் இருந்தும் பாடம் கற்று[...] கொண்டால் மட்டுமே வெற்றிப் பாதையில் பயண[...] செய்யலாம், புரிந்ததா?''

''ம்ம்ம்...''

''சந்தியா, தாமஸ் ஆல்வா எடிசன் பல்பை கண்[...] பிடிக்க ஆயிரம் பிலமென்ட் முயற்சி பண்ணி, கடை[...] யில் தான் டங்ஸ்டன் பிலமென்ட் நீண்ட கால[...]



உழைக்கும் என்று கண்டு பிடித்தாராம். விடா முயற்சி செய்றவங்க தான் சரித்திரத்தில் இடம் பெற முடியும். ஒரு முயற்சி தோல்வி அடைந்தால் சுருண்டு மூலையில் முடங்குபவர்களுக்கும் வெற்றிக்கும் சம்பந்தமே இருக்காது. பங்கஜம் அக்காவிடம் எலக்ட்ரீஷியன் அட்ரஸ் வாங்கிட்டு கிளம்பலாம்'' என்று எழுந்தான் ராஜீவன்.

''அட்ரஸ் இல்லை, போன் நம்பர் இருக்கு. தரேன்'' என்று பங்கஜம் கொடுத்த எண்ணுக்கு முயற்சி செய்தால் அது எடுக்கப்படவில்லை. அதை வைத்து அவன் முகவரியை கண்டு பிடிக்கலாம். அதற்கு முன்னால் வங்கிக்கு போகலாம் என்று படிகளில் இறங்கி வந்தவன் பின், அவள் மௌனமாக நடந்து வர அவன் நின்று திரும்பி பார்த்தான்.

''உங்களுக்கு என்னோடு வர இஷ்டம் இல்லையா?''

''என்ன சார் இப்படி சொல்லிட்டீங்க? உங்க வேலையை விட்டு விட்டு எனக்காக உதவி செய்ய வருபவர்களை போய்.. நான்...''

''உங்க முகத்தை பார்த்தால் விளக்கெண்ணை குடிச்ச மாதிரி இருக்கு. ஏதாவது சிரிச்சபடி பேசினால் பரவாயில்லை. அட்லீஸ்ட், உங்க மண்டையை குடைஞ்சகிட்டு இருக்கும் ஏதாவது கேள்வியாவது கேளுங்க. பதில் சொல்றேன்...'' என்று புன்னகை செய்தான்.

''வங்கிக்கு போகலாம் சரி. அங்கே.. எப்படி.. அவன் தான் பணம் எடுத்தான் என்று எப்படி நம்மால் நிரூபிக்க முடியும்?''

''ஏன் முடியாது? அந்த வங்கி கணக்கில் டெபாசிட் பண்ணின தொகை இருக்கும் இல்லையா? அதில்

இருந்து டி.டி. எடுத்த தொகை கழிக்கப் பட்டு இருக்குமே! அதை வைத்து கண்டு பிடிக்கலாம். இதெல்லாம் தான் ஆதாரங்கள். சரி வாங்க...'' என்று சொல்லியபடி, அவன் பைக்கை உதைத்து கிளப்ப அவள் விழித்தாள். இவனுடன் தான் பைக்கில் தனியாகப் போவதா?

''சந்தியா! எதையாவது மேலே வைத்து விட்டீர்களா? போய் எடுக்க வேண்டுமா?'' என்றவன் விரல்கள் ஆக்ஸிலேட்டரை முறுக்கியது.

''இல்லை... நான்.. நானே வங்கிக்கு...'' என்று திணறியவளுக்கு அடுத்த வார்த்தை வரவில்லை. அவள் சொன்ன வாரத்தைகள், மற்றும் அவளின் தயக்கத்தை வைத்து என்ன சொல்ல வந்தாள் என்பதை புரிந்து கொள்ள ராஜீவனுக்கு சில வினாடிகள் போதுமானதாக இருக்க, அடுத்த வினாடி, அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல், இறுகிய முகத்துடன், பைக்கை கிளப்பிச் சென்று விட்டான்.

# 9

பைக்கில் அவனோடு தனியாகச் செல்ல தான் தயங்கியதை ஏற்று கொள்ளாமல் ராஜீவன் உடனே பைக்கில் கிளம்பி விடுவான் என்பதை எதிர்பாராத சந்தியாவிற்கு கண்ணில் நீர் கோர்த்தது. 'முதலில் கண்ணை துடை' என்று உள் மனம் அதட்ட, 'இனி அழாமல் இருக்க முயற்சி பண்ணுவேன்' என்று முன் தினம் ராஜீவனிடம் செய்து கொடுத்த சத்தியம் நினைவுக்கு வர அவசரமாக கண்களைத் துடைத்து கொண்டாள்.



அவனை நம்ப மாட்டேன் என்று சொல்ல மனம் இல்லை. பின் ஏன் அவனுடன் பைக்கில் ஏற மறுத்தாள்? சுய அலசல் செய்து கொண்டு இருந்த போது ஒட்டினாற் போல ஒரு ஆட்டோ வந்து நிற்க, அவள் துள்ளி விலகினாள்.

''நீலாங்கரை இந்தியன் பாங்க்குக்கு உங்களை அழைத்து வர சொல்லி சார் அனுப்பினார்...'' என்று ஆட்டோ ஸ்டாண்டில் நின்று இருந்த ராஜீவனை காட்டியதும் மனம் லேசானாலும் அவன் வரவில்லை என்பது அவன் கோபத்தை காட்டியது.

ஐந்து நிமிடங்கள் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்ய வேண்டிய தூரத்தை கடக்க, போக்குவரத்து நெரிசலினால், ஆட்டோ பதினைந்து நிமிடம் எடுத்துக் கொண்டது. தனியாக விடக் கூடாது என்று சாலை ஓரமாக நின்று ரிவர் வியூ கண்ணாடியில் ஆட்டோ வருவதை உறுதி செய்ததை அவளால் உணர முடிந்தது.

வங்கியின் வாசலில் இறங்கியதும் ஆட்டோக்காரர் 'நாற்பது ரூபாய்' என்றதில் தூக்கி வாரி போட்டது. மிஞ்சி மிஞ்சி இரண்டு கிலோமீட்டர் இருக்கலாம். அதை அவள் நடந்தே வந்து விடுவாள். பணத்தை கொடுத்து விட்டு வங்கிக்குள் நுழைந்து அவனை தேட, அவன் மேலாளர் அறைக்குள் இருந்தான்.

உள்ளே போவதா? இங்கேயே நிற்பதா என்று புரியாமல் பரபரப்பாக இயங்கி கொண்டு இருந்த பணியாளர்களையும் வாடிக்கையாளர்களையும், கண்கள் விரிய பார்த்தாள். இரண்டு லட்சம் ரூபாய் பணத்தை கையில் வைத்து கொண்டு உருப்படியாக ஒரு டி.டி. எடுக்கத் தெரியாமல்... சை!

''உங்களை கூப்பிடுறாங்க...'' என்று யாரோ தே
தோளை தொட்டு உலுக்கிச் சொல்ல, அவள் அப்போது
தான சிந்தனையில் இருந்து விழித்தாள். மேலாள
அறைக்குள் செல்ல அவமானமாக இருந்தது.

''உட்காருங்கம்மா...'' என்று பரிவாகச் சொன்ன வங்
மேலாளரைப் பார்க்க வியப்பாக இருந்தது. இப்படி எல்
லாம் கூட கனிவாகப் பேசுவார்களா? நேற்று இதே வங்
யில் கவுண்டரில் இருந்த ஆள். 'அக்கவுண்ட் இல்லாம
இவ்வளவு பெரிய தொகைக்கு டி.டி. எடுக்க முடியாது
இன்னும் என்னவோ நம்பர் வேண்டும் என்று சொன்னா
அது என்ன என்று கூடத் தெரியலை. அதையும் எவ்வள
எரிச்சலோடு சொன்னான்?

''சார் விபரம் சொன்னாங்க. ஆனால் நேற்று எங்க
வங்கியில் நடந்த பண பரிவர்த்தனைகளை பார்த்தாச்சு
ஒரே அக்கவுண்டில் இரண்டு லட்சம் ரூபாய் டெபாசிட்
செய்து, இருபதாயிரம் ரூபாய் வித்ட்ராயல் எந்த கண
கிலும் நடக்கவே இல்லை...'' என்று மேலாளர் சொல்ல
அவளுக்குக் குழப்பமாக இருந்தது. வங்கிக்கு வந்து பத்து
நிமிடங்கள் தான் ஆகி இருக்கும். அதற்குள் எப்படி ஒரு
நாளில் நடந்த அனைத்து பரிவர்த்தனைகளையும் அவ
சரி பார்த்து இருக்க முடியும் என்ற கேள்விக்கான பதில்
ராஜீவனிடம் இருந்து வந்தது.

''வாடிக்கையாளர் விபரங்களை வெளி நபர்களுக்கு
சொல்லக் கூடாது என்ற விதி இருந்தாலும் இந்த விஷ
யத்தை எனக்குச் சரி பார்த்துச் சொன்னதற்கு ரொம்ப நன்றி
சார். எனக்கு இன்னொரு ஹெல்ப் பண்ணினால் நன்றாக
இருக்கும்...'' என்று இழுத்தான்.

''பேங்க் ரூல்ஸ் பெர்மிட் பண்ணினால் கட்டாய
செய்றேன்...''



''நேற்று அவங்க ஸ்லிப் எழுதி கொடுத்து இருப்பாங்க
இல்லையா? அந்த ஸ்லிப் எல்லாம் பார்க்க சில நிமி
டங்கள் அனுமதி தந்தால்...''

''இல்லை சார். அதுக்கு வாய்ப்பு இல்லை. உங்களின்
மீது தனிப்பட்ட அபிமானம் இருப்பதால் கணினியில்
நீங்க கேட்ட விபரங்களை பார்த்து சொன்னேன். மற்றபடி
வங்கி கணக்குகளின் பதிவேடுகளை வெளி நபர் பார்க்க
அனுமதிப்பதற்கு வாய்ப்பே இல்லை'' என்று உடனடி
யாக மறுக்க, அவன் எழுந்தான்.

''போலீசில் கம்ப்ளைண்ட் கொடுங்க. அவங்க வந்து
விசாரணைக்கு கேட்டால், இந்த வங்கியில் இருக்கும்
பதிவேடுகளை கொடுத்து தான் ஆகணும். தனி நபர்
களுக்கு கொடுக்க முடியாது'' என்று சொல்ல அவன் தலை
அசைத்தான்.

''இதுல தப்பா நினைக்க என்ன சார் இருக்கு? உங்க
வேலையை நீங்க செய்றீங்க. உங்க பிசியான நேரத்தில்
வந்து உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டோம்.
நீங்க தந்த தகவலுக்கு நன்றி...'' என்று எழுந்து கை
குலுக்கி விடைபெற்றான் ராஜீவன்.

அந்த இலகுவான புன்னகையும் பேச்சும், அறையில்
இருந்து வெளியே வந்த நிமிடத்தில் ராஜீவனின் முகத்
தில் இருந்து காணாமல் போனது.

''சார்... எனக்காக.. நீங்க ரொம்ப சிரமப்பட்டு...'' என்று
அவள் ஏதோ சொல்ல முயல, அவன் கை காட்டி நிறுத்தி
னான்.

''எது எனக்கு சிரமம் இல்லையோ அதை தான்
செய்வேன். உதவும் குணம் வேறே. தியாகம் செய்வது

Optimized by www.ImageOptimizer.net

வேறே. இப்ப போலீஸ் ஸ்டேஷன் போய் ஒரு கம்ப்ளைண்ட் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்...''

''போலீஸ் ஸ்டேஷனா..?'' என்றவள் கண்ணில் தயக்கம் தெரிந்தது. மறுக்க பயமாக இருந்தது. ஏற்கனவே எரிச்சலில் இருக்கிறான்.

''வங்கி கணக்கை சுலபமா கண்டு பிடிக்கலாம் என்று நினைத்தேன். முடியவில்லையே? வேறே வழி இல்லை. ஏன் போலீஸ் ஸ்டேஷன் போக என்ன தயக்கம்?''

''போலீஸ் ஸ்டேஷன் எல்லாம்.. போய்...''

''பழக்கம் இல்லை. அதானே? நமக்கு ஒரு தேவை என்றால் எல்லாம் பழகிக்க வேண்டியது தான். இப்ப வேறே யாருக்காகவும் நாம் அங்கே போவதில்லை. நான் அங்கே போய் புகார் கொடுக்க முடியாதே. நீங்க தான் அங்கே வந்தாக வேண்டும். இன்னொரு விஷயம் போலீஸ் ஸ்டேஷன் போறவங்க எல்லாம் குற்றவாளிகளும் இல்லை...''

''தெரியும்.. போலீசாவோ வக்கீலாவோ கூட இருக்கலாம்...''

''அடேங்கப்பா! அடுத்த நோபல் பரிசு உங்களுக்கு பரிந்துரைகக போறாங்க. எவ்வளவு பெரிய கண்டு பிடிப்பு?'' என்று அவன் சிரிக்காமல் சொன்னாலும் சில நிமிடங்கள் முன்பு இருந்த இறுக்கம் குறைந்து இருக்க அவள் விரக்தியாகப் புன்னகை செய்தாள்.

''ப்ச்! இது மாதிரி எத்தனை அவார்ட் இன்னும் வாங்க போறேனோ?'' என்று அவள் சலிப்போடு சொல்ல அவன் இறுக்கம் மேலும் தளர்ந்தது.

''சந்தியா, திருவான்மியூர் போலீஸ் ஸ்டேஷன் போகணும். ஆட்டோ பிடிக்கட்டுமா?''



''இல்லை... வேண்டாம்...'' என்று தயக்கத்துடன் வந்த பதில் அவன் புருவத்தை உயர்த்தியது. ''பின்னே...'' பைக்கில் வருகிறாயா என்று வாய் வரை வந்த கேள்வியை அவசரமாக விழுங்கினான். இன்னொரு முறை நோஸ்கட் வாங்க அவன் தயாராக இல்லை. அவன் உணர்வுகளை மறந்த துறவி இல்லை. எல்லா சாதாரண மனிதர்களைப் போலவும் தனக்கும் சிரிப்பும், கோபமும் வரும்.

''நான்... பஸ்ஸில்... வருகிறேன்.. நீங்க பைக்கில் போங்க.. எங்கே இறங்கணும் என்று ஸ்டாப் பேர் சொல்லி விட்டால், அங்கே இருப்பேன் சார்.''

''இந்த சாரை கொஞ்சம் விடுங்களேன். காலேஜிலேயே என்னை சார் என்று யாரும் கூப்பிட மாட்டாங்க.''

''சரி.. சா...'' அவனின் வேண்டுகோளுக்கு ஒப்புதல் அளிக்கும் போதே வந்த சாரை அவசரமாக முழுங்கினாள்.

''ஓகே. இங்கே இருந்து நிறைய பஸ் இருக்கும். திருவான்மியூர் பஸ் ஸ்டாண்ட் வந்துடுங்க. அங்கே இருந்து நடந்து போய்டலாம்..'' என்றவன் அவள் பேருந்து நிலையத்தில் இறங்கும் போது ஒரு குளிரூட்டப்பட்ட ஆவின் பாக்கெட்டுடன் இருந்தான்.

''சாரி, ரொம்ப நேரமாகி விட்டதா?'' என்று கேட்ட சந்தியாவிற்கு அவன் குறைந்தது இருபது நிமிடங்களாவது இங்கே நின்று இருக்க வேண்டும் என்று அவன் சொல்வதற்கு முன்பே புரிந்து இருந்தது.

''அரை மணி நேரம் தான். வாங்க...'' என்று நடந்தபடி அவளைப் பார்க்காமலேயே சொல்ல அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

Optimized by www.ImageOptimizer.net

''சாரி..'' என்று அவள் சொன்னதுமே அவன் திரும்பி, ''ஹய்யோ! இனிமேல் சாரி என்ற வார்த்தையைக் கேட்டாலே இனி அலர்ஜியாகி விடும் போல. ப்ளீஸ்.. வேறே ஏதாவது சொல்றீங்களா?'' என்று அவன் திரும்பிப் பார்த்து கை குவிக்க அவனுடைய இலகுவான பாவனை அவளைப் புன்னகைக்க வைத்தது.

''சரி. அப்ப தேங்க்ஸ்...''

''இது எதுக்கு..?'' என்று கேலியாகக் கேட்டவனுக்கு ''ஆவின் மில்க் பாக்கெட் வாங்கித் தந்ததுக்கு...'' என்று அடுத்த வினாடியே சந்தியாவிடம் இருந்து பதில் வந்தது.

''உங்களுக்கு இப்படி எல்லாம் பேசக் கூடத் தெரியுமா?'' என்ற அவனின் கேள்விக்குப் பிறகே தான் என்ன பேசினோம் என்பது அவளுக்கு உறைக்க நாக்கை கடித்து கொண்டாள். மீண்டும் ஒரு முறை சாரி சொல்ல வேண்டும். ஆனால் சொல்ல முடியாது.

''அது ஒன்றும் ப்ரீ இல்லை. நேற்று நீங்க வாங்கி தந்த சாக்லேட்டுக்கு பதில்...'' என்று அவளின் கூச்சத்தை உணர்ந்தவன், நத்தை கூட்டுக்குள் அவள் ஒடுங்கி கொள்வதை தடுக்கும் வகையில் அலட்சியமாகச் சொல்ல அது அவன் எதிர்பார்த்த பலனை தந்தது.

காவல் நிலையத்தில், அவன் ஏற்கனவே எழுதி தயாராக வைத்து இருந்த புகார் கடிதத்தில் கையொப்ப மிட்டு கொடுத்து, ஆய்வாளர் கேட்ட கேள்விகளுக்கு அவளுக்கு தெரிந்த வகையில் குழப்பி அடித்து தய கத்துடன் பதில் சொல்லி, 'இப்படி கூடவா தத்தியா இருக்க முடியும்?' என்ற அவரின் ஏளன பார்வையை தாங்கி, வெளியே வந்த சந்தியாவிற்கு ஆயாசமா வந்தது. இந்த பணம் திருப்பி கிடைக்காது என்ற பட



சத்தில், இவனுடைய நேரத்தை வீணடித்து, இத்தனை கேள்வி கணைகளை தாங்கி, கேலிப் பேச்சுக்கு ஆளாக வேண்டுமா என்ற எரிச்சல் தோன்றியது.

அவளைச் சாப்பிட வெளியே கூப்பிட்டாலும் வம்பு, வீட்டிற்கும் அழைத்துப் போக முடியாது. சிவானந்த குருகுல நிர்வாகியிடம் ஒரு முறை தெளிவாக பேசி விட்டால் தேவலாம் என்று எண்ணியபடி அவன் பைக்கை தள்ளி கொண்டு அருகே வந்து, ''மணி ஒன்றாக போகிறது. அடுத்து...?'' என்று கேள்வியாக நிறுத்தினான்.

''எனக்காக நீங்கள் அலைந்தது போதும் சார். என்னால் உங்களுக்கு ரொம்ப சிரமம். என் தலையில் என்ன எழுதி இருக்கோ அதன் படி நடக்கட்டும். நான் கோவைக்கே கிளம்புகிறேன்...'' என்று தன் போக்கில் சொல்லிக் கொண்டே போனவள், ''ஸ்டாப் இட்...'' என்ற அவன் அதட்டலில் பேச்சை நிறுத்தி திகைப்புடன் நோக்கினாள்.

# 10

ஒன்றரை நாளுக்கு முன்பு சந்தித்த ஒருவன், பொது இடத்தில் வைத்து, தாழ்ந்த குரலில் என்றாலும் கடினமான பாவனையில் சொன்ன ராஜீவன் அதட்டல், சந்தியாவை திகைப்படையச் செய்தது.

''எ..ன்..ன... ஆச்சு?'' என்று முனகலாக விசாரித்தாள்.

''என்ன என்ன ஆச்சு? உங்களுக்கு என்னங்க குறைச்சல்? ஏன் இப்ப ஊருக்குப் போறதைப் பற்றி பேசறீங்க?''

Optimized by www.ImageOptimizer.net

"நான் இங்கே வெளியில், எனக்கு ரத்த சம்பந்
இல்லாத ஒருவரின் வீட்டில் தங்கி இருக்கிறேன். இங்
தங்கி இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் எனக்கு அ
சுமையாக இருப்பதோடு, செலவும் ஆகிறது. அதனா
அதனை திட்டினாலும் அங்கேயே போய் விடலாம் என்
கிளம்ப நினைத்தேன். அதில் என்ன தப்பு?" என்
தலையை குனிந்து முணுமுணுத்தவனை முறைத்

"ஏன் இப்படி எதை எடுத்தாலும் எதிர்மறையாக
பேசிட்டு இருக்கீங்க? உங்களுக்காகத் தானே காலையில்
இருந்து ஒவ்வொரு இடமாக போய் விசாரிக்கிறேன்
உடனே காரியம் நடந்து விட இது மாயமா மந்திரமா
கொஞ்சம் பொறுமையாதான் இருக்கணும்..."

"சொல்றது ஈஸி சார். அதை கடைப் பிடிப்பவங்களுக்
தானே கஷ்டம் தெரியும். என் எதிர்காலம் என்று நினை
ஒரு வேலைக்காக நான் சேகரித்த என்னுடைய பண
முழுவதையுமே, இங்கே ஒரு ஏமாற்றுப் பேர்வழி
தொலைத்து விட்டேன். அது..."

"உங்க பணம் காணாமல் போய் விட்டது உண்
தான். பணம் மட்டும் தான் காணாமல் போய் இரு
மிச்ச எல்லாம் இளமை, ஆரோக்கியம், உழைக்கும் திற
கல்வி, தன்னம்பிக்கை. இது எல்லாமே உங்களி
பத்திரமாதான் இருக்கு..."

"வா...?"

"என்ன இப்ப இங்கிலீஷா? உங்களிடம் என்
இருக்கு என்றே உங்களுக்குத் தெரியவில்லை என்
எப்படி ஜெயிக்க முடியும்? சரி நான் கேட்கும் கேள்
களுக்கு யோசிக்காமல் மனதில் பட்டதை அப்படியே
சொல்றீங்களா...?"



"ம்ம்..."

"உங்களுக்கு என் மேலே நம்பிக்கை இருக்கா?"

"அது இல்லாமலா..."

"விளக்கம் எதுவும் வேண்டாம்..." என்று வேகமாக சொன்னவன் தன் பையில் இருந்து ஒரு காகிதத்தை எடுத்து ஏதோ எழுதினான்.

"இந்தாங்க. இதுல என்னுடைய பெற்றோர்கள் வசிக்கும் பெங்களூர் முகவரி, அவங்க போன் நம்பர், என் காலேஜ் முகவரி, அந்த போன் நம்பர், என் வண்டி நம்பர். இதெல்லாம் எழுதி இருக்கு. ஏதாவது பிரச்சனை என்றால் இதை வைத்து என்னை சுலபமா அடையாளம் காட்ட முடியும். இந்த பேப்பரை வச்சுக்கோங்க. இப்ப என் பின்னால் வண்டியில் கேள்வி கேட்காமல் ஏறுங்க..." என்று அவன் நீட்டிய பேப்பரை பிரித்து பார்க்காமல் கிழித்து காற்றில் பறக்க விட்டாள்.

"நான் வண்டியில் ஏற தயங்கியதற்கு என்னுடைய கூச்ச சுபாவமும், வண்டியில் பயணம் செய்து பழக்கம் இல்லை என்பதுதான் காரணமே தவிர, உங்க மேலே நம்பிக்கை இல்லை என்பது நிச்சயம் காரணம் இல்லை. உங்க வண்டி நம்பரையும் உங்க அம்மா அப்பாவோட பெங்களூர் நம்பரையும் வைத்து நான் என்ன செய்ய போகிறேன். நேற்று பவித்ரா சொன்னாள் என்று ஆட்டோவில் ஏறும் போது அந்த நம்பரை மனதில் குறித்து வைத்தேன். அதை வைத்து என்ன செய்ய முடிந்தது? நடந்த சம்பவத்தை..."

"ஹேய்... வெயிட்... இப்ப என்ன சொன்னீங்க? நேற்று காலையில் நீங்க வந்த ஆட்டோ நம்பர் தெரியுமா?" என்று அவசரமாக இடைமறித்தான்.

''தெரியும். அதற்கென்ன?''

''இது விசாரணையில் புதிய கோணத்தை திறந்து வைக்கும் இல்லையா? இன்னொரு வழி கிடைக்குமே? சரி வண்டியில் ஏறுங்க...''

''இப்ப தானே...''

''அட! பிறக்கும் போதே எல்லாத்தையும் படிச்சுட்டு பிறக்க முடியுமா? தேவை வரும்போது கற்று கொள்ள வேண்டியதுதான். பிடிக்க இங்கே ஹேண்டில் இருக்கு பாருங்க. என்னை தொடாமலே வரலாம். மெதுவாக ஓட்டுகிறேன். முன்னால் போய் காத்திருப்பதை விட, இது பரவாயில்லை. சாப்பிட்டுட்டு ஆர்.டி.ஓ அலுவலகம் போகலாம்...''

''அங்கே போய் என்ன செய்யப் போறோம்...''

''சொல்றேன். முதலில் வண்டியில் ஏறுங்க...'' என்று அதட்டலாக சொன்னவன், வண்டியை உதைத்து கிளப்பி னான்.

''என்னை நம்பி ஏறியதற்கு ஒரு ஸ்பெஷல் தேங்க்ஸ் சந்தியா. நாம் இப்ப எங்க வீட்டுக்கு போறோம். சாப் பாட்டை முடிச்சுட்டு ஆர்.டி.ஓ. ஆபீஸ் போகலாம் சரியா?'' என்று மெல்லிய குரலில் புன்னகையோடு சொன்னவன் வண்டியை மெதுவாகவே ஓட்டினான்.

''சாப்பாடா... வீட்டிலா..?''

''ஏன் அப்படி சந்தேகமா கேட்கறீங்க? பயப்படாதீங்க சந்தியா நான் நல்லாவே சமைப்பேன். பயப்படாதீங்க சில டிஷ் எல்லாம் எங்க அம்மா செய்வதை விட வாசமா செய்வேன் என்று அம்மாவே காம்ப்ளிமென்ட் கொடுத்து இருக்காங்க தெரியுமா?''



''அதுக்கு இல்லை...'' என்று தயங்கியவளுக்கு மேலே பேச்சை எப்படித் தொடர்வது என்று தெரியவில்லை.

''தனியா எப்படி என்னுடன் உட்கார்ந்து சாப்பிடுவது என்று யோசிக்கிறீங்களா? என் வீட்டுக்கு நீங்க வர வேண்டாம்.''

''அதில்லை...''

''சும்மா எப்படி என் சாப்பாட்டை சாப்பிடுவது என்று நினைக்கறீங்கா? சரி ஐம்பது ரூபாய் கொடுத்துடுங்க...''

''கடவுளே! உங்களோடு பேசினால், நீங்க மடக்கி மடக்கி கேலி செய்வதில், நான் ஒரிஜினலா என்ன சொல்ல வந்தேன் என்பதே எனக்கு மறந்து விடுது...''

''நீங்க மறந்தாலும் எனக்கு நீங்க சொன்னது எதுவுமே மறக்காது. இப்ப நாம் மதிய உணவுக்கு நீங்க பணம் கொடுப்பதை பற்றி பேசிட்டு இருந்தோம்...'' என்று கேலியாகச் சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''எனக்கு மதிய உணவுக்கு. அஞ்சு ரூபாய்க்கு பிஸ்கட் பாக்கெட்டும், மூன்று ரூபாய்க்கு மோரும் வாங்கினால் போதுமே. நீங்க சமைத்து வைத்ததை என் தலையில் கட்ட பார்த்தால், அந்த செலவை நான் தர வேண்டும் என்று நீங்க எப்படி எதிர்பார்க்க முடியும்?'' என்று சொன் னதும் அவன் சந்தோஷமாக சீட்டி அடித்தான்.

''இப்படி இருங்க. இதே மாதிரி பேசுங்க. இந்த மாதிரி விழிப்பாக இருந்தால் தான் சென்னையில் குப்பை கொட்ட முடியும்...''

''ப்ச்! என்னுடைய புத்திசாலித்தனத்தை நீங்க தான் மெச்சிக்கணும்...'' என்று நத்தை கூட்டுக்குள் சுருண்ட வளை ஒரு கணம் வண்டியை நிறுத்தித் திரும்பிப்

பார்த்தான். பின் பதில் சொல்லாமல் சில நிமிடங்க பயணம் செய்து ஒரு தனி வீட்டின் முன்னால் நிறுத் அவளை இறங்க சொன்னான். அழைப்பு மணி அடிக்க, உள்ளே இருந்து எழுபத்தி ஐந்து வயதுக்கு மே இருக்கக் கூடிய ஒரு வயதான விதவை பெண்மணி வீ சேரை தள்ளி வர அவன் புன்னகை விரிந்தது.

"ஹாய் பாட்டி, ரொம்ப பசிக்குதா? லேட் பண்ணி டேனா?"

"அதெல்லாம் இல்லை. இதான் சந்தியாவா?"

"ஆமா பாட்டி. காலையில் சொன்னேனே. உள்ளே உட்கார வச்சு பேசிட்டு இருங்க. சந்தியா, இவங்க மது பாட்டி. நான் மேலே தங்கி இருக்கிறேன். நான் செய் வைத்த சாப்பாட்டை எடுத்துட்டு வரேன். மூன்று பேரு சாப்பிடலாம்" என்று பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத் விட்டு மேலே போக சந்தியா பாட்டியின் வீல் சேரை பிடித்து இயல்பாக தள்ள ஆரம்பித்தாள்.

"வேண்டாம் சந்தியா, என்னாலேயே இதை தள் முடியும். வீல் சேர் இல்லாமலேயே கைத்தடியின் உத யோடு நடக்கவே முடியும். இந்த வேலைக்கு எனக் அடுத்தவர் உ தவி தேவை இல்லை" என்று சொல் விட்டு செல்ல அவள் வியப்போடு பின் தொடர்ந்தா தானாகவே அந்த வீட்டில், வீல் சேரின் உதவியோ நடமாடியபடி சாப்பாட்டு மேஜையில் பரப்பி இரு உணவு வகைகளை தட்டுகளில் பரிமாற அவள் வி போடு பார்த்தாள்.

"என்ன அப்படி பார்க்கிறாய்? பதினாலு வயசுல க யாணம். ஒரு மாசத்துக்கும் குறைவான திருமண வாழ்க்[illegible] மூணு வருஷத்துல. ஒரு பெட்டில இந்தியா-சை



யுத்தத்துல கொல்லப்பட்டு ராணுவ மரியாதையோட பிணமா புருஷன்..." என்று தன் கதையைப் பகிர்ந்தவர் அவளின் அதிர்ச்சியை கவனித்து திரும்பி புன்னகைத்தார்.

"இவ்வளவு நாள் கழித்து இப்ப எதுக்கு அதிர்ச்சி? இந்திய ராணுவத்துல இருந்தார். சைனாவுக்கு எதிரான யுத்தத்தில் மரணம் அடைந்தார். கையில் இரண்டு வயசுல இரட்டை குழந்தைங்க, கவனிக்க ஆள் இல்லாத தனிமையான சூழல். இதுல எதிர்நீச்சல் போட்டு, இரண்டு பசங்களை நல்லா படிக்க வச்சு, ஆளாக்கி, கல்யாணம் பண்ணி, அவங்கவங்க குடும்பம் குழந்தை என்று செட்டில் ஆகிட்டாங்க. ஒருத்தன் பெங்களூர்ல, ஒருத்தன் அமெரிக்கால. ஒரு வசதியும் இல்லாத போதே தனியா சாதிச்சவளுக்கு, இப்ப என்ன துணை வேண்டிக் கிடக்கு? என் கையே எனக்கு உதவி" என்று சொல்லும் போதே சில பாத்திரங்களுடன் உள்ளே நுழைந்தான்.

"வந்ததும் வராமல் கிளாஸ் ஆரம்பிச்சாச்சா பாட்டி? சந்தியா பயந்து ஓடிட போறாங்க. சாப்பிட்ட பிறகு மிச்ச கிளாஸ் வச்சுக்கலாமே..."

"இதுக்கே பயந்து ஓடிடுவாளா? என் சந்தியா அப்படியா?" என்று திரும்பிக் கேட்க அவள் விழித்தாள்.

"நீங்க வேறே! கீறல் விழுந்த இசைத்தட்டு தான். அப்பப்போ அரை மணி நேரத்திற்கு ஒரு முறை, யாராவது ரெண்டு கேள்வி சேர்ந்தாற் போல ஏதாவது கேட்டு விட்டால் உடனே மேடம் கோயம்புத்தூர் கிளம்ப ரெடியாகிடுவாங்க.."

"என் சந்தியா அப்படி சொன்னாய்?" என்று மதுரம் அதட்ட "இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் செலவா

Optimized by www.ImageOptimizer.net

கிறது. அடுத்தவங்க வீட்டில் எத்தனை நாள் இருப்பது
மாமா வீட்டில் இருந்தால்...'' என்று முணுமுணுத்தாள்.

''சந்தியா என்னைப் பாரு. அங்கே உங்க மாமா வீட்டில்
போய் என்ன செய்யப் போகிறாய்? அங்கே போய் சம்பள
மில்லா வேலைக்காரியாக நிற்கப் போகிறாய். அவர்கள்
விருப்பத்துக்கு மாறாகப் பணத்தை கொண்டு வந்து
தொலைத்த பின்பு அங்கே போனால் உனக்கு என்ன
மரியாதை இருக்கும் என்று யோசித்துப் பார்த்தாயா?''

''யோசிக்காமல் என்ன பாட்டி? இங்கே சம்பாத்தியம்
இல்லாமல் என்ன செய்றது? கையில் இருந்த பணமும்
கோவிந்தா. அங்கே போய் ஏதாவது வேலை செய்து
பிழைக்க வேண்டியதுதான்...''

''அந்த வேலையை இங்கே செய்யக் கூடாதா?
கோவையை விட சென்னை பெரிய நகரம். தெரியுமா?''

''ஆனால் எனக்குக் கிடைக்க இருந்த வேலையும்
போயாச்சு. படிப்பு பெரிசா சொல்லிக்கற மாதிரி இல்லை.
நான் எப்படி...''

''நான் பதினெட்டு வயசுல இரண்டு வயது இரட்டை
குழந்தைகளுடன், விதவையா நடு தெருவில் நின்ற
போது என்ன படிச்சு இருந்தேன் என்று தெரியுமா?''
என்று கேட்க அவள் விழித்தாள்.

''என்னை விட உனக்கு படிப்பு ஜாஸ்தி. கல்யாணம்
ஆகலை. குழந்தைகள் இல்லை. பொறுப்பு கம்மி. அந்த
காலத்துல உங்க அளவுக்கு வெளியே போய் வந்து கூட
எனக்குப் பழக்கம் இல்லை...''

''பாட்டி, நீங்க ஐம்பது வருஷத்துக்கு முன்னாடி எப்படி
இருந்தீங்க என்று எனக்குத் தெரியாது. ஆனால் சந்தி



யாவை நீங்க இந்தக் காலத்து பெண்களோடு கம்பேர்
பண்ண முடியாது. அது எனக்குத் தெரியும்...'' என்று
கேலி சிரிப்புடன் இடையிட்டான் ராஜீவன்.

''இந்த காலம் மட்டும் இல்லை. எந்தக் காலமா
இருந்தாலும் எல்லா விதமான ஆண்களும் பெண்களும்
இருக்கத் தான் செய்வாங்க. தேவை தான் மனிதனை
உருவாக்கும். வலிகள் தான் மனிதனை செதுக்கும்...''

''ஹய்யோ! பாட்டி பின்னுறீங்களே! இதை அங்கே
சொல்லுங்க...'' என்று ராஜீவன் சந்தியாவை நோக்கி கை
காண்பிக்க மதுரம் அவள் புறம் திரும்பினார்.

''சந்தியா, நீ எதனால் இங்கே கிளம்பி வந்தாய் என்று
எனக்குத் தெரியாது. எதனால் உங்க ஊருக்கு கிளம்பணும்
என்று சொல்கிறாய் என்பதும் தெரியாது. ஆனால்
என்னை பொறுத்த வரை கடவுளிடம் பிரச்சனையே
வராமல் இருக்கணும் என்று வேண்டக் கூடாது. பிரச்சனை
வந்தால் அதைச் சமாளிக்கும் திறமையைக் கொடு என்று
தான் வேண்டணும். தனக்குத் தானே உதவி செய்யாதவங்
களுக்கு கடவுள் கூட உதவி செய்ய மாட்டார்...''

''இல்லை பாட்டி. நான் பிறந்ததில் இருந்து நான்
செய்த நான் நினைத்த எந்தக் காரியமுமே, நல்லபடியா
முடிந்ததா சரித்திரமே இல்லை. இங்கே கிளம்பக் கூட
நான் ரொம்ப யோசித்தேன்...''

''சந்தியா, உனக்கு ஒரு பிரச்சனை இருக்கு. அதை
தீர்க்க என்ன வழி என்று யோசி. அதை விட்டுட்டு
நடக்காது. முடியாது. கிடைக்காது என்று எதிர்மறையா
பேசுவதை முதலில் விடு. உங்க அத்தை வீட்டில் உன்
தகுதிக்கு என்ன வேலை செய்வியோ, அதே மாதிரி ஒரு
வேலையை, என்னாலேயே கொடுக்க முடியும். நீ

Optimized by www.ImageOptimizer.net

இங்கேயே இரு..." என்று மதுரம் சொல்ல, இடைமிட்டான் ராஜீவன்.

"கரெக்ட் பாட்டி. இன்னும் ஒரு வாரம் தங்குங்க என்று நேற்று சொன்னேன் இல்லையா? இப்பச் சொல்றேன். இனி உங்க வாழ்க்கை சென்னையில் தான். இப்படி எல்லாம் கூட விபரம் இல்லாமல் தத்தியா இருப்பாங்களா என்று கேவலமான லுக் விட்ட அந்த இன்ஸ்பெக்டர் முன்னாடி சாதித்துக் காட்டணும், புரியுதா?" என்று உறுதியான குரலில் கேட்ட ராஜீவனை, பார்த்தவளுக்கு அவன் கோரிக்கையை மறுக்க மனம் வரவில்லை.

சற்று முன்பு மதுரம் பாட்டி தன் வாழ்க்கையை உதாரணமாகக் காட்டிக் கொடுத்த தைரியமும், ராஜீவனின் பேச்சும், அவளுக்குத் தேவையான ஊக்கம் அளிக்க மெலிதாக என்றாலும் உறுதியாக தலை அசைத்த சந்தியாவை, மதுரம் பாட்டியும் ராஜீவனும் பெருமையாகப் பார்த்தனர்.

## 11

மீதிய உணவை முடித்து விட்டு பாட்டி சிறிது நேரம் ஓய்வெடுக்கப் போவதாக சொல்ல, "அடுத்து என்ன செய்ய போகிறோம்?" என்ற கேள்வியை கண்களில் தாங்கி, ராஜீவனை பார்த்தாள் சந்தியா.

"நீங்க என்ன சொல்ல வரீங்க என்று எனக்குப் புரியுது. ஆனால் எல்லோருக்கும் புரிய வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை நீங்க



தான் வாயை திறந்து கேட்க வேண்டும்" என்று ராஜீவன் சொல்ல புன்னகை செய்தார் மதுரம்.

"அடுத்து எங்கே போகப் போகிறோம் என்று தெரிந்தால் அதற்கு தகுந்த மாதிரி இங்கேயே இருப்பதா இல்லை பிறகு சந்திப்பதா என்று முடிவு செய்ய வேண்டும்" கேட்க அவன் கட்டை விரலை தூக்கி காட்டினான்.

"மாற்றங்கள் ஒரே இரவில் வராது என்று கேள்விப் பட்டு இருக்கிறேன். ஆனால் இங்கே ஒரே இரவில் வந்து விட்டது" என்று புன்னகை செய்தவன், எதிரே இருந்த சோபாவை காட்டி தானும் அமர்ந்தான்.

"எனக்கு ஒரு வேலை இங்கேயே பார்த்து விடலாம் என்று பாட்டி சொன்னாங்களே? அது நிஜம்தானா?" என்று தயக்கத்தோடு கேட்ட சந்தியாவை ஆராயும் நோக்கத்துடன் பார்த்தான் ராஜீவன்.

"சாரி, நீங்க ஒரு ஊக்கம் அளிப்பதற்காக சொன்னதை நான் தப்பாகப் புரிந்து கொண்டேனா?" என்று கேட்க அவன் புன்னகை செய்தான். அந்த இன்ஸ்பெக்டர் நினைப்பது போல இவள் மக்கு இல்லை. கூர்மையாக கவனிக்கிறாள். நிறைய விஷயங்கள் இவளால் ஊகிக்க முடிகிறது. உலக அனுபவம் இல்லாததும், எளிதில் ஆட்களை நம்பி விடுவதும் தான் இவளுடைய பிரச்சனைகள். படிப்பு கம்மியாக இருப்பதாலும், ஒரு தாழ்வு மனப்பான்மை வந்து இருக்கலாம்.

"பயங்கரமா கற்பனை பண்றீங்க சந்தியா. இதுல பாதியை அந்த பாங்கல டிடி எடுக்கும் போது காட்டி இருக்கலாம். எந்த பிரச்சனையும் வந்து இருக்காது..." என்று சொல்ல அவள் தலை அசைத்து மறுத்தாள்.

"இல்லைங்க. நேற்று முழுவதும் நானும் அப்படித்தா
நினைத்தேன். ஆனால் அப்படி ஒரு சம்பவம் நடக்காம
இருந்த இருந்தால், உங்களை எனக்குத் தெரிந்
இருக்காது. உங்க மூலமா இப்போது பாட்டியும் ப
யாச்சு. அதனால் இனி நடக்கப் போவதை மட்டும் நினை
யோசிக்கலாம் என்ற முடிவிற்கு வந்துவிட்டேன்..
என்று சொல்ல அவன் கைகளை உயர்த்தி தட்டி புன்
கையோடு பாராட்டினான்.

"இந்த அணுகுமுறையைதான் நான் எதிர்பார்த்தே
உங்களுக்கு இனி எல்லாமே நல்லதா நடக்கும். கொ
தோம் முன்னாடி ஆட்டோ நம்பரை வச்சு என்ன செ
என்று கேட்டீங்க இல்லையா? அது பற்றி விசா
ஆர்.டி.ஓ. ஆபீஸ் போகலாமா?"

"அங்கே நம்பரை சொன்னால் ஓட்டுனர் முக
வாங்க முடியுமா? வெளி நபர்கள் விசாரித்தால் சொ
வாங்களா? உங்களுக்கு தெரிந்தவர்கள் யாராவது அ
இருக்காங்களா?" என்று கேள்விகளை அடுக்க வி
பில் ராஜீவன் விழிகள் விரிந்தது.

"ஒன்று, இரண்டு, மூன்று, சந்தியா தூள் கிளப்புறீ
இப்படி தான் விழிப்பா இருக்கணும். சூப்பரா கே
கேட்கறீங்க. என்ன குரலில் இன்னும் கொஞ்சம் அ
தாரிட்டி இருக்கலாம்..." என்று பாராட்டுதலாகச் சொ
அவளுக்குக் கூச்சத்தில் முகம் சிவந்தது.

"கேள்வி கேட்டு என்ன பிரயோஜனம்? பதில் த
வரவில்லை..." என்று முணுமுணுக்க, அவளை ரச
யோடு பார்த்தான். இலகுவான மன நிலையில் இரு
கும் போது அழகாக தோன்றுகிறாள். பயமும் பதட்ட
இவளின் அழகை கெடுத்து விடுகிறது.



"தெரிஞ்சவங்க என்று ரெடிமேடா இப்போதைக்கு
இல்லை. ஆனால் அங்கே போய் யாரையாவது தெரிந்து
கொள்ளலாம். கவலை படாதீங்க. விடா முயற்சி தான்
வெற்றிக்கு வழி வகுக்கும். வாங்க" என்று கிளம்ப
அவனை பின் தொடர்ந்தாள் சந்தியா.

"இன்று சனிக்கிழமை இல்லையோ? அலுவலகங்கள்
விடுமுறையாக இருக்காதா?" என்று கேட்டதும் அவ
ளுக்கு உரைத்தது.

"ஹேய்! ஆமாமில்ல, மறந்தே விட்டேன்..." என்று
பைக்கை நிறுத்தித் திரும்பியவன் அவளின் இதழ்கள்
இறுக மூடிக் கொள்வதை பார்த்ததும் வியப்பானான்.

"என்ன! ஏதோ சொல்ல வந்து பாதியிலேயே முழுங்
கின மாதிரி இருக்கே...?" என்று ராஜீவன் கேட்க, 'அவள்
ஒன்றும் இல்லை' என்று வேகமாகத் தலை அசைத்து
மறுத்தாள்.

"சந்தியா, நான் காலேஜ் டீச்சர். வருடா வருடம், புதுப்
புது பசங்களைப் பார்த்துப் பழகுபவன். யார் என்ன செய்
தால் அதற்கு என்ன அர்த்தம் என்று என்னால் யூகிக்க
முடியும். மற்றவங்க எப்படியோ? உனக்குப் பொய் சொல்ல
வரலை. ஏதோ என்னை மடக்க கேலியாகச் சொல்ல
வந்துட்டு அவசரமாக நிறுத்தின மாதிரி இருக்கு. என்ன
அது என்று சொல்லாமல் வண்டி இங்கே இருந்து
கிளம்பாது..."

"என்ன சார் இது? இப்படி நடு ரோட்டில் வண்டியை
நிறுத்தி..."

"சாரா..! அப்ப ரெண்டு கண்டிஷன். இனிமேல் சார்
என்று சொல்ல மாட்டேன் என்ற உறுதி மொழியோடு

Optimized by www.ImageOptimizer.net

கொஞ்சம் முன்னாடி என்ன சொல்ல வந்தாய் என்று சொன்னால் தான் வண்டி நகரும்...''

''சார்... ப்ளீஸ்... அது பெரிசா ஒன்றும் இல்லை சா.. ராஜீவன் சார்...''

''ராஜீவன் சார்..? ம்ம்ம், முதல் கண்டிஷனை நிறைவேற்றியதா வச்சுக்கறேன். ஆனால் இரண்டாவது கண்டிஷன் அப்படியே இருக்கே...'' என்று சிரிப்போடு கைகளை கட்டி சொன்னவனுக்கே அவனுடைய செயல்கள் வியப்பை அளித்தது. இரண்டு மணி நேரம் முன்பு இவளை பைக்கில் ஏற வைக்க மிரட்டியதென்ன? இப்போது...

''அது... பவித்ரா அப்பப்போ என்னை கேலியாக சொல்வாள்.. ஒரு சின்ன ஜோக்.. அது நினைவு வந்தது..'' என்று திக்கித் திணறிச் சொல்ல அவனின் வியப்பு மேலும் கூடியது. இவளின் முகம் கூச்சத்தில் சிவக்கும் போதும், சிரிக்கும் போதும் எவ்வளவு அழகாக உள்ளது. மை காட்..! என்று அவசரமாக முகத்தை திருப்பி பைக்கை கிளப்பினான்.

'நீ என்ன சொல்ல நினைத்தாய் என்பதை சொன்னால் தான் வண்டி இங்கே கிளம்பும்' என்ற அவன் மறந்து விட்டாலும் அவள் ஆரம்பித்த விளக்கத்தை தொடர்ந்தாள்.

''நீங்க கொஞ்ச முன்பு ஆமாமில்லை என்று சொன்னீங்க இல்லையா? நானும் இப்படி சொல்லி' இருக்கிறேன். அப்ப பவித்ரா ஆமாவா? இல்லையா? ஒழுங்காக சொல்ல மாட்டாயா என்று கேட்பாள். அது ஞாபகம் வந்தது...'' என்று இயல்பாக அவள் பேச்சைத் தொட



அவன் 'ம்ம்ம்' என்று சொல்லி வண்டியை தொடர்ந்து செலுத்தினான்.

''இப்ப எங்கே போகிறோம்?'' என்று கேட்டவளுக்கு, ''ஆசிரமம்...'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னான்.

''ஆசிரமத்தில் நமக்கு ஏதாவது வேலை இருக்கா?'' என்று அவளின் விசாரணை நிற்காமல் தொடர, 'ஒரு வாரம் உங்களுக்கான கால அவகாசம் இருப்பதை இன்னொரு முறை உறுதி செய்து கொள்ளலாம்' என்று சுருக்கமாக பதில் சொன்னான்.

''அதுக்காக அங்கே போக வேண்டிய அவசியம் இல்லை. மேடம் அதை தெளிவா ஏற்கனவே சொல்லிட்டாங்க. அடுத்த வெள்ளி அன்று இரவு ஆறு மணி வரை அவகாசம் இருக்கு'' என்று சொல்ல அவன் யோசனையோடு வண்டியை திருப்பினான்.

''ஓ! அப்ப இனி இன்றைக்கு செய்ய ஒரு வேலையும் இல்லையே? உங்களை பங்கஜம் அக்கா வீட்டில் விட்டு விடட்டுமா?'' என்று யோசனையோடு கேட்டவனுக்கு ஏதோ ஒன்று மனதிற்குள் குறைவது போலத் தோன்றியது. காவல் நிலையத்தில் இருந்து வீட்டிற்கு வரும் போது, அவளது இறுக்கத்தைப் போக்க, அவன் தான் வலிய பேச்சுக் கொடுக்க வேண்டி இருந்தது. ஆனால் இப்போது அவளாகவே பேச்சை ஆரம்பிக்கிறாள். விளக்கம் சொல்கிறாள். தயக்கத்துடன் கேலி செய்கிறாள். அவள் தன் கூட்டை விட்டு வெளியே வந்து விட்டாள் என்பதை உணர முடிந்தது.

''ராஜீவன் சார்..?'' என்று அவன் தோளை தொட்ட அவளது கரத்தை உணர்ந்து, வாகனத்தின் வேகத்தை

Optimized by www.ImageOptimizer.net

குறைந்தபடி கண்ணாடியில் அவளின் முகம் பார்த்து, "ஹா! என்ன சந்தியா?'' என்று கேட்டான்.

''ரொம்ப சீரியஸா ஏதோ யோசிச்சுட்டு வர மாதிரி இருக்கு? ஏதாவது பிரச்சனையா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. ஏன் அப்படிக் கேட்கிறாய்?'' என்றவன் குரல் அவனை அறியாமலே ஒருமைக்குத் தாவி இருந்தது.

''இல்லை... நான் கேட்ட கேள்விக்கு எல்லாம் பதிலே வரவில்லை. அதான்...'' என்று இழுத்தவள் அவன் பதில் சொல்வதற்கு முன்வே, ''ஒரு வேளை வண்டி ஓட்டுவதில் கவனமா இருந்தீங்களோ என்னவோ? பரவாயில்லை விடுங்க சார்...'' என்று அவளே முன் வந்து விளக்கமும் சொல்ல அவனுக்கு ஒரு மாதிரி இருந்தது.

''ஓ! சாரி.. கவனிக்கலை. என்ன கேட்டாய்?'' என்று சொன்ன பிறகே ஒருமையில் அழைப்பதை உணர்ந்து கண்ணாடியில் அவளின் முகத்தில் அதிருப்தியோ கோபமோ தெரிகிறதா என்று ஆராய்ந்தான். அப்படி எதுவும் தெரியவில்லை.

''எனக்கு வேலை தருவதா பாட்டி சொன்னாங்களே! அது நிஜம்தானா? அதை எனக்கு தருவாங்களா? யாரை பார்க்கணும் என்று நிறையக் கேள்விகள் கேட்டேன், ஒன்றுக்கும் பதிலே வரவில்லை.''

''ஓகே, பங்கஜம் அக்கா வீட்டிற்குப் போவதற்கு முன்னால், உங்களுக்கு என்ன வேலை என்பதை காட்டி விடுகிறேன். பிடிச்ச இருக்கா என்று சொல்லு..ங்க.'' என்றவன் வார்த்தையில் மரியாதை பன்மை ஏ மறுத்தது. அதை அவள் கவனிக்காமல் தவிக்கவும் அவ பிரம்ம பிரயத்தனம் பட வேண்டி இருந்தது.



''பிடிக்கும் பிடிக்காது என்று சொல்லும் நிலையில் நான் இல்லை ராஜீவன் சார். உணவிற்கும், ஒரு தங்கும் இடத்திற்கும் வழி செய்யக் கூடிய அளவு சம்பாத்தியம் தரும் ஒரு வேலை போதும். எந்த வேலையாக இருந்தாலும் பரவாயில்லை...'' என்று அவள் முடிக்கும் முன்பே, அவனின் பைக் நின்றது.

''கௌரவமான வேலை தான். பயப்பட தேவை இல்லை. உங்களுக்கு தங்கும் இடமும் ரெடி. இறங்கு..ங்க...'' என்று அவன் சொல்ல அந்த இடத்தை பார்த்தவள் இதழ்களில் புன்னகை மலர்ந்தது. அது அவனை முதன் முதலில் சந்தித்த இடம்.

''ஹலோ.. கம்..'' என்ற ராஜீவனின் குரல் கேட்ட பின்பே, சுற்றுபுறம் உணர்ந்து தலையை உலுக்கி, வேகமாக அவனைத் தொடர்ந்து அந்த அங்காடிக்குள் நுழைந்தாள்.

''ராஜீவ், வா வா.. என்ன இந்நேரத்தில?'' என்று அவனை வரவேற்ற அந்த முதியவரின் பார்வை அவனை பின் தொடர்ந்த பெண்ணின் மீது வியப்புடன் பதிந்தது.

''உங்களிடம் ஒரு சின்ன உதவி கேட்கலாம் என்று வந்தேன்..'' என்று ஆரம்பித்தவன், இரண்டு நிமிடம் செலவழித்து, அவளின் முன் கதைச் சுருக்கத்தை சொல்லி முடித்த போது, அவரின் பார்வையில் வியப்புக் கூடி இருந்தது. அது அவளின் அப்பாவியான சுபாவத்தை பார்த்து வந்தது என்பதை விடவும், ராஜீவன் அவள் மேல் காட்டிய அக்கறையினால் விளைந்ததாக இருந்தது.

''கம்ப்யூட்டரில் பில் போடத் தெரியுமா? இங்கே வேலை செய்யும் ஒரு பொண்ணுக்கு அடுத்த மாசம் கல்யாணம் நடக்கப் போகுது. வரும் ஒன்றாம் தேதியில்

Optimized by www.ImageOptimizer.net

இருந்து அந்த இடம் காலி தான். செய்கிறாயா?'' என்று கேட்க அவள் கண்ணில் கலவரத்தோடு ராஜீவனை பார்த்தாள்.

''ஒரு வாரத்தில் கற்று கொள்ளலாமா?'' என்று அவ கேட்க, அவளின் அந்த கலவரமான முகத்தை பார்த்த வினாடியில், ''ஒரு வாரம் ரொம்ப ஜாஸ்தி சந்தியா, ஒ நாளில் கற்று கொள்ளலாம். நானே கற்றுத் தருகிறே என்று வாக்குறுதி அளித்த பின்பே, தன் மனமும் நாக் வேறு வேறு திசையில் பயணிக்கிறது என்பதை முழு யாக உணர்ந்து உறைந்தான் ராஜீவன்.

## 12

ராஜீவனின் சிபாரிசில் பல் பொருள் அங்காடியி சந்தியாவின் வேலை வாய்ப்புக்கு உறுதி செய்த பின் இருவரும் அங்காடியை விட்டு வெளியே வந்தனர்.

''என்னால நம்பவே முடியலை ராஜீவன் சார். நேற் இதே நேரம் என் வாழ்க்கை முடிந்து விட்டதாக, இ பஸ் ஸ்டாப்பில் சுற்றுபுறத்தை பற்றிய நினைவே இல்லாமல் அழுதேன். ஆனால் இன்று இவ்வள சந்தோஷமா இருப்பேன் என்று எதிர்பார்க்கவே இல்லை இதை உடனே பவித்ராவிடம் சொல்ல வேண்டும். நா போன் பேசிவிட்டு வரட்டுமா?'' என்று உற்சாகமாக த மனதில் உள்ளதை கொட்டியதோடு அவனிடம் பொ தொலைபேசி நிலையத்தில் இருந்து பேசுவதற் அனுமதியும் கேட்டாள்.



''போன் பேசுவதற்காக அங்கே போக வேண்டும் என்ற அவசியம் இல்லை சந்தியா. என் மொபைலில் பேசலாம். இன்னொரு விஷயம் சொல்ல நினைத்தேன். இப்போது வேலை கிடைத்து விட்டதால், நீயே உனக்கு தனியாக ஒரு மொபைலும் வாங்கி கொள்ளலாம்...''

''இப்ப போன் வாங்குவது அனாவசியச் செலவு. கொஞ்ச நாள் போகட்டுமே...''

''அது அனாவசிய செலவு இல்லை சந்தியா. அது இப்போதைக்கு அத்தியாவசியத் தேவை. நீ உன் காசை செலவு பண்ணி பேசாவிட்டாலும், உன்னிடம் போன் இருந்தால் மற்றவர்கள் பேச வசதியாக இருக்கும் அல்லவா?''

''ப்ச்! என்னிடம் யார் பேச போறாங்க...?''

''ஏன் பவித்ரா பேச மாட்டாளா?''

''பேசுவா..''

''நான் பேசக் கூடாதா?''

''ஹய்யோ! தாராளமா பேசலாம்...''

''அப்புறம் என்ன? போன் வாங்க ஏன் தயக்கம்?''

''அது வந்து என்னிடம் இப்போதைக்கு பணம் அதிகமா இல்லை...''

''ஏன் இல்லை? உங்களிடம் இருபதாயிரம் ரூபாய்க் கான டி.டி. இருக்கே? அதை இனிமேல் பயன்படுத்த மாட்டாய் அல்லவா? இல்லை ஆசிரம வேலையை இன்னும் மனதில் இருக்கா?'' என்று யோசனையோடு கேட்டவனுக்கு, ஏனோ, அவள் ஆசிரம வேலையை ஒப்பு கொள்வதில் இஷ்டம் இல்லை. அவன் அப்படி கேட்ட பின்பே உவளுக்கு சம்பளம் பற்றி எதுவுமே



Optimized by www.ImageOptimizer.net

பேசவில்லை என்பது உறைத்தது. அங்கே உணவு தங்குமிடம் போக, இரண்டாயிரம் தருவதாக சொல்லி இருந்தார்கள்.

அதை விடச் சம்பளம் கூடுதலாகக் கொடுத்தாலுமே தங்குமிடத்திற்கு என்ன செய்வது? சமைப்பது என்றால் அடிப்படை சமையலுக்கு தேவையான பொருட்கள் வாங்க வேண்டாமா? அவளின் அமைதி நீண்டதால் நின்று திரும்பிப் பார்த்தான் ராஜீவன்.

''என்ன ஆச்சு? சத்தமே காணோம்?''

''இல்லை... ஆசிரமத்தில் என்றால் தங்கும் இடம், உணவு அங்கே இருந்தது. அதனால் சம்பளம் குறைவாக இருந்ததைப் பற்றிக் கவலைப் படாமல் வந்தேன். ஆனால் இப்போ, இங்கே என்ன சம்பளம் என்று பேசவே இல்லை. அதோடு..'' என்று தயக்கத்தோடு நிறுத்த, அவன் புன்னகை செய்தான்.

''இந்தக் கேள்வி இன்னும் வரவில்லையே என்று இப்பதான் நினைத்தேன். நினைத்து முடிப்பதற்குள் கேள்வி வந்துடுச்சு. குட்...''

''உங்களை ரொம்பக் கேள்வி கேட்டுப் புடுங்குற மாதிரி இருக்கக் கூடாதே என்று தான் கொஞ்ச நேரமா அமைதியா இருந்தேன். இந்த விஷயத்தில் அமைதியா இருக்க முடியாதே? பங்கஜம் அக்கா வீட்டில் ரொம்ப நாள் தங்க முடியாது. அது நல்லா இருக்காது.''

''நீ நிறையப் பேசணும். உன்னிடம் ஒளிந்து கிடக்கும் திறமை எல்லாம் வெளியே வரணும் என்று நான் விரும்புகிறேன். இந்த வேலை தற்காலிகமானது. இப் போதைக்கு வைத்து கொள்ளலாம். இதுவே வாழ்க்கை யின் இறுதி லட்சியம் என்று இருந்து விடக் கூடாது.



இப்ப நான் கேட்கும் கேள்விக்கு வெளிப்படையா பதில் சொல்லு. மதுரம் பாட்டி பற்றி என்ன நினைக்கிறாய்?''

''பாட்டியா? ஏன்.. திடீர் என்று இப்படி கேட்கறீங்க?''

''ம்ஹூம்! பவித்ரா நான் எப்படி இருக்கிறேன் என்று விசாரித்த போது இந்த மாதிரி எதிர் கேள்வி கேட்க லையே?'' என்று தலை சாய்த்து புன்னகையோடு அவன் கேட்க அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''அது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''தெரியும். இப்ப என்ன வித்தியாசம் சொல்லு. இதுக்கு பதில் சொன்ன பிறகு இன்னொரு கேள்வி கூட இருக்கு..''

''எதிர் கேள்வி கேட்கலை என்று எப்படி சொல்றீங்க? கேட்டேனே?''

''பதில் சொல்வதற்கு முன்னால் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. பிறகு கேட்டது எனக்கு நினைவில்லை. ஆனால் பவித்ராவுக்கு நீ சொன்ன பதில் எனக்கு நினைவிருக்கு...'' என்றவன் முகத்தில் சந்தோஷமும் ஆர்வமும் போட்டி போட்டுக் கொண்டு இருந்தது.

''என்ன சொன்னேன்? ஞாபகம் இல்லை...'' என்று அவள் தடுமாற, அவளின் தடுமாற்றமே அவள் பொய் சொல்வதை உறுதிப் படுத்த அவன் மேலும் ரசனை யோடு சிரித்தான்.

''பரவாயில்லை. நானே நினைவு படுத்துகிறேன். நல்லா இருக்காரு. அடுத்தவங்க மேலே அக்கறையா இருக்காரு. இன்னும் ஒண்ணு.. ம்ம்ம்... ஹா! ஹோம் லியா இருக்கார்...'' என்று அவன் சொல்லச் சொல்ல அவளின் முகம் மேலும் சிவந்தது.

Optimized by www.ImageOptimizer.net

''நல்லா இருக்கார், அக்கறையாக பேசறார் எல்லாம் புரியது. ஆனால் ஹோம்லி லுக் என்று பொதுவா பொண்ணுங்களுக்குச் சொல்லிக் கேட்டு இருக்கிறேன். ஆனால் ஒரு ஆணுக்குச் சொல்லிக் கேட்டதில்லை. அப்படிச் சொல்ல என்னிடம் என்ன அடையாளம் இருந்தது சந்தியா?'' என்றவன் கண்கள் அவள் முகத்தை ஆராய்ந்தது.

''எனக்கு தெரிஞ்சு, எங்க வீட்டில் மாமா கடைக்கு போக மாட்டாங்க. காய்கறி வாங்குறது பொம்பளைங்க வேலை என்று சொல்வாங்க. அதனால், நேற்றுக் காலையில்... உங்களை.. பால், ப்ரெட், காய்கறி என்று சமையல் பொருட்களுடன் பார்த்த உடனே.. சாரி... நல்ல விதமா தான் பவித்ராவிடம் சொன்னேன். தப்பா எடுத்துக்காதீங்க. ப்ளீஸ்...'' என்று தன்னிலை விளக்கம் சொல்ல புன்னகைத்தான்.

''நான் தப்பா நினைக்கவில்லை. நீ அத்தனை படபடத்திலும் இந்த விஷயங்களை கவனித்து, என்னை பற்றி ஒரு முடிவு எடுத்து இருக்கிறாய் என்பது தான் எனக்கு ஆச்சரியம். நானும் சந்தோஷமா இந்த வேலைகளைச் செய்கிறேன். ஓகே, இப்ப நீ தங்கும் இடம் பற்றி பேசலாமா?'' என்றவன் கை திருப்பி மணி பார்த்தான்.

''உங்களுக்கு வேறே வேலை இருக்கா? லேட் ஆகிடுச்சா? சாரி...''

''சும்மா மணி பார்த்தேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால் பாட்டி வீட்டுக்கு போவோமா?'' என்று விசாரிக்க அவள் அரை மனதாக தலை அசைத்தாள்.

''தயக்கம் வேண்டாம் சந்தியா. ஒரு காரணமா தான் சொல்றேன். அங்கே ஒரு பதினைந்து நிமிடம் இருந்தா



போதும். பாட்டி வீட்டில் தங்குவதை பற்றி என்ன நினைக்கிறாய்'' என்று வண்டியில் போகும் போதே பேச்சை ஆரம்பித்தான்.

''நான் என்ன நினைக்கிறேன் என்பதை விட பாட்டி என்ன நினைக்கிறாங்க என்பது தானே முக்கியம்...'' என்று நேரடியாகப் பதில் சொல்லத் தயங்கினாள்.

''பாட்டிக்கு ஆட்சேபனை இருக்காது. அவங்க வீட்டுக்கு யாருமே வந்து நான் பார்த்ததே இல்லை. இரண்டு மகன்கள் கல்யாணம் முடிந்து வெளியூரில் செட்டில் ஆகி விட்டாங்க. தனியா இருக்காங்க. என்னை ஒரு வருஷமா கூட வந்து இருக்க சொல்லிட்டு இருக்காங்க. நாளைக்கு அவங்க பசங்க வந்து ஏதாவது சொல்லிடக் கூடாதே என்று தள்ளி இருந்தேன். ஆனால் நீ அங்கே தங்கினால் அவங்க ரொம்ப சந்தோஷப் படுவாங்க...''

''உங்களையே ரெண்டு வருஷம் கழித்துதானே கேட்டு இருக்காங்க. என்னை அவங்க பார்த்து ஒரு நாள் கூட முழுசா முடியலை. என்னை உடனே நம்பணும் என்று எதிர்பார்க்க முடியாது இல்லையா?'' என்றவளின் குரலில் தயக்கம் இருந்தது.

''அதை கேட்க தான் அங்கே போகிறோம். உனக்கு சம்மதமா என்று தெரியாமல் பாட்டியிடம் பேசக் கூடாது இல்லையா?''

''இந்த இடம் வேண்டும் வேண்டாம் என்று சொல்லும் நிலையிலா நான் இருக்கிறேன்?'' என்று அவள் கேட்டு முடிக்கும் முன்பே அவன் ப்ரேக்கை கோபத்துடன் அழுத்த. வண்டி நின்ற வேகத்தில அவன் மேல் மோதி விலகினாள் சந்தியா.

''என்னடா இரண்டு மணி நேரமா நல்ல விதமா பேசிட்டு இருக்கியே என்று நினைத்தேன். மறுபடி வேதாளம் முருங்கை மரம் ஏறியாச்சா?'' என்று வேகமாகக் கேட்க அவள் ஒரு கணம் திகைத்தாள்.

''அதுதான் நிதர்சனமான உண்மை. நான் சாதாரணமாகச் சொன்னேன். நீங்க ஏன் அதைத் தவறா எடுத்துக்கறீங்க?'' என்று உடனே திருப்ப அவன் கோபம் குறைந்தது.

''பாட்டி உன்னை வேண்டாம் என்று சொல்ல மாட்டாங்க. ஒருவேளை இந்த வேலையோ தங்கும் இடமோ வேண்டாம் என்று சொல்ல ஏதாவது காரணம் இருந்தால் அப்புறமா மாற்றுவதை விட ஒத்து கொள்வதற்கு முன்பே பேசி விடுவது நல்லது. நீ பவித்ராவிடம் பேசுவது என்றால் பேசி விடு'' என்று சொல்ல அவள் போனை வாங்கினாள்.

''பவித்ரா இந்த வேலை வேண்டாம் என்று மறுக்க எந்த காரணம் இல்லை'' என்று சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று சில நிமிடங்கள் பேசி விட்டுத் திரும்பி வந்தாள்.

சனி மாலையில் பாட்டியிடம் பேசி, அனுமதி வாங்கிய பின்பு, சில மணி நேரத்தில், சந்தியா பங்கஜம் அக்காவின் வீட்டில் இருந்து தன்னுடைய பொருட்களை எடுத்து கொண்டு இங்கே வந்து சேர்ந்தாள்.

ஞாயிறு காலையில், ராஜீவன் தன் வீட்டில் மாடியில் இருந்த கணினியை கீழே பாட்டி வீட்டின் ஹாலில் கொண்டு வந்து பொறுத்த ஏற்பாடு செய்து, தினமும் காலை மாலை இரண்டு மணி நேரங்கள் அவளுக்குக் கணினி பயிற்சி அளித்தான்.



அம்மாவிடம் சந்தியாவை கீழே பாட்டிக்கு துணையாக தங்க வைத்து இருப்பதையும் சொல்லி வைத்தான். அடுத்த வார இறுதியில், கோவைக்குப் பெண் பார்க்க வருவது குறித்த அம்மாவின் விசாரணைக்கு, வருவதாக அவன் வாக்குறுதி அளிக்கவே, விமலா மேற்கொண்டு துருவவில்லை.

தாத்தாவிடம் சம்பளம் இல்லாமலேயே அடுத்த பதினைந்து நாட்கள் கடையில் என்ன பொருட்கள் இருக்கிறது என்பதையும் பில் போடவும், கற்று கொள்ள ஏற்பாடு செய்தான்.

திங்கள் அன்று காலையில் ஆர்.டி.ஓ. அலுவலகம் சென்று ஆட்டோ நம்பர் குறித்து கொடுத்து, முகவரி வாங்க ஒரு ஏஜெண்ட் மூலம் ஏற்பாடு செய்தான். பிற்பகல் கல்லூரிக்குச் சென்று விட்டுத் திரும்பி வரும்போது, ஒரு எளிய அலைபேசி, இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கி வந்து. ''சம்பளம் வந்ததும் பணத்தை கட்டாயம் வாங்கிக் கொள்கிறேன்'' என்று வற்புறுத்தி, அதை அவளிடம் கொடுத்தான்.

செவ்வாய் காலை காவல் நிலையத்திற்கு சென்று விசாரணை எந்த அளவில் இருக்கிறது என்று நினைவு படுத்தச் சென்ற போது, சந்தியா வேலை பார்க்கும் பல்பொருள் அங்காடியில் இருந்து போன் வர அவன் புருவம் சுருங்கியது. இந்த நேரத்தில் தன்னை அழைப்பது யார்? தாத்தாவா? சந்தியாவா? யோசனையோடு போனை எடுத்தான்.

''இன்று கல்லூரிக்கு விடுப்பு சொல்லி விட்டு உடனே இங்கே வர முடியுமா ராஜீவ்?'' என்ற தாத்தாவின்

Optimized by www.ImageOptimizer.net

குரல் கேட்க அந்த பதட்டம் அவனையும் தொற்றி கொண்டது.

## 13

காவல் நிலையத்தில் சில நிமிடங்களில் விசாரணையை முடித்து கொண்டு அங்கிருந்து கல்லூரிக்குச் செல்லும் எண்ணத்துடன் கிளம்பிய ராஜீவன், தாத்தாவிடம் இருந்து அழைப்பு வந்ததும், முதலில் வியப்படைந்தான்.

''தாத்தா, ஏன் இவ்வளவு பதட்டமா இருக்கீங்க? அவசரமா வரணுமா? சந்தியாவுக்கு ஏதாவது..'' என்று கேட்கும் போதே உடலில் ஒரு நடுக்கம் ஓடியதை உணர்ந்தான்.

''சந்தியா விஷயம் தான் பேசணும். பயப்படுற அளவுக்கு ஒன்றும் இல்லை. இன்னிக்கே வேலை முடித்தால் பிரயோஜனமா இருக்கும். அதான் அவசரமா வர சொல்றேன்'' என்று சொல்ல, வருவதாக வாக்களித்து விட்டு போனை வைத்தான். அங்காடியை அடையும் போது வாசலில் காத்திருந்த சூரிய நாராயணன், முகத்தில் குழப்பமோ கலவரமோ இல்லை. மாறாக மலர்ச்சி இருந்தது.

''என்ன தாத்தா, எதுக்கு அவசரமா வர சொன்னீங்க?''

''மூன்று நாளா அந்த எலெக்ட்ரீஷியன் போன் எடுக்கவே இல்லை என்று சொன்னாய் அல்லவா? அந்த எண்ணுக்கு இன்று நான் முயற்சி செய்தேன். சங்கரன்



என்று ஒருத்தன் பேசினான். அவனிடம் நான் கடை அட்ரசை சொல்லி ஒரு சின்ன வேலை இருக்கு என்று வர சொல்லி இருக்கிறேன்...''

''வாவ்! சூப்பர் தாத்தா. அவனை பார்த்த உடனே சந்தியாவின் பிரதிபலிப்பு என்ன என்பதை வைத்து, சந்தியாவின் பணம் திருட்டு போனதற்கும் அந்த எலெக்ட்ரீஷியனுக்கும் சம்பந்தம் இருக்கா என்பதைக் கண்டு பிடிக்கலாமே?'' என்று ஆர்வமாக பரபரத்தான்.

''கரெக்ட். அவளிடம் இந்த விஷயம் சொல்லப் போனேன். அப்போது நீ அவளுடன் என்ன பேசினாய்? நம்பரை மேஜையில் இருந்த பேப்பரில் கிறுக்கியபடி பதில் சொன்னாள்...''

''வெள்ளி காலையில் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து இந்த ஏரியாவிற்கு அவள் வந்த ஆட்டோ எண் பற்றி காவல் நிலையத்தில் சொல்ல கேட்டேன். அந்த நம்பரை கிறுக்கி இருக்கலாம். ஏன் தாத்தா அது எந்த ஆட்டோ என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று அவன் கூடுதல் பரபரப்புடன் சொல்லும் போதே அவரின் முகம் மேலும் விரிந்தது.

''வெள்ளிக் கிழமை காலையில் சீக்கிரமே கடை திறக்க வந்து விட்டேன். அன்று நான் சீக்கிரம் வர என்ன காரணம் சொன்னேன் என்று ஞாபகம் இருக்கா?''

''உங்க வீட்டு பக்கத்துல இருக்கும் ஆட்டோ டிரைவர் சென்டரல் ஸ்டேஷன் போவதா சொன்னீங்க. அவர்தான் சந்தியாவை அழைத்து வந்ததா? எலெக்ட்ரீஷியனும் இவரும் சேர்ந்து மை காட்! வங்கி கணக்கில் பணம் போட்டதும் டி.டி. எடுத்ததும் ஒரே கணக்கில் இல்லை

என்றதுமே, ஒருவரால் இந்தக் காரியத்தை செய்து இருக்க
முடியாது. இரண்டு கணக்குகளில் இருந்து இந்த வேலை
செய்து இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.
இவங்களை எல்லாம் என்ன செய்தால் தேவலாம்?
பொறுக்கிகள்...'' என்று ஆத்திரத்துடன் பொரிய சூரிய
நாராயணன் அமைதிப் படுத்தினார்.

''அவசரப்படாதே ராஜீவ். இது நம்முடைய ஊகம்
தான். உண்மையாக இருக்க வேண்டும் என்ற அவசியம்
இல்லை. எலெக்ட்ரீஷியன் சந்தியாவை அழைத்து சென்
றான் என்பது உறுதி ஆகி விட்டால்...''

''என்ன தாத்தா சந்தேகமா சொல்றீங்க? எனக்கு நூறு
சதவிகிதம் நிச்சயமா தெரியும். இப்படிதான் நடந்து
இருக்க வேண்டும்...''

''அப்படி இருந்து அந்த பணத்தை மீட்கவும் முடிந்
தால் அதை போன்ற சந்தோஷமான விஷயம் உலகத்
தில் வேறு எதுவுமே இல்லை. ஆனால் இவர்களிடம்
நாமே நேரே பேசுவது அவ்வளவு சரியா இருக்காது.
அவர்கள் ஓடி விட்டாலோ, சண்டை போட்டாலோ நம்
மால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் உடனே
காவல் நிலையத்தில் சொல்லி அவங்க விசாரித்தால்
தான் உண்மை தெரிய வரும். பணத்தை மீட்க முடியும்.
அதற்காக தான் உன்னை அவசரமாக வரச் சொன்னேன்...''

''ஓகே, ஓகே, நீங்க பேசிய அந்த சங்கரன் இங்கே
வந்தால் எப்படிக் கண்டு பிடிப்பது? அவரை சந்தியா
அடையாளம் கண்டு கொண்டால், உடனே நான் காவல்
துறைக்கு தகவல் சொல்லி வரவழைக்கிறேன். உங்க
களால் அந்த ஆட்டோ டிரைவரையும் இங்கே வர வைக்க
முடியுமா? இரண்டு பேரும் இருந்தால் வேலை



சுலபமாக முடிந்து விடும்'' என்று அவசரமாக இடை
மிட்டான் ராஜீவன்.

அவன் கடைக்குள் நுழையும் போதே பார்த்து விட்ட
சந்தியாவின் முகம் பிரகாசமானது. ''ஹேய்.. நீங்க
இந்நேரத்துல இங்கே...'' என்று தன் இடத்தில் இருந்து
எழுந்து வேகமாக வாசலை நோக்கி ஓடி வந்தவளுக்கு
பதிலேதும் சொல்லாமல், அவளின் கையை பற்றி,
ஷெல்பிற்கு பின்னால் இழுத்து சென்றான்.

''இப்ப எதுவும் பேசாதே. ஒரு கூடையில் ஏதாவது
பொருட்களை எடுத்து போடுவது போல வாசலை
பார்த்து கொண்டு கொஞ்ச நேரம் நில். என்ன விஷயம்
என்று பிறகு சொல்கிறேன்'' என்று சொன்னவன் இன்
னும் அவளின் கைகளை விடுவிக்கவில்லை.

''சந்தியா, சொன்னது கேட்கலையா? என் முகத்
தையே பார்த்துட்டு நிற்காதே. ஏதாவது எடுப்பது போல
கூடையோடு நின்று கவனி...'' என்று அதட்டின பிறகே,
''நீங்க கையை பிடிச்சுட்டு இருக்கீங்க'' என்று கிசுகிசுப்
பான சந்தியாவின் குரல் வெளியே வந்தது.

''ஓ! சாரி.. நான் கவனிக்கலை...'' என்று அவளின்
கையை விடுவித்தவாறே முணுமுணுத்தவன் அவளின்
முகத்தை திரும்பி பார்த்தான். அங்கே சிவந்த முகத்தை
மறைக்கும் பரபரப்பு இருந்தது.

வாசலில் கவனத்தை பதித்து இருந்தாலும் சில
வினாடிகளுக்கு ஒரு முறை அவளைத் திரும்பிப் பார்த்த
வனின் வலது உள்ளங்கை இப்போது குறுகுறுப்பதை
போல இருந்தது. தன் உள்ளங்கையை தூக்கி பார்த்தவன்
லேசாக பெருமூச்செறிந்த வேளையில் சூரிய நாராயணன்
ஒரு ஆளுடன் உள்ளே வருவது கண்ணில் பட்டது.

Optimized by www.ImageOptimizer.net

''சந்தியா, தாத்தா உடன் வரும் ஆளை உனக்கு...'' என்று மெல்லிய குரலில் விசாரித்தவனுக்கு வேண்டிய பதில் அவளின் விரிந்த விழிகளிலும், அதில் தெரிந்த ஆத்திரத்திலும் இருந்தது.

''சந்தியா.. நல்லாப் பார்த்துச் சொல்லு. நான் போலீசுக்கு சொல்லப் போகிறேன். இவன்தான் உன்னுடன் வங்கிக்கு வந்த ஆளா? நினைவு இருக்கா? ஆளை அடையாளம் காட்ட முடியுமா?'' என்று அவளின் கையை உலுக்கி மீண்டும் கேட்க சந்தியா என்ற சிலைக்கு உயிர் வந்து, ஆமோதிப்பாகத் தலை அசைத்தாள்.

''சரி, அன்று நீ வந்த ஆட்டோவை கண்டு பிடித்து விட்டோம். இரண்டு பேரையும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தால், உன் பணம் கிடைக்க வாய்ப்பு இருக்கு. போலீஸ் இந்த இடத்திற்கு வரும் வரை நீ மறைவான இடத்தில் இரு. ஓகே?'' என்று வெளியே வந்த ராஜீவன் தாத்தாவிடம் கட்டை விரலை உயர்த்தி காட்டினான்.

பதினைந்து நிமிடத்திற்குள் காவல் துறை அதிகாரிகளுடன் வந்த போது ஆட்டோ டிரைவரும் எலெக்ட்ரீஷியனும் ஒருவரை ஒருவர் பார்த்து, 'நீ எங்கே இங்கே வந்தாய்' என்று கண்ணாலேயே விசாரித்துக் கொண்டு இருக்க, இருவரையும் வளைத்து பிடித்தனர் காவல் துறையினர்.

அடுத்த இரண்டு தினங்களில், சந்தியாவின் வாக்கு மூலம், பங்கஜத்தின் சாட்சியம், வங்கியில் இருவருக்கும் இருந்த கணக்கு, அதில் நடந்த பண பரிவர்த்தனை, அது நடந்த நேரம், தொகை, ஆகியவற்றை கொண்டு இருவரும் கூட்டாகத் திட்டமிட்டுச் சந்தியாவை ஏமாற்றிப்



பணம் பறித்து இருக்கின்றனர் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க முடிந்தது. ஆனாலும், சந்தியாவிடம் இருந்து பணம் பறித்த பிறகு வந்த நான்கு நாட்களில் அவர்கள் செலவு செய்தது போக வங்கிக் கணக்கில் மீதம் இருந்த பணத்தை பறிமுதல் 'செய்தது சந்தியாவின் பணத்தில் ஐம்பது சதவிகிதம் மட்டுமே!

* * *

காவல் துறையில் இருந்த நடைமுறை சிக்கல்களை தீர்த்து, சந்தியாவின் பணத்தை வழக்கு முடியும் வரை இழுத்தடிக்காமல் உடனே கிடைக்க ஏற்பாடு செய்து இருந்ததை கொண்டாட, தன் கையால் சமைத்து, அவனை சாப்பிட அழைத்து இருந்தாள் சந்தியா.

வியாழன் இரவு ஏழு மணி அளவில் கல்லூரியில் இருந்து திரும்பி வரும் போதே, பாட்டி வீட்டு அழைப்பு மணியை அழுத்தினான் ராஜீவன். ''சந்தியா சாப்பாடு ரெடியா? நான் மாலையில் ஸ்நாக்ஸ் கூட சாப்பிடலை. செம பசியில் இருக்கிறேன். அஞ்சே நிமிஷத்தில் குளித்து உடை மாற்றி விட்டு வந்து விடுவேன். ரெடியா எடுத்து வை'' என்று சொல்லிவிட்டுப் போக சந்தியா புன்னகைத்தாள்.

கவனத்துடன் சமைத்த உணவை கரிசனத்துடன் அவன் தட்டை பார்த்து, முகபாவனையில் இருந்து பிடிக்கும் பிடிக்காதது ஊகித்து, சந்தியா பரிமாறிய போதும், சில நிமிடங்களுக்கு முன்பு கதவை தட்டி அழைத்து, 'சாப்பிட வருகிறேன். ரெடியா எடுத்து வை' என்று சொல்லிப் போன ஆர்வம் உணவு மேஜையில் அவனிடம் இல்லை. உணவு முடிந்ததும், ஒரு கிண்ணத்தில் பழத் துண்டுகளின் கலவையைப் போட்டு உப்பும் மிளகுப்

Optimized by www.ImageOptimizer.net

பொடியும் தூவி ஸ்பூனுடன் கொண்டு வந்து கொடுத்தாள் சந்தியா.

''போலீஸ் ஸ்டேஷனில் இருந்து ஏதாவது போன் வந்ததா? என்னிடம் எப்படி சொல்வது என்று யோசிக்கறீங்களா?'' என்று சந்தியா கேட்க அவன் ஆச்சரியமாக பார்த்தான்.

''ஏன் அப்படி கேட்கிறாய்?''

''நீங்க காலேஜில் இருந்து வந்த உடனே கதவை தட்டி நீங்க பேசியதற்கும், சாப்பிட வந்த போது உங்க முகத்தில் இருந்த பாவனைக்கும் சம்பந்தமே இல்லை. வேலை இல்லை என்றாலும் சரி, காவல் துறையில் தருவதாக சொன்ன பணம் இல்லை என்று சொன்னாலும் சரி, அடுத்து என்ன என்று யோசிக்கக் கூடிய மன தைரியம் இப்போது என்னிடம் இருக்கிறது. சொல்லுங்க...'' என்றவளைத் திருப்தியுடன் பார்த்தான்.

''சாப்பாடு பிரமாதமா இருந்தது சந்தியா. இனி எப்பவும் உன் கையிலேயே சாப்பிடலாம் என்று என்னை நினைக்க வைத்தது...'' என்று ரசனையுடன் பார்வையை அவள் முகத்தில் பதித்து சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் அவன் பேச அவள் விழித்தாள்.

''நீங்க என்ன சொல்றீங்க...?''

''அதை விடு, நான் உன்னைக் கேட்காமல் ஒரு முடிவெடுத்து விட்டேன். அதை செயல்படுத்துவாயா?''

''நீங்க பேசுவது இப்போதும் புரியலை. ஆனால், நியாயமான செயலைச் சொன்னால், உங்களுக்காக முயன்று நிறைவேற்றுவேன். என்ன செய்யணும் சொல்லுங்க...''

''நாளைக்கு என்னுடன் நீ கோவைக்கு வர வேண்டும்...'' என்று சுருக்கமாகச் சொல்ல அவளின் முகத்தில் குழப்பம் மேலும் கூடியது.



''கோவைக்கா... நானா.. அங்கே... எதற்காக?''

''அங்கே எங்க அம்மாவும் அப்பாவும் ஒரு முக்கியமான வேலையா வராங்க. அவங்களிடம் உன்னை அறிமுகப்படுத்தணும். அதற்காக...'' என்று அழுத்தமாக ராஜீவன் சொன்னதன் அர்த்தம் புரிந்தாலும், புரிந்ததை நம்ப முடியாமல் திகைத்து விழித்தாள் சந்தியா.

# 14

''என்னுடன் கோவைக்கு வா. உன்னை என் பெற்றோர்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும்'' என்று ராஜீவன் அழுத்தமான குரலில் தன்னை கண்ணுக்குள் ஊடுருவிச் சொன்னதன் அர்த்தம் புரிந்தாலும், புரிந்ததை அவளின் மனம் நம்ப மறுத்தது.

ஒரு வேளை உணவு நன்றாக சமைத்து போட்டால், உடனே அவன் தன்னுடன் வாழ்க்கை முழுவதும் இருக்க விரும்புவதாக எண்ணுவது பைத்தியக்காரத்தனம் அல்லவா? அது நாகரீகமான பாராட்டுதல் என்று ஒதுங்க வேண்டும், என்று தன்னைத் தானே குட்டி கொண்டவள், நீண்ட அமைதியை ஒரு பெருமூச்சை வெளியேற்றி கலைத்தாள்.

''உங்க அம்மா அப்பாவைப் பார்க்க வேண்டும் என்று எனக்கும் ஆசையா தான் இருக்கு. ஆனால் இப்போ உடனடியா கோவைக்கு வந்தால் அத்தையை பார்க்காமல் இருக்க முடியாது...'' என்று ஆரம்பித்தவனை கை காட்டி நிறுத்தினான்.

Optimized by www.ImageOptimizer.net

"சந்தியா, நான் உங்க அத்தையைப் பார்க்கப் போ... வேண்டாம் என்று எப்போது சொன்னேன்? நீ நே... உங்க அத்தை வீட்டுக்குத் தான் போகப் போகிறாய். நா... அம்மா அப்பாவை கூட்டிக் கொண்டு அங்கே வந்... பார்க்கிறேன். போதுமா?"

"இல்லை. நீங்க போக வேண்டாம் என்று சொன்... நானும் சொல்லவில்லை. அங்கே போனால் நிற... நடை முறை சிக்கல்கள் வரும். பதில் சொல்ல முடிய... பல கேள்விகள் வரும். அதைத் தவிர்க்கலாமே என்... தான்..."

"பிரச்சனைகளை கண்டு ஓடுவதால், அவை தீர்... விடாது. இன்று இல்லாவிட்டால், நாளை. நாளை... இல்லாவிட்டால் நாளை மறுநாள் அதை சந்தித்துத் தீர... ஆக வேண்டும். இன்னொரு விஷயம், மூன்று நா... களுக்கு முன்பு, வெள்ளிக் கிழமை கிளம்ப நினைத்த... விட, பல மடங்கு, பாதுகாப்பான மன நிலையில் இப்... இருக்கிறாய். சாரி சந்தியா, பேச்சு எங்கேயோ ஆரம்பி... எங்கேயோ போய் விட்டது. என்னுடன் கோவைக்... வருவதில் ஆட்சேபனை இல்லையே..." என்று இர... கும் போதே ராஜீவின் அலைபேசி அழைக்க, எடுக்... யோசித்தான்.

மீண்டும் அழைக்கிறேன் என்று சொல்லி இருக்கு... போது அதற்குள் என்ன அவசரம்? இப்படி பத்து நிமி... திற்கு ஒரு முறை தொந்தரவு செய்வது என்ன பழக்... என்று எரிச்சலோடு, அழைப்பது யார் என்று பார்க்கா... லேயே போனை எடுத்து, "ஹலோ..." என்று கடுமையா... குரலில் சொல்ல எதிர்முனையில் பவித்ரா திகைத்தா...

"ஹலோ... மிஸ்டர் ராஜீவன்..." என்று கேள்விய... நிறுத்தியவளுக்கு ஒரு மாதிரி இருந்தது. என்ன இவ்... வளவு எரிச்சலோடு பேசுகிறான்?



"ஆமா.. நீங்க.."

"நான் பவித்ரா. சாரி, இந்த நேரத்தில் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கணும். நீங்க பிசியா இருக்கீங்க போல..." என்ற குரல் கேட்டதும் மானசீகமாக தன் தலையில் குட்டி கொண்டான்.

"ஹய்யோ நீங்க ஏன் சாரி சொல்றீங்க? எதிர் முனையில் பேசுவது யார் என்று தெரியாமலே கடிந்ததற்கு நான் தான் சாரி சொல்லணும். நானே உங்களிடம் ஒரு முக்கியமான விஷயமா பேசணும் என்று நினைத்துக் கொண்டு இருந்தேன். அதற்குள் நீங்களே கூப்பிட்டுட்டீங்க. என்ன விஷயமா போன் பண்ணினீங்க? நான் என்ன செய்யணும்?" என்று இதமான குரலில் விசாரித்தான்.

"சந்தியாவோடு கொஞ்சம் பேசணும்..."

"ஹேய்! சந்தியாவோட பேசுவதற்கு எதற்கு என் மொபைலில் அழைக்கணும்?" என்று முந்தைய கடினமான வார்த்தையை ஈடு கட்ட மேலும் கேலி பேச இப்போது அவள் மனம் கொஞ்சம் சமப்பட்டது.

"அப்படி இல்லை..."

"சும்மா கேலிக்கு சொன்னேன். சந்தியாவிடம் மொபைல் இருப்பது உங்களுக்குத் தெரியாதா? என்னைத் கூப்பிட்டு இருக்கீங்க?"

"அதற்கு முயற்சி பண்ணினேன். ரிங் போயிட்டே இருந்தது. அதான் உங்களைத் தொந்தரவு பண்ண வேண்டியதாகி விட்டது."

"தொந்தரவு இல்லை பவித்ரா. இவ்வளவு பார்மலா பேசறீங்க? நீங்க எனக்கு மிகப் பெரிய உதவி செய்யப்


Optimized by www.ImageOptimizer.net

பேசறீங்க. நான் உங்களுக்கு காலம் எல்லாம் நன்றிக் கடன் பட்டு இருக்கிறேன். சந்தியா பக்கத்திலேயே இருக்கிறாள் பேசுங்க...'' என்று நீட்ட, புன்னகையோடு வாங்கினாள்.

''என்ன சந்தியா, போன் அடித்தால் எடுக்க மாட்டாயா? போன் வாங்கத் தெரிந்த உனக்கு எடுத்துப் பேசத் தெரியாதா? அதுக்கு ஒரு டியூஷனா எடுக்க முடியும்?'' என்று கேலியாக கேட்டாள் பவித்ரா.

''உன்னோட கேள்வி எல்லாமே தப்பு. முதலில் நான் போன வாங்கலை. அதை வாங்கித் தந்தவங்க அதை எப்படிப் பயன்படுத்தணும் என்று சொல்லித் தராமல் இருப்பாங்களா? போன் பேசத் தெரியும். அது உன்னோ கிச்சனில் இருக்கு. விளக்கம் போதுமா?'' என்று சாமர்த்தியமாக சொன்ன சந்தியாவின் பேச்சில் பவித்ராவுக்கு தலை சுற்றியது.

பேசுவது சந்தியா தானா? எவ்வளவு உற்சாகம்? வேலை கிடைத்த சந்தோஷத்தில் வந்த தன்னம்பிக்கையா? போன் நான் வாங்கலை என்றால் அதை வாங்கிக் கொடுத்தது ராஜீவனா? அதற்கு அவசியம்?

''பவி.. பவித்ரா... போனில் இருக்கியா இல்லையா?'' என்ற சந்தியாவின் குரல் கேட்டு நிகழ்காலத்திற்கு வந்தாள் பவித்ரா.

''நீ இன்னும் வேலையில் சேரவில்லை தானே சந்தியா?''

''இல்லை. வேலை பழக தினமும் கடைக்குப் போய் வருகிறேன்...''

''ஓ! அப்ப சனி, ஞாயிறு கடை இருக்குமே? உன்னால் வர முடியாதா?''



''என்ன விஷயம் என்று நீ சொன்னால்... உனக்காக... வரலாம்...'' என்று சொல்லும் போதே சற்று முன்பு ராஜீவன் அழைத்தது மனதில் ஆடியது.

பவித்ராவும் அழைக்கிறாளே! இவனும் பெற்றோருடன் வீட்டுக்கே வந்து அறிமுகப்படுத்துகிறேன் என்று சொன்னான். ஏற்கனவே ரயில் நிலையத்தில் தான் போன் நம்பர் சொல்லும்போதே ராஜீவ் போனா என்று அவள் கேட்டது நினைவில் இருந்தது. அப்படி என்றால்.. மேலே யோசிக்கப் பயமாக இருந்தது.

''ராஜீவ் கூட நான்கு நாட்களா பேசிட்டே இருக்கிற. என்ன விஷயம் என்று அவர் சொல்லவில்லையா? அவர் இங்கே ஞாயிற்றுக்கிழமை நம் வீட்டுக்கு வரப் போகிறார். அவரோடு நீயும் வா என்று சொல்ல தான் போன் பண்ணினேன். வருகிறாயா?'' என்று பவித்ரா குரலைத் தாழ்த்திக் கேட்ட விதத்தில் சந்தியாவிற்குப் புரிந்தது.

நல்லவேளை வாயைத் திறந்து கன்னா பின்னாவென்று எதையாவது உளறாமல் இருந்தாளே! சில அடி தூரத்தில் ராஜீவன் இருக்கிறான். எதிர்முனையில் பவித்ரா தன் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். தன் வருத்தமோ கண்ணீரோ இருவருக்குமே தெரியக் கூடாது.

''வரேன் பவித்ரா, இப்ப அதைப் பற்றித் தான் பேசிக் கொண்டு இருந்தோம். வெள்ளி இரவு கிளம்பி வருகிறோம்'' என்று முயன்று சாதாரணமான குரலில் சொன்னவளின் மனமோ கண்ணீரில் தத்தளித்தது.

''சென்னை பயணம் உன்னை நிறைய மாற்றி இருக்கு சந்தியா. முன்னாடி எல்லாம் பேசத் திணறுவாய். அது

Optimized by www.ImageOptimizer.net

பயத்தில் வார்த்தைகள் திக்குவது மாதிரி இருக்கு இப்பவும் கம்மியா பேசுகிறாய். ஆனால் இது யோசித் பேசுவது மாதிரி அழகா இருக்கு...'' என்று பவித்ரா பேசு பேச சந்தியாவின் மனம் மேலும் வாடியது.

''தாங்க்ஸ் சார்...'' என்று சொல்லி போனை அவனிட திருப்பிக் கொடுக்கும்போது அவனின் அலைபே மீண்டும் ஒலி எழுப்பி தன் இருப்பை உணர்த்தியது.

இந்த முறை கவனமாக போனைப் பார்த்தவன் அம்ம என்பதை உணர்ந்ததும், ''ஹாய்மா! நானே அழை கிறேன் என்று சொன்னால் பொறுமையாக இருக்க மு யாதா? சரி சொல்லுங்க. உங்களுக்கு என்ன வேண் டும்?'' என்று புன்னகையோடு பேசினான்.

எதிர் முனையில் அவர் சொன்னது சந்தியாவிற்கு தெரியாது. ஆனால் அடுத்து ராஜீவன் சொன்ன பதி அவள் இதயத்தை உலுக்கியது.

''உங்களுக்கு வாக்குக் கொடுத்ததை நான் மாற் வில்லை. நீங்க சொன்ன இடத்திற்கு, சொன்ன நேர திற்கு பெண்ணைப் பார்க்கப் போகலாம். ஆனால் என குப் பிடித்த பெண்ணை தான் நான் திருமணம் செய் கொள்ள முடியும். இந்த நிபந்தனைக்கு நீங்க சம்மதித் தால், கோவைக்கு இந்த வார இறுதியில் வருவதற் எனக்கு ஆட்சேபனை இல்லை.''

''........''

''உங்களுக்குப் பிடிக்க வேண்டும் என்பது அவசியம் தான். ஆனால் உங்களுக்கு பிடிப்பதை விட எனக்குப் பிடிப்பது முக்கியம் என்பதை நீங்க புரிந்து கொள் வேண்டும் ஓகே?'' என்று தீர்மானமாகச் சொல்லி ராஜீவன் போனை வைக்க, அவன் பேசியது புரிந்ததனா



ந்த சந்தோஷமும், அந்த வார்த்தைகளினால் இரண்டு டும்பத்தில் ஏற்படப் போகும் குழப்பத்தை நினைத்துக் கலையும் ஒருங்கே தோன்றியது.

''ராஜீவன் சார்... நான் உங்களிடம் ஒரு முக்கியமான ஷயம் சொல்லணும்...'' என்று தொண்டையைச் செருமி பேச்சை ஆரம்பிக்க, அவன் ''சொல்லுங்க சந்தியா மேடம்'' என்று கேலியாகக் கேட்டான்.

''கொஞ்ச முன்னால் பேசியது உங்க அம்மா என்று நினைக்கிறேன். நீங்க... உங்களோட கல்யாண விஷ த்தில், நீங்க உங்க பெற்றோர் சொல்வதைக் கேட் டல...'' என்று திணறலாக வார்த்தைகளுக்கு அவள் தடுமாற அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

''ம்ம்ம்... சந்தியா, நீ சொல்வதை அப்படியே கேட்க எனக்கு ஆசைதான். ஆனால் உன் கண்கள் சொல்லும் வார்த்தைகளுக்கும், உதடுகள் சொல்லும் வார்த்தை களுக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறதே'' என்று கேலியாக இழுத்தான் ராஜீவன்.

''இந்த மாதிரி எல்லாம் பேசி என்னைத் திசை திருப்ப முயற்சி செய்யாதீங்க. உங்க எதிர்காலம் நல்லா இருக் கணும் என்பதில் உங்க பெற்றோருக்கு இல்லாத அக்கறை வேறு யாருக்கும் இருக்க முடியாது. அதனால் அவங்க சொல்வதை...''

''கண்டிப்பா அவங்க சொல்வதைக் கேட்பேன். ஆனால் அதோடு என் மனசும் என் முடிவுக்கு சரி என்று சொல்லணும். அவங்களை மீறி எதுவும் நடக்காது. இன்னும் ஒரு முக்கியமான விஷயம். கடமை, நன்றிக் கடன், அதிர்ஷ்டம் என்று கண்டதையும் போட்டுக்

குழப்பிக் கொள்ளாமல் நீயும் உன் மனசு சொல்றதைக் கேட்டு நட. ஓகே?''

''நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை முழுவதும் கேட்காமல்...'' என்று அவள் ஏதோ சொல்ல முயல, அவளின் உதட்டில் ஒற்றை விரலை வைத்துப் பேச்சை நிறுத்தினான்.

''நாளைக்கு ட்ரெயினில் போகும்போது பேசலாம் குட்நைட்'' என்று முடித்தவன் மறையும் வரை அவன் போவதைப் பார்த்தவளின் மனதில் கலவையான உணர்வுகள் எழுந்தன. ராஜீவன் மேல் முளைத்த காதல், அதை மறைக்க வேண்டிய கட்டாயத்தினால் வந்த கோபம், ஆசைப்பட்டது எதுவுமே கிடைக்கக் கூடாது என்று பிரம்மன் தன் தலையில் எழுதி வைத்து விட்டானா என்ற விரக்தி, என்று பல உணர்ச்சிகள் அவளை பந்தாடப் பேச்சிழந்து சிலையாக அதே இடத்தில் அசையாமல் நின்றாள் சந்தியா.

## 15

'ரயிலில் போகும்போது உன் விளக்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று பாதிப் பேச்சில் விடை பெற்றுச் சென்ற ராஜீவனை மறுநாள் முழுவதுமே சந்தியாவால் தொடர்பு கொள்ள முடியவில்லை. நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைத்த போதும், முக்கியமான பேச்சு வார்த்தை நடத்தப் போதுமான நேரமும், வேண்டிய தனிமையும் கிடைக்கவில்லை என்பதால், சம்பிரதாயமான பேச்சு வார்த்தைகளிலேயே அவை கடந்து சென்று விட்டன.



அடுத்து வந்த இரண்டு தினங்களில், பவித்ரா அவளைப் பலமுறை அழைத்துப் பேசினாள். அவள் முயன்று ராஜீவன் தொடர்பான பேச்சைத் தவிர்க்க முயன்றாலும் விடாமல், அவனின் வீடு, வேலை, ஆடை அணியும் விதம், பேச்சு, பழக்க வழக்கங்கள், நண்பர்கள், உறவு, வாகன வசதி, அவனுடைய ஒவ்வொரு நாளும் கழியும் விதம், என்று பல விபரங்களைத் துருவித் துருவிக் கேட்ட பவித்ராவிற்கே வியப்பை அளிக்கும் வண்ணம், அவள் கேட்ட கேள்விகளில் பலவற்றிற்கு சந்தியாவிற்கு விடை தெரிந்தும் இருந்தது.

''இதை எல்லாம் என்னிடம் ஏன் கேட்கிறாய் பவி? அவரிடமே கேட்க வேண்டியதுதானே! அவர் நம்பர் தான் உன்னிடம் இருக்கே?'' என்று எதிர் கேள்வி கேட்டும் பார்த்தாள். ஆனால் ''சந்தியா, கிளம்பலாமா?'' என்ற கேள்வியுடன் ராஜீவன் வரும் வரை பவித்ராவின் தொலை பேசி பேச்சுத் தொடர்ந்தது.

''ம்ம்ம், கிளம்பலாம். நீங்க சாப்பிட்டாச்சா?'' என்று விசாரித்தவளைப் பார்த்து ராஜீவ் பதறினான்.

''சாப்பிட்டாச்சாவா? இதென்ன அநியாயம்? மூன்று நாளா நீ தானே இரவு சாப்பாடு போட்டுக் கொண்டு இருக்கிறாய்? ஏன் வழக்கத்தை மாற்ற வேண்டும்?'' என்று அதிர்ச்சியுடன் கேட்க சந்தியா விழித்தாள்.

நேற்று இரவு, ராஜீவன் எங்கேயோ வெளியில் சென்று விட்டு இரவு வர நேரமாகும் என்று பாட்டியிடம் சொல்லி இருந்ததால், அவர் சொல்லி இட்லி ஹாட் பேக்கில் வைத்துக் கொடுத்தது உண்மைதான். அதற்கு முன் தினம், அவனை விருந்திற்கு அழைத்ததால், சாப்பாடு போட்டாள். இரண்டு நாட்களை மூன்றாக்கிய

Optimized by www.ImageOptimizer.net

தோடு, இது வழக்கம் என்ற உரிமையுடன் உணவு கேட்கின்றவனை எப்படித் தவிர்ப்பது?

பவித்ரா இவனை மணந்து கொள்ளும் கனவில் இருக்கின்றாளே! இவன் தன்னை விரும்புவது தெரிந்தால், கோவையில் ஒரு பெரிய பூகம்பமே வெடிக்குமே! அத்தையின் வாயில் விழுந்து அரை படாமல் எப்படித் தப்பிப்பது என்ற எண்ணங்கள் அலைமோத, பதில் சொல்ல முடியாமல் அவள் தடுமாறினாள்.

''ச..ந்..தி...யா! ஒருவேளை சாப்பாடு போட பெரிய ஐந்தாண்டு திட்டம் போடும் ரேஞ்சில் யோசிக்கிறாய், கவலைப்படாதே!'' என்று சொல்ல அவள் மேலும் தடுமாறினாள்.

ரயிலில் ஏறி உரிய இடத்தில் அமர்ந்த பின், ''சந்தியா, இந்த ரயில் கோவை சென்று அடையும் வரை நான் ப்ரீ. நீ ஏதாவது சொல்ல வேண்டும் என்றால் சொல்லலாம்'' என்று பேச்சைத் துவக்கினான்.

''அது... வந்து... உங்க அம்மா...'' என்று பதில் சொல்ல ஆரம்பித்து விட்டாலும் மேலே தொடரும் வழி வகை தெரியவில்லை.

''எங்க அம்மா என்ன சொல்ல வேண்டுமோ சொல் விட்டாங்க. நீங்க என்ன சொல்ல நினைத்தாய் என்பதைச் சொல்லு.''

''உங்க அம்மா உங்களுக்கு கோவையில் பெண் பார்த்து வைத்து இருப்பதாகச் சொன்னீங்க தானே?''

''ஆமா...''

''அந்தப் பெண்ணையே நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க தானே?'' என்றவளின் குரல் தடுமாறியதைச் சிரமப்பட்டு மறைத்தாள்.



''ஆமா...'' என்று எந்தப் பிசிறுமின்றி ராஜீவன் சொல்ல அவள் உறைந்தாள். அவளின் கண்களைப் பார்த்துப் புன்னகை செய்தவன், ''பொண்ணு யார் என்று தெரிய வேண்டாமா?'' என்று விசாரித்தான்.

''தெ... தெரி...யும்...''

''ம்ஹூம்! ஆனால் உனக்கு எப்படித் தெரியும்?''

''பவித்ரா... சொன்னாள்...''

''அவளுக்கு எப்படித் தெரியும்?''

''இதென்ன கேள்வி, கல்யாணப் பொண்ணு என்றால் அவளுக்குத் தெரியாமல் எப்படி இருக்க முடியும்?''

''அதைத் தான் நானும் கேட்கிறேன். கல்யாணப் பொண்ணு தெரிவதற்கு முன்னால் அவளுக்கு எப்படித் தெரியும்...?''

''வாட்?''

''என்ன சந்தியா, கல்யாண பெண் யார் என்று இன்னும் புரியலையா?''

''நீங்க... என்ன... சொல்றீங்க?''

''கொஞ்சம் டியூப் லைட் என்று தெரியும். ஆனால் இவ்வளவு டல்லா இருப்பாய் என்று எதிர்பார்க்கவில்லை...'' என்று அவளை நெருங்கி அமர்ந்து கையைப் பற்றி தன் கரத்தில் வைத்தான்.

''ஐய்யோ.. ரயிலில்...'' என்று பதறியவள் அப்போது தான் அது இருவர் மட்டும் இருந்த கூபே என்பதை உணர்ந்து மேலும் பதறினாள்.

''ஷ்! சந்தியா, எதற்கு இந்தப் பதட்டம்? உன்னை நான் கடித்துத் தின்றுவிட மாட்டேன். என் மேல்

Optimized by www.ImageOptimizer.net

நம்பிக்கை இல்லையா?'' என்று அதட்டலாகச் சொ
ளதும் பதட்டம் கொஞ்சம் குறைந்தாலும் மறையவில்லை

''சந்தியா, என்னைப் பாரு. நான் என்ன சொல்ல
வருகிறேன் என்பது புரியாத அளவிற்கு நீ முட்டா
இல்லை. இது எங்கே, எப்போது, எப்படி நடந்தது என்று
எனக்குத் தெரியவில்லை. என் மனதை உனக்கு எப்படி
புரிய வைப்பது என்றும் தெரியவில்லை'' என்று நிறுத்தி
அவளை கண்களுக்குள் ஊடுருவி, இதமான குரலி
பேச்சைத் தொடர்ந்தான்.

''முதல் பார்வையிலேயே உன்னிடம் தெரிந்த பது
டமா? பஸ் ஸ்டாப்பில், நீ விரக்தியாக அமர்ந்து இருந்த
கோலமா? உன்னுடைய பெற்றோர் இல்லாத சூழ்நிலையா
உன்னுடைய இழப்பில் இருந்து நீ மீண்ட விதமா?
உள்ளதில் திருப்தி காணும் குணமா? எது என்று என
னால் சொல்ல முடியவில்லை. எனக்கு உன்னைப் பிடித்து
இருக்கிறது. நீ என்னுடன் இருந்தால், நான் சந்தோஷமாக
இருப்பேன் என்று தோன்றுகிறது. இதை நான் என்
அம்மாவிடமும் சொல்லி விட்டேன். உனக்கும், என
னுடன் இருந்தால் சந்தோஷமாக இருப்பாய் என்ற எண்
ணம் தோன்றினால், வேறு எதைப் பற்றியும்... நல்ல
கவனி... யாரைப் பற்றியும் கவலைப் படாமல் சம்மதம்
சொல்லு. கூடிய விரைவில், நம் திருமணம் நடக்கும்...''
என்று முடித்தான்.

அதுவரை, அவனின் குரலிலும், தொடுகையிலும்
ஏற்பட்ட லேசான மயக்கத்தில் இருந்த சந்தியாவை,
அவனின் உறுதியான குரலும், திருமணம் என்ற வார்
தையும் உலுக்கி சுய நினைவுக்கு வரச் செய்தது.



''ராஜீவ்! உங்களுக்குக் கஷ்டம் என்றால் என்ன என்றே தெரியாது. உங்க வாழ்க்கையில் எதற்காகவும் யாரிடமும் கையேந்தி நிற்க வேண்டிய ஒரு சூழ்நிலை உங்களுக்கு வந்து இருக்காது. அதனால்தான் யாரைப் பற்றியும் கவலைப் படாதே என்று சொல்ல வருகிறது. என் நிலை அப்படி இல்லை. ஒவ்வொரு வேளைச் சாப்பாட்டிற்கும் அந்த வீட்டில் கை கட்டி நின்று இருக்கிறேன்...''

''கம் ஆன் சந்தியா, இந்த மாதிரி நன்றிக் கடன், கடமை, என்று போட்டு உன்னை நீயே குழப்பிக் கொள்ளாதே ப்ளீஸ். அவர்களை இத்தனை ஆண்டுகளாக உனக்குப் போட்ட சாப்பாட்டிற்கு மட்டும் இல்லை, நீ தங்கி இருந்ததற்கும் சேர்த்து வேண்டுமானால் கணக்குப் போட்டு உங்க அத்தையிடம் உனக்காக நான் பணம் கொடுக்கிறேன். போதுமா?'' என்று அவன் சொல்லி முடித்ததும் வெகுண்டெழுந்தாள் சந்தியா. எங்கிருந்து அவ்வளவு ஆவேசம் வந்ததோ தெரியவில்லை.

''எங்க அத்தை எனக்கு செய்த எல்லா வேலைகளுக்கும் உங்களால் காசு கணக்குப் போட முடியாது ராஜீவன் சார். விலை மதிக்க முடியாத சில செயல்களும் இருக்கும். நீங்க மதுரம் பாட்டி வீட்டிற்கு என்னைத் தங்க வைத்ததற்கு என்ன விலை கொடுக்க முடியும்? பாட்டியைப் பார்த்துப் படித்து, தன்னம்பிக்கையோடு நிமிர்ந்து நின்று உங்களை இப்போது கேள்வி கேட்கும் அளவுக்கு வளர்ந்து விட்ட இந்த தைரியத்திற்கு நான் என்ன விலை கொடுக்க முடியும்?''

''சந்தியா, நல்லாப் பேசுகிறாய். கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனால் என்ன சொல்ல வருகிறாய் என்று தான் புரியவில்லை...''

Optimized by www.ImageOptimizer.net

"இதில் புரியாமல் போக என்ன இருக்கிறது? எங்க அப்பா இறந்த பின், நானும் எங்க அம்மாவும் அனாதையாக நின்ற போது ஒதுங்க இடம் கொடுத்ததற்கு எந்த வகையில் கணக்குப் போட முடியும்? திட்டினாலும், முறைத்தாலும், வயிறு வாடாமல் உணவு அளித்ததற்கு என்ன கணக்குப் போட முடியும்? கோவையில் இருந்து கிளம்பும்போது மனசு கஷ்டமாக இருந்தால் இதைப் படி. நான் அருகே இருப்பதைப் போல இருக்கும் என்று இந்தக் கடிதத்தைக் கொடுத்தாளே, அவளுடைய குணத்திற்கு என்ன விலை கொடுப்பது? எல்லா உணர்வுகளையும் காசு கணக்கில் நேர் செய்ய முடியாது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்க" என்று பொரிந்து தள்ள ராஜீவனின் முகம் மலர்ந்து விகசித்தது.

"உன்னுடைய வாதத்தை நான் அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். நான் சொல்ல வருவதும் அதே வாதம் தான். எல்லா உணர்வுகளையும் காசு கணக்கில் நேர் செய்ய முடியாது. உன் அத்தையிடமும், பவித்ராவிடமும் நீ பட்ட நன்றிக் கடனை நேர் செய்கிறேன் என்ற போர்வையில் உன் காதலை அழித்து விடாதே என்று தான்..."

"நான் உங்களை காதலிக்கிறேன் என்று எப்போது சொன்னேன்?"

"வாயைத் திறந்து வார்த்தைகளால் சொல்லவில்லை என்பது உண்மைதான். ஆனால்..."

"ஆனாவும் இல்லை. ஆவன்னாவும் இல்லை ராஜீவன் சார். எனக்கு உங்கள் மேல் நிறைய நன்றி உணர்வு இருக்கு. தோழமை இருக்கு. ஆனால் அதற்காக நான் உங்களைத் திருமணம் செய்து கொள்ள முடியாது சார்..."



"பவித்ராவுக்கு இனிமேல் புதிதாக ஒருவன் பிறக்கப் போவதில்லை சந்தியா. என்னை விட நல்லவனா, அன்பானவனா, வசதியானவனா, முக்கியமா அவளுக்குப் பிடித்தமானவனா, ஒரு நல்ல மாப்பிள்ளை அவளுக்கு நாமே கல்யாணம் நடத்தி வைப்போம் சந்தியா. பவித்ராவிற்காக நீ..."

"பவித்ராவிற்காக என்று நான் இதைச் சொல்லவில்லை ராஜீவன் சார். எனக்காக தான் நான் யோசித்துச் சொல்கிறேன். பார்த்து நாலு நாளில் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்த நீங்கள், இன்னொரு நாலு நாளில் இவள் திருமண வாழ்க்கைக்குச் சரிப்பட மாட்டாள் என்ற முடிவிற்கு வந்து விட்டால் நான் என்ன செய்வது?"

"டோண்ட் பீ ஸ்டுப்பிட் சந்தியா. முன்பே தகவல் சொல்லி, எல்லா விதத்திலும் அவர்கள் தயாராக இருக்க வைத்து, சம்பிரதாயத்திற்கு நடக்கும் ஒரு பெண் பார்க்கும் படலத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து இவள் தன்னுடன் திருமண வாழ்க்கை நடத்த ஏதுவானவள் என்று முடிவு செய்யப் பத்து நிமிடம் போதும் என்றால், ஒரு இக்கட்டான சூழ்நிலையில், உன்னை அருகில் இருந்து, முழுசாய் ஒரு வாரம், இருபத்து நாலு மணி நேரமும் கண்காணித்த பின்னர், என்னால் நீ எனக்குப் பொருத்தமான துணை என்று முடிவு செய்ய முடியாதா?"


"இந்த வாதம் வேண்டாம் சார். நீங்க அனுபவம் உள்ளவங்க. வசதியானவங்க. உங்களால் நினைத்த உடனே முடிவெடுக்க முடியும். ஆனால் என்னால் அத்தையை மீறி என் திருமணம் பற்றி முடிவெடுக்க முடியாது..."

Optimized by www.ImageOptimizer.net

"ஓகே சந்தியா. உங்க அத்தை சொன்னால் போதும் தானே? இந்த முடிவில் மாற்றம் இல்லையே?" என்று ராஜீவன் நிதானமாக விசாரிக்க அவள் விழித்தாள்.

"உங்க அத்தை ஒரு முடிவெடுக்கும் போது, நல பெண்ணின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் இருப் பாங்க என்ற எண்ணம் உனக்கு இருக்கா?" என்று கேட்க அவளின் தலை மறுப்பாக அசைந்தது.

"அப்புறம் என்ன? என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ என்று உங்க அத்தையையே உன்னிடம் சொல்ல வைக் கிறேன். இப்போதைக்குக் கண்டதையும் நினைத்து மனசைக் குழப்பிக் கொள்ளாமல் நிம்மதியாத் தூங்கு குட்நைட்" என்று முடித்தவன், மேல் பெர்த்தில் ஏறி படுத்து சில நிமிடங்களில் தூங்கி விட்டாலும், ரயில் பயணத்தில் கழிந்த அந்த இரவு சந்தியாவிற்கு தூக்க மில்லா இரவாக மாறிப் போனது.



# 16

விளக்கை அணைத்துப் படுத்த பின்பும், இரவு நேரத்து ரயில் பயணம் முழுவதுமே, பலவித சிந்தனை களில் மூழ்கி தூக்கம் வராமல் வெகு நேரம் விழித்து இருந்த சந்தியா அதிகாலை நேரத்தில் ஆழ்ந்த தூக்கத் தில் மூழ்கி விட்டாள். காலை எழுந்த ராஜீவன் முகம் கழுவி, வந்து, அவள் படுத்து இருந்த பெர்த்தில் ஓரமாக அமர்ந்த பின்பும் அவளிடம் அசைவு இல்லை என்பதை திரும்பிப் பார்த்தான்.



...காலை சுருக்கி, கைகளை மார்புக்குக் குறுக்காகக் ...ஒருக்களித்துப் படுத்து, இருந்த அவளை ரசனை ...றி பார்த்தான். அந்த அதிகாலை நேரத்தில், தூரத் ...தெரிந்த அரை குறை மங்கலான வெளிச்சத்தில், ...ஒப்பனையும் இன்றி கண் மூடி துயில் கொண்டு ...ந்தவள் ஒரு அழகான ஓவியம் போல இருந்தாள். ...என்பது பார்க்கும் பொருளில் இல்லை, பார்க்கும் ...னில் இருக்கிறது என்ற வாசகம் நினைவு வர ...மேலும் விரிந்தது.

...னும் சில நிமிடங்களில் கோவை ரயில் நிலையம் ...விடும் என்ற உணர்வு உந்த, "சந்தியா..." என்று ...கொடுத்து எழுப்ப முயன்றான். துயில் கலைந்தவள் ...களை நீட்டி எழ முயன்றபோது கால் ராஜீவனின் ...டலில் பட திடுக்கிட்டு விழித்தாள்.

"ஸ்டேஷன் வந்துடுச்சா? ரொம்ப நேரம் தூங்கிட் ...னா?" என்றபடியே எழுந்தவளின் அசைவுகளில் ...ரம் இருந்தது.

"தூங்குவது கிரிமினல் குற்றம் இல்லை சந்தியா. ஸ்டேஷன் வந்தே இருந்தாலுமே தப்பில்லை. கோவை ...ச் ஸ்டேஷன்..."

"இல்லை. இது மேட்டுப் பாளையம் வரை போகும்" என்று வந்த சந்தியாவின் பதிலை பார்த்து, "வாவ்! ...ப்பது கூட இவ்வளவு சந்தோஷமா இருக்கும் என்று ...வரை நான் உணர்ந்ததில்லை சந்தியா. போய் முகம் ...விட்டு வா. அஞ்சு நிமிஷத்தில் ஸ்டேஷன் வந்து ...டும்" என்று சொன்னான் ராஜீவன்.

முகம் கழுவி வந்தவளின் முகம் தீவிர சிந்தனையில் இருக்க அவன் புன்னகைத்தான். அவளின் மௌனம் நீள,

''சந்தியா... என்ன ஆச்சு?'' என்று அவன் மென்மையான குரலில் நிமிர்ந்தவளின் கண்களில் அச்சம் இருந்தது.

''இல்லை... பவித்ராவுக்கு... நாம்... உங்க விஷயம் நானே... எப்படி... சொல்ல வேண்டாமா?'' என்று துண்டு துண்டாக வந்து விழுந்த வார்த்தைகள் அவளின் மனக் குழப்பத்தை விளக்கிச் சொன்னது.

''பவித்ராவிடம் நீ தனியா ஒன்றும் சொல்ல வேண்டாம். கவலைப் படாமல் இரு. நானே அவளிடம் பக்குவமா பேசிக் கொள்கிறேன். எனக்கு துணைக்கு ஒரு வி.ஐ.பி.யும் வைத்து இருக்கிறேன். அவங்க சொன்னால் பவித்ரா மறுத்தே பேச முடியாது. நீ கவலைப் படாதே.''

''ஒரு பெண்ணைப் பார்க்க வருவதாக அவங்க வீட்டில் தகவல் கொடுத்துவிட்டு, அந்த பெண்ணிடமே இன்னொரு பெண் வேண்டும் என்று சொல்ல வெட்கமாக கூசாதா?''

''ஹேய்! என்ன நீ பாட்டுக்குப் பேசிட்டே போறே? நான் பவித்ராவிடம் என்ன பேசப் போகிறேன் என்று உனக்குத் தெரியுமா?''

''என்ன வார்த்தைகள் என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால் என்ன விஷயம் என்று தெரியும் தானே?''

''இல்லை... தெரியாது...''

''எனக்குத் தெரியாத விஷயம் என்ன பேசப் போறீங்க?'' என்றவளின் கண்ணில் ஆச்சரியமும் குழப்பமும் போட்டி போட்டது.

''உனக்கு மட்டுமில்லை. உன்னோட பவித்ராவுக்கும் தெரியாத விஷயம் பேசப் போகிறேன். அது என்ன என்று நாளைக்குப் பார். உங்க அத்தை உன்னைப் பார்த்து



...னைக் கல்யாணம் பண்ணிக்கிறாயா என்று ...கேட்டால், அதற்கு மட்டும் தலையை ஆட்ட ரெடியா ...ரு வா. உன்னை இறக்கி விட்டு நான் ஹோட்டலுக் ...கு போறேன். பயப்படாமல் தைரியமா இரு. என்ன ...சரியா?'' என்று அவளின் கை பற்றி நடந்தவன் மெல ...ன குரலில் தைரியமூட்ட, அவளின் தயக்கமும் குழப் ...பமும் மெல்ல மெல்ல விடை பெற்றது.

...ரயில் நிலையத்தை விட்டு வெளியே வரும்போது, ''...எங்க அம்மா... அதோ வந்துட்டாங்க...'' என்று தன் மற்றொரு கரத்தை நீட்டிக் காட்ட அவள் பார்வை அவனின் விரலைத் தொடர்ந்தது.

அந்த அதிகாலை நேரத்திலேயே குளித்து முடித்து, தலையைத் தளரக் கொண்டையிட்டு, அதில் மல்லிகைச் சரம் சூட்டி, நெற்றியிலும் உச்சியிலும் குங்குமம் வைத்து, தையல் இலையில் கட்டிய ஒரு சின்ன பொட்டலத்துடன் வந்தவரைப் பார்க்க விழிகள் விரிந்தது.

''ஹாய்ம்மா! அப்பா வரலை? இது சந்தியா...'' என்று ஒரு வரவேற்பு, ஒரு விசாரணை, ஒரு அறிமுகம் என்று வினாடிக்குள் நடத்தி முடித்த ராஜீவனை விமலா கண்டு கொள்ளவே இல்லை.

''சந்தியா, என்னைப் பற்றி ஏதாவது சொல்லி இருக்கானா இல்லையா? நான் விமலா. இவனைப் பெற்றவள்'' என்று விமலா தன்னைப் பற்றிய அறிமுகம் செய்யும் போதே அனிச்சையாக குனிந்து அவரின் கால்களைத் தொட்டு கண்ணில் ஒற்றிய வினாடியில், கொஞ்சநஞ்சம் ஒட்டிக் கொண்டு இருந்த சந்தேகமும் விடை பெற்றுச் சென்றது.

"ஹேய் பொண்ணே... என்ன பண்ணுற? இப்படி நடு ரோட்டில்..." என்று பதறினாலும், "நல்லா இரு" என்று வாழ்த்தவும் மறக்கவில்லை.

"நல்லவங்களை நமஸ்காரம் பண்ணிக்க ரோடு என்ன? வீடு என்னம்மா? மனசு நொந்து இருந்தப்ப, நம்பிக்கை கொடுத்து என்னை தலை நிமிர வச்சவர். அவரோட அம்மா நீங்க. உங்களை..." என்றவளை தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டார் விமலா.

"அது கிடைக்கலை. இது நடக்கலை என்று எதையும் நினைத்து வருத்தப் படாதே. நமக்கு என்ன வேண்டும் என்று நம்மை விட நம்மைப் படைத்த கடவுளுக்கு நல்லாத் தெரியும். பொன் வைக்கும் இடத்தில் பூ வைப்போம் என்று வாங்கினேன். மனசு போல வாழ்க்கை அமையட்டும்" என்று வாழ்த்தி கையில் இருந்த பூவை நீட்டினார்.

"பெரியவங்க நீங்க பூ கொடுத்துட்டீங்க. உங்களுக்குக் கொடுக்க என்னிடம்..." என்று ஒரு வினாடி தடுமாறியவள், கைப்பையைத் திறந்து அதில் இருந்த ஒரு சாக்லேட் பாரை எடுத்து நீட்டி, "இதை வச்சுக்கோங்கம்மா. உங்க வாழ்க்கையில் நீங்க ஆசைப்படுவது எல்லாம் நடக்கட்டும்" என்று சொல்ல, அவர் புன்னகை விரிந்தது.

"இந்தப் பழக்கம் உனக்கும் வந்தாச்சா? இவங்க அப்பாவுக்கு சுகர் இருக்கு என்று என் பையில் எப்போதும் நான் சாக்லேட் வைத்து இருப்பேன். அதைப் பார்த்து இவன் பழகினான். இப்ப நீயும் பழகியாச்சா? நல்லது..." என்று அனிச்சையாக சொன்னவரின் மனம் சந்தியாவின் புறம் ஏற்கனவே சாய்ந்து விட்டதை ராஜீவனால் உணர முடிந்தது.



"விட்டால் விடிய விடிய ரோட்டிலேயே நின்னு பேசுவீங்க போல? அவள் வீட்டுக்குப் போக வேண்டாமா? நான் அப்பாவைப் பார்க்க வேண்டாமா? வாங்கம்மா போயிட்டே பேசலாம்..." என்று நினைவூட்டிய பின்பே அவர்கள் இருவருக்கும் மூன்றாவதாக ஒரு ஆள் இருப்பதே நினைவு வந்தது. "காரிலேயே சந்தியாவைக் கொண்டு போய் விட்டுட்டுப் போகலாமா?" என்று விமலா வாய் திறக்கும் முன்பே மறுத்தாள் சந்தியா.

"இல்லைம்மா. எதிர்பாராத நேரத்தில் உங்களைப் பார்த்தால் எங்க அத்தை என்ன சொல்வாங்களோ? நானே போய்க்கறேன். வர்றேன்ம்மா. வரேன் சார்" என்று வேகமாக சொல்லிவிட்டு பதிலை எதிர்பாராமல் நடந்து போக இருவரும் திகைத்துப் போய் நின்றனர்.

"சந்தியா... நில்லு... நான் சொல்வதைக் கேளு..." என்ற விமலாவின் வார்த்தைகள் அவளை எட்டவே இல்லை.

"அவள் அப்படித்தான். தான் நேசிக்கும் மனுஷங்களுக்கு எந்தக் குறைபாடும் வந்து விடக்கூடாது என்று நினைப்பவள். வாங்க நாம் போகலாம்" என்று அவரின் தோளில் கை போட்டு நகர்த்தினான்.

"அப்பாவிடம் சந்தியா மேட்டர் சொல்லியாச்சா?"

"என்னடா குண்டைத் தூக்கிப் போடுறே? நீ தானே அப்பாவிடம் சொல்வதாகச் சொன்னாய்?"

"அடடா! இதுக்கு ஏன் அலறுறீங்க? நானே சொல்லிக்கிறேன். அப்பாவிடம் பேசுவதற்கு முன்னால் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்டுடுங்க. அப்பாவிடம் பேசும்போது, நாம் இருவரும் ஒரே கட்சியில் இருக்கணும். அது ரொம்ப முக்கியம்..."

''ஆமா! உங்க அப்பாவுக்கு நீங்க ரொம்ப பயப்படு மாதிரி தான்...''

''அப்பாவிடம் பயம் எதுக்கு? அவர் இதுவரை என் விருப்பத்தைக் கேட்காமல் எந்த வேலையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்ததே இல்லை. கல்யாணம் என்ற முக்கியமான விஷயத்தில் ஒரு முடிவை அப்பாவின் மன நிலையை அனுசரிக்காமல் நானாக எடுக்க முடி யுமா? அதுக்கு பேர் பயமா? அது அப்பாவிடம் நான் வைத்து இருக்கும் மரியாதை என்று வைத்துக் கொள் லாம்...''

''ஓஹோ! அம்மா விருப்பத்தைப் பற்றி உனக்குக் கவலை இல்லை அப்படித்தானே? உங்க அப்பா சம்மதம் தந்தால் போதுமா?''

''ஹையயோ அம்மா. எதுக்கு இப்படி விதண்டா வாதம் பண்றீங்க? உங்களுக்கு என்னோட நல்லது மட்டும் போதும். சந்தியாவோ பவித்ராவோ அப்புறம் தான் வருவாங்க. ஆனால் அப்பா அப்படி இல்லை. எல்லோருக்கும் நல்லதா என்று பார்த்து முடிவெடுப்பா. அதனால் அவரிடம் சம்மதம் வாங்குவது கஷ்டம் என்று சொன்னேன்...'' என்று ராஜீவன் எடை போட்டது அப்படியே நடந்தது.

''ஏன்டா! நீ இந்தப் பெண்ணைப் பார்த்து ஒரு வார கூட ஆகவில்லை. ஆனால் இரண்டு மாதம் முன்பு உன் போட்டோவை உன் அம்மா அந்த வீட்டுக்கு அனுப் பவித்ராவை பெண் கேட்டு சம்பந்தம் பேசி இருக்கிறா. இப்போது பேச்சை மாற்றினால், அந்த பவித்ராவோ அவள் அம்மாவோ அம்மாவைப் பற்றி என்ன நினை



...க்கள் என்று ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த்தாயா? ...மா எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இந்த பொண்ணு ...வேண்டாம். அந்த பொண்ண கொடு என்று கேட்க ...த்தன பொம்மலாட்டமா? நான்சென்ஸ்...'' என்று ...ட்ட இருவருக்கும் ஒரு வினாடி வாய் அடைத்துப் போனது.

''இல்லைப்பா. நானே அந்தப் பெண்ணிடம் பேசி...''

''என்னடா பேசுவ? என்ன பேசுவ என்று கேட் ...றேன்? உன்னை எனக்குப் பிடிக்கலை. உன் மாமா பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறேன் என்று அனுமதி கேட்பாயா? அந்த பெண்ணுக்கு ஒரு ...னசு. அதில் ஒரு விருப்பம் எதுவும் இருக்காதா? இடியட் பேசறான் பாரு. எல்லாம் நீ கொடுக்கிற செல்லம்...'' என்று மகனை பாய்ந்து கடித்தவர், மனைவியையும் ...டவில்லை.

''நீங்க கேட்கும் எல்லா கேள்வியையும் நான் ஏற்கனவே அவனைக் கேட்டு அவன் பதிலும் சொல்லி விட்டான். அவன் என்ன சொல்ல வருகிறான் என்று கொஞ்சம் முழுசா தான் கேளுங்களேன். அந்தப் பெண் ணுக்கு ஏற்கனவே வேறே ஒரு மாப்பிள்ளை...''

''என்ன உளறல் இது? ஆப்பிள் இல்லை என்றால் ஆரஞ்சு வச்சுக்கோ என்று அந்த பெண்ணிடம் வேறே மாப்பிள்ளை பார்த்து அம்மாவும் பையனும் கொடுக்கப் போறீங்களா?''

''எனக்கு ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விருப்பம் இல்லை என்று சொல்ல, அதே மாதிரி இன்னாரை பண்ணிக் கொள்ளலாம் என்று முடிவு

Optimized by www.ImageOptimizer.net

பண்ணை. ஒரு தனி மனிதனா உரிமை இருக்கு. அ
பெற்றோர்களின் சம்மதத்துடன் நடக்க வேண்டு
என்பதிலும் எனக்கு மாற்றுக் கருத்து இல்ல
ஆனால்...''

''இந்த மாதிரிப் பேச்செல்லாம் மேடையில் கே
நல்லா இருக்கும். குடும்பத்துக்கு ஒத்து வராது. நீ என்
சொன்னாலும் உன் பேச்சைக் கேட்க நான் தயா
இல்லை...''

''என்னப்பா இது? நீங்களா இப்படிப் பேசுறது? எ
அப்பா ரொம்ப லாஜிக்கலா யோசித்து தீர்க்கமா மு
எடுப்பார் என்று இந்த நிமிஷம் வரை ரொம்
பெருமையா நினைத்துக் கொண்டு இருந்தேன். ஆனா
நீங்க என்னமோ, எல்லா பெற்றோர்கள் மாதிரியும் கா
என்று சொன்னால் கேட்ட வார்த்தை மாதிரி ட்ரீட் பண்
வீங்க என்று நான் சத்தியமா எதிர்பார்க்கவே இ
லைப்பா...''

''நான் காதலுக்கு எதிரி இல்லை. இந்தப் பெண்ணை
பற்றி நீ முன்பே சொல்லி இருந்தாலோ, அல்லது இ
பெண் அதே வீட்டில், அவர்களின் கண்காணிப்பி
இல்லாமல் இருந்து இருந்தாலோ, நீ சொன்னதை ந
கேட்டு இருப்பேன். ஆனால் ஏற்கனவே பேசின பேச்
மீறவோ மாற்றவோ நான் தயாரா இல்லை. நாளைக்
நாம் அந்த வீட்டுக்குப் போறோம். தாம்பூலத் தட்
மாற்றிக் கொள்கிறோம். அவ்வளவு தான்...'' என்று ம
கண்டன் கறாராய் முடித்துவிட்டுச் செல்ல, இருவரு
திகைத்து நின்றனர்.



# 17

மணிகண்டன் மறுநாள் பவித்ராவின் வீட்டுக்குச்
சென்று நிச்சயதார்த்தம் முடிக்க வேண்டும் என்று
சொல்லி விட்டு அறையை விட்டு வெளியேற, விமலா
வும் ராஜீவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்னடா அப்பா இப்படிச் சொல்லிட்டாரே? இப்ப
என்ன பண்ணப் போறே?'' என்று குழப்பத்துடன் கேட்
டார் விமலா.

''என்ன பண்ணப் போறேனா? நீங்கதான் பண்ணப்
போறீங்க...''

''அடப் பாவி! என்னடா இப்படிச் சொல்ற? முந்தா
நாள் ராத்திரி எட்டு மணிக்கு நீ சந்தியாவைப் பிடிச்சு
இருக்கு என்று கதையை ஆரம்பிச்ச போதே சொன்னே
னேடா!''

''அதெல்லாம் எனக்கு ஞாபகம் இல்லை. நீங்க கொடுத்த
தைரியத்தில் தான் நான் சென்னையில் இருந்து கோவைக்
குக் கிளம்பி வந்தேன் என்று காலில் விழப் போறேன்...''

''நீ காலில் விழுந்தால் உன்னை விட்டுடுவாரா?''

''அவன் சின்ன பையன். அனுபவம் இல்லாதவன்.
உனக்கு எங்கே போச்சு புத்தி என்று கோபம் திசை
மாறிடும் இல்லையா?''

''இதுதான் நாம் ஒரே கூட்டணியில் இருக்கும்
அழகா? ஒழுங்கா காரியம் முடிக்க என்ன செய்யணும்

என்று யோசி. என்னை மாட்டி விடுறதுக்கு அப்புறம் திட்டம் போடலாம்...''

''இப்பதான் நீங்க பொறுப்புள்ள அம்மாவா பேசறீங்க. உங்க வீட்டுக்காரரிடம் போய், சில கேள்விகள் கேளுங்க...''

''என்ன கேள்வி கேட்க?''

''உங்க மூளையை பெங்களூரில் கழட்டி வச்சுட்டு வந்துட்டீங்களா? அவர் கடைசியா ஒரு பல்டி அடிச்சுட்டுப் போனாரே? அது நியாயமா என்று ஆரம்பியுங்க. இதெல்லாமா நான் சொல்லித் தாணும்?''

''அப்புறம்...''

''பொண்ணு பார்க்கலாம். அவனுக்குப் பிடிச்சா மேற் கொண்டு பேசலாம் என்று சொல்லித் தானே அவனை இங்கே வரவழைச்சோம். இப்படி நாம் பேச்சு மாறலாமா என்று கேளுங்க...''

''அப்புறம்...''

''பவித்ராவை பிடிக்கலை என்ற செய்தியை மட்டும் ராஜீவ் இப்ப சொல்லி இருந்தால் என்ன செய்வீங்க என்று கேளுங்க...''

''அப்புறம்...''

''ம்ம்ம்... எல்லாத்துக்கும் மேலே சந்தியா அந்த வீட்டில் இல்லாமல் இருந்து இருந்தால் ஒத்துக் கொண்டு தானே இருப்பீங்க என்று கடைசியா மடக்குங்க. அதோட உங்களுக்கு மூளை என்று ஒன்று ஏதாவது இருந்தால் அதையும் பயன்படுத்துங்க'' என்ற ராஜீவனை முறைத்தா.

''இதெல்லாம் கேட்க நல்லா இருக்கு ராஜீவ். ஆனால் குடும்பத்துல லாஜிக் பேச முடியாது. போக, அப்பா



சொல்றதுல ஒரு விஷயம் மறுக்க முடியாதுடா. பவித்ரா வோட மனநிலை என்று நீ சொல்வதை வச்சு நாங்க ஒரு முடிவுக்கு வர முடியாது ராஜீவ்...'' என்று விமலா கேள்வியாக நிறுத்த அவன் திகைப்புடன் பார்த்தான்.

''ப்ச்! இப்ப என்னை என்னதான்மா செய்யச் சொல் றீங்க?''

''அப்படிக் கேளு. துரியோதனன் சபையில் ஆடை இழுக்கப் படும்போது, ஒரு கையால் தன் ஆடையைப் பிடித்துக் கொண்டு, ஒரு கையை மட்டும் உயர்த்தி, கிருஷ்ணன் உதவி பண்ணனும் என்று திரௌபதி எதிர்பார்த்தபோது, வரலை. நீயே அபயம் என்று இரண்டு கையையும் உயர்த்தியபோது தான் கிருஷ்ணன் துணியை வளரச் செய்தார். அது மாதிரி, அம்மா நீதான் செய்யணும் என்று சரணாகதி அடைந்தால் மேற்கொண்டு என்ன செய்யணும் என்று பார்ப்பேன். அதை விட்டுட்டு, தான் பார்த்துப்பேன். நான் சமாளிப்பேன் என்று வீரம் பேசினால் நான் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கத்தான் முடியும்...''

''அம்மா நீங்கதான் செய்யணும்...'' என்று உடனே சாஷ்டாங்கமாக காலில் விழுந்தவனைப் பார்த்து புன் னகை செய்தார்.

''யாம் இருக்க பயமேன்...!'' என்று அபயகரம் காட்டி, புன்னகை செய்ய, கொஞ்சம் தயக்கம், கொஞ்சம் குழப்பம், கொஞ்சம் நம்பிக்கை, என்று மூன்றையும் கலந்த ஒரு கலவையான உணர்வுடன் அம்மாவிடம் தலை அசைத்து விடை பெற்று அருகே தனக்கென இருந்த தனியறைக்குச் சென்றான் ராஜீவன்.

* * *

Optimized by www.ImageOptimizer.net

ராஜீவன் தன் தாய் என்று அறிமுகப்படுத்திய விமலாவிடம், இருந்து விடைபெற்ற சந்தியா ராஜீவனின் முகத்தை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. விடு டென்று தோளில் மாட்டிய பையுடன், வேகமாக வந்தவள் நடக்கும் திசையைக் கூட அறியாமல் நடந் தாள்.

''காலங்கார்த்தால, இப்படி வண்டியில் வந்து விழ நான் தான் கிடைச்சேனா? கொஞ்சம் கண்ணைத் திறந்து ரோட்டைப் பார்த்து நல்ல படியா வீடு போய் சேரு அம்மணி'' என்று ஒரு ஆட்டோக்காரர் சொல்லிய பின் னரே சுய நினைவு வந்து இருக்கும் இடத்தை ஆராய் தாள்.

நல்லவேளை, தன் அத்தை வீட்டிற்குப் போகும் வழி தான். ஆனால் ரயில் நிலையத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரமாவது நடந்து வந்ததைக்கூட அவ உணரவே இல்லை. மிச்சம் இருந்த இருநூறு மீட்ட தூரத்தைக் கடக்க மலைப்பாக இருந்தது. அதற்கு காரணங்கள் இருந்தது.

முதலாவதாக அவள் வீட்டை விட்டுப் போனதே அத்தைக்குப் பிடிக்கவில்லை. அடுத்து, போன காரியம் நடக்கவில்லை. காரியம் நடக்கவில்லை என்று திரும்பி வந்து காலில் விழவும் விழுந்து இருந்தால் அவளை குறை சொல்லவும் குத்திக் காட்டவும் சந்தர்ப்பம் கிடைத்து அவரின் ஈகோ சாந்தி அடைந்து இருக்கும்.

அதற்கும் வழி இல்லாமல் அவளாக ஒரு வேலை தேடிக் கொண்டாள். அதற்குத் துணையாக இருந்தது தன் மகளைத் திருமணம் செய்ய பேசி முடித்த மாப்பிள்ளை அவன் தன்னை மணந்து கொள்ள அவரிடமே அனும



கேட்டால், அவரின் மனம் எப்படிக் கொதிக்கும்? அவரை என்ன சொல்லிச் சமாதானப் படுத்துவாள்?

கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டு காலம், அவருக்குப் பிடித்ததோ இல்லையோ, அவர் தனக்கு உணவளித்து, தங்கும் இடம் கொடுத்து, காப்பாற்றி இருக்கிறார். தனக்கு உயிர் போகும் அவஸ்தையைக் கொடுத்தாலும் கூட அதைப் பொறுத்துக் கொள்ளலாமே தவிர, அவரின் மனம் வாடும் ஒரு செயலைச் செய்ய அவளால் முடியாது. அது நிச்சயம். பவித்ராவிற்கு எதிராக அவளால் ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போட முடியாது என்ற உறுதியை எடுத்த பின்னரே, அந்த வீட்டிற்குள் அடி எடுத்து வைத்தாள்.

''போதும்மா அவளை கரிச்சுக் கொட்டினது. அவளுக்கு நம்மளை விட்டால் வேறே யார் இருக்கா? அவளுக்கு ரெண்டு வேளை சாப்பாடு போடுவதில் தான் உங்க சொத்தே அழிந்து போகப் போற மாதிரி பில்ட் அப் கொடுக் காதீங்க'' என்று வீட்டுக்குள் அடி எடுத்து வைக்கும் போதே, பவித்ராவின் அதட்டல் குரல் ஓங்கி ஒலித்தது.

''ஆமா! நீ சொல்றதை எல்லாம் நான் செய்றேன். ஆனால் நான் சொல்றது ஒண்ணைக் கூட நீ செஞ்சிடாத...''

''நியாயமா இருந்தால் தான் நான் எதையும் செய்வேன்... அம்மா சொல்றாங்களே என்பதற்காக எதையும் என்னால் செய்ய முடியாது.''

''எதுடீ நியாயம் இல்லாதது? பெற்ற பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க ஒரு தாய் எண்ணுவது நியாயம் இல்லாத செயலா?'' என்று மேலும் ஆத்திரமாகக் கேட்கும்போதே அவரின் பார்வை வாசலில் திகைப் புடன் நின்று இருந்த சந்தியாவின் மேல் பதிந்தது.

Optimized by www.ImageOptimizer.net

''வாடியம்மா மகராசி, உனக்காகத் தான் இவ்வளவு நேரமா வாதாடிக்கிட்டு இருந்தாள். அவளுக்கு ஒரு நல்லது என்று உன் நகையைக் கேட்டதும், 'துணைடக் காணோம் துணியைக் காணோம்' என்று ஓடிப் போனவள் திரும்பி வந்துட்டியா? அவள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று உன் சொத்தை எல்லாம் வாரி வளைச்சு எடுத்துப் போனவள், கொண்டு போன காசை தெருவில் போன யாருக்கோ தாரை வார்த்துவிட்டாய். இன்னும் இங்கே இருந்து என்ன அள்ளிட்டுப் போக காத்து இருக்கிறாய்? எங்க ரெண்டு பேர் உசுரு தான் மிச்சம்...'' என்ற சாவித்திரி அம்மாவின் அதட்டல் கேட்டதும் ஓடி வந்து அவரின் வாயைப் பொத்தினாள் சந்தியா.

''அத்தை என்ன வார்த்தை சொல்லிட்டீங்க? எனக்கு வாழ்க்கை கொடுத்த உங்க உசுரை எடுக்கவா'' மேலே தொடர முடியாமல் சந்தியாவிற்கு தொண்டை அடைக்க பவித்ரா அவளின் அருகே வந்து அவளை அம்மாவிடம் இருந்து விலக்கி நிறுத்தினாள்.

''சந்தியா! தூங்குறவங்களை தான் எழுப்ப முடியும் தூங்குற மாதிரி நடிக்கிறவங்களை எழுப்பவே முடியாது. இவங்களுக்கு நீ விளக்கம் சொல்ல வேண்டிய அவ சியமே இல்லை. நீ ரூமுக்கு வா...'' என்று கை பற்றி இழுத்துச் சென்றாள் பவித்ரா.

''நீ ஏன் பேச மாட்ட? வேலியில் போற ஓணானை இழுத்து காதுக்குள்ளே விட்டுட்டு, குத்துதே குடையுதே என்று நான் இங்கே புலம்பிட்டு இருக்கேன். ஆடு பகை குட்டி உறவா? ரொம்ப நல்லா இருக்கு உன் நியாயம்?'' என்று குத்தலாக வெளிப்பட்ட அத்தையின் வார்த்தைகள் நெஞ்சில் தீராத ரணம் ஏற்படுத்தியது.



''ஹேய் சந்தியா, நைட் பிரயாணம் சௌகரியமா இருந்ததா? ராஜீவ் கூட வந்தாரா?'' என்ற பவித்ராவின் வார்த்தைகள் அந்த ரணத்திற்கு மருந்திட்டதோடு, அவள் எடுத்த முடிவை உறுதி படுத்தவும் செய்தது.

''ஹேய் சந்தியா... சந்து... என்ன ஆச்சு? பேசிட்டே இருக்கேன். நீ என்ன பதில் சொல்லக் காசு கேட்பாய் போல? ஏன் இப்படி தேள் கொட்டின திருடன் மாதிரி முழிக்கிற? என்ன திருடினாய்?'' என்று அவளின் தோளைப் பற்றி பவித்ரா உலுக்க, 'என்ன திருடினாய்?' என்ற வார்த்தைகளில் ராஜீவனின் முகம் மின்னவும் சந்தியாவின் கண்களுக்குள் கரை கட்டி நின்ற கண்ணீர் கன்னங்களில் வடிந்தே விட்டது.

''ஏய்...? எதுக்கு அழற? சென்னைக்குப் போய் நீ ரொம்ப தைரியமாகி விட்டாய் என்று இப்ப தான் நான் அம்மாவிடம் ரொம்பப் பெருமையா சொல்லிட்டு இருந்தேன். என்ன ஆச்சு சந்தியா? எதுக்கு அழறே என்று சொல்லிட்டாவது அழு. மறுபடியும் ஏதாவது தொலைந்து விட்டதா?'' என்று தோளைப் பற்றி உலுக்கி, ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க, கடைசி கேள்விக்குத் தலை ஆட்டி வைத்ததால், பவித்ராவின் துருவல் நின்றது.

## 18

மகனுக்காக மணிகண்டனிடம் பேச வேண்டும் என்று காத்திருந்த விமலா, கணவனின் வருகைக்காக காத்திருந்த வேளையில் காபியும் பிஸ்கட்டும் வாங்கி வைத்து இருந்தார். வரும்போதே மனைவி வைத்து

Optimized by www.ImageOptimizer.net

''வாடியம்மா மகராசி, உனக்காகத் தான் இவ்வளவு நேரமா வாதாடிக்கிட்டு இருந்தாள். அவளுக்கு ஒரு நல்லது என்று உன் நகையைக் கேட்டதும், 'துண்டைக் காணோம் துணியைக் காணோம்' என்று ஓடிப் போனவள் திரும்பி வந்துட்டியா? அவள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று உன் சொத்தை எல்லாம் வாரி வளைச்சு எடுத்துப் போனவள், கொண்டு போன காசை தெருவில் போன யாருக்கோ தாரை வார்த்துவிட்டாய். இன்னும் இங்கே இருந்து என்ன அள்ளிட்டுப் போக காத்து இருக்கிறாய்? எங்க ரெண்டு பேர் உசுரு தான் மிச்சம்...'' என்ற சாவித்திரி அம்மாவின் அதட்டல் கேட்டதும் ஓடி வந்து அவரின் வாயைப் பொத்தினாள் சந்தியா.

''அத்தை என்ன வார்த்தை சொல்லிட்டீங்க? எனக்கு வாழ்க்கை கொடுத்த உங்க உசுரை எடுக்கவா'' மேலே தொடர முடியாமல் சந்தியாவிற்கு தொண்டை அடைக்க பவித்ரா அவளின் அருகே வந்து அவளை அம்மாவிடம் இருந்து விலக்கி நிறுத்தினாள்.

''சந்தியா! தூங்குறவங்களை தான் எழுப்ப முடியும் தூங்குற மாதிரி நடிக்கிறவங்களை எழுப்பவே முடியாது. இவங்களுக்கு நீ விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. நீ ரூமுக்கு வா...'' என்று கை பற்றி இழுத்துச் சென்றாள் பவித்ரா.

''நீ ஏன் பேச மாட்ட? வேலியில் போற ஓணானை இழுத்து காதுக்குள்ளே விட்டுட்டு, குத்துதே குடையுதே என்று நான் இங்கே புலம்பிட்டு இருக்கேன். ஆடு பகை குட்டி உறவா? ரொம்ப நல்லா இருக்கு உன் நியாயம்?'' என்று குத்தலாக வெளிப்பட்ட அத்தையின் வார்த்தைகள் நெஞ்சில் தீராத ரணம் ஏற்படுத்தியது.



''ஹேய் சந்தியா, நைட் பிரயாணம் சௌகரியமா இருந்ததா? ராஜீவ் கூட வந்தாரா?'' என்ற பவித்ராவின் வார்த்தைகள் அந்த ரணத்திற்கு மருந்திட்டதோடு, அவள் எடுத்த முடிவை உறுதி படுத்தவும் செய்தது.

''ஹேய் சந்தியா... சந்து... என்ன ஆச்சு? பேசிட்டே இருக்கேன். நீ என்ன பதில் சொல்லக் காசு கேட்பாய் போல? ஏன் இப்படி தேள் கொட்டின திருடன் மாதிரி முழிக்கிற? என்ன திருடினாய்?'' என்று அவளின் தோளைப் பற்றி பவித்ரா உலுக்க, 'என்ன திருடினாய்?' என்ற வார்த்தைகளில் ராஜீவனின் முகம் மின்னவும் சந்தியாவின் கண்களுக்குள் கரை கட்டி நின்ற கண்ணீர் கன்னங்களில் வடிந்தே விட்டது.

''ஏய்...? எதுக்கு அழற? சென்னைக்குப் போய் நீ ரொம்ப தைரியமாகி விட்டாய் என்று இப்ப தான் நான் அம்மாவிடம் ரொம்பப் பெருமையா சொல்லிட்டு இருந்தேன். என்ன ஆச்சு சந்தியா? எதுக்கு அழறே என்று சொல்லிட்டாவது அழு. மறுபடியும் ஏதாவது தொலைந்து விட்டதா?'' என்று தோளைப் பற்றி உலுக்கி, ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க, கடைசி கேள்விக்குத் தலை ஆட்டி வைத்ததால், பவித்ராவின் துருவல் நின்றது.

## 18

மகனுக்காக மணிகண்டனிடம் பேச வேண்டும் என்று காத்திருந்த விமலா, கணவனின் வருகைக்காக காத்திருந்த வேளையில் காபியும் பிஸ்கட்டும் வாங்கி வைத்து இருந்தார். வரும்போதே மனைவி வைத்து

Optimized by www.ImageOptimizer.net

இருந்த காபி ட்ரே கண்ணில் பட, ஏற்கனவே இருந்த இறுக்கம் தளர்ந்தாலும், ராஜீவன் செய்வது சரி இல்லை என்ற எண்ணம் மாறவில்லை.

''என்னவோ பேசணும் என்று சொல்லிட்டு அமைதியா இருந்தால் எப்படி? எனக்கு ஏற்ற மனைவி என்பதை பல சமயங்களில் நிருபித்து இருக்கிறாய். அதை இன்றும் மறந்து விடாமல் எதுவாக இருந்தாலும் பேசு.''

''முப்பது வருடம் குப்பை கொட்டி வசிஷ்டர் வாயாலேயே நல்ல மனைவி பட்டம் வாங்கிட்டேன். ஆனால் இந்தக் காலகட்டத்தில் நல்ல அம்மா என்று பேர் வாங்கி இருக்கேனா இல்லையா என்று தெரியலை. காலம் போன கடைசியில் இருக்கும் ஒரே பையனுக்கு நல்ல அம்மாவாக இருக்க நினைக்கிறேன். தப்பு இல்லையே?'' என்று நிதானமான குரலில் விசாரிக்க மணி கண்டன் முறைத்தார்.

''இப்ப என்ன! பவித்ராவை நட்டாற்றில் கழட்டி விடுவது சரியா தவறா என்ற சந்தேகமா?'' என்று எரிச்சலோடு கேட்டார்.

''பவித்ராவா இருந்தாலும் சரி, சந்தியாவா இருந்தாலும் சரி, என்னைப் பொறுத்த வரைக்கும் ரெண்டு பேருமே நல்ல பொண்ணுங்க. அவங்க ரெண்டு பேருக்குமே நல்ல வாழ்க்கை அமையணும். அதுல யாருக்குக் கெடுதல் செய்தாலும் தப்பு என்பது தான் என்னுடைய வாதம், அது தான் ராஜீவோட கணக்கும்...''

''ரெண்டு பேரையுமே உன் பையனுக்குக் கட்டி வைக்கப் போகிறாயா?''

''இது பெற்ற அப்பா பிள்ளைக்கு சொல்ற யோசனை மாதிரித் தெரியலை. ஏதோ ஜெயிலுக்குப் போக வழி



காட்டுற மாதிரி இல்ல இருக்கு. மிலிட்டரி ஆபீசருக்கு மூளை குழம்பிடுச்சோ?''

''உங்களை மாதிரி மனைவியும் பிள்ளையும் வாய்ச்சால், குழம்ப வேண்டியது தான்..''

''நீங்க ரொம்ப தூரம் யோசிச்சு தேவை இல்லாமல் குழம்புறீங்க. என்ன விஷயம் என்பதைப் பொறுமையா திறந்த மனசோடு கேட்டால் தானே பிரச்னை சால்வ் ஆகும். கடிவாளம் போட்ட குதிரை மாதிரி பார்த்தால், நான் சொல்றது தப்பு மாதிரித் தோன்றும்.''

''நீ வெட்டியா பேசிட்டு இருக்கியே தவிர இன்னும் விஷயத்துக்கு வந்த மாதிரித் தெரியலை. நல்லா வியாக்யானம் பேசு. நீ என்ன விளக்கம் சொன்னாலும், அது பவித்ராவுக்கு இன்னொரு மாப்பிள்ளை பார்க்கலாம் என்பதை அடிப்படையா வச்சுதான் அமையப் போகுது. அதை நான் ஒத்துக் கொள்ளப் போவதில்லை. அவளுக்கு இன்னொரு மாப்பிள்ளை பார்க்க நீ யார்? அதைத் தவிர வேற ஏதாவது விஷயம் இருந்தால் பேசு...''

''அதுதானே பேச வேண்டிய விஷயமே! அதைத் தவிர வேறே ஏதாவது பேசு என்றால் என்ன அர்த்தம்? ம்ம், சரி, நீங்க எனக்கு ஒரு ப்ராமிஸ் பண்ணுங்க போதும்...''

''ப்ராமிசா...? நானா? எதுக்கு அங்கே வந்து வாயைத் திறக்காமல் பொம்மை மாதிரி உட்காரணும் என்று நீ ப்ராமிஸ் கேட்பாய். அதை கொடுக்க நான் என்ன...''

''நீங்க அதி புத்திசாலி. அதனால் நீங்க பேசாமல் இருக்க வேண்டாம். நல்லா பேசலாம். யாரிடம் பேசணும் என்பதில் தான் கண்டிஷன்...''

''பவித்ராவிடம் பேசாமல் என்னால் இருக்க முடியாது...''

''கரெக்ட். எனக்குத் தெரியும். அது தான் எனக்கும் வேண்டும். நீங்க பவித்ராவிடம் பேசணும். பவித்ராவிடம் மட்டும் தான் பேசணும். அவங்க அம்மாவிடமோ, சந்தியாவிடமோ, நீங்க பேச வேண்டிய அவசியம் இல்லை. அதுதான் என்னுடைய வேண்டுகோள்...''

''எல்லாம் உன் பையன் வேலையா? அவனை...''

''சந்தியாவிடம் பேச உங்களுக்கு ஒன்றும் விஷயம் இல்லை. பவித்ராவோட அம்மாவிடம் பொண்ணுக்கு என்ன நகை போடுவீங்க என்றா கேட்கப் போறீங்க?...'' என்று கேட்டு விட்டு அவரின் முறைப்பை கண்டு நடுங்குவது போல நடித்தார்.

''அம்மா தாயே! ஆளை விடு. நான் பவித்ராவை தவிர மற்ற இருவரிடமும் நானாகப் பேசவில்லை. ஆனால் மூணு மாசமா அவன் வராமல் தள்ளி போட்டுக்கிட்டே தானே இருக்கான். இப்ப மட்டும் உடனே போக வேண்டும் என்று என்ன கட்டாயம்? போகாமலே தவிர்த்து விடலாமே?'' என்று எரிச்சலோடு கேட்டார் மணிகண்டன்.

''நாளைக்கு வரலை என்று சொல்லிவிடலாம். ஆனால் நாலு நாள் கழிச்சோ, நாலு மாசம் கழிச்சோ மீண்டும் அதே வீட்டுக்கு, சந்தியாவை பொண்ணு கேட்டு நாம் போக வேண்டி இருக்குமே? அப்ப எந்த முகத்தை வைத்துக் கொண்டு போவது?''

''இதைத் தானே நானும் சொல்றேன்? நான் காதலுக்கு எதிரி இல்லை. சந்தியா வேண்டும் என்பதால் தான் பிரச்னை என்று நூறு விதமா சொல்லியாச்சு. உனக்கும் உன் பையனுக்கும் மண்டையில் ஏறினால் தானே? மூணு மாசமா இந்த பொண்ணைப் பற்றி சொல்லிட்டு இருக்க, அப்ப எல்லாம் வாயைத் திறக்காமல் இருந்து



கொண்டு, இப்ப வந்து நாலு நாளைக்கு முன்னால் பார்த்தேன். எனக்கு இவள் தான் வேண்டும் என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஊரு உலகத்துல வேறே பொண்ணே இல்லாத மாதிரி...''

''நல்லா இருக்குங்க நீங்க பேசுற லட்சணம்? இன்னார் மேலே இந்த நேரத்தில் வரும் என்று சொல்லிட்டு கரெக்டா வர, காதல் என்ன புல்லட் ட்ரெயினா? அவனே மண்டையைக் காய்ஞ்சு போய், ரொம்ப ஒரு வழி கண்டு பிடிச்சு, சொன்னால், அது என்ன வழி என்று கேட்கக்கூட உங்களுக்குப் பொறுமை இல்லை. அதை விடுங்க. நானும் உங்க கட்சி தான். பவித்ரா மனசை உடைச்சு சந்தியாவை ராஜீவ் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் எனக்கு சம்மதம் இல்லை. ஆனால் ஒருவேளை எல்லோரும் சந்தோஷமா சந்தியாவை ராஜீவனுக்கு தா சம்மதிக்கும் பட்சத்தில் நீங்க அதுக்கு தடா போட வேண்டாம் என்பது தான் என் வேண்டுகோள்...''

''ஆமா! அவன் எனக்கு விரோதி பாரு. அவனோட சந்தோஷத்தை அழித்தே தீருவேன் என்று அவன் பிறந்த அன்று நான் சபதம் எடுத்து இருக்கேன். அதை நாளைக்கு நிறைவேற்றப் போறேன். பேசறா பாரு...'' என்று மணிகண்டன் முணுமுணுக்க, விமலா புன்னகை செய்தார்.

''அதான் அம்மாவும் பையனும் கூட்டணி அமைச்சட்டீங்களே! நான் மேலே என்ன பண்ணப் போறேன். நான் உங்க கூட வரேன். பவித்ராவுக்கு நல்ல வாழ்க்கை அமைவது உறுதியாகிற வரைக்கும் இவன் சந்தியாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதைப் பற்றி கனவில கூட நினைக்க வேண்டாம் என்று அவனிடம் சொல்லிடு...''



Optimized by www.ImageOptimizer.net

''கரெக்ட். எனக்குத் தெரியும். அது தான் எனக்கும் வேண்டும். நீங்க பவித்ராவிடம் பேசணும். பவித்ராவிடம் மட்டும் தான் பேசணும். அவங்க அம்மாவிடமோ, சந்தியாவிடமோ, நீங்க பேச வேண்டிய அவசியம் இல்லை. அதுதான் என்னுடைய வேண்டுகோள்...''

''எல்லாம் உன் பையன் வேலையா? அவனை...''

''சந்தியாவிடம் பேச உங்களுக்கு ஒன்றும் விஷயம் இல்லை. பவித்ராவோட அம்மாவிடம் பொண்ணுக்கு என்ன நகை போடுவீங்க என்றா கேட்கப் போறீங்க?...'' என்று கேட்டு விட்டு அவரின் முறைப்பை கண்டு நடுங்குவது போல நடித்தார்.

''அம்மா தாயே! ஆளை விடு, நான் பவித்ராவை தவிர மற்ற இருவரிடமும் நானாகப் பேசவில்லை. ஆனால் மூணு மாசமா அவன் வராமல் தள்ளி போட்டுக்கிட்டே தானே இருக்கான். இப்ப மட்டும் உடனே போக வேண்டும் என்று என்ன கட்டாயம்? போகாமலே தவிர்த்து விடலாமே?'' என்று எரிச்சலோடு கேட்டார் மணிகண்டன்.

''நாளைக்கு வரலை என்று சொல்லிவிடலாம். ஆனால் நாலு நாள் கழிச்சோ, நாலு மாசம் கழிச்சோ மீண்டும் அதே வீட்டுக்கு, சந்தியாவை பொண்ணு கேட்டு நாம் போக வேண்டி இருக்குமே? அப்ப எந்த முகத்தை வைத்துக் கொண்டு போவது?''

''இதைத் தானே நானும் சொல்றேன்? நான் காதலுக்கு எதிரி இல்லை. சந்தியா வேண்டும் என்பதால் தான் பிரச்னை என்று நூறு விதமா சொல்லியாச்சு. உனக்கும் உன் பையனுக்கும் மண்டையில் ஏறினால் தானே? மூணு மாசமா இந்த பொண்ணைப் பற்றி சொல்லிட்டு இருக்க, அப்ப எல்லாம் வாயைத் திறக்காமல் இருந்து



கொண்டு, இப்ப வந்து நாலு நாளைக்கு முன்னால் பார்த்தேன். எனக்கு இவள் தான் வேண்டும் என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஊரு உலகத்துல வேறே பொண்ணே இல்லாத மாதிரி...''

''நல்லா இருக்குங்க நீங்க பேசுற லட்சணம்? இன்னார் மேலே இந்த நேரத்தில் வரும் என்று சொல்லிட்டு கரெக்டா வர, காதல் என்ன புல்லட் ட்ரெயினா? அவனே மண்டையைக் காய்ஞ்சு போய், ரொம்ப ஒரு வழி கண்டு பிடிச்சு, சொன்னால், அது என்ன வழி என்று கேட்கக்கூட உங்களுக்குப் பொறுமை இல்லை. அதை விடுங்க. நானும் உங்க கட்சி தான். பவித்ரா மனசை உடைச்சு சந்தியாவை ராஜீவ் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் எனக்கு சம்மதம் இல்லை. ஆனால் ஒருவேளை எல்லோரும் சந்தோஷமா சந்தியாவை ராஜீவனுக்கு தர சம்மதிக்கும் பட்சத்தில் நீங்க அதுக்கு தடா போட வேண்டாம் என்பது தான் என் வேண்டுகோள்...''

''ஆமா! அவன் எனக்கு விரோதி பாரு. அவனோட சந்தோஷத்தை அழித்தே தீருவேன் என்று அவன் பிறந்த அன்று நான் சபதம் எடுத்து இருக்கேன். அதை நாளைக்கு நிறைவேற்றப் போறேன். பேசறா பாரு...'' என்று மணிகண்டன் முணுமுணுக்க, விமலா புன்னகை செய்தார்.

''அதான் அம்மாவும் பையனும் கூட்டணி அமைச்சுட்டீங்களே! நான் மேலே என்ன பண்ணப் போறேன். நான் உங்க கூட வரேன். பவித்ராவுக்கு நல்ல வாழ்க்கை அமைவது உறுதியாகிற வரைக்கும் இவன் சந்தியாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதைப் பற்றி கனவில் கூட நினைக்க வேண்டாம் என்று அவனிடம் சொல்லிடு...''



Optimized by www.ImageOptimizer.net

''அதெல்லாம் அவன் ஏற்கனவே எல்லா ஏற்பாடும் பண்ணிட்டான்...''

''இவன் செஞ்சதை நான் சொல்லலை. அதை அந்த பொண்ணும் பெண் வீட்டாரும் ஏற்றுக் கொள்வது அதை விட முக்கியம்'' என்று நகர்ந்த மணிகண்டனை புன்னகையோடு பார்த்தார் விமலா.

''சில விஷயம் சொன்னால் புரியாது. நாளைக்கு அங்கே வரும்போது, நீங்க பவித்ராவிடம் பேசித் தெரிந்து கொண்டாலும் சரி, அல்லது அங்கே நடக்கப் போகும் விஷயத்தை நேரில் பார்த்துப் புரிந்து கொண்டாலும் சரி, அங்தே நல்ல விஷயங்கள் மட்டுமே நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு'' என்று முடித்தார் விமலா.

* * *

மறுபடியும் எதையோ தொலைத்து விட்டேன் என்று கண்ணீருக்கு இடையே சொன்ன சந்தியாவை பார்த்து ஒரு கணம் அதிர்ந்த பவித்ரா, ''ஏன், ராஜீவ் உன்னுடன் வரலையா? எப்படி எங்கே என்னத்தை அப்படி தொலைத்தாய்?'' என்று நம்பிக்கை இல்லாமல் விசாரித்தாள்.

''அது... வந்தார்... ஆனால்...'' என்று வார்த்தைகளுக்கு அவள் திணறிக் கொண்டு இருக்கும்போது அங்கே சாவித்திரி வந்தார்.

''உனக்காக பவித்ரா எவ்வளவோ வாதாடி இருக்கிறாள். அவளுக்கு நீ உண்மையிலேயே நல்லது செய்ய வேண்டும் என்று நினைத்தால், நீ நாளைக் காலையில் ஒரு நாலு மணி நேரம், முழுவதும் எங்கேயாவது போய் விடு. இத்தனை நாள் உன்னை ஆளாக்கி வளர்த்ததற்கு எனக்கு நீ செய்யும் நன்றிக் கடன் என்று நினைத்துக்



கொள். உன் கையைக் காலா நினைத்து...'' என்று சாவித்திரி சொல்ல சந்தியா அலறி விட்டாள்.

''உங்களுக்குப் பிடிக்காத எதையும் நிச்சயம் நான் செய்ய மாட்டேன் அத்தை. நாளைக்குக் காலையில் ஏழு மணிக்குக் கிளம்பி எங்கேயாவது போயிட்டு, மதியம் இரண்டு மணிக்கு மேலே வருகிறேன்...''

''ஹேய் சந்தியா, லூசா நீ? உன்னை சென்னையில் இருந்து அம்மாவா வரச் சொன்னாங்க? வரச் சொன்னது நான். அவங்க புரியாமல் ஏதோ உளறுகிறார்கள் என்பதற்காக...'' என்று அவசரமாக இடையிட்ட பவித்ராவை முறைத்தார் சாவித்திரி.

''இப்படி யானை மாதிரி தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொள்ளும் ஒரு பைத்தியத்தை இப்போதான் பார்க்கிறேன். எப்படி தான் நீ என் வயிற்றில் வந்து பிறந்தாயோ?''

''அம்மா, அதை நீங்க சொல்லாதீங்க. நீங்க எனக்கு எப்படி அம்மாவா வந்தீங்க என்று நான் சொல்லணும். நான் இந்தக் கல்யாணமே எனக்கு வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன். நான் சொல்றது உங்க காதில் விழுதா?'' என்ற பவித்ராவின் அதட்டலில், சந்தியா அதிர்ந்தாலும் சாவித்திரி அம்மா அதை சட்டையே செய்யவில்லை.

''இங்கே பாரு சந்தியா, அவளுக்காக அவள் சொல்லி தான் நீ வந்தாய். ஆனால் அவளின் நலனுக்காக தான், அவளை விட அனுபவசாலியான நான் சொல்றேன். நாளைக்கு அவளை பொண்ணு பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரும் வேளையில் நீ இருந்தால் சரி வராது. நீயா கௌரவமா ஒதுங்கிக் கொள்ளவில்லை

என்றால் நாளைக்குக் காலையில் என்ன செய்வே
என்று எனக்கே தெரியாது சொல்லிட்டேன்'' என்
மிரட்டலுடன் சென்ற சாவித்திரியை, கண்ணீருடன்
வெறித்த சந்தியாவும் கோபத்துடன் முறைத்த பவித்ராவு
வெவ்வேறு திட்டங்களைத் தீட்டினார்கள்.

வீட்டில் உள்ளவர்கள் எழுந்திரிக்கும் முன்னே
அவர்களுக்குத் தெரியாமல் கிளம்புவதாக எண்ணி, கா
நடையாக மருதமலைக்குக் கிளம்பி விட்டாள். அவ
எங்கே செல்கிறாள் என்பது தெரியாவிட்டாலும் அவ
இந்த நடவடிக்கையை எதிர்பார்த்து இருந்த இரண்
ஜீவன்களுமே அதை கவனிக்கத் தவறவில்லை.

அம்மாவிடம் எந்த வாக்குவாதமும் செய்யாம
ராஜீவனின் வீட்டில் வருவதாகச் சொன்ன குறிப்பிட்ட
நேரத்திற்கு பதினோரு மணிக்கு பத்து நிமிட
முன்பாகவே பட்டுப் புடவை, பூ நகை என்று அலங்கார
துடன் ஹாலில் வந்து அமர்ந்து ஜன்னல் வழியே
பார்வையைப் பதித்து இருந்தவள் தெரு முனையில்
திரும்புவதை கவனித்து, தலையில் இருந்த பூவை
பிடுங்கி எறிந்தாள்.

''சும்மா என் உயிரை வாங்காதீங்க. இந்தக் கல்யாண
திற்கு என்னால் ஒத்துக் கொள்ள முடியாது என்று
களிடம் எத்தனை தடவை சொல்வது?'' என்று பவித்
சொல்வதைக் கேட்ட சாவித்திரிக்கு இடி விழுந்த
போலாயிற்று.

''என்னடி இப்படி கடைசி நேரத்துல குண்டை
தூக்கிப் போடுற? அந்த பாழாப் போனவள் உன் மனசை
கரைச்சு வசியம் பண்ணிட்டாளா?'' என்று வேகமா
அவளின் தோளைப் பற்றி உலுக்கினார் சாவித்திரி.



வாசலில் ராஜீவனின் குடும்பத்தினர் இருப்பார்கள்
என்ற எதிர்பார்ப்புடன், ''எனக்கு இந்த பையனைப்
பிடிக்கலை. ஆம்பளையா லட்சணமா டாக்டர், எஞ்சினியர்
என்று படிக்காமல் அதென்ன சமைக்கறேன் கஞ்சி
காச்சறேன் என்று ஒரு பொட்டை தனமான படிப்பு?''
என்று அழுத்தமாகச் சொல்லி விட்டு அவர்களின்
பிரதிபலிப்பை அறிய திரும்பியவளின் கண்கள்
வியப்பில் விரிய, வாய், ''கிருஷ்ணா சார்... நீங்களா...''
என்று முணுமுணுத்தது.

# 19

இந்தத் திருமணத்தை நிறுத்துவது தொடர்பாக,
அம்மாவிடம் தன் பேச்சு எடுபடாது என்பதை உணர்ந்த
பவித்ரா, ராஜீவன் வீட்டினரே, தன் கடுமையான
வார்த்தைகளை கேட்டால், தன் விருப்பமின்மையை
உணர்ந்து விலகிப் போய் விடலாம், அல்லது சந்தியாவை
மணம் செய்வது பற்றி ராஜீவனே வாய் திறக்கலாம்
என்று எண்ணி அந்த வாக்கியத்தை அவர்கள் வரும்
நேரத்தில் பிரயோகம் செய்தாள்.

அந்த வார்த்தைகள் மாப்பிள்ளை வீட்டினரிடம் எந்த
விதமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பதைக்
கணக்கிட்டு, வார்த்தைகளின் கடுமையை கூட்டவோ
குறைக்கவோ செய்யலாம் என்று திரும்பிய பவித்ராவின்
கண்ணில் பட்டது கிருஷ்ணகுமார்.

அப்பாவின் இன்னொரு சகோதரி மகன். அத்தை
முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வீட்டினர் சம்மதம்

இல்லாமல் காதல் திருமணம் செய்து கொண்டவர் இவனுக்கு காலேஜ் பீஸ் கட்ட ஒரு அவசரம் என்று பத்தாயிரம் ரூபாய் அப்பா கொடுத்ததற்கு ஆடாத ஆட்டம் ஆடி தீர்த்ததால் அந்த நாளைக்குப் பிறகு அவர்கள் வீட்டில் இருந்து யாருமே வருவதில்லை.

இவனை காலேஜில் பார்த்தாள். நான்கு ஆண்டுகள் இடைவெளி என்பதால் காலேஜில் நுழைந்தபோது, இவன் இறுதியாண்டு படித்துக் கொண்டு இருந்தான். இவன் சொல்லித்தான் அவள் சிவில் என்ஜினியரிங் படிப்பைத் தேர்ந்தெடுத்தது. இவன் அவளின் ரோல் மாடல்!

தன்னைப் பார்க்கும் போது கன்னம் வருடிக் கையில் இருப்பதை பணமோ, நகையோ, தின்பண்டமோ, எதுவாக இருந்தாலும் கண நேரம் கூட யோசிக்காமல், அப்படியே தன் கையில் திணிக்கும் அத்தையின் தாராள குணமும், இவனின் இனிய சுபாவமும், மனதைக் கவர்ந்தது. பார்க்கும் போதெல்லாம் ஓடிப் போய் பேச வேண்டும் என்று தோன்றும். ஆனால் கல்லூரியில் பிரிவுபசார விழா நடைபெறும்போது அவன் தன் அத்தை மகன் என்ற உரிமையில் அத்தான் என்று அழைத்து ஏதோ பேசியதற்கு கத்தி தீர்த்து விட்டான். அன்றோடு காணாமல் போனவன், இன்று திரும்பி வந்து இருக்கிறானா? இன்று தான் வீட்டுக்கு வர வழி தெரிந்ததா?

தன்னையே வியப்புடன் பார்த்தபடி நின்ற பவித்ராவை நெருங்கி, ஒற்றை விரலால் முகவாயை நிமிர்த்தி "ஹாய் பவித்ரா! வர வேண்டிய நேரத்துல கரெக்டா வந்துட்டேனா?" என்று விசாரிக்க அவசரமாக அவன் கையைத் தட்டிவிட்டு அம்மாவை திரும்பிப் பார்த்தாள்



அவளின் பார்வையைத் தொடர்ந்தவன் சாவித்திரியைப் பார்த்ததும், தன் கையை லேசாக அசைத்து. "ஹலோ அத்தை, புனிதவதியோட பையன், உங்களுக்கு என்னை அடையாளம் தெரியலையா?" என்று சிரிப்போடு சொன்னான் கிருஷ்ணா.

"நீ சென்னையிலே ஏதோ கட்டிட வேலை பார்க்கிறாய் என்று சொன்னாங்களே. ஞாபகம் இருக்கு..." என்று ஏனோ தானோவென்று தலை அசைத்தவருக்கு இவன் எங்கே வந்தான் என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

"நீங்க மனசுக்குள் என்ன நினைக்கறீங்க என்று என்னால் படிக்க முடியுது அத்தை. உங்க வீட்டுக்கு வர வேண்டிய விருந்தாளிகள் வர நேரம் ஆகும். அந்தத் தகவல் சொல்ல தான் வந்தேன். நாலு வருஷம் கழித்து உங்களைப் பார்க்க வந்து இருக்கேன். நான் ராஜீவோட ப்ரெண்ட் வேறே! ஸ்வீட், காரம் எடுத்துட்டு வாங்க அத்தை. பசிக்குது" என்று அடுக்களைக்கு நகர்த்த முயன்றான் கிருஷ்ணா.

"உனக்கு மாப்பிள்ளையைத் தெரியுமா? எப்படி தெரியும்? சட்டுன்னு ஞாபகத்துல வரலை. உன் பேரென்ன?" என்று விசாரித்தார் சாவித்திரி.

"நீங்க என் பேரை மறந்துட்டீங்க. ஆனால் உங்க பொண்ணு..." என்று கேலியாக சாவித்திரியிடம் சொன்னவன் பவித்ராவிடம் திரும்பினான்.

"ஆமா அதென்ன கிருஷ்ணா சார்...? அந்த எக்ஸ்ட்ரா பிட்டிங்கை தூக்கிப் போடு. நீ எப்பவும் கூப்பிடுற மாதிரி அத்தான் என்று சொல்லு. அப்படிக் கூப்பிட ரொம்ப கஷ்டமா இருந்தால், கால் மீ கிருஷ்ணா..." என்று சரளமாகப் பேசியவன் அவள் திகைப்பு நீங்காததைக்

கண்டு, தன் இரண்டு கைகளையும் அவளின் முகத்தின் முன்பு ஆட்டினான்.

''ஹலோ! என்னை இந்த நேரத்தில் இங்கே எதிர்பார்க்கவில்லையோ? இப்படி ஃப்ரீஸ் ஆகி நிற்கிற? சர்ப்ரைஸ் தானே? ஷாக் இல்லையே?'' என்றவனின் புன்னகை அவளை நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது.

''அப்படிக் கூப்பிட்டால் உங்களுக்குப் பிடிக்காதே!'' திணறலாக வெளி வந்தது தன் குரலா என்று பவித்ராவிற்குச் சந்தேகமாக இருந்தது.

''எப்படிக் கூப்பிட்டால் எனக்குப் பிடிக்கும் பிடிக்காது என்று எனக்கே தெரியாத ஒரு விஷயத்தை கரெக்டா நாலு வருஷமா உன் மனசில் போட்டு புதைச்சு வச்சு இருக்க போல? ம்ம்ம்...?'' என்றவன் பார்வையில் குறும்பு இருந்தது.

''அதெல்லாம் இல்லை. இங்கே எங்கே திடீர்னு...? அதுவும் தனியா...'' என்றவளின் பார்வை அவனைத் தவிர்த்து, வாசலை ஆராய்ந்தது.

''இன்னும் மூன்று மணி நேரம் பொறுத்துக்கோ. அம்மா அப்பா வந்துடுவாங்க'' என்று விளக்கம் சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''ஓவரா கற்பனை பண்ணிக்காதீங்க. நான் உங்களை எதிர்பார்க்கவே இல்லை என்கிறேன். இதுல உங்க அம்மா அப்பாவைத் தேடுறேனா? இங்கே இப்ப என்ன நடக்கப் போகுது என்று ஏதாவது தெரியுமா?''

''நல்லாத் தெரியும். எனக்கு என்ன தெரியும் என்று உனக்குத் தெரியாது. ஆனால் உனக்கு என்ன தெரியாதோ அது எனக்குத் தெரியும்...''



''இந்த வார்த்தை ஜாலம் எல்லாம் இங்கே வேண்டாம். முன்னாடி எல்லாம் நாலு வார்த்தை சேர்ந்தாற் போல ...காக கொடுக்கணும். இப்ப எதுகை மோனையோடு ...க துள்ளி விளையாடுது. என்ன தெரியும், என்ன தெரியாது என்று சொல்லுங்க பார்ப்போம்...''

''இங்கே இப்ப ராஜீவன் என்று ஒருத்தர் உன்னைப் ...க வருவதா இருந்தது எனக்குத் தெரியாது என்று நீ நினைத்து இருப்பாய். அது எனக்குத் தெரியும். அவருக் ...ம் உனக்கும் கல்யாணம் நடக்காது என்று நம் ரெண்டு ...ருக்குமே தெரியும். இந்த வீட்டில் இரண்டு கல்யாணம் ...க்கப் போகிறது என்று உனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரியும். இதுக்கு யார் எல்லாம் துணையா இருக்கப் போறாங்க? யார் எல்லாம் சண்டை போடப் போறாங்க என்று உனக்கும் எனக்கும் தெரியாது. போதுமா ...ஸ்ட?''

''மை காட்! இப்படி கடிக்க எங்கே கற்றுக் கொண் ...ங்க? முன்னாடி எல்லாம் இப்படி இல்லையே?'' ...றவளின் கண்களில் வியப்பும் ஆர்வமும் சேர்ந்தது.

''இந்த உலகத்துல மாற்றமே இல்லாத ஒரே விஷயம் என்ன தெரியுமா? மாற்றம் மட்டும் தான் சரி சரி முறைக் ...தே! உங்க அம்மாவை எங்க அம்மா சரி கட்டிடு ...ங்க'' என்று சொல்ல அவள் வியப்பு மேலும் கூடியது.

இவன் தன்னைத் தேடிப் பார்க்க வந்து இருக்கிறானா? இவனை இங்கே வரவழைத்தது ராஜீவா? தன்னிடம் சொல்லவே இல்லையே? ஆமா அவனோடு மணிக்கணக் ...க பேசினாய். ஊர் கதை பேசிவிட்டு இதை மட்டும் ...ன்னிடம் சொல்லாமல் விட்டு விட்டான். பேசியதே இரண்டு முறை. முதல் முறை அவன் போனில் இருந்து

Optimized by www.ImageOptimizer.net

சந்தியா பேசினாள். அப்போது சில வார்த்தைகள் பேசினாள். இரண்டாவது முறை, தான் சந்தியாவிடம் பேச அவனுடைய எண்ணில் அழைத்தாள்.

''என்ன பவி நான் சொல்வதை நம்பவில்லையா? நான் இன்று இங்கே எப்படி வந்தேன் என்று யோசிக்கவில்லையா?'' என்று கேட்க அவள் ஆம் என்று பதில் சொல்லா விட்டாலுமே அவள் கண்களில் தோன்றிய திகைப்பு அவனுக்கு வேண்டிய தகவலை அளித்தது.

'நான் முன்பு பேசாமல் இருந்து இப்போது நிறைய பேசப் பழகினால். நீ முன்பு நிறைய பேசி விட்டு இப்போது பேசா மடந்தையாகி விட்டாய் போல?'' என்று சிரித்தவன் முகம் சில நொடிகள் கழித்து தீவிரமானது.

''இங்கே வருவது பற்றி ராஜீவன் சொல்லவில்லை பவித்ரா. எனக்கு ராஜீவனை ஒரு வாரத்திற்கு முன்னால் தான் தெரியும். இத்தனைக்கும் அவங்க காலேஜில் நம் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி மூலமா ஒரு கட்டிடம் இரண்டு வருஷமா நடக்குது. உனக்கு கல்யாண ஏற்பாடு நடக்குது என்று எனக்கு ரஞ்சன் சொன்ன பிறகு, யார் மாப்பிள்ளை என்று விசாரித்து, அவரை ஒரு வாரம் முன்னாடி நானே தேடிப் போய் சந்தித்தேன்...'' என்று இடைவெளி விட அவளின் கண்கள் விரிந்தது.

''ரஞ்சன்...? என்னுடைய கிளாஸ்மேட்டா? அவன் உங்களுக்கு என் கல்யாண ஏற்பாடு பற்றிச் சொன்னான்?''

''கல்யாண ஏற்பாடு மட்டுமில்லை பவி. உங்க வீட்டுக்கு யாராவது புது ஆள் வந்தால், உனக்கு ஒரு புது ட்ரெஸ் எடுத்தால், உனக்கு ஒரு காய்ச்சல் வந்தால் எல்லாமே எனக்குச் சொல்வான்...'' என்ற அவன் குரலில் இருந்த பெருமிதம் அவளை வியக்க வைத்தது.



'ஆனால் ஏன்...?''

'இதென்ன கேள்வி? எனக்கு அந்தத் தகவல்கள் தேவைப்பட்டது...''

'அதான் ஏன்...?''

''முட்டாள்... மரமண்டை... உனக்கு என்ன மேல்மாடி காலியா?'' என்ற கிருஷ்ணகுமாரின் குரலில், 'அத்தை ... முன்பு இந்தப் பெண்ணிடம் பேச வேண்டும் ... பார்த்தால் இப்படி இழுத்தடிக்கிறாளே!'' என்ற ... சின்னக் கோபமும் தலை நீட்ட அவனுக்குச் ... சிரிப்பு வந்தது.

''நாலு வருஷம் முன்னாடி குரு எப்படி இருந்தீங்களோ அதே மாதிரி இப்ப சிஷ்யை இருக்காங்க. உங்களுக்கு பொண்ணு ரெடியா இருக்கு என்று தானே சொல்லி ... மட்டம் தட்டிட்டுப் போனீங்க. இப்ப என்னை ... துக்கு குறை சொல்றீங்க?''

''பொண்ணு ரெடி என்று சொன்னேன். அது யார் என்று கேட்க வேண்டியது தானே? சரி இப்ப அந்த வாக்கு வாதம் வேண்டாம். அத்தை எந்த நிமிஷமும் வரலாம். நாலு வருஷம் முன்னாடி நீ ரொம்ப சின்ன பொண்ணு. படிப்பை முடிக்கட்டும் என்று விலகிப் போனேன். வேறே எந்தக் காரணமும் இல்லை. நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம். அப்பாவும் இப்பவும் இனி எப்பவும் என் வாழ்க்கையில் நீ மட்டும் தான். போதுமா?''

''இன்னும் ரெண்டு மணி நேரம் கழித்து வந்து சொல்லி இருக்கணும்...''

''ரெண்டு மணி நேரம் இல்லை. பெண்ணே! ரெண்டு வருஷம் ஆனாலும் நீ எனக்கு தான். அதுல எந்த சந்தேகமும் எனக்கு இல்லை...''

Optimized by www.ImageOptimizer.net

"நான் ராஜீவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் எண்ணத்துடன் தான் இந்தப் பெண் பார்க்கும் படலத்துக்குச் சம்மதித்தேனே தெரியுமா?" என்று சொல்ல அவன் சிரித்தான்.

"சந்தியாவை சென்னைக்குப் பேக் பண்ணுவதை காரணம் காட்டி நகையை வைத்ததற்கான காரணம் எனக்குத் தெரியும். ராஜீவனைப் பெண் பார்க்க வர விடாமல் தடுக்க என்ன எல்லாம் செய்தாய் என்று எனக்குத் தெரியும். இப்ப நான் இங்கே வந்த விநாடி நீ ராஜீவனின் தொழில் பற்றி என்ன சொன்னாய் என்பதும் என் காதில் விழத்தானே செய்தது..."

"நான் எதற்காக அப்படிச் சொன்னேன் என்று உங்களுக்கு உண்மைக் காரணம் தெரியாது..."

"தெரியும் பவி. நல்லாத் தெரியும். அது ஒரே கல்லில் மூன்று மாங்காய் அடிக்கும் திறமை. அடிப்படையிலேயே நீ நல்ல பொண்ணு என்பது ஒரு காரணம். இரண்டாவது காரணம் நான். மூன்றாவது காரணம் சந்தியா. போதுமா விளக்கம்..." என்றவனை மறுத்துப் பேச முயன்ற போது கை காட்டி தடுத்து நிறுத்தினான்.

"உன்னை எனக்குத் தெரியும். பொய் சொல்லாதே! அத்தை வராங்க. நாம் கொஞ்ச நேரம் கழித்து தனியாப் பேசலாம்" என்று சொன்னபடி அத்தையை எதிர்கொள்ளத் தயாரானான்.

"இவ்வளவு நேரம் நின்று கொண்டேவா இருந்தாய்? ஏன்டீ உட்காரக் கூடச் சொல்ல மாட்டியா? உட்காரு கிருஷ்ணா. நீ இன்று இங்கே வருவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நாலு வருஷம் முன்னாடி உங்க மாமா இறந்த வீட்டில் வந்துட்டுப் போனவனுக்கு திடீர்



என்று எங்க ஞாபகம் வந்து எங்களைத் தேடி வந்திருக்க போல? என்ன விஷயம்?" என்று விசாரித்தபடி சிற்றுண்டி தட்டை அவன் முன்னால் வைத்த சாவித்திரியின் குரலில் ஆர்வம் இருந்தது.

"எதிர்பாராத சம்பவங்கள் நடப்பது தானே அத்தை வாழ்க்கை? நாளைக்கு என்ன நடக்கப் போகுது என்று இன்றே தெரிந்து விட்டால் வாழ்வில் சுவாரஸ்யம் குறைந்து விடுமில்லையா?" என்று கிருஷ்ணகுமார் புன்னகைத்தான். கிருஷ்ணாவின் புன்னகையை பார்த்த சாவித்திரிக்கு அடி வயிறு கலங்கியது.

"நீ என்னப்பா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் என்னவோ கதை சொல்ற? கொஞ்ச நேரத்தில் ராஜீவன் வீட்டில் இருந்து இங்கே வந்துடுவாங்க என்றுதானே சொன்னாய். இன்னும் நீ என்ன விஷயமா வந்திருக்கிறாய் என்று சொல்லவில்லை. அதோடு, பவித்ரா வேறே..." என்று பேச்சை நிறுத்தி இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"எல்லாம் நல்ல விஷயம் தான் அத்தை. அம்மா அப்பா வந்த பிறகு சொல்வாங்க என்று நினைத்தேன். ஆனால் உங்க முகம் பார்த்தால் எனக்கு ரொம்பச் சங்கடமா இருக்கு. நான் படிக்க மாமாதான் நிறைய ஹெல்ப் பண்ணினாங்க. அந்த பணத்தை நான் இன்னும் திருப்பிக் கொடுக்கலை..." என்று கிருஷ்ணா ஆரம்பிக்க 'இப்ப எதுக்கு அம்மாவுக்குப் பிடிககாத இந்தப் பேச்சை ஆரம்பிக்கிறான்?' என்ற குழப்பத்துடன் பார்த்தாள் பவித்ரா.

"... அந்த நன்றியை நாங்க இதுவரைக்கும் மறந்ததே இல்லை. நான் ஒரு கட்டுமான கம்பெனி ஆரம்பிச்சு நிறைய காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன்.

Optimized by www.ImageOptimizer.net

முதல் காண்ட்ராக்ட் எடுத்த வேலை இப்ப ஒரு மாசம் முன்பு முடிந்தது. அதுல எனக்கு பதினஞ்சு லட்சம் ரூபாய் நிகர லாபம் கிடைத்தது. அதுல பாதி பங்கு உங்களுக்கு தான் சேரணும் என்று அம்மா சொல்லிட்டாங்க...'' என்று நிறுத்த, அவன் பேச்சு போகும் திசையை ஊகிக்க முடிந்தது. பவித்ராவின் முகம் வாடியது.

''... பணமா கொடுக்க வேண்டாம் என்று கல்யாணத் திற்கு நிற்கும் பெண்ணுக்கு உச்சியில் நெத்தி சுட்டியில் ஆரம்பித்து, கணுக்காலில் போடும் கொலுசு வரைக்கும் தங்கத்துல செட்டா செய்யச் சொல்லி ஆர்டர் கொடுத்து ஐம்பது பவுன் நகை என்னை வாங்கிட்டு வரச் சொல்லி இருக்காங்க. நகை செஞ்சு எடுத்துட்டு வந்து இருக்கேன்'' என்று தான் கொண்டு வந்து சூட்கேசை சாவித்திரியிடம் நீட்ட, அவர் வாய் அடைத்துப் போனார்.

''என்ன அத்தை அப்படி திகைத்துப் போய் நிற்கறீங்க? மதுரையில் இருந்து அம்மாவும் அப்பாவும் காலையி லேயே காரில் கிளம்பிட்டாங்க. ரெண்டு மணிக்குள்ளே வந்துடுவாங்க. பொன்னைக் கொடுத்து பெண்ணை எங்க வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்ற ஆசை யோடு வந்து இருக்கேன். சொந்தம் விட்டுப் போகக் கூடாது என்ற எண்ணத்தோடு நீங்க நல்ல முடிவெடுக் கணும்...'' என்று கிருஷ்ணா நிறுத்த, சாவித்திரியின் கண் களில் ஆசை நுழைந்தது.

## 20

ஐம்பது பவுன் நகையைப் பெட்டியில் வைத்து நீட்டி, சொந்தம் விட்டுப் போகக்கூடாது என்ற வேண்டுகோளுடன்,



''உன் பெண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடு'' என்று கேட்டு தன் முகத்தை பதிலுக்காக பார்த்துக் கொண்டு நின்ற கிருஷ்ணாவை பார்க்கையில் முதல் வினாடி சந்தோஷம் பெருகினாலும் அடுத்த நிமிடமே சாவித்திரியின் முகம் யோசனையில் சுருங்கியது.

''நீ பேசறது எல்லாம் கேட்க நல்லா இருக்கு... ஆனால் கல்யாணம் என்பது இப்படி அவசரமா முடிவு பண்ணுற விஷயம் இல்லையே? உங்க அம்மா ஒத்துக் கொண் டாலும் உங்க அப்பா இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக் கணுமே? அது போக...''

''அந்தக் கவலை எல்லாம் நான் பார்த்துக்கறேன் அத்தை. நீங்க உங்க பதிலை மட்டும் சொல்லுங்க...''

''நான் என்ன சொல்றது? கல்யாணம் என்பது சம்பந் தப்பட்டவங்க தானே பதில் சொல்லணும். பவித்ரா என்ன சொல்றாளோ?'' என்று பவித்ராவைப் பார்க்க அவள் முகத்தில் யோசனையும் குழப்பமுமே இருந்தது.

''அத்தை கேட்கறாங்க இல்ல. பதில் சொல்லேன் பவி...'' என்று கிருஷ்ணகுமார் தூண்டிய பின்னும் பவித்ராவின் மௌனம் கலையவில்லை.

''இதெல்லாம் அவசரமா முடிவு பண்ண முடியாது கிருஷ்ணா. அவங்க வீட்டுல வந்து போகட்டும். புனிதாவும் வந்துட்டும். அப்புறமா எல்லோரும் உட்கார்ந்து பேசி நல்ல முடிவு எடுக்கலாம்'' என்று சொன்ன சாவித்திரி யின் பதிலில் கவனமாக 'மாப்பிள்ளை வீட்டுக்காரங்க' என்ற வாசகம் தவிர்க்கப் பட்டு இருந்தது.

''அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருளில் லார்க்கு இவ்வுலகம் இல்லை யாங்கு'' என்ற வள்ளுவன் வாக்கு இருவருக்குமே நினைவு வந்தது. பவித்ராவின்

Optimized by www.ImageOptimizer.net

முகத்தில் சங்கடம் கூட, கிருஷ்ணகுமார் முகத்தில் புன்னகை பெரிதானது.

''அந்தப் பையன் உனக்கு தெரியும் என்று தானே சொன்னாய்? அவங்க எப்போ வராங்க என்று போன் பண்ணி கேட்கிறாயா கிருஷ்ணா?'' என்று தொடர்ந்த சாவித்திரி.

''போன் பண்ணி வர வேண்டாம் என்று சொல்லி லாமா அத்தை?''

''அப்படிச் சொன்னால் நல்லா இருக்குமா? வந்து பார்த்துட்டுப் போகட்டும். யோசிச்சுச் சொல்றேன் என்று சொல்விடலாம். கௌரவமா இருக்கும்.''

''அதை விட கௌரவமா இருக்கக் கூடிய, உங்க இமேஜை உயரத்தில் கொண்டு போய் நிறுத்தக் கூடிய இன்னொரு வழி சொல்றேன். கேட்கறீங்களா?'' என்று மெல்ல தூண்டில் போட்டான் கிருஷ்ணா.

''சொல்லேன். நல்ல வழியா இருந்தால் செய்ய லாம்...'' என்று சாவித்திரி கேட்க அவன் பார்வை சுற்றும் முற்றும் அலைந்தது.

''என்ன பார்க்கிற?''

''நம் வீட்டில், சந்தியா இருந்தாளே! அவள் எங்கே?'' என்று ஆரம்பித்த உடனே அவருக்கு தூக்கி வாரி போட்டது.

''ஏன் திடீர்னு அவளைக் கேட்கிற? இங்கே தான் இருக்கா...''

''கிச்சனில் வேலையா இருக்காளா? நான் கூட அவ எங்கேயோ வெளியே போய் இருக்கிறாள் என்று நினை தேன். வந்து இவ்வளவு நேரம் ஆச்சு? வந்து ஒரு ஸ்ரே



கூட சொல்லலை. என்ன பண்றா?'' என்றபடி எழ, சாவித்திரி தயக்கத்துடன் இடைமிட்டார்.

''பவித்ரா கல்யாணம் நல்லபடியா நடக்க கோவிலுக்கு விளக்கு போட போய் இருக்கிறாள் கிருஷ்ணா. அவள் வந்து விடுவாள். நீ என்ன விஷயம் சொல்லு'' என்று உண்மையை லேசாக மாற்றிச் சொன்னார்.

''நமக்காக வேண்டிக் கொள்ள போய் இருக்கிறாள். அவளுக்கு ஏதாவது செய்யணுமே! என் அத்தை பேசாமல் சந்தியாவை ராஜீவனிற்குக் கட்டி வைத்து விட்டால் என்ன?'' என்ற கிருஷ்ணாவின் கேள்வியில் அதிர்ந்தது சாவித்திரி மட்டுமல்ல, பவித்ராவும் தான்.

இவன் என்ன ராஜீவன் - சந்தியா விஷயம் தெரிந்து சொல்றானா? இல்லை குருட்டாம் போக்கில் அடிக்கிறானா? ராஜீவனுக்குச் சந்தியாவைப் பிடித்து இருக்கா இல்லையா என்பதற்கு தன்னிடம் நேரடியாக எந்த சாட்சியமும் இல்லை. சந்தியா விஷயமே ஊகம் தான். ஆனால் அந்த ஊகம் தப்பாகப் போக நியாயம் இல்லை. அந்த மாதிரி சூழலில் கிருஷ்ணா மாதிரி ஒரு அதிரடியான ஆள் புகுந்து காரியம் சாதித்தால் தான் உண்டு.

''நீங்க சொன்னால் போதுமா? அவங்களுக்கு விருப்பம் தேவை இல்லையா? ஒரு பெண்ணைப் பார்க்க வா என்று அழைப்பு விடுத்து விட்டு இன்னொரு பெண் ணைக் கல்யாணம் பண்ணிக்கோ என்று சொன்னால் அவங்க சம்மதிக்கத் தேவை இல்லையா?'' என்று கேட்ட பவித்ராவை வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

''ஒத்துக் கொள்வதும் ஒத்துக் கொள்ளாததும் அவங்க இஷ்டம். நான் அத்தையிடம் பேசுகிறேன். கொஞ்சம் நேரம் நீ சும்மா இரு'' என்று பவித்ராவிடம் சொல்லி விட்டு சாவித்திரியிடம் திரும்பினான்.

"இந்த மாதிரி முந்திக்கிட்டு என்ன பேசுறோம் என்று தெரியாமலேயே வார்த்தைகளை அள்ளி விடுகிறாய். நான் சொல்றதை யோசிங்க. இவன் என்னை கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாக இப்படி தடாலடியாகச் சொல்லி விட்டான் என்று ரெண்டு திட்டு திட்டி விட்டு, அவங்களுக்காக, அவங்க கௌரவத்துக்காக, நூறு வயதில இருந்து உங்களின் கண்ணுக்கு கண்ணா எடுத்து வளர்த்த சந்தியாவை, பவித்ராவுக்கு போடுவதா சொன்ன அதே நகையைப் போட்டு கல்யாணம் பண்ணித் தரத் தயாரா இருப்பதா நீங்க ஒரு வார்த்தை சொல்லிட்டால் ஒன்னுக்கு ரெண்டா கல்யாணம் ஒரே மேடையில் நடந்துடும்..." என்று சொன்ன பவித்ரா சாவித்திரி இருவரின் முகமுமே யோசனையில் ஆழ்ந்தது.

"அவங்க ஒத்துக் கொள்ளவில்லை என்றால்..." என்று யோசனையின் நடுவே தயக்கமாக சாவித்திரியின் கேள்வி வந்தாலும், அவன் சொன்ன யோசனையின் சாதக பாதகங்களை அலச ஆரம்பித்து இருந்தது அவரின் மனம்.

"நஷ்டம் நமக்கு இல்லை அத்தை. நாளைக்கு உங்களை ஒருத்தர் விரல் நீட்டிக் குற்றம் சொல்லக்கூடாது. எனக்கு அவ்வளவு தான் வேண்டும். நான் வந்து நடுவில் குழப்பியதால் உங்களுக்கு ஒரு கெட்ட பேர் வந்துவிடக் கூடாது என்பதற்காக தான் இதைச் சொல்றேன். முயற்சித்து பார்ப்பதில் தப்பில்லையே அத்தை? கல்லை விட்டு எறியலாம். போனால் கல். வந்தால் மாங்காய். அதுவும் ஒன்னு ரெண்டு இல்லை. மூணு..."

"புரியலையே..." என்று விசாரித்த சாவித்திரி ஒரு பக்கம் நூறு சதவிகிதம் தன் திட்டத்திற்கு சம்மதம் என்று



[illegible] சொல்லி விட்டதை கிருஷ்ணாவால உணர முடிந்தது.

"பவித்ராவுக்கு ராஜீவனைப் பிடிக்கலை என்று சொன்னதற்கு என்ன காரணம் என்பதை இந்நேரம் நீங்க யூகித்து இருப்பீர்கள். அவளுக்குப் பிடிச்ச மாப்பிள்ளைக்கு அவளை கல்யாணம் செய்து கொடுப்பது தான் முதல் மாங்காய்..." என்று சொல்லும்போதே பவித்ராவின் முகத்தை ஆராய்ந்தான். அங்கே மறுப்பில்லை. சாவித்திரியின் முகத்திலும் ஆமோதிப்பு இருந்தது.

"மதித்து வீட்டுக்கு வரவழைச்சு எங்களை அவமானப் படுத்திட்டாங்க என்று குற்றம் சொல்லவோ, [illegible] கொள்ளவோ, மிலிட்டரி ஆபீசர் குடும்பத் [illegible] வாய்ப்பு இல்லாமல் பண்ணிட முடியும். ஆனால் இப்ப நான் சொல்லப் போகும் மூன்றாவது மாங்காய் ரொம்ப முக்கியமானது..." என்று இடைவெளி விட்டான் கிருஷ்ணா.

"இப்ப நான் சொல்லப் போறதை கேட்டு நீங்க என் மேலே கோபப்படக்கூடாது. இது நிறையப் பேர் உங்க மேலே வச்சு இருக்கும் அபிப்ராயம். அந்தத் தப்பபிப்ராயத்தை போக்க நமக்குக் கிடைச்ச வாய்ப்பா இதை நான் பார்க்கிறேன். நாம ராஜீவனுக்கு சந்தியாவை திருமணம் செய்து வைத்து விட்டால், சந்தியாவை நீங்க ரொம்பக் கொடுமை படுத்துவதா ஊர் முழுக்க பரவி இருக்கும் கெட்ட பேரை ஒழிச்சுக் கட்டி விடலாம். என்ன அத்தை சொல்றீங்க?" என்று கிருஷ்ணன் முடித்த போது, சாவித்திரியின் முகத்தில் சம்மதம் ஒளிர்ந்தது. மனதில் நம்பிக்கையோடு, கிளம்பி வரச் சொல்லி ராஜீவனுக்கு தன் மொபைலில் இருந்து குறுஞ்செய்தி அனுப்பியவன்

Optimized by www.ImageOptimizer.net

புன்னகையோடு சோபாவில் சாய்ந்து அமர்ந்து, அந்த கடினமான கல்லை மேலும் கரைக்கப் பேச்சை தொடர்ந் தான்.

* * *

ஹோட்டல் அறையில் டி.வி.யில் சேனலை மாற்றி மாற்றிப் பார்த்தபடி பொறுமையின்றி காத்திருந்த ராஜீ வன் எஸ்.எம்.எஸ். வந்த ஒலி கேட்டதும், "கிளம்ப லாம்பா. கிருஷ்ணாவிடம் இருந்து மெசேஜ் வந்தாச்சு..." என்று உற்சாகமாகச் சொன்னான்.

"கிருஷ்ணா என்ன தகவல் சொல்லி இருக்கான் என்று முதலில் சொல்லு. பவித்ரா ஒத்துக் கொண் டாச்சா? அவங்க அம்மா சம்மதம் சொல்லிட்டாங்களா? சந்தியாவைப் பார்த்துப் பேசியாச்சா?" என்று இருந்த இடத்தில் இருந்து அசையாமலே கேள்விகளை அடுக் கிய அப்பாவைப் பார்த்துப் புன்னகை செய்தான் ராஜீவ்.

"அப்பா! நீங்க கேட்கறது ரொம்ப ஓவர் என்று உங்களுக்கே நல்லாத் தெரியும். இது என்ன ஸ்விட்சைத் தட்டினால் விளக்கெரியும் சமாச்சாரமா? மனித உணர் வுகள் சம்பந்தப்பட்டது, சிக்கலானது. ஓரளவிற்கு சமாளிச் சுட்டான். ஒரே ஆளாக இருப்பதை விட கூட நாலு பேர் இருந்தால் தீர்வை எட்டுவது சுலபமா இருக்கும் இல் லையா? நாம் கிளம்பலாம்" என்று அப்பாவிடம் வாதத் திற்குத் தயாரான ராஜீவனை கை காட்டி அமைதி படுத்தினார் விமலா.

"கிளம்பலாம் ராஜீவ். நாம் அங்கே போகும்போது சந்தியா அங்கே இருப்பது ரொம்ப அவசியம். அவள் அங்கே இருக்காளா?"



"சரேக்டான சந்தேகம் உங்களுக்கு மட்டும் எப் படிம்மா வருது? இப்போதைக்கு இல்லை நாம் போவ தற்குள் வந்து விடுவாள் என்று எதிர்பார்க்கலாம்" என்று சொல்ல விமலாவும் மணிகண்டனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்னடா சொல்ற?" என்று ஒரே குரலில் கேட்ட வர்களுக்கு, "காரில் போயிட்டே பேசலாம். வாங்க..." என்று சுருக்கமாக பதில் சொல்லி விட்டுக் கிளம்பி நடந்தவனை வேறு வழி இன்றித் தொடர்ந்தனர்.

"கிருஷ்ணாவை உனக்கு எப்படித் தெரியும்? அவனைப் பற்றி என்னிடம் நீ இந்த மூணு வருஷத்தில் சொன்னதே இல்லையே?" என்று விசாரணையைத் தொடர்ந்தார் விமலா.

"மூணு நாளைக்கு முன்னால் தெரிந்தவரைப் பற்றி எப்படிம்மா மூணு வருஷம் முன்னாடிச் சொல்ல முடியும்?" என்ற ராஜீவனின் கேள்வி முடியும் முன்பே மணிகண் டனின் கேள்வி கணையாகப் பாய்ந்து வந்தது.

"மூன்று நாட்கள் முன்பு பழக்கமான ஒருவனை நம்பி உன் எதிர்கால வாழ்க்கையை ஒப்படைத்து இருக்கிறாயா ராஜீவ்? என்னடா இதெல்லாம்...?"

"அப்பா! மேனேஜ்மெண்டில் வின்-வின் சூழ்நிலை அப்படின்னு சொல்வாங்க சம்பந்தப்பட்ட ரெண்டு பேருக்குமே சாதகமான விஷயங்கள் நடக்கும். மூணு நாளைக்கு முன்னால் அவன் என்னைப் பார்க்க வந்த தற்குக் காரணமே, பவித்ராவை பிடிக்கலை என்று சொல் லிடுங்க என்று கேட்டுக் கொள்ளத்தான்..." என்று அவன் சொல்ல 'ஓ!' என்ற வியப்பு குரல் மணிகண்ட னிடம் இருந்து எழுந்தது.

Optimized by www.ImageOptimizer.net

"நான் என் பவித்ராவைப் பிடிக்கலை என்று சொல்லணும்? நீங்களே நேரில் வந்து உங்க அத்தையிடம் 'எனக்கு பவித்ராவை பிடிச்சு இருக்கு' என்று என்னைகோ சொல்லப் போற உண்மையை இன்னிக்கே சொல்லிடுங்க என்று சொன்னேன். யோசித்தார். அப்பாவிடம் பேசினார். ஓகே சொல்லிட்டார். இப்ப புரியுதா?"

"அதெல்லாம் சரி தான் ராஜீவ். ஆனால் பவித்ராவுக்கு அவனைப் பிடிச்சு இருக்கா என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"அந்த கிளியரன்ஸ் தான் இப்ப கிடைச்சாச்சு என்று சொல்லி இருக்கான் அம்மா. என்னம்மா நீங்க என்னை கேள்வி கேட்பதிலே குறியா இருக்கீங்க ரெண்டு பேரும்? என் வாழ்க்கையைப் பத்தின அக்கறை எனக்கு இருக்காதா?" என்று வேகமாகக் கேட்டான்.

"டேய்! நீ நல்லா இருக்கணும் என்ற எண்ணம் எங்களுக்கும் இருப்பதால் தான், உணர்ச்சிப் பூர்வமா யோசிக்கும்போது உனக்குத் தோன்றாத சில விஷயங்கள் எங்களுக்குக் கண்ணில் படும் என்பதால் தான் இந்த மாதிரிக் கேள்வி கேட்கிறோம். அதை முதல்லே புரிஞ்சுக்கோ" என்று அதட்டலாகச் சொன்னார் மணிகண்டன்.

"புரியுதுப்பா. ஆனாலும் ஒன்றுமே தெரியாத பச்சைக் குழந்தை மாதிரி ட்ரீட் பண்ண வேண்டாம் என்று தான் சொல்றேன். என்ன தெரியணும் உங்களுக்கு? கேளுங்க"

"ரெண்டு விஷயம் எனக்குத் தெரிஞ்சால் போதும். நீ சொல்ற மாதிரி பவித்ராவுக்கும், அந்த கிருஷ்ணாவைப் பிடித்து இருந்தாலும், அவங்க அம்மா ஒத்துக்



கொள்ளணும். அடுத்து சந்தியா உன்னைப் பிடிச்சு இருக்கு என்று ஒத்துக் கொள்ளணும். அவ்வளவு தான்..."

"சாவித்திரி ஆன்ட்டியை சம்மதிக்க வைப்பதை கிருஷ்ணா பார்த்துப்பான். சந்தியாவை சம்மதிக்க வைப்பதை சாவித்திரி ஆன்ட்டி பார்த்துப்பாங்க..." என்று அவன் சொன்ன இலகுவான தொனியில் இருவருமே சட்டென்று வாய்விட்டுச் சிரித்தனர்.

"உன் வாழ்க்கை பூராவும் தீர்மானிக்கக் கூடிய முக்கியமான திருமண விஷயம் பேசும் போது, இவ்வளவு கூலா பதில் சொல்றது இந்த உலகத்துலேயே நீயா தான்டா இருக்கும்..." என்று சிரித்து முடித்து விட்டு விமலா சொல்ல அவன் புன்னகைத்தான்.

"என்னோட இன்ஸ்பிரேஷனே நீங்க தான்மா. தலை மேலே இடியே விழுந்தாலும், இடி தானே பரவாயில்லை டேமேஜ் கம்மியா தானே இருக்கு என்று மனதை தேற்றிக் கொள்ளும் உங்களோட பையன் நான். வேறே எப்படி இருப்பேன்?" என்று முடித்த மகனைப் பெருமையாகப் பார்த்துத் தோளைக் குலுக்கிக் கொண்டார் விமலா.

"ராஜீவ், ஜோக்ஸ் அபார்ட் என் இரண்டு கேள்விக்கும் பதில் சொல்லு."

"இன்றே கல்யாணம் முடிக்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லைப்பா. அவங்க சம்மதம் இல்லாமல் என் கல்யாணம் நடக்காது. இப்ப வீட்டுக்குப் போனதும் நீங்களே அவங்களிடம் சம்மதத்தைக் கேட்டுக் கொள்ளலாம். போதுமா?" என்று நம்பிக்கையோடு சொன்னதை அரை மனதாக ஏற்றுக் கொண்டார் மணிகண்டன்.

அவர் தன் குடும்பத்தோடு அந்த வீட்டிற்குள் நுழைந்த போது, ''மன்னிச்சுடுங்க அத்தை. எனக்கு இப்போ கல்யாணம் பண்ணிக் கொள்ளும் உத்தேசமே இல்லை. நான் படிக்கப் போறேன். என்னைக் கட்டாயப் படுத்த தீங்க. ப்ளீஸ்...'' என்று தீர்மானமாக ஒலித்த குரல் சந்தியா வினுடையது என்பதை உணர்ந்ததும் திகைத்து நின்றா

## 21

''அத்தை, நான் பவித்ராவை பக்கத்துக்கு தெரு முனையில இருக்க கடைக்கு அழைச்சுட்டுப் போய் அவளுக்குப் பிடிச்ச மாதிரி ஒரு நல்ல புடவை வாங்கிட்டு, அரை மணி நேரத்தில வந்திடறேன். நீங்க சந்தியா எங்கே போய் இருந்தாலும், சாமி கும்பிட்டது போதும் பவித்ராவுக்குக் கல்யாணம் முடியுறதுக்குள்ளே வந்து சேரு என்று தகவல் கொடுங்க. நான் சொன்ன விஷயத் தையும் அவள் காதில் போட்டு வைங்க. ராஜீவ் வருவதற்குள் நான் வந்து விடுவேன். கவலைப்படா தீங்க'' என்று ஒரேயடியாக அனுமதி கேட்கிற மாதிரியும் இல்லாமல் தகவல் சொல்கிற மாதிரியும் இல்லாமல் சமாளித்துச் சில நிமிடங்களில் அவளின் கையைப் பற்றி இழுத்து வெளியே சென்று விட்டான் கிருஷ்ணா.

அவன் இழுத்த இழுப்புக்கு அவனைப் பின் தொடர்ந்து வந்து விட்டாலும், வீட்டை விட்டு வெளியே வந்த நிமிடத்தில் தன் கைகளை அவனின் பிடிக்குள் இருந்து வேகமாக உருவிக் கொண்டு அவனை எரித்து விடுவது போல முறைத்தாள் பவித்ரா.



''அம்மாடி! எதுக்கு இவ்வளவு கோபம்? பார்த்தால் ... இருக்கே!'' என்று சிரிக்க அவளின் முறைப்பு ... கூடியது.

''இந்த நடிப்பெல்லாம் எங்க அம்மாகிட்டே வச்சுக் ... இங்கே எதுக்கு யார் சொல்லி எப்படி வந்தீங்க? ... உண்மையைச் சொல்லுங்க'' என்று கறாராகக் கேட்டாள் பவித்ரா.

''எஞ்சினியர் மேடம் கட் அண்ட் ரைட்டா பேசு ... உங்க சந்தேகத்தை எல்லாம் பேசித் தீர்க்கதான் ... உங்களைத் தனியே அழைத்துக் கொண்டு வந்து இருக்கேன். பின்னால் மல்லிகைப் பந்தலில் உட்கார்ந்து பேசலாமா? இப்ப வெயில் கூட இருக்காது வா...'' என்று அவள் உருவிக் கொண்ட கையை இழுத்துத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தவன் பின்புறத் தோட்டத்தை நோக்கி நடந்தான்.

''நானே வரேன்... ப்ச்! கிருஷ்ணா... இதென்ன பழக்கம்..? விடுங்க... ப்ளீஸ்... அங்கே... அம்மாகிட்டே... கடைக்குப் போய்...'' என்று அவனின் பிடியில் இருந்து விலக முயன்றபடி பேசியதில் முன் பாதி அவன் காது களில் ஏறியதாகத் தெரியவில்லை.

''உனக்குக் கொடுக்க வேண்டிய புடவை காரிலேயே இருக்கு. கவலைப்படாதே...'' என்று பின் பாதி கேள் விக்கு பதில் சொன்னவன், மல்லிகை பந்தலின் கீழே இருந்த சின்ன திண்டில் அமர்ந்து அவளை இழுத்து அருகே அமர வைத்த பின்பும் கைகளை விடவில்லை.

''இப்ப உன் கேள்விகளை எல்லாம் அள்ளி விடு. டாண் டாண் என்று பதில் சொல்றேன்...''

Optimized by www.ImageOptimizer.net

''முதலில் கையை விடுங்க. இப்படித்தான் விருப்ப இல்லாத ஒரு பொண்ணு கையை பிடிச்சுத் தர தர என இழுத்து வருவதா? கொஞ்சமாவது மானர்ஸ் வேண் டாம்?''

''என்ன பவி கதையை மாத்துற? நான் எனக்கு விருப்பம் இருக்க பொண்ணு கையை பிடிச்சுதான் இழு தேன். நான் உங்க அம்மாவிடம் கூட அப்போ சொ னேனே. கவனிக்கலையா நீ?''

''போதும். பத்து நிமிஷம் சீரியஸா பேசறீங்களா?''

''ஓகே சொல்லு... உனக்கு இப்ப என்ன தெரியணும்?''

''நீங்க இப்போ இங்கே யார் சொல்லி எதுக்கா வந்தீங்க என்று தெரியணும். நாலு வருஷமா இல்லாத அக்கறை திடீர் என்று எப்படி வந்தது என்று தெரியணும் சந்தியா ராஜீவ் கல்யாணத்துல உங்களுக்கு என்ன வேல என்று தெரியணும். முதலில் இந்த மூன்று கேள்விக்கு பதில் சொல்லுங்க.

''யார் சொல்லியும் நான் இங்கே வரலை பவித்ரா உன்னைக் கல்யாணம் பண்ணிக்க...''

''பொய்...''

''நான் ஏன் பொய் சொல்லணும்? இது உண்மை நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம்...''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிற எண்ணம் எப்போ வந்தது உங்களுக்கு...?''

''உங்க அப்பா இறந்த வீட்டுல உங்க அம்மா சந்தியாவையும் அவங்க அம்மாவையும் படுத்தின பாட்டுக்கு ஆதரவா நீ சந்தியாவை சமாதானப்படுத் தினதைப் பார்த்தேன். அப்ப மனசு சலனப்பட்டுச்சு...'' என்றபோது அவள் விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தது.



''... அடுத்த வருஷம் காலேஜில் பார்த்தபோது ரொம்ப உன்னைத் தேடியது. திரும்பத் திரும்பப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது. எனக்கு இருபத்தி ரெண்டு வயசு. உனக்கு பதினெட்டு வயசு. அந்த வயசில எதுக்குச் சொல்லணும் என்று உன்னை தவிர்க்க நினைத்தேன். படிக்கும் காலத்தில் உன்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று நினைத்தேன்...'' என்ற போது வியப்பு பெருமிதமாக மாறியது.

''... காலேஜை விட்டுப் போன பிறகும் உன் முகம் மறக்கவில்லை. நீ என் மனசில் பதிந்து விட்டாய் என்பதைப் புரிந்து கொண்டேன். தொடர்ந்து உன்னைப் பற்றிய தகவல்கள் உன்னுடைய க்ளாஸ்மேட் ரஞ்சன் மூலமாக சேகரித்தேன். உன் கல்யாண ஏற்பாடு நடக்கும் தகவல் என் காதில் கிடைத்ததும் வந்து விட்டேன். அவ்வளவுதான்...'' என்று முடித்தபோது சந்தோஷமாக இருந்தாலும் அவனைச் சீண்டிப் பார்க்கும் ஆவல் வந்தது.

''ராஜீவன் என்னைப் பார்க்க வருவது முடிவாகி மூன்று மாதம் ஆகப் போகிறது. இத்தனை நாள் என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க?'' என்று கேட்டு, இத்தனை நாள் அவன் தன் நேசத்தை தன்னிடம் வெளிப்படுத்த வில்லை என்ற கோபத்தை, வெளிக்காட்டினாள்.

''முதல் கேள்விக்கான உன்னுடைய பதில் ஏற்கப்பட்டு விட்டது கிருஷ்ணா. வெல்டன்'' என்று வலது காதை உயர்த்தி உற்சாகமாகச் சொல்ல அவளுக்கு புன்னகை மலர்ந்தது.

''உன்னுடைய கடைசி எக்ஸாம் முடிஞ்சு ரெண்டு வாரம் தான் ஆகுது. உன் படிப்பு முடிஞ்சதும் வரலாம்

என்று இருந்தேன். கட்டிடம் திறப்பு விழாவிற்கு ரெடியாகி கொண்டு இருந்தது. ராஜீவன் வருவதும் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. அதனால இந்த ப்ராஜெக்டோட பைனல் செட்டில்மென்ட் முடித்து ஒரு பெரிய பரிசோடு வரணும் என்று நினைத்தேன்...'' என்று சொன்ன வினாடியில் அவ்வளவு நேரம் முகத்தில் இருந்த இலகு தன்மை மாறி, பவித்ராவின் கண்களில் கண்ணீர் பொங்கி வழிய கிருஷ்ணா பதறினான்.

''ஹேய் பவி! என்ன கண்ணுல தண்ணி? பவி, இங்கே பாருடா... என்ன ஆச்சு?'' என்று அவள் கன்னத்தைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பி வருடி பதட்டத்தோடு விசாரித்தான்.

''தொடாதீங்க...'' என்று அவன் கையைக் கோபத்துடன் தட்டி விட்டவளை சில கணங்கள் வெறித்தவனுக்கு அவளின் கோபத்திற்கான காரணம் சற்று தாமதமாகவே புரிந்தது.

''ஹேய் சாரி பவித்ரா, நான் சொன்ன பரிசு என்ற வார்த்தை உன்னைக் காயப்படுத்தி விட்டதா? ஐ ஆம் சாரி, எக்ஸ்ட்ரீம்லி சாரி டியர், எப்படி மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சொல். அப்படிக் கேட்கிறேன். ஆனால் அந்த மன்னிப்பு கேட்பதற்கு முன்னால் ஒரு விஷயம் நீ தெளிவா புரிஞ்சுக்கோ. நான் சொன்ன நகை பரிசு உன் அம்மாவை மனதில் வைத்துச் சொன்னது...'' என்று சொல்லி நிறுத்தி, அவள் நிமிர்ந்து முறைத்த பிறகே, ''அப்படி ஏதாவது ரியாக்ஷன் காட்டினால் தானே என் பேச்சைக் கேட்கிறாயா இல்லையா என்று எனக்குத் தெரியும்'' என்று புன்னகை செய்து விட்டு பேச்சைத் தொடர்ந்தான்.



''ஒரு காரியம் நடைபெற, சாம பேத தான தண்டம் என்று நான்கு வழிமுறைகள் கடைப்பிடிக்கலாம் என்பது நடைமுறையில் இருக்கு. நான் ஒன்றும் புதிதாகக் கண்டு பிடிக்கவில்லை பவித்ரா. அதுல உங்க அம்மாவிற்கு தானம் என்ற முறையை தேர்ந்தெடுத்தேன். அதை நீ தப்பா எடுத்துக்க வேண்டியதில்லை பவி. பெண்ணைக் கல்யாணம் பண்ண பணம் வாங்குவது தான் கேவலமான செயல். பொன் கொடுப்பது தப்பில்லை என்பது என் கருத்து...''

''ஆனால்...''

''ஆனால் அது உன் மனசைக் காயப்படுத்தி இருக்கும் பட்சத்தில் மன்னிப்பு கேட்க நான் தயங்கவில்லை' என்றவன் திண்டை விட்டு இறங்கி அவள் காலடியில் தரையில் மண்டியிட்டு கரத்தை நீட்டி, ''எப்படி மன்னிப்பு கேட்கணும் என்று சொல். கேட்கிறேன்'' என்று வருத்தமான பாவனையுடன் சொல்ல அவளின் முகம் மெல்ல இளகியது.

''ப்ச்! என்ன இது? மேலே உட்கார்ந்து பேசுங்க...'' என்று நீட்டிய அவன் கரத்தைப் பற்றித் தூக்க முயற்சி செய்தாள் பவித்ரா.

''இரண்டாவது கேள்விக்கு என் பதில் ஓகே என்று சொன்னால் தான் எழுந்திருப்பேன்.'' என்று அவளின் இளகிய மனம் புரிந்து அடம் பிடிக்க, ''கீழே தாராளமா உட்கார்ந்து இருங்க. எனக்கென்ன நஷ்டம்?'' என்று அந்தக் கையை தொப் என்று விட்டாள்.

''ஆஹா! இதுதான் அதிர்ஷ்டம் வாசல் கதவைத் தட்டும்போது கோட்டை விடுவது போல. இந்த மாதிரி ஒரு தப்பை இனி எப்போதும் செய்யாதே கிருஷ்ணா!''

Optimized by www.ImageOptimizer.net

என்று தனக்குத் தானே சொல்லி, எழுந்து அவள் அருகே தோளை உரசினாற் போல நெருங்கி அமர்ந்தான்.

"மூன்றாவது கேள்விக்குப் பதிலை, ரெண்டடி தள்ளி உட்கார்ந்து சொல்லுங்க பார்ப்போம்" என்று அவனை விலக்க பவித்ரா செய்த பலவீனமான முயற்சி வெற்றி பெறவில்லை.

"ராஜீவன் - சந்தியா கல்யாணம் நடப்பதனால் எனக்கு என்ன லாபம் என்று கேட்கிறாய். இந்தக் கேள்வியை நீ கேட்கலாமா? ராஜீவன் என் வழியை விட்டு விலகினால் தானே எனக்கு நீ கிடைப்பாய். எனக்குக் கிடைக்கப் போகிற மிக பெரிய பொக்கிஷம் நீ. அவ்ளோ தான்.." என்று சொன்னவன் முதுகில் ஒரு அடி வைத்தாள்.

"நான் கூட இத்தனை நாளா சந்தியாவிற்கு செய்யததை ஈடு கட்ட உங்க தங்கைக்கு நல்ல இடத்தில் மாப்பிள்ளை பார்த்து இருக்கீங்க என்று நினைத்தால் இப்படி கவுத்துட்டீங்க" என்று ஒரு அடி வைக்க, அவன் புன்னகை செய்தான்.

"நான் அத்தையிடம் பேசியதை முழுசா கேட்டு இருந்தால் இந்த சந்தேகம் வந்து இருக்காது பவி..."

"அம்மாவைப் போட வைத்த நகையை சொல்றீங்க என்று நினைக்கிறேன். நகைக்காக அவள் மேல் அன்பு வைத்தால்..."

"நீ தப்பாப் புரிந்து கொண்டாய். அவளுடைய நல்ல வாழ்க்கையில் எனக்கும் அக்கறை இருக்கு. நான் நகையை மட்டும் சொல்லவில்லை பவி. ராஜீவ் லவ்வுறார். அதை அவரே என்னிடம் சொன்னார். படித்த பண்பான, நல்ல மனுஷன் பவி. நீயும் பேசினால் அவரைப்



பற்றித் தெரிந்து கொள்வாய்..." என்று ராஜீவன் புகழ் பாடும்போது வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்க, "அவங்க வந்துட்டாங்க கிருஷ்ணா" என்று சொல்லியபடி பவித்ரா எழுந்தாள்.

"போகலாம். முதலில் நம்முடைய மேட்டரை முடி. அப்பத்தான் நிம்மதியா அங்கே போய் சந்தியா - ராஜீவ் கல்யாணம் பற்றிப் பேச முடியும். இன்னும் ஏதாவது கேள்வி இருக்கா?" என்று இருந்த இடத்தில் இருந்து அவளை எழ விடாமல் பற்றி அழுத்தியபடி மிரட்டலாகக் கேட்டான் கிருஷ்ணா.

"முதலில் கையை விடுங்க. சந்தியா வேறே வீட்டில் இல்லை. அம்மா அவர்களிடம் ஏதாவது ஏடாகூடமா பேசிட்டால் பிரச்னையாகி விடும்."

"சந்தியா வந்து அஞ்சு நிமிஷம் ஆச்சு. கார் வருவதற்கு முன்னால் ஒரு ஆட்டோ வந்தது. அதை கவனிக்கலையா நீ?"

"ஆட்டோவா.. எப்போ?"

"ம்ம்ம்.. அழுகின ஆப்பிள் பழம் வேண்டும் என்று கொஞ்சம் முன்னாடி அழுதாயே அப்போ..." என்று அவள் அவனை மாதிரியே நடித்துக் காட்ட, அவன் முதுகில் மீண்டும் ஒரு அடி வைத்தாள்.

"போதும் விளையாட்டு. வாங்க போகலாம்..."

"ஏதாவது கேள்வி இருக்கா என்று நீ சொல்லவே இல்லையே?"

"ஹய்யோ சாமி. ஒன்னும் இல்லை. ஆளை விடுங்க.."

"ஆளை விடுறதுக்காகக் கேட்கலை. நீ கதையை மாத்தாதே! ஆளை என் கூட கடைசி வரை பிடிச்சு

வச்சுக்கறதுக்காகக் கேட்கறேன். நீ சொல்றதை எல்லாம் கேட்கிறேன். இதுக்கு எல்லாம் பின்னாலே ஏதாவது ரிவார்ட் இருக்கணும் ஞாபகம் வச்சுக்கோ'' என்று சிரித்தபடி எழுந்தான்.

* * *

வீட்டில் இருந்து கிளம்பி மருதமலை வந்த சந்தியாவிற்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற் போல இருந்தது. அவள் ஏன் சென்னைக்குக் கிளம்பினாள்? அத்தை கேட்ட நகையைக் கொடுத்து விட்டு சிவனே என்று இங்கேயே தங்கி இருந்து இருக்க வேண்டும்.

ஒரே வாரத்தில் எத்தனை சம்பவங்கள் நடந்து அவள் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டு விட்டதே என்று தன்னைத் தானே நொந்தபடி முருகன் சந்திதிக்கு எதிரே ஓரமாக ஒரு தூணில் சாய்ந்து கண் மூடி அமர்ந்து இருந்தாள். கைப்பையில் இருந்து மொபைல் அழைக்க அவசரமாக கண்களைத் திறந்து பார்த்தாள். அழைத்தது ராஜீவ். மணி பதினொன்றரை. மூன்று மணி நேரமாக ஒரே இடத்தில் இப்படி அமர்ந்து இருக்கிறாள்?

இவன் இந்த நேரத்தில் இவன் எதற்கு தன்னை அழைக்கிறான்? தான் இங்கே இருப்பது அவனுக்கு மட்டுமில்லை பவித்ராவுக்கும் அத்தைக்கும் கூடத் தெரிய வாய்ப்பில்லை அதனால பதில் சொல்லாமலேயே இருந்து விடலாம் என்று விட்டாள். மூன்று முறை அழைப்பு முழுசாக வந்து நின்றது. சில நிமிடங்கள் இடைவெளிக்கு பின்பு அலைபேசியில் குறும் செய்தி வந்தது.

''நான் இந்த மொபைலை உனக்குக் கொடுத்த போது இதை எப்போதும் உன் கையிலேயே வைத்திரு என்று



சொல்லி இருந்தேன். என் வார்த்தைக்கு உன்னிடம் மரியாதை இருக்கிறது என்று இப்போதும் நம்புகிறேன். இது உன் கையில் இருந்தால், நீ இந்த செய்தியை வாசித்தால், உடனே வீடு வந்து சேர். நமக்குக் கல்யாணம் நடப்பதும் நடக்காததும் முழுக்க முழுக்க வேறு விஷயம். வாழ்க்கையில் வரும் பிரச்னைகளைத் தைரியமாக எதிர் கொள்வதை விட்டு விட்டு ஓடி ஒளிவதால் யாருக்கு என்ன லாபம்? நான் என் பெற்றோருடன் உனக்காக உங்கள் வீட்டில் காத்திருக்கிறேன். அவர்களின் கௌரவம் காக்க வீட்டுக்கு வருவாய் என்று நம்புகிறேன்'' என்ற ராஜீவனின் செய்தியைப் படித்த பிறகு என்ன செய்வது என்று புரியவில்லை.

போகலாமா வேண்டாமா என்று மனதிற்குள் ஒற்றையா இரட்டையா போட்டு பார்த்துக் குழம்பிக் கொண்டு இருந்தவளை தெளிய வைக்க இந்த முறை அத்தையிடம் இருந்து போனில் அழைப்பு வந்தது. அத்தைக்கு தன் நம்பர் எப்படித் தெரியும் என்று குழம்பியபடி போனை அழுத்த, ''சந்தியா, நான் அத்தை தான் பேசறேன். நீ எங்கே இருக்க?'' என்று கேட்க அவள் பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தாள்.

''என்னிடம் பேச உனக்குப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும். ஆனால் பவித்ரா மேல் உனக்கு அக்கறை இருந்தால் உடனே கிளம்பி இங்கே வா. பவித்ரா கல்யாணம் நல்லபடியா நடக்கணும் என்று உன்னை வெளியே போகச் சொன்னேன். இப்ப அதே காரணத்திற்காக உன்னை உடனடியா வீட்டுக்கு வா என்று கேட்கிறேன். நீ எங்கே இருந்தாலும் சரி, இன்னும் அரை மணி நேரத்தில் இங்கே இருக்கணும்'' என்று முடித்து



Optimized by www.ImageOptimizer.net

விட்டு பதிலை எதிர்பாராமல் போனை வைத்து விட்டார்.

ராஜீவன் எதையாவது பிரச்னையைக் கிளப்பி, குழப்பிய குட்டையில் மீன் பிடிக்கக் காத்திருக்கிறானா? அவன் முகத்தைப் பார்த்து தன் மறுப்பை சொல்ல முடியுமா என்ற தயக்கம் கால்களைக் கட்டிப் போட்டாலும், பவித்ராவின் கல்யாணம் நல்லபடியாக முடிய என்ற சாவித்திரியின் வார்த்தைகளும், 'என் பெற்றோரின் கௌரவம் காக்க' என்ற ராஜீவனின் வார்த்தைகளும் அவளை மருத மலையில் இருந்து வீடு திரும்ப வைத்தது.

அவள் ஆட்டோவில் வந்து இறங்கிய போது அங்கே நிலவிய அமைதி அவளை ஆச்சரியப்படுத்தியது. உள்ளே அடி எடுத்து வைத்த உடனே ஹால் சோபாவில் தனியாக இருந்த அத்தை எழுந்து வந்து, ''பவித்ரா கல்யாணம் நல்லபடியா நடக்க நீ ராஜீவனை கல்யாணம் பண்ணிக் கொள்வாயா?'' என்று கேட்ட கேள்வி அவளை அதிர வைத்தது.

இதென்ன தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் இப்படி ஒரு கேள்வி? பவித்ரா எங்கே? ராஜீவன் பெற்றோருடன் காத்து இருப்பதாகச் சொன்னானே? அவர்கள் எங்கே?

''என்ன அத்தை திடீர் என்று இப்படிக் கேட்கறீங்க? முதலில் பவித்ரா எங்கே?'' என்று குழப்பத்துடன் விசாரிக்க முயன்றவளுக்கு பதில் ஏதும் கிடைக்கவில்லை.

''உன்னிடம் நான் இதுவரை எதையாவது கேட்டு இருக்கேனா? இப்ப பவித்ராவிற்காக இதை நீ செய்யக் கூடாதா? சரி என்று சொல் சந்தியா...'' என்ற



அத்தையின் கேள்விக்கு 'சரி' என்று சொல்லத் துடித்த மனதை அடக்கி, 'இல்லை அத்தை இப்போதைக்கு கல்யாணம் பண்ணிக் கொள்ளும் எண்ணம் எனக்கு இல்லை. நான் மேலே படிக்கப் போறேன் என்ற வார்த்தைகளைச் சொல்வதற்குள் திணறித் திண்டாடிப் போனாள் பவித்ரா.

## 22

சந்தியா தனக்கு தற்போதைக்கு திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை என்று சொன்னதைக் கேட்டு வாசலில் மணிகண்டன் திகைத்து நிற்க, அவரைத் தோளில் லேசாக இடித்தார் விமலா.

''வாசலிலேயே நின்று என்ன செய்றீங்க? உள்ளே போங்க...'' என்று கண்ணால் ஜாடை காட்ட, அவரின் பின்னால் நின்ற ராஜீவன் ஓரடி இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டி, ''சந்தியா, உன்னுடைய பதிலை பாராட்டுகிறேன்...'' என்று சொல்லத் திரும்பிப் பார்த்த சந்தியா, சாவித்திரி மட்டுமில்லாமல், விமலாவும் மணிகண்டனும் கூட ஒரு வினாடி திகைத்தனர். முதலில் சுதாரித்தது சாவித்திரிதான்.

''வாங்க வாங்க, உங்களைத்தான் எதிர்பார்த்துக் காத்திருந்தோம். கிருஷ்ணா தம்பி தான் நீங்க கொஞ்ச தாமதமா வருவதா சொல்லுச்சு. உள்ளே வாங்க. சந்தியா, குடிக்கத் தண்ணி முதலில் எடுத்துட்டு வாம்மா'' என்று இயல்பாக வரவேற்பினை முடித்து சந்தியாவையும்

Optimized by www.ImageOptimizer.net

தற்காலிகமாக அந்த இடத்தில் இருந்து அப்புறப் படுத்தினார் சாவித்திரி.

''கிருஷ்ணா ராஜீவ் பிரெண்ட். அதான் தகவல் சொல்லி அனுப்பினோம். இப்போ அவர் இல்லியா?'' என்று கேட்டபடி விமலா புன்னகையோடு உள்ளே வந்து சோபாவில் அமர மணிகண்டன், 'இவங்க ரெண்டு பேரும் இன்னும் என்னென்ன சர்ப்ரைஸ் வச்சு இருக்காங்களோ தெரியலையே' என்ற குழப்பத்துடன் தொடர்ந்தார்.

''தம்பிக்கு சந்தியாவை ஏற்கனவே தெரியுமா?'' என்ற சாவித்திரியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று மணிகண்டன் ராஜீவனைப் பார்க்க அவன் புன்னகை செய்தான்.

''தெரியும். சென்னையில பார்த்து இருக்கிறேன். அவங்க இப்ப தங்கி இருக்கும் வீட்டு மாடியில் நான் குடி இருக்கிறேன். ஆனால் பவித்ராவுக்காக இந்த உதவி செய்யக் கூடாதா என்று கேட்டீங்களே? அது என்ன உதவி?'' என்று ராஜீவன் அவரிடமே பந்தைத் திருப்பிய வினாடியில் கிருஷ்ணாவும் பவித்ராவும் உள்ளே நுழைந்தனர்.

'ஆ! இவன் என்னைவிட பெரிய எமகாதகனா இருக்கானே' என்று கிருஷ்ணா வாயைப் பிளக்க பவித்ரா புன்னகை செய்தாள். ''வாங்க அங்கிள், வணக்கம் ஆண்ட்டி. போனில் பேசினேனே! நான் கிருஷ்ணா'' என்று கரம் குவித்து வீட்டு ஆளாக வரவேற்ற கிருஷ்ணாவைத் தொடர்ந்து, பவித்ராவும் கரம் குவிக்க விமலா மணிகண்டன் இருவரும் புன்னகை செய்தனர்.

''நல்லா இருக்கியாம்மா? கடைக்குப் போயிட்டு வரீங்களா?'' என்று விசாரிக்க சாவித்திரியின் முகம் ஒரு கணம் இருண்டு பின் சீரானது.



''இது எங்க நாத்தனார் பையன். முன்னாடி பார்த்த சந்தியா என்னோட இன்னொரு நாத்தனார் பொண்ணு. ரெண்டு பேரும் சின்ன வயசுல இருந்து ஒண்ணா வளர்ந்தவங்க. ஒருத்தர் மேலே ஒருத்தர் ரொம்ப பாசம்...'' என்று விளக்கம் சொல்ல விமலா ஆமோதிப்பதாக தலை அசைத்தார்.

''கூடப் பிறந்தவங்களே அடிச்சுட்டு இருக்கிற இந்தக் காலத்துல, ஒண்ணு விட்ட உறவுக்காரப் பசங்க இந்த மாதிரி ஒருத்தர் மேலே ஒருத்தர் பாசமா இருப்பதை நினைத்தாலே ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்று மணிகண்டன் பெருமையாகச் சொல்ல பேச்சுப் பொதுவாகத் தொடர்ந்தது. கிருஷ்ணா பவித்ராவிடம் ஜாடை காட்டிவிட்டு அடுக்களைக்கு நழுவினான்.

எலுமிச்சை சாறு பிழிந்து நான்கு தம்ளர்களில் ஊற்றிக் கொண்டு இருந்த சந்தியா, பின்னால் நிழலாட, 'ஐயையோ வெளியே அத்தனை பேர் இருக்கும்போது ராஜீவன் உள்ளே வந்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள்?' என்ற பதட்டம் தோன்ற, திரும்பியவள் அங்கே நின்ற கிருஷ்ணாவைக் கண்டு திகைத்தாள்.

''அண்ணா! நீங்களா...? நீங்க எப்போ வந்தீங்க? நான் பார்க்கவே இல்லையே?'' என்று ஆச்சரியமாக விசாரித்தாள்.

''நான் உன் கல்யாண விஷயமா பேச இன்று காலையில் சென்னையில் இருந்து வந்தேன். உன்னை ஆளைக் காணோம். எங்கே போயிட்ட?'' என்று கேட்டான்.

''என்னோட கல்யாண விஷயமா? சும்மா ஜோக் அடிக்காதீங்க...''

Optimized by www.ImageOptimizer.net

''சீரியஸா சொல்றேன் சந்தியா. எனக்காக ஒரு உதவி
செய்வாயா?''

''உதவியா..? நா..னா? சொல்லுங்க. முடிஞ்சா
செய்றேன்...''

''முடிஞ்ச உதவி தான் சந்தியா...'' என்றவன் இன்னும்
குரலை தணித்து. ''ராஜீவை கல்யாணம் பண்ணிக்க
சம்மதம் சொல்லி நான் பவித்ராவைக் கல்யாணம் பண்
ணிக்க நீதான் உதவி பண்ணனும்...!'' என்று சொல்ல
அவள் விழித்தாள். இங்கே என்ன நடக்குது? இவனுக்கா
தான் அத்தை தன்னிடம் அப்படிக் கேட்டார்களா?
ஆனால் பவித்ராவுக்கு இதில் இஷ்டமா என்று கேள்வி
கள் மண்டைக்குள் குடைந்தது.

''சந்தியா. ஐ லவ் பவி. அத்தையிடம் சொல்லி
விட்டேன். ஆனால் அத்தையும் பவியும் உனக்காக
ரொம்ப யோசிக்கிறாங்க. நீ ராஜீவைக் கல்யாணம் பண்
ணிக்கச் சம்மதம் சொன்னால் பவியும் சந்தோஷமா என
சொல்லிடுவாள்...''

''அண்ணா... அது வந்து...'' என்று அவள் என்ன
பதில் சொல்வது என்று திணறிக் கொண்டு இருக்கையி
லேயே வெளியே இருந்து ''சந்தியா என்ன பண்ணிட்டு
இருக்கே? தண்ணி எடுத்துட்டு வர இவ்வளவு நேரமா?''
என்ற சாவித்திரியின் குரல் அவளை மீட்டது.

''இதோ வந்துட்டேன் அத்தை...'' என்று சத்தமாக
சொன்னவள், கிருஷ்ணாவின் புறம் திரும்பி, ''அண்ணா,
நான் ராஜீவைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கும் நீங்க
பவியைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கும் எந்த ச
தமும் இல்லை. உண்மையிலேயே பவித்ராவு
...ளை விரும்பினால், நீங்க அத்தையிடம் பேசி உங்



கல்யாணத்தை நடத்திக்கோங்க. அதுக்கும் என் கல்யாணத்துக்கும் முடிச்சுப் போட வேண்டாமே ப்ளீஸ்...'' என்று தீர்மானமாக முடித்து விட்டு ட்ரேயுடன் வெளியே நடந்தாள்.

சாவித்திரி திக்கி திணற, ஒரு வழியாக பவித்ராவுக்கும் கிருஷ்ணாவுக்கும் திருமணம் நடக்க இருப்பதாகவும், அவர்களுக்கு சம்மதம் இருந்தால் சந்தியாவைப் பார்க்கலாம் என்ற விஷயத்தையும் சொல்லி முடிக்க மணிகண்டன், விமலா, ராஜீவன் மூவருமே சந்தியாவின் முகத்தைப் பார்த்தனர்.

''உங்க அத்தை சொல்றதுக்கு நீ என்னம்மா சொல்கிறாய்?'' என்று மணிகண்டனே முதலில் அமைதியை கலைத்து விசாரித்தார்.

''அத்தை ஒரு நிமிஷம் வரீங்களா?'' என்று எழுந்த சந்தியா மன்னிப்புக் கோரும் பார்வை ஒன்றினை ராஜீவனின் பெற்றோர்களின் புறம் வீசினாள்.

''என்ன சந்தியா இது? வீட்டுல விருந்தாளிகள் வந்து இருக்கும்போது தான் தனியா ரகசியம் பேசணுமா? பவித்ரா கல்யாணம் நல்லபடியா நடக்க இந்த உதவி செய் என்று அப்போதே சொல்லலை?'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டார் சாவித்திரி.

''அத்தை, நான் சொல்றதை முழுசா கேளுங்க. ஆரம்பத்துல இருந்தே நான் தொட்ட எந்தக் காரியமும் நல்லா வந்ததே இல்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு ராஜீவின் வாழ்க்கையில் பிரச்னை என்றால் அந்த சுமையும் பழியும் உங்க மீது தான் விடியும். பவித்ராவுக்கு பிடிச்ச மாப்பிள்ளையைப் பார்த்து கல்யாணம் பண்ணி வச்சுடுங்க. எனக்குக் கல்யாணம் வேண்டாம்.

Optimized by www.ImageOptimizer.net

நான் சென்னைக்குக் கிளம்பிடுவேன். இதுக்கு மேலே இந்த விஷயத்தில் என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க அத்தை...'' என்று அவரின் எதிர்கால பொறுப்பை கோடி காண்பித்ததில் சாவித்திரி திகைத்துப் போனார்.

இந்தக் கல்யாணத்தைக் காரணம் காட்டி பவித்ரா கல்யாணம் நிற்கப் போவதில்லை என்றால் இது நடந்தாலும் நடக்கா விட்டாலும் அவருக்கு ஒன்றும் இல்லை என்ற எண்ணம் அவரை ஆட்டுவிக்க, அவர் வெற்றிகரமாக பின் வாங்கி விட்டார்.

உள்ளே இருந்து வந்த சாவித்திரி அம்மா மெல்ல முழுங்க, ராஜீவன் 'நீங்க பேசிப் பேசி பாருங்கம்மா' என்று ஜாடை காட்டினான்.

''நீ போனால் தான் சரியா வரும்'' என்று தயங்க

''அப்படி இல்லைம்மா! அடி மேல் அடி வைத்தால் தான் சந்தியாவை நகர்த்த முடியும். உங்களை அவளால் எதிர்த்துப் பேச முடியாது. இப்ப நான் போனால் அங்க அத்தைக்கு சந்தேகம் வராதா? நீங்க போயிட்டு வந்த பிறகு நான் பேசிப் பார்க்கிறேன் என்று அவரிடமே அனுமதி கேட்கலாம் இல்லையா?'' என்று சொல்ல அவர் தலை அசைத்து விட்டு அறைக்குள்ளே சென்றார்.

''உங்க அத்தையிடம் நீ என்ன சொன்னாய் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ராஜீவ் உன்னை விரும்புவதை உன்னிடம் சொல்லி விட்டான் தானே? அதன் பின் நீ ஏன் மறுக்க வேண்டும்? பவித்ராவிற்காக நீ யோசிப்பதாக இருந்தாலும் அவளுக்குப் பிடித்த மாதிரி இன்னொரு மாப்பிள்ளை வந்தாச்சே! இன்னும் நீ ஏன் தயங்குகிறாய்? உனக்கு ராஜீவைப் பிடிக்கலை என்று பொய் சொல்லாதே. அதை நான் நம்பத் தயாராக



[illegible]மா'' என்று கூர்மையான பார்வையுடன் கேட்டார் விமலா.

''உங்களை எதிர்த்துப் பேசறேன் என்று நினைக்காதீங்கம்மா. எனக்கு ராஜீவன் சார் மேலே மரியாதை இருக்கு. என் வாழ்க்கையிலே நான் ரொம்ப துவண்டு போய் இருந்த நேரத்துல எனக்குத் தைரியம் சொல்லி வழி காட்டியவர். அதுக்காகக் கல்யாணம் பண்ணிக்கணும் என்று எதிர்பார்ப்பது சரி இல்லைம்மா.''

''நானும் அப்படிச் சொல்லவில்லை சந்தியா. ஆனால் உனக்கும் ராஜீவை...''

''நான் முடிச்சுடுறேன்மா. எல்லாமே ரொம்ப அவசரமா நடக்கிற மாதிரி இருக்கு. உங்களுக்கு நான் சொல்றது வேடிக்கையா இருக்கலாம். ஆனால் இதெல்லாம் ஒரு கனவோ என்று கூட எனக்கு ரொம்ப பயமா இருக்கு. இப்ப இந்த நேரத்துல நாம் எந்த முடிவும் எடுக்க வேண்டாமே அம்மா. எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேணும். ப்ளீஸ்...'' என்று விமலாவிடம் சொல்ல அதற்கு மேல் அவராலும் அவளை வற்புறுத்த முடியவில்லை. அவகாசம் கேட்பவளை என்ன செய்ய முடியும்.

தன்னிடம் சந்தியா பேசியதை கணவன் மகன் இருவரிடமும் விமலா சொன்னதும் மணிகண்டன் 'அப்ப கிளம்பலாமா' என்று முனக 'அப்பா ப்ளீஸ், ஒரு அஞ்சு நிமிஷம்' என்று அவரை மீண்டும் அமர வைத்தான்.

''பவித்ரா, சந்தியாவுடன் பேச வேண்டும். பத்து நிமிஷம் தனியா என்னுடன் பேசச் சொல்லு. அப்புறமா ஒரு நல்ல முடிவெடுக்கலாம். இது கடைசி முயற்சி'' என்று சொல்ல அவள் அழைத்து வந்தாள். வரும் போதே சந்தியா அமைதி காத்த போதும் அவள் பேசினாள்.

Optimized by www.ImageOptimizer.net

''சந்தியா, ஆளுக்குத் தகுந்த மாதிரி உனக்குப் பேசத் தெரியும் என்று இன்று தான் தெரிந்து கொண்டேன். உன் மனசுல என்ன போட்டு குழப்புது சொன்னால் அதற்கு நான் ஏதாவது தீர்வு சொல்ல முடியும்? மனசுக் குள்ளே போட்டு புழுங்கினால் நான் என்ன செய்யட் டும்?''

''..........''

''ராஜீவ் என்னைப் பார்க்க வந்தவர் என்ற ஒரே காரணத்தினால் நீ தயங்குவதாக இருந்தால், அது தேவை இல்லை. அதைத் தூக்கிப் போடு. எனக்குக் கிருஷ் ணாவைப் பிடிச்சு இருக்கு.

''அதை கிருஷ்ணாவும் சொல்லிட்டார். அதுக்காக நான் தயங்கலை...'' என்று முணுமுணுப்பாக வந்தது சந்தியாவின் குரல்.

அப்புறம் என்ன? ராஜீவைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் என்ன பிரச்னை சந்தியா? வாயைத் திறந்து சொல்லேன்...''

''.......''

''சரி, என்னிடம் சொல்ல வேண்டாம். அவரே உன்னிடம் தனியா பேச அம்மாவிடம் அனுமதி வாங்கி விட்டார். அவரைத் தோட்டத்துக்கு அழைச்சுட்டுப் போய் பேசு. என்ன சந்தேகம் இருந்தாலும் வாயைத் திறந்து கேளு. அவர் வலிய வருவதானால் உனக்கு அவரோட அருமை புரியாமல் போய்டக் கூடாது என்று தான் நான் கவலைப்படுகிறேன். அதிர்ஷ்டம் வீட்டு வாசலை தட்டும்போது அதை மிஸ் பண்ணிடக் கூடாது சந்தியா...''

''எல்லாரும் அவரைப் பற்றியே பேசுறீங்களே, என் னைப் பற்றி யாராவது நினைத்தீர்களா?''



''இதென்ன கேள்வி? உன்னைப் பற்றி, கவலை இருப்பதனால் தானே இந்த மாப்பிள்ளையை விட்டு விடக் கூடாது என்று இவ்வளவு பேசுறோம். உனக்கு வேறே எந்தக் காதலும் இதுவரை இருப்பதா தெரியலை. ராஜீவ் மேலே இருப்பது காதலா இல்லை நன்றி உணர்வா என்று குழப்பம் இருக்கலாம். ஆனால் உன்னை விரும் பும் ஒரு நல்ல மனிதரைக் கல்யாணம் பண்ணிக் கொள் வது நல்லா இருக்கும். நான் நல்ல பிரெண்டா இதுவரை உனக்கு இருந்து இருக்கேன். இனியும் இருப்பேன்...'' என்று இடைவெளி விட்டாள்.

''என்ன அப்படி முழிக்கிற ராஜீவ் உனக்கு வேண்டாம் என்று நீ முடிவெடுத்தால் ஓ.கே. இன்னாரைக் கல் யாணம் பண்ணிக்கோ என்று நான் உன்னைக் கட்டாயப் படுத்த முடியாது. கல்யாணம் என்பது சம்பந்தப்பட்ட ரெண்டு பேரும் சந்தோஷமா முடிவெடுக்க வேண்டிய விஷயம். ஆனால் என் கல்யாணம் எப்போ நடக்கும் என்று என்னால் முடிவெடுக்க முடியும். அதுக்கு உன் சம்மதம் தேவை இல்லை...'' என்று சொல்லச் சந்தியா பதறினாள்.

''என்ன உளறுகிறாய்.''

''இன்னும் நான் சொல்லவே இல்லை. அதற்குள் உளறுகிறேன் என்று சொல்கிறாய் ஜோசியம் பார்ப்பாயா நீ'' என்று சிரித்தாள்.

''சிரிக்காதே! கிருஷ்ணா பாவம்...''

''எனக்குக் கூட ராஜீவ் பாவம் என்று தோன்றுது. அதைப் பற்றி நீ கவலைப்படவில்லை. சரி விடு. அந்தப் பேச்சு நமக்கெதுக்கு. இந்த ராஜீவன் தான் என்று நான்

Optimized by www.ImageOptimizer.net

கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் இந்த ராஜீவ் இல்லா விட்டாலும் ஏதோ ஒரு சஞ்சீவை மாப்பிள்ளையா பார்த்து நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளும் போது தான் எனக்கும் கிருஷ்ணாவிற்கும் கல்யாணம் நடக்கும். ஓகே..." என்று ஒரு குண்டை போட்ட பின்பே ராஜீவனுடன் தனியே பேச சந்தியாவை அனுப்பியதால், ராஜீவன் பேச ஆரம்பிக்கும் முன்பே சந்தியா ஆரம்பித்தாள்.

"ராஜீவன் சார், நீங்க என்ன பேசப் போறீங்க என்று எனக்குத் தெரியலை. ஆனால் அதுக்கு முன்னாடி ஒரு விஷயம் நான் சொல்லி விடுகிறேன். எனக்கு உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதம். கல்யாணம் ரெண்டு மூணு மாசம் தள்ளி வச்சுக்கலாம். அதுக்கு ஒத்துக் கொள்வீங்க தானே" என்று குனிந்த தலை நிமிராமல் மனப்பாடம் செய்து வைத்து இருந்த வாசகத்தை சந்தியா ஒப்பிக்க, "இல்லை..." என்ற ஒற்றை சொல் ராஜீவனின் வாயில் இருந்து வந்த தொனியில் சந்தியா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

## 23

ராஜீவன் தனியாகப் பேச வேண்டும் என்று அத்தையிடம் அனுமதி வாங்கி, சந்தியாவை அழைத்து வந்து இருந்த போதும், அவன் பேச்சை ஆரம்பிக்கும் முன்பே திருமணத்திற்கு அவகாசம் கேட்டவளை ராஜீவனின் ஒற்றை வார்த்தை மறுப்பு திகைக்க வைத்தது.

"என்ன இல்லை...? நீங்க தானே முதலில்..." என்று தொடர முடியாமல் பேச்சை நிறுத்தினாள். திருமணம்



செய்து கொள்ளக் கேட்டாய் என்ற வார்த்தைகளைச் சொல்லச் சங்கடமாக இருந்தது.

"நான் முதலில் என்ன கேட்டேன் சந்தியா?"

"ப்ச்! இந்த வார்த்தை விளையாட்டு வேண்டாம். இப்ப நீங்க என்ன பேச வந்தீங்க? அதை நீங்களே முதலில் சொல்லிடுங்க..."

"சந்தியா, காலில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டு எங்கோ ஓடத் தயாராக இருப்பதைப் போல இல்லாமல் பக்கத்துல உட்கார்ந்து, கண்ணைப் பார்த்துப் பேசு. என் பக்கத்தில் உட்கார்ந்து, என்னைப் பார்த்து பேசினால் உன்னைக் கடித்துத் தின்றுவிட மாட்டேன். உட்கார்..." என்று அருகே கண்ணைக் காட்டினான்.

"உங்க வீடு ரொம்ப அழகா இருக்கு சந்தியா. எனக்கும் இந்த மாதிரி தோட்டம் வச்ச தனி வீடு பிடிக்கும். ஆனால் சென்னையில் அடுக்கு மாடி குடியிருப்பில் எங்கே செடி எங்கே வளர்ப்பது? சொந்தமா வீடு வாங்கும்போது தனி வீடு தான் வாங்கணும். அதுல இது மாதிரி நல்ல பெரிசா தோட்டம் போடணும்..." என்று பொதுவாகப் பேச்சை வளர்க்க அவள் சங்கடமாக உணர்ந்தாள். தொடவில்லை என்றால் கூட அவனின் அருகாமை அவளை என்னவோ செய்தது.

"சார்... நீங்க என்னவோ பேசணும் என்று... அங்கே உங்க அம்மா அப்பா எல்லோரும்... காத்து இருக்காங்க..." என்று நினைவு படுத்த அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"இப்பதான். முதன் முதலா என்னைப் பார்க்கிற என் இப்படி இருக்க சந்தியா? ரிலாக்ஸ். என்னுடைய எஸ்.எம்.எஸ். பார்த்தாயா?"

Optimized by www.ImageOptimizer.net

''ம்ம். பார்த்தேன்...''

''அப்ப நீ எங்கே இருந்தாய்?''

''ப்ச்! அதெல்லாம் எதுக்கு சார்? நீங்க சொல்ல வந்ததைச் சொல்லுங்க...''

''சந்தியா, முதலில் இந்த சாரை விடு. சொல்லு சொல்லு என்று இத்தனை முறை கேட்கிறாயே? நான் எதைப் பற்றிப் பேசப் போறேன் என்று உனக்குத் தெரியாதா? இப்போதைக்கு நமக்குள் பேச இருக்கும் ஒரே விஷயம் நம் கல்யாணம் தான். நீ என்னை ஒரு பிரெண்டா கூட ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் எதை நம்பி நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதைப் பற்றி யோசிப்பது?''

''பிரெண்டா ஏற்றுக் கொள்ளவில்லை என்று எப்படிச் சொல்றீங்க?'' என்று மறுப்பு உடனடியாக வர அவளின் கண்கள் ஒரு வினாடி இளகி மீண்டும் கடினமானது.

''பிரெண்ட் என்றால், தான் நினைப்பதை எல்லாம், நாகரீகம் கருதி பெற்றவர்களிடம் சொல்லத் தயங்கும் சில ரகசியமான ஆசைகளைக் கூடப் பகிர்ந்து கொள்வது தான் நல்ல நட்பின் அடையாளம். அப்படி எந்த அடையாளமும் நமக்குள் இருப்பதாக என் கண்ணுக்குத் தெரியலையே? உன் உண்மையான பிரச்னை என்ன என்பதைக் கூட என்னிடம் பகிர்ந்து கொள்ளத் தயங்குகிறாய். அதனால் தான் இந்த சந்தேகம் வந்தது...''

''அ-து அ-து நாம் பார்த்து சில நாட்கள் தானே ஆகிறது...''

''சரி அதை விடு. சென்னையில் இருந்து வரும் போதே உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்று சொல்லி விட்டேன். அப்போ உன் அத்தையை எண்ணி பயந்தாய். பவித்ராவின் எதி



கால வாழ்க்கைப் பற்றி கவலைப்பட்டாய். அது நியாயம். இப்ப பவித்ராக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைஞ்சாச்சு. உங்க அத்தையே மனம் வந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ என்று சொல்லி விட்டார்கள். இதற்கு அப்புறமும் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் என்ன பிரச்னை சொல்லு?'' என்று நிறுத்தினான்.

''...''

''பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம் சந்தியா? உங்க அத்தையிடம், கிருஷ்ணாவிடம், அம்மாவிடம் எல்லோரிடமும் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி இருக்கிறாய். நான் உன்னிடம் பேச வேண்டும் என்று இங்கே வந்த உடனே, என் முகத்தைக் கூடப் பார்க்காமல் கல்யாணத்துக்குச் சம்மதம் என்று ஒப்பிக்கிறாய். நான் என்ன நினைப்பது? இந்த சம்மதத்தை நான் நிஜம் என்று எப்படி நம்புவது? தொவது பதில் சொல்லு...''

''அத்தை கேட்ட போது கிருஷ்ணா பவித்ராவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவது எனக்குத் தெரியாதே...''

''சரி, கிருஷ்ணனிடம் ஏன் மறுத்தாய்?''

''அவங்க கல்யாணத்திற்கும் என் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நினைத்தேன்...''

''அப்போ எங்க அம்மாவிடம் மறுத்தது...''

''உங்க அம்மாவிடம் நான் மறுக்கலையே...'' என்று கண்கள் தரையைப் பார்க்க மெலிதான குரலில் சொல்ல அவனுக்குப் புன்னகை மலர்ந்தது.

''அப்புறம் அவர்களிடம் என்ன சொன்னாய்?''

''ப்ச்! என்னையே கேள்வி கேட்காமல் நீங்க என்ன சொல்ல வந்தீங்களோ அதைச் சொல்லுங்க... ப்ளீஸ்...''

Optimized by www.ImageOptimizer.net

''ஒவ்வொருத்தருக்கும் ஆளுக்குத் தகுந்த மாதி காரணம் சொன்னியே! இங்கே வந்த உடன் அந்த காரணம் எல்லாம் மாயமா மறைந்து போய் கல்யாண திற்கு சம்மதம் என்று சொன்னாயே எப்படி அது?''

''நான் கல்யாணத்துக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றால், பவித்ராவும் கல்யாணத்தைத் தள்ளிப் போ கிறாள். ரெண்டு கல்யாணத்தையும் இன்று நிச்சய செய்து கொண்டால்... அத்தையும் பெரியம்மாவும் வி மாட்டாங்க. அவங்க கல்யாணம் முடிஞ்சுடும். அத பிறகு... நாம்...'' என்று அவள் சொல்ல ராஜீவனின் ம திற்குள் அதுவரை இருந்த எதிர்பார்ப்பு வடிந்து, ஏமாற்ற தோன்றியது.

''நீ இந்த மாதிரிப் பேசுவதை விட என்னைப் பிடி கலை என்று சொல்லி விடலாம். பவித்ராவுக்காக க யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்று சொல்வ எனக்குப் பெருமை அளிக்கும் விஷயம் என்று நினை தாயா சந்தியா? எதையும் யோசித்துப் பேச மாட்டாயா? என்று அதட்டலாகக் கேட்க சந்தியாவின் முகம் ச டென்று வாடி கண்களில் நீர் துளிர்த்தது. ஏன் இப்ப எல்லோரும் தன்னை பந்தாடுகிறார்கள்? ஒவ்வொரு தருக்கும் அவரவர் நினைப்பது மட்டும் நடக்க வேண் டும். அதுவும் உடனே! தானும் ஒரு மனுஷி தனக்கு ஒரு மனம் இருக்கு என்பதை எப்போது புரிந்து கொ வார்கள்?

மற்றவர்கள் எக்கேடு கெட்டோ போகட்டும். இவனு அல்லவா புரிந்து கொள்ள மறுக்கிறான்? தனக்கு சி மாதங்கள் அவகாசம் கொடுப்பதில் இவனுக்கு என் கஷ்டம்? அவனுடைய வாடிய முகத்தையும், அதி



சட்டென்று துளிர்த்து விட்ட நீர் துளிகளையும் பார்த்த உடனே ராஜீவனின் ஏமாற்றம் குறைந்து முகம் இள கியது.

''சந்தியா, என்னைப் பார்த்து ஒரு வாரம் தான் ஆகிறது. அதுவும் ஒரு இக்கட்டான சூழலில் பார்த்து இருக்கிறாய். உடனே கல்யாணம் என்பது கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கும். உன்னுடைய பயம் நியாயமாக இருக்கலாம். ஆனால் அது மூளைக்குப் புரிந்தாலும் மனதிற்குப் புரிய மாட்டேன் என்கிறது. அதான் சில சமயங்களில் கடினமான வார்த்தைகள் வந்து விழுந்து விடுகிறது. ஐ ஆம் சாரி...'' என்று வருத்தமான குரலில் சொல்ல, ''இல்லை பரவாயில்லை. உங்க மேலே தப் பில்லை...'' என்று அவசரமாகக் கண்களைத் துடைத்த படி உடனே மறுத்து உரைத்தாள்.

''இந்த மாதிரி யார் வருத்துவதும் பொறுக்காமல், அவர்கள் மீது நீ காண்பிக்கும் அக்கறை தான் உன் மீது என்னுடைய ஈர்ப்பை அதிகம் ஆக்குகிறது சந்தியா. உனக்கு என்னைப் பிடித்து இருக்கிறது என்று என்னால் உணர முடிகிறது. ஏன் திருமணத்திற்கு தயங்குகிறாய் என்பது தான் புரிய மாட்டேன் என்கிறது...''

''எனக்கு கால அவகாசம் கொடுக்க உங்களுக்கு என் தயக்கம் என்று தான் எனக்கும் புரிய மாட்டேன் என் கிறது...'' என்று அவள் பதில் கொடுக்க அவன் ஆச்சரிய மாகப் பார்த்தான்.

''நான் ஏன் திருமணத்திற்கு அவசரப்படுகிறேன் என்று உனக்கு நிஜமாவே புரியலையா சந்தியா? உனக்கு யாருமே இல்லை என்ற எண்ணம் உன் மனதில் இருக்கிறது. அதை நான் நீக்க விரும்புகிறேன். அதற்காக

தான் கல்யாணம் நடக்க வேண்டும் என்று சொல்கிறேன்...'' என்று கனிவான குரலில் சொல்ல அந்தக் குரல் இதம் தந்ததாலேயே அவளால் அதை மறுத்துப் பேச முடியவில்லை.

''சந்தியா, உனக்காக நான் இருக்கிறேன். உனக்கு ஒரு பிரச்னை என்றால் நான் உறுதுணையாக நிற்பேன் என்ற எண்ணம் உனக்கு வரவேண்டும். அதை நான் வெளி ஆளாக இருந்து செய்வதில் நிறைய நடைமுறை சிக்கல்கள் இருக்கிறது. நாலு பேர் நாலு விதமா பேச அது வாய்ப்பளிக்கும். அதில் நீ மேலும் ஒடுங்கிப் போக வாய்ப்பிருக்கு. அதனால் தான் நம் கல்யாணம் உடனே நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்க அவள் மனம் நெகிழ்ந்து, சற்று முன்பு அவசரமாக அவளால் தற்காலிகமாக தடை செய்யப்பட்டு இருந்த கண்ணீர் மீண்டும் பெருக்கெடுத்தது.

''ஷ்! சந்தியா. இனி அழாமல் இருக்க முயற்சி செய்வேன் என்று எனக்கு சென்ட்ரல் ஸ்டேஷனில் சத்தியம் செய்த ஞாபகம் இருக்கு. இன்னொரு விஷயம், ஒரு வேளை திருமணத்திற்குப் பிறகான தாம்பத்திய வாழ்க்கைக்கு நீ தயாராக இல்லை என்றால், அதற்கு அவகாசம் தருவதில் எனக்கு எந்த சிக்கலும் இல்லை. ஆனால் உனக்கு என்னைப் பிடிக்கலை என்றால்...'' என்று அவன் பேச, சந்தியாவின் குரல் இடையிட்டது.

''எனக்கு உங்களைப் பிடிக்கல என்று பொய் சொல்ல விரும்பலை. ஆனால், நம் கல்யாணம் நடப்பதை நினைத்தால் எனக்கு பயமா இருக்கு...'' என்றவளின் குரலில் கவலை இருந்தது.



''ப..ய..மா...? என்ன பயம் சந்தியா...?''

''நான் கொஞ்சம்... எனக்கு... எதுவுமே... சரியா... ப்...!'' என்று திணறியவளுக்கு தான் ராசி இல்லாதவள் என்று சொல்ல இஷ்டம் இல்லை. அவன் ஒத்துக் கொள்ள மாட்டான் என்பது ஒரு புறம் இருக்க அவளுக்கும் சொல்லப் பிடிக்கவில்லை. ஆனாலும் அவள் சொல்ல வருவதை ராஜீவனால் ஊகிக்க முடிந்தது. அவன் உள்ளம் உருகியது.

''சந்தியா...'' என்று மெல்லிய குரலில் அழைக்க, அவள் தயக்கத்துடன் நிமிர்ந்தாள். கையெட்டும் தூரத்தில் கண்களில் நீருடன் தன்னை கவலையுடன் பார்த்தவளின் முகவாயை இடது கையால் நிமிர்த்தி, ஒற்றை விரலால், அவளின் விழிகளில் துளிர்த்து நின்ற நீரைச் சுண்டி விட்டான். ''ஒரு நிமிஷம் கண்ணை மூடிக்கோ'' என்றவனின் குரல் இன்னும் கனிந்து இருந்தது.

''என்ன... என்ன... பண்ணப் போறீங்க...?'' என்று சிணுங்கினாலும் அவளின் கண்கள் மூடியது. 'இவளுக்கு இந்த வைத்தியம் இப்போது தேவை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவளின் முகத்தை தன் பக்கம் திருப்பி, ''வேற யாரைப் பற்றியும் இப்போ நினைக்காதே சந்தியா...'' என்று சொன்னவன் அவளின் நெற்றியில் மென்மையான முத்தமிட்டான்.

''ரா...ஜ்'' என்ற அவளின் குரல் கிசுகிசுப்பாக வந்தாலும் கண்கள் திறக்கவில்லை. கைகளோ அவனை விலக்க முயற்சிக்கவில்லை. முகம் பின்னோக்கி நகரவில்லை. என்பது உத்வேகம் அளிக்க, ''சந்தியா ஐ லவ்

Optimized by www.ImageOptimizer.net

பூ'' என்று சொல்லி அவளின் வலது கன்னத்தில் முத்திரை பதித்தான்.

''ராஜீவ்... ப்ளீஸ்...''

''சந்தியா, இப்போ கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லிடு. மிச்சம் எல்லாம் அப்புறமா பார்த்துக்கலாம்'' என்று சொன்னபடி இதழ்களில் முத்தமிட முயல, அவசரமாக அவள் முகத்தைத் திருப்பியதும் இடது கன்னத்தில் அவனின் இதழ்கள் பதிந்தது. இப்போது அவள் கரம் உயர்ந்து அவனின் முகத்தை லேசாகத் தள்ளி விட்டது.

''சந்தும்மா...'' என்று மிக மென்மையாக அழைத்தவனின் கண்கள் அவளின் முகத்தை அளவிட்டது. லேசான நாண சிவப்பு மட்டுமே தென்பட்டது.

''உன் மனசு என்னிடம் இருக்கு என்பது இப்போ உனக்கே புரிந்து இருக்கும். முதலில் கல்யாணம் நடக்கட்டும். உனக்கு எது வேண்டுமானாலும் என்னிடம் நீ கேட்கலாம். என்னிடம் மட்டும் தான் கேட்கணும். அம்மாவிடம் கல்யாணத்துக்கு என்ன சொல்லட்டும்?'' என்று மென்மையான குரலில் கேட்க அவளின் கன்னம் சிவந்தது.

''ஓகே சொல்லிடட்டுமா...'' என்று மீண்டும் கேட்க அவளின் தலை மிக மெல்ல அசைந்தது.

''கொஞ்சம் நல்லா தான் தலை அசைப்பது...?''

''ம்ம்ம்...''

''கல்யாணம் உடனே செய்ய ஓகே தானே...?''

''ம்ம்ம்...''



''நான் உன்னைக் கட்டாயப்படுத்த நினைக்கவில்லை சந்தியா. நிறைய நேரங்களில் நம்ம சூழ்நிலை கைதிகள் தான். பல சமயத்தில் யாரோ ஒருவருக்காக ஏதாவது சில காரியங்களைச் செய்ய வேண்டி இருக்கும். அந்த மாதிரி எனக்காக நீ சொல்ற சம்மதம் என்று வைத்துக் கொள்...''

''இதில வருத்தம் இல்லை ராஜு...'' என்று சொல்ல, ''இந்த சம்மதத்தை இன்னும் சந்தோஷமாகச் சொல்லி இருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் பொய்யான சந்தோஷத்தை விட இந்த கசப்பான உண்மை பரவாயில்லை. போகலாமா?'' என்று நீட்டிய கைகளில் தன் கரத்தை வைத்து எழுந்தவள் முகம் புன்னகையில் மலர்ந்து இருந்தது.

## 24

தனியாகப் பேச வேண்டும் என்று அனுமதி வாங்கி சந்தியாவுடன் ராஜீவன் கழித்த பதினைந்து நிமிடங்கள் கனவுப் பூர்வமாகவே கழிந்தாலும், அந்த பேச்சு வார்த்தையின் முடிவில் இருவரும் வீட்டிற்குத் திரும்பிய போது மனதில இருந்த குழப்பங்கள் அகன்று அமைதி நிலவியது குதூகலத்தில் குதிக்கா விட்டாலும், அமைதி நிலவிய அவர்களின் முகமே வீட்டினுள் இருந்தவர்களுக்கு நிம்மதியை அளித்தது.

''என்ன ராஜீவ், பேசியாச்சா?'' என்று புன்னகையுடன் வினவினார் விமலா.

''நாங்க பேசியாச்சு. நீங்க கல்யாணத்துக்கு நாள் பார்த்தாச்சா? என்ன நம்ப முடியலையா? அதெல்லாம்

Optimized by www.ImageOptimizer.net

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். நான் ஒன்று கேட்டு சந்தியா இல்லை என்று சொல்ல முடியுமா" என்று பெருமையாக ஆரம்பித்த ராஜீவன் 'சாவித்திரி அருகில் இருப்பதை மறந்து பேசுகிறானே' என்று விமலாவின் அதிர்ச்சியை கவனித்து, 'யாருமே இல்லை என்று சொல்ல முடியாது. சந்தியா மட்டும் ஸ்பெஷலா?' என்று சமாளிக்க, கிருஷ்ணா பவித்ராவிடம் இருந்து சிரிப்புக் கிளம்பியது.

''ஏற்கனவே பார்த்த நாளில் ரெண்டு கல்யாணமும் வச்சுக்கலாமா சம்பந்திம்மா'' என்று விமலா அவள் பேச்சுக்குள் இழுத்தார்.

'நீங்க சந்தியாவுக்கு ஏற்கனவே நிறைய செய்து இருக்கீங்க. எங்க பையனுக்கு பெண்ணைப் பிடித்து இருக்கும் பட்சத்தில் நீங்க அவளுக்கு என்று திருமண செலவு செய்யத் தேவை இல்லை என்று சற்று முன்பு வாக்குறுதி அளித்த விமலாவின் தாராள மனதை எண்ணி வேகமாக தலை அசைத்தார் சாவித்திரி.

சாவித்திரியின் சம்மதம் கிடைத்த அடுத்த விநாடி ராஜீவன் கிருஷ்ணாவிடம் திரும்பி, ''கிருஷ்ணா, எனக்கு காலேஜுக்கு பக்கத்துல ஒரு வீடு, பார்த்துத் தர முடியுமா? வீடு எப்படி இருக்கணும் என்ற விபரம் எல்லாம் உன் தங்கையிடம் கேட்டுக்கோ. அவளுக்குப் பிடித்த மாதிரி தான்...'' என்று சந்தியாவை ஓரக் கண்ணால் பார்த்தபடி கிருஷ்ணாவிடம் வேண்டுகோள் வைத்தான் ராஜீவன்.

''வீடு விலைக்கா? வாடகைக்கா? இப்ப இருக்கும் வீடு என்ன ஆச்சு?''



''வாடகைக்கு இல்லை கிருஷ்ணா. விலைக்கு தான். காலேஜிற்கு பக்கமா பார்த்தால் அலைச்சலும் குறையும், விலையும் கம்மியா கிடைக்குமே. அதான் சொன்னேன்...''

''கல்யாணம் பேச ஆரம்பித்த உடனே பையனுக்கு பொறுப்பு வந்துடுச்சே? சந்தியா உன்னோட வேலை தானா? ரொம்ப சந்தோஷம். கிருஷ்ணா உடனே ஏற்பாடு பண்ணிடுப்பா'' என்று சந்தோஷமாக சொன்னார் விமலா.

''ஆண்ட்டி கல்யாணம் பண்ணி மனைவியை சொந்த வீட்டுக்கு அழைச்சுட்டுப் போகலாம் என்று கஷ்டப் பட்டு வீடு வாங்க போறது ராஜீவ். ஆனால் கிரெடிட் சந்தியாவுக்கா?'' என்று விமலாவிடம் சொன்னவன் ராஜீவிடம் திரும்பி, ''உங்க பட்ஜெட், வீட்டோட தேவைகள், இடத்தோட சாய்ஸ் இதெல்லாம் சொல்லுங்க. சீக்கிரமே. நம்ம கல்யாணம் பிக்ஸ் பண்ணி இருக்கிற நாளுக்கு உள்ளேயே ஏற்பாடு பண்ணிடலாம்'' என்று சிரித்தான் கிருஷ்ணா.

''கல்யாணம் வரை தள்ளிபோக வேண்டாம் கிருஷ்ணா. கன்ஸ்ட்ரக்ஷன் பிசினெஸில் இருந்து கொண்டு எதுக்கு உங்களுக்கு ஒரு மாசம்? நீங்க என்ன பண்ணுவீங்களோ தெரியாது. இன்னும் ரெண்டே வாரத்துல அவருக்கு ஒரு சொந்த வீடு வாங்கி தந்தாகணும்'' என்று தீர்மானமாகச் சொன்னாள் பவித்ரா.

''தள்ளிப் போடவோ, மறுக்கவோ முடியாத உத்தரவு ரெண்டு வாரம் டைம் கொடுங்க. அதுக்குள்ளே ஏற்பாடு பண்ணி விடுவேன்'' என்று உத்தரவாதம் அளித்தான்.

''என்ன சந்தியா, ரொம்ப அமைதியா இருக்கிறாய்? உனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதம் தானா? நீயே

சொல்லிடும்மா'' என்று திரும்பக் கேட்க, ''இதென்ன இவர் மீண்டும் முதலில் இருந்து ஆரம்பிக்கிறார்?'' என்ற விமலா பதட்டத்துடன் முறைத்தார்.

''எனக்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதம் மட்டுமில்லை ரொம்ப சந்தோஷம் கூட மாமா! என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்று சொல்லி அவரின் காலில் விழ எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்ற ராஜீவன் புன்னகை செய்தான்.

* * *

சென்னையில் இருந்து கோவைக்குக் கிளம்பும் போது மனதில் இருந்த குழப்பம் எல்லாம் விலகி விட்டதாலும், திருமணம் இரண்டு வீட்டாரின் சம்மதத்துடன் நிச்சயிக்கப்பட்டு விட்டதாலும், கோவையில் இருந்து சென்னைக்குத் திரும்பி வந்த பயணம் ராஜீவன் - சந்தியா இருவருக்கும் மிக மிக இனிமையானதாக இருந்தது.

''கிருஷ்ணாவிடம் உனக்கு ஏதாவது கோபமா சந்தியா? அவர் வலிய வந்து பேசினால் கூட தள்ளிப் போன மாதிரி இருந்தது...'' என்று ரயில் பயணத்தின் போது விசாரித்தான் ராஜீவன்.

''எனக்கு என்னங்க அவர் மேலே கோபம்? அதெல்லாம் இல்லை...''

''உன் நடிப்புத் திறமை எல்லாம் வேறே எங்கேயாவது வச்சுக்கோ. எனக்குத் தெரியும். உண்மையைச் சொல்லு என்ன விஷயம்?''

''கோபம் இல்லை என்று சொன்னால் ஏன் நம்ப மாட்டேங்கிறீங்க?''

''சரி கோபம் இல்லை வருத்தம். ஏன் சொல்லு?''



''முடிஞ்சு போன விஷயத்தை போஸ்ட் மார்ட்டம் ஏன் செய்யணும். விட்டுடலாமே?''

''விட்டுடணும் என்று நீ முடிவு பண்ணி இருந்தால் அதை மனசுல இருந்து தூக்கி போட்டு இருக்கணும் சந்தியா. நீ இன்னும் போடலை. இன்று மாலை உங்க பெரியம்மாவிடம் கூட நீ சரியாப் பேசலை என்று கிருஷ்ணா சொன்னார். அவங்க சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு விஷயம் இன்னும் உன் மனசை குடையுது. என்னிடம் மறைக்காமல் சொல்லு...''

''அப்பா இறந்து நான் மாமா வீட்டுக்கு அம்மாவோட வந்தபோது அவங்க கண்டுக்கலை. மாமா இருந்த வரைக்கும் ஓகே. ஆனால் அத்தையைப் பற்றி அவங்களுக்கு நல்லா தெரிஞ்சு இருந்தும், மாமா இறந்த பிறகு கூட அவங்க...'' என்று ஆரம்பித்துவிட்டு, 'யாரையும் தேவை இல்லாமல் குறை சொல்ல வேண்டாமே' என்ற எண்ணம் இருந்ததால் அத்துடன் பேச்சை நிறுத்தினாள்.

''அவங்க பேசாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது சந்தியா. என்னோட ஊகம், மாமா இறந்த போது கிருஷ்ணாவும் படிச்சுட்டு இருந்திருப்பார். அவங்க ரொம்ப வசதியா இருந்த மாதிரித் தெரியலை. அவங்களே கூட்டுக் குடும்பத்தில் இருந்து வந்ததால், உன்னையும் உங்க அம்மாவையும் வச்சுக் காப்பாற்றும் அளவுக்கு அவங்களுக்குப் பொருளாதார வசதி இல்லாமல் இருந்து இருக்கலாம்...''

''பொருளாதார வசதியா? ஹூம்! இங்கே என்ன நாங்க எட்டடுக்கு மாளிகையில், மூணு வேளை விருந்து மூக்கு முட்டச் சாப்பிட்டு உப்பரிகையில் உலா வந்தோமாக்கும்...''

Optimized by www.ImageOptimizer.net

''அப்படி இல்லை சந்தியா, இன்னொரு விஷயம் கூட நீ யோசிக்கனும். உங்க மாமா இறந்த பிறகு உன்னையும் உங்க அம்மாவையும் அந்த வீட்டில் இருந்து உங்க நன்மைக்காக என்று அழைத்துச் சென்று விட்டால் பவித்ராவுக்கும், உங்க அத்தைக்கும் ஆதரவு இல்லாத நிலை வந்து விடும் என்று அவங்க யோசிச்சு இருக்கலாம்...'' என்று ராஜீவன் சொன்ன விளக்கம் அவளை வியப்படைய வைத்தது. இவன் சொல்வது நிஜமாக இல்லாமல் கூட இருக்கலாம். அவளுக்கே யாரையும் குறை சொல்லப் பிடிக்காது. தன்னை மாதிரியே அவனும் எண்ணி, விளக்கம் சொல்ல முயன்றது அவளுக்குப் பிடித்தது.

''ஓ! இதுக்கு இப்படி ஒரு விளக்கம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை ராஜீவ்...'' என்றவளின் குவிந்த உதடுகளும், வியப்பில் விரிந்த விழிகளும் மலர்ந்த முகமும் அவனுக்குள் ரசாயன மாற்றங்களை உருவாக்கியது.

''நான் கூட எதிர்பார்க்கவே இல்லை சந்தியா...'' என்று அவளை மாதிரியே சொல்லிக் காண்பிக்க அவள் குழம்பினாள்.

''நீ..ங்..க என்ன எதிர்பார்க்கலை...?''

''நீ 'ஓ' சொல்வது இவ்வளவு அழகா இருக்கும் என்று நானும் எதிர்பார்க்கவே இல்லை...'' என்றவன் விழிகள் அவளின் இதழ்களில் பதிய, அவள் சிவந்த முகத்தை மறைக்க ஜன்னல் வழியே வெளியே பார்வையைச் செலுத்தினாள்.

எதிரே அமர்ந்து இருந்த இருக்கையில் இருந்து எழுந்து வந்து அவளின் அருகே உரசியபடி அமர்ந்து சில



கணங்கள் அந்தச் சிவந்த முகத்த ரசித்தவன், 'என்னை விட அழகா அப்படி வெளியில் என்ன இருக்கு?' என்று கேலியாகக் கேட்டபோது அவன் உதடுகள் அவளின் கன்னத்தில் பட்டும் படாமல் உரச அவள் சங்கடமாக விலக முயன்றாள்.

''ராஜ்...! ப்ளீஸ்... தள்ளி உட்காருங்க...'' என்றவளின் வேண்டுகோள் அவன் காதுகளில் ஏறவே இல்லை.

''எனக்கு இங்கே தான் வசதியா இருக்கு...'' என்று கேலியாகச் சொல்ல, ''அப்ப சரி நீங்க இங்கே இருங்க. நான் அங்கே போறேன்...'' என்று எழுந்து முன்பு அவன் அமர்ந்த இடத்தில் உட்கார, அவன் சிரித்தான்.

''அது என்ன ஏழு கடல் தாண்டி ஏழு மலை தாண்டி இருக்கும் இடமா? இங்கே இருந்து அங்கே வர மாட்டேனா?'' என்றவனின் சிரிப்பான கேள்வியை ஒதுக்கி, ''ஆமா, கிருஷ்ணாவுக்கு இவ்வளவு வக்காலத்து வாங்கறீங்க? அண்ணா உங்க கிளாஸ்மேட்டா?'' என்று பேச்சை மாற்ற முயல அவன் அலறினான்.

''கிளாஸ்மேட்டா? அவர் எஞ்சினியரிங். நான் கேட்டரிங் மேனேஜ்மென்ட். அவர் படிச்சது கோவையில். நான் படிச்சது சென்னையில். அவரை விட நான் ஒரு வருஷம் பெரியவன். அவர் டிகிரி முடிச்சுட்டு நாலு வருஷமா பிசினெஸ் பண்றார். நான் பீஜி முடிச்சுட்டு மூணு வருஷமா காலேஜில் லெக்சரரா இருக்கேன். அவரை நான் பார்த்தே நாலு நாள் தான் ஆகிறது. இப்படி கேட்டு விட்டாயே?'' என்று அவன் சலித்துக் கொள்ள 'பேச்சை மாற்ற என்று கேட்டது இப்படி சொதப்பி விட்டதே!' என்று அவள் அசடு வழிந்தாள்.

Optimized by www.ImageOptimizer.net

"அதெல்லாம் எனக்கு ஏற்கனவே தெரியும். பவித்ரா உங்களைப் பற்றி நிறைய விஷயம் என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள் தெரியுமா?"

"என்ன கேட்டாள்? நீ என்ன சொன்னாய்? சொல்லு பார்ப்போம்..."

"அது... அது... பவித்ராவை நீங்க பார்க்கப் போறீங்க என்பது எனக்குப் போன வியாழக்கிழமை தெரிந்த பிறகு... உங்களுக்கு என்ன பிடிக்கும்... பிடிக்காது... என்று என்னிடம் விசாரித்தாள். நானும் சொன்னேன்..."

"ம்ஹூம்... எனக்கு என்ன எல்லாம் பிடிக்கும்...?"

"ஏன் உங்களுக்கு என்ன பிடிக்கும் என்று உங்களுக்குத் தெரியாதா? என்னிடம் கேட்கறீங்க?"

"எனக்கு என்ன பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால் உனக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியாதே. நீ சொல்வது உண்மையா? இல்லை சும்மா கதை விடுகிறாயா என்று தெரிய வேண்டாமா?"

"ம்ம்ம்... இதை தான் பிடித்த லிஸ்ட்ல முதலில் சொன்னேன். இந்த மாதிரி சூப்பரா பேசுவது தான் இந்த உலகத்திலேயே ரொம்பப் பிடித்த வேலை என்று சொன்னேன்..."

"அப்புறம்..."

"பீச்சில் காலை நேரத்தில் ஓடுவது பிடிக்கும். நேவி ப்ளூ கலர் பிடிக்கும். சாக்லேட் வைத்து அப்பப்போ சாப்பிடுவது பிடிக்கும். நீங்களே சமைப்பது, அடுத்தவர்களுக்கு அதைக் கொடுப்பது இது ரெண்டும் ரொம்பப் பிடிக்கும். வேக வைத்த காய்கறிகள் பிடிக்கும்..."

"ம்... பிடிக்காத லிஸ்ட்...?"



"சாப்பாட்டில் தேங்காய் சேர்ப்பது பிடிக்காது. பழங்கள் தேன் சேர்த்து இனிப்பாக சாப்பிடுவதை விட, சால்ட் அண்ட் பெப்பர் சேர்த்து சாப்பிடுவது பிடிக்கும். சாப்பிடும்போது வந்தால் அதுவும் குறிப்பா போனில் சாவில் மெசேஜ் வந்தால் பிடிக்கவே பிடிக்காது. உங்க பிடிக்காது லிஸ்ட் ரொம்பப் பெரிசு. சொன்ன வரைக்கும் கரெக்டா...?" என்று அவள் சொல்லச் சொல்ல அவன் வியப்பில் ஊமையாகிப் போனான்.

"ஹலோ!?" என்று அவன் முகத்தின் முன்னால் கைகளை ஆட்ட, அவன் அந்தக் கையை பற்றி எதிரே அமர்ந்து இருந்தவளை தன் அருகே இழுத்து அமர வைத்தான்.

அவளின் கைகளை தன் கன்னத்தில் வைத்து அழுத்தியபடி, "நான் உன்னை என்னவோ என்று நினைத்து விட்டேன் சந்தியா. மனசுக்குள் இவ்வளவு ஆசையை வைத்து கொண்டு பவித்ராவுக்காக... எல்லாவற்றையும் மறைத்து... ப்ச்! நீ ரொம்ப நல்லவள் சந்தியா. ஐ ஆம் லக்கி" என்று உணர்வுப் பூர்வமாகச் சொன்னான் ராஜீவன்.

"நீங்க இல்லை. நீங்க எனக்குக் கிடைத்ததால், நான் தான் லக்கி..."

"மதியம் வேறே ஏதோ சொன்ன மாதிரி இருந்தது..." என்று சீண்டலாகக் கேட்க, அவள் முகம் ஒரு கணம் வாடியது. சில கணங்களில் சமாளித்து லேசாகப் புன்னகை செய்தாள்.

"அது பழைய அனுபவத்தில் பயந்தது. இப்ப சொல்றது எதிர்கால வாழ்க்கை தந்த நம்பிக்கையில் சொல்வது. ரெண்டுமே சரி ராஜ்..."

''இதே நம்பிக்கையை கடைசி வரை விடாதே. வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகள் வருவது சகஜம். அது ரெண்டையும் சமமாப் பாவித்து வாழக் கற்றுக் கொண் டால் வெற்றி நம் பக்கம் தான் சரி. எதிர்கால வாழ்க்கை என்றதும் ஞாபகம் வருது. நீ ஏற்கனவே முடிவு பண்ணின மாதிரி தாத்தா கடைக்கு வேலைக்குப் போகிறாயா? நாளைக்கு அவரிடம் என்ன சொல்லலாம்?'' என்று விசாரித்தான்.

''சம்பளத்திற்கு கடையில் வேலைக்குப் போறது உங்களுக்கு கௌரவக் குறைச்சலா...''

''அப்படி எல்லாம் இல்லை சந்தியா. வேலையில் உயர்வு தாழ்வு இல்லை. உன் நேரம், விருப்பம், இதை யோசித்துப் பார்த்துச் சொல்லு...''

''இருப்பதே நாம் ரெண்டு பேர். அத்தை மாமாவும் நம்முடன் இருக்கப் போவதில்லை. கடைக்குப் போனால் ரொம்ப லேட் ஆகுமே! நீங்க வந்து தனியா வீட்டில் இருப்பது நல்லா இருக்குமா?''

''என்ன சொல்ல வருகிறாய்? நேரடியா சொல்லு. அதில் வரும் வருமானத்தை விட வெளியே வேலைக்குப் போவது உனக்கு நம்பிக்கை கொடுக்கும் என்று நினைக் கிறேன்...''

''கரெக்ட் தான். நீங்க வீட்டுல இருக்கும்போது நானும் வீட்டில் இருக்கணும் என்று நினைக்கிறேன். தாத்தாவிடம், பார்ட் டைம் வேலை கேட்போம். காலையில் ஒன்பது மணியில் இருந்து மூணு மணி வரைக்கும் கடைக்குப் போறேன். கணக்கு வழக்கு ஏதாவது எழுது பொருட்கள் இருப்பு சரி பார்க்க ஆள் தேவைப்படுமா என்று கேட்போம். ஒருவேளை இல்லை என்றால்... பரவாயில்லை... என்று...''



''தாத்தா எனக்காக தான் வேலை கொடுத்தாங்க. ...னால் போனாலும் போகா விட்டாலும் பிரச்னை ...லை. ஆனால்...'' என்று இழுக்க அவள் பதறினாள்.

''ஆனால் என்ன? தாத்தாவிற்கு சங்கடமா இருக் ...மோ? வேறே ஆள் கிடைக்காதோ...''

''அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். அதுக்கு பிரதி ...னா எனக்கு ஏதாவது கிடைத்தால் பரவாயில்லை...'' ...று சரசமாக சொன்னவன் அவளை நெருங்கி தன் ...னத்தைத் திருப்பிக் காட்ட அவள் அவன் முகத்தைத் ...ளி விட்டாள்.

''உங்களை வழி அனுப்பவும், வீட்டிற்கு வரும்போது ...வேற்கவும் வீட்டில் ஒரு ஆள் இருக்கும் என்பது ...வளவு சந்தோஷமாக இருக்கும் தெரியுமா?''

''ஹலோ மேடம், அந்த சந்தோஷம் கல்யாணம் ...டிந்து தானே? அது நாளைக்கே எனக்குக் கிடைக்கப் போவதில்லையே? இப்ப நான் செய்த, செய்யப் போகும் உதவிக்கு எனக்கு என்ன கிடைக்கும் என்பது ...க்கியம். ம்ம்ம்...'' என்று கன்னத்தைத் திருப்பிக் காட்டிச் சொல்ல, கன்னத்தில் பட்டும் படாமல் இதழ் ...த்தவளை சந்தோஷமாக அணைத்துக் கொண்டவன் ...னம் நிறைந்து இருந்தது.

## 25

சந்தியா வேலைக்குப் போவது குறித்து இருவரும் கலந்தாலோசித்து ஒரு முக்கியமான முடிவை எடுத்த

பின் அவன் கேட்ட பரிசை தயக்கத்துடன் கொடுத்த
வளுக்கு மனம் நிறைந்து இருந்தது. ஆனாலும் சந்தே
புறம் உறைக்க, ''ராஜீவ்... போதும்...'' என்று விலக
முயன்றவளைப் புன்னகையுடன் விடுவித்தான்.

''கல்யாணம் வரைக்கும் நீ சும்மா வீட்டில் இருக்க
வேண்டாம் சந்தியா, ஒரு மாசம் கடைக்குப் போய் வா.
அதற்குள் அவரும் வேறே ஆள் பார்த்து விட்டு...
ஓகேயா?''

''சரி, வீடு மாற்றணும் என்று கிருஷ்ணாவிடம் சொன்
னீங்களே! திருவான்மியூரில் இருந்து பைக்கில் வந்து
போய் வருவது சிரமமா இருக்கா?'' என்று தன் விஷயம்
முடிந்த உடனே அவன் வசதி குறித்து அக்கறையாக
விசாரித்தாள்.

''சிரமம் இல்லை சந்தியா. சொந்த வீடு வாங்கணும்
என்று பார்த்தேன். எனக்குத் தோட்டம் வச்ச தனி வீடு
வேண்டும். நம்ம பட்ஜெட்டுக்கு சிட்டிக்குள்ளே வீடு
கிடைக்காது. காலேஜிற்கு பக்கத்தில் பார்த்தால் விலை
கட்டுப்படி ஆகும். அதுக்குதான்...''

''ஓகே, நீங்க தப்பா நினைக்கலை என்றால் உங்களை
ஒன்று கேட்கலாமா?''

''நீ என் எதிர்காலம் என்று வாழ்க்கையையே உன்
கையில் கொடுத்து விட்டேன். உன்னை என்ன தப்பா
நினைக்கப் போறேன்? கேளு...''

''நீங்க அத்தை மாமாவிற்கு மாசா மாசம் பணம்
கொடுப்பீங்களா?''

''மாசா மாசம் கணக்கு வைத்துக் கொடுப்பதில்லை.
போகும் போது வரும் போது ஐயாயிரம் பத்தாயிரம் என்று



கொடுப்பேன். அவங்க நான் பணம் கொடுப்பதை
விரும்புவதில்லை சந்தியா. ஏன் கேட்கிறாய்?''

''பணம் அவர்களுக்குத் தேவை இல்லை. அவர்கள்
எதிர்பார்க்க மாட்டார்கள் என்பதற்காக விடக்கூடாது.
நீங்க மேல் கொடுக்கணும். அது நம் கடமை. முடிஞ்சதை
கொடுக்கலாம்...'' என்று அவள் அழுத்தமாகச் சொல்ல
அவன் வியப்புடன் சந்தியாவைப் பார்த்தான். அவன்
வியப்பைக் கண்டு கொள்ளாமல் அவளின் வேகமான
பேச்சு தொடர்ந்தது.

''நீங்க கிருஷ்ணாவிடம் வீடு பார்க்கச் சொல்லும்
போது பிக்சட் டெபாசிட் க்ளோஸ் பண்ணி பணம் கொடுக்
கலாம் என்று மாமா அத்தையிடம் சொன்னாங்க. கவனிச்
சீங்களா? அந்த அக்கறை நமக்கும் இருக்கணும். அக்
கறை இருந்தால் மட்டும் போதாது. அதைக் காட்டவும்
செய்யணும்...'' என்று அழுத்தமான தொனியில் பேசிக்
கொண்டு இருந்தவள் அவனின் திகைத்த பார்வையினைக்
கண்டதும் பேச்சை நிறுத்தினாள்.

''... என்ன அப்படிப் பார்க்கறீங்க? நான் ஏதாவது
தப்பாச் சொல்லிட்டேனா? உங்களுக்குப் பிடிக்கலை
என்றால்... சாரி... நான் ஏதோ...'' என்று திணறியவளை
அவனின் புன்னகை மேலும் குழப்பியது.

''சரியா? பேசியது சந்தியா தானா என்று பிரமிக்கப்
போய் உட்கார்ந்து இருக்கேன். செமயா ஐடியா
கொடுக்கிற. சம்பளத்தையும் செலவு கணக்கையும்
கொண்டு வந்து உன் கையில் கொடுத்து விடுகிறேன்.
நீ என்ன நினைக்கிறாயோ அதைச் செய்...'' என்று
அவன் சிரிப்புடன் சொல்ல அவள் பதறினாள்.



Optimized by www.ImageOptimizer.net

''வேண்டாம் நீங்களே பாருங்க. எனக்கு அவ்வளவு விபரம் பத்தாது...''

''இவ்வளவு நேரம் நல்லாத் தானே பேசிட்டு இருந்த? அதுக்குள்ளே என்ன ஆச்சு?''

''இல்லை... பண விவகாரம்... எனக்கு... வேண்டாமே...!''

''இத்தனை நாள் ஜாலியா சம்பளத்தை வாங்கி நீங்க தாராளமாச் செலவு பண்ணிட்டு, இப்ப கடன் கட்டும் போது வரவு செலவு என்னைப் பண்ணச் சொல்றீங்களா என்று தானே பொறுப்பை வாங்க மறுக்கிறாய்?'' என்று சீண்டலாகக் கேட்ட கேள்வி வேலை செய்தது.

''ஹய்யோ! அப்படி இல்லை. நான் தனியா சம்பாதிக்கவில்லை என்றபோது எல்லாமே நீங்க கொடுப்பது தானே? என்னால் முடியுமா என்று யோசித்தேன்...''

''அது ஒன்றும் கம்ப சூத்திரம் இல்லை. கம்ப்யூட்டர் படித்த உனக்குக் கூட்டல் கழித்தல் கணக்குப் போடத் தெரியாதா? உன்னால் முடியும்'' என்று தைரியம் சொல்லி அவளைச் சம்மதிக்க வைத்தான். அன்று மட்டுமில்லாமல் அதற்குப் பிறகு வந்த நாட்களும், ''நீ எனக்கு முக்கியம்'' என்பதை ஒவ்வொரு செயலிலும் நிரூபித்தான்.

காலையில் கல்லூரிக்குச் செல்லும் போதே அவளை வண்டியில் ஏற்றிச் சென்று தாத்தாவிடம் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விடுவது, கல்லூரியில் இருந்து திரும்பி வரும்போதே கடைக்குச் சென்று அழைத்து வந்தான்.

திருமணத்திற்கு அவளுக்குத் தேவையான துணிமணிகள் வாங்க, தனிக் குடித்தனம் செய்ய தேவையானத



வாங்க, என்று அவளை கடைக்கு அழைத்துச் செல்வது. அவளிடம் இருக்கும் பணத்தை வைத்து கோவையில் வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்பது என்று ஒவ்வொரு காரியத்திலும் அவளின் விருப்பம் அறிந்து செயல்பட்டான்.

* * *

காலி மனையாக, அடுக்கு மாடி குடியிருப்பாக, பாதி கட்டிய வீடாக, பழைய வீடு என்று பத்துக்கும் மேற்பட்ட சொத்துக்களை தேர்வு செய்து விட்டு ராஜீவனை அழைத்து, ''பிசியா ராஜீவ்? இப்ப பேசலாமா?'' என்று விசாரித்தான் கிருஷ்ணா.

''கிருஷ்ணாவிடம் பேசுவதை விட வேறென்ன வேலை எனக்கு? என்ன சொல்றாங்க உங்க பவித்ரா? மேடம் உத்தரவு போட்டு ஒரு வாரமாச்சே! சத்தமே காணோமே என்று நினைத்தேன். கரெக்டா வந்துட்டீங்க. சொல்லுங்க கிருஷ்ணா. என்ன ஸ்பெஷல் நியூஸ்?''

''பவித்ரா சொன்ன வேலையை அப்படி அசால்ட்டா விட முடியுமா? பவித்ரா சொல்லா விட்டாலுமே, நீங்களும் எனக்கு முக்கியம் தான் ராஜீவ். அதை விடுங்க. நீங்களும் சந்தியாவும் ஒரு மூணு மணி நேரம் என்னுடன் செலவு பண்ண முடியுமா? பதினோரு மணிக்கு நானே வந்து அழைச்சுட்டுப் போறேன்...''

''என்ன விஷயம் கிருஷ்ணா? வீடு பார்க்கவா?''

''கேள்வி கேட்டால் என்னை பதில் சொல்ல விடணும். அதையும் நீங்களே சொன்னால் எப்படி?'' என்று அவன் சிரிக்க, ''எள்ளுன்னா எண்ணெயா இருக்கணும் என்று கேள்விப் பட்டதில்லையா? அதான் ராஜீவ், ஓகே கிருஷ்ணா, பதினோரு மணிக்கு போகலாம். ரெடியா இருக்கோம்...'' என்று உறுதி அளித்தான்.

Optimized by www.ImageOptimizer.net

திருமணம் முடிந்த உடனே புது வீட்டுக்குப் போக வேண்டும் என்று ராஜீவன் உறுதியாக இருந்ததால் காலி மனைகளைத் தவிர்த்தனர். தோட்டம் போட வேண்டும் என்ற ராஜீவனின் ஆசையை சந்தியா ஏற்கனவே அறிந்து இருந்ததால், அவள் அடுக்கு மாடி குடியிருப்பிற்கு மறுப்பு தெரிவித்தாள். பாதி கட்டிய வீட்டில் மாற்றங்கள் செய்வது சிரமமாக இருக்கும் என்று எஞ்சினியராக கிருஷ்ணா தயக்கம் காட்ட அதையும் தவிர்த்தனர்.

கிருஷ்ணா காட்டிய வீடுகளைப் பார்வையிட்டு காலேஜிற்கு மூன்று கிலோமீட்டர் தொலைவில், நெடுஞ் சாலையில் இருந்து நூறு மீட்டர் தூரத்தில் கிடைத்த கட்டி ஏழு ஆண்டுகள் ஆன ஒரு வீட்டை வாங்கி புதுப்பிக்கலாம் என்று முடிவு செய்தனர்.

"கிருஷ்ணா ஒரே வார்த்துல இவ்வளவு முக்கியமான வேலையை முடிப்பீங்க என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ரொம்ப தேங்க்ஸ். மணி ரெண்டாகப் போகுதே சாப்பிடப் போகலாமா? எங்கே போகலாம் என்று சொல்லுங்க. இன்றைய லஞ்ச் என்னுடைய ட்ரீட்..." என்று உபசரித்தான் ராஜீவன்.

"இல்லை ராஜீவ், நீங்க சாப்பிடப் போங்க. எனக்கு பெரும்பாக்கம் போகணும். அங்கே ஒரு முக்கியமான வேலை இருக்கு. பினிஷிங் ஸ்டேஜ்..." என்று மறுத்தான்.

"எப்படின்னாலும் சாப்பிடணும் தானே. பட்டினியாவா வேலை பார்க்கப் போறீங்க?"

"இது ஒன்னும் புதுசு இல்லை ராஜீவ். வெளியே வேலைக்கு வந்தால் சாப்பாடு பற்றிக் கவலைப் படுவதே



இல்லை. பிஸ்கட் டீ குடிச்சு சமாளிக்க வேண்டியது தான்..."

"இது ரொம்பக் கெட்ட பழக்கம் கிருஷ்ணா. தயவு செய்து மாத்திக்கோங்க. உங்க வேலை நடக்கும் சைட்டும் நிச்சயமா சிட்டிக்குள்ளே இருக்காது. அவுட்டரில் இருக்கும். அங்கே என்ன கிடைக்கும்? வெறும் பிஸ்கட்டும் டீயும் குடிச்சால் உடம்பு என்ன ஆறது? உங்க வேலை ஆட்கள் என்ன செய்வாங்க?" என்று கரிசனமாக விசாரித்தான்.

"சில பேர் கையில் எடுத்து வருவாங்க. சில பேர் வெளியே சாப்பிடுவாங்க. நமக்கு தான் கொடுக்க ஆள் இல்லை. பவித்ரா வந்த உடனே நிலைமை மாறும் என்று நம்புகிறேன். ஓகே. நீங்க கிளம்புங்க. உங்க தனிமையை நான் கெடுக்க விரும்பலை..."

"இந்த தனிமை கெடுக்கிற கதை எல்லாம் வேண்டாம். இங்கே பக்கத்துல சாப்பிடலாம். என்ன சந்தியா, சொல்ல மாட்டியா...?" என்று அவளையும் பேச்சுக்குள் இழுத்தான்.

"அதான் நீங்க சொல்றீங்களே! வாங்கண்ணா... சாப்பிடலாம்..." என்று அவளும் அழைக்க அவன் விழி விரித்தான்.

"அட! பேசியது சந்தியாவா? இந்த மூணு மணி நேரத்துல நான் உன் வாயில் இருந்து நேரடியா கேட்கும் முதல் வார்த்தைம்மா இது. இதுவரை நீ சொன்ன அபிப்ராயங்கள் எல்லாமே ராஜீவனின் காதுக்குள் போய் தான் வந்தது. நான் கூட உனக்கு என் மேலே என்ன கோபம் என்று நினைத்தேன். மனசு வந்து ரெண்டு வார்த்தை பேசி விட்டாய் போல..." என்று கேலியாகக் கேட்க ராஜீவன் அவன் தோளில் தட்டினான்.

Optimized by www.ImageOptimizer.net

"சந்தியா டக்குன்னு யாரிடமும் பேசுவதில்லை உனக்குத் தெரியாதா?"

"ஹலோ ப்ரதர்! அவள் எனக்குத் தங்கை. உறவு அவளை எனக்கு இருபத்தி இரண்டு வருஷமா தெரியும் உங்களை அவளுக்கு ரெண்டு வாரமா தான் தெரியும் இது என்ன லாஜிக்?" என்று மடக்க அவன் மழுப்பலாக சிரித்தான்.

"எனக்கு உங்க மேலே பெரியம்மா மேலே எல்லாம் கொஞ்சம் கோபம் இருந்தது உண்மைதான். ஆனால் இப்ப இல்லை. அவங்கவங்க தலையில் என்ன எழுதி இருக்கோ, அது தான் நடக்கும் விதி வலியது என்பதை புரிந்து கொண்டேன். இப்ப எங்களுக்கு ஒரு முக்கியமான வேலை செய்து கொடுத்து இருக்கீங்க. அதற்கு நாங்க நன்றி சொல்லணும் இல்லையா? வாங்கண்ணா சாப்பிடலாம். சாப்பிட்ட பிறகு நீங்க உங்க வேலையைப் பாருங்க" என்று தெளிவாகச் சொல்ல கிருஷ்ணா புருவம் உயர்த்தினான்.

"நல்ல பயிற்சி தான் ராஜீவன் சார். ப்ரொபசர் என்றால் சும்மாவா?" என்று சிரித்தவன் சேர்ந்து உணவு அருந்த வந்தான். ஹோட்டலில் செலவு செய்த ஒரு மணி நேரம் சந்தியாவின் மனக்குறை மறைய உதவியாக இருந்தது.

"கிருஷ்ணா, உங்களிடம் ஒரு விஷயம் கேட்கணும்..." என்று ஆரம்பித்தான் ராஜீவன்.

"நீங்க என்னை விட சீனியர் தானே? இந்த 'ங்க' வேண்டாமே...! நீங்க மரியாதையை பிடிச்சு வைக்கறதனால எனக்கும் அது கட்டாயமாகுது. இனி எப்பவும் கூடவே இருக்கப் போறோம். பிரண்ட்ஸ். நோ மரியாதை. ஓகே?" என்று தன் கையை நீட்டிச் சிரிப்புடன் கேட்



கிருஷ்ணாவின் கையில் அடித்து, 'டன்' என்று உறுதி அளித்தான் ராஜீவ்.

"எஸ் பாஸ். சொல்லு என்ன கேட்கணும்...?"

"என்னோட சேமிப்பு, அப்பாவிடம் கொஞ்சம் பணம் வாங்கினாலும் ஒரு இருபது லட்சம் தேவைப்படுமே! எந்த பேங்க் லோனுக்கு போகலாம்?"

"இப்ப எல்லாம் வட்டி விகிதத்துல பெரிய வித்தியாசம் இல்லை. உங்க சம்பளக் கணக்கு எங்கே இருக்கோ அங்கே போனால் சீக்கிரம் வேலை முடியும் பாஸ். சிம்பிளா நாலஞ்சு நாளில் வேலை முடிச்சுடுவாங்க. கல்யாணத்திற்கு முன்னாடியே கொஞ்சம் டச் அப் வேலைகளை முடிக்க நானே ரெடி பண்ணிடுறேன்..." என்று உறுதி அளிக்க ராஜீவன் - சந்தியாவின் முகங்கள் பெருமிதத்தில் மலர்ந்தது.

ராஜீவனின் சேமிப்பு, மற்றும் மணிகண்டன் தந்த பணம் என்று பாதியைக் கட்டியவர்கள் மீதம் உள்ள இருபது லட்சத்திற்கு கடன் உதவிக்காக வங்கியில் விண்ணப்பித்தனர்.

திருமணம் நடக்க நிச்சயித்த நாளுக்கு ஒரு வாரம் முன்பே கடன் உதவி கிடைக்க, மறுநாள் முதல் வேலையாக பத்திரப் பதிவை முடித்து, கிருஷ்ணாவின் உதவியால், வீட்டுக்கு உடனே வெள்ளை அடிப்பதோடு சின்னச் சின்ன மாற்றங்களையும் தங்களின் தேவைக்கு ஏற்ப செய்து முடித்ததால் திருமணம் கோவையில் முடிந்து சென்னைக்கு வரும்போதே புது வீட்டில் அடி எடுத்து வைத்தனர் மணமக்கள்.

பவித்ரா கிருஷ்ணாவின் வீட்டிற்கு மருமகளாகச் சென்று விட்டதால், சென்னைக்கு மணமக்களுடன்

Optimized by www.ImageOptimizer.net

விமலா, மணிகண்டன் இருவர் மட்டுமே வந்து இருந்தனர்.

''பழைய வீடு மாதிரி தெரியலை. பெயிண்ட் அடித்து கொஞ்சம் மராமத்துப் பணிகள் செய்ததில் புது வீடு மாதிரியே இருக்கு ராஜீவ். எல்லாம் உன் அதிர்ஷ்டம் தான் சந்தியா. நீ வருகிறாய் என்றதும் உடனே வீடு அமைந்து விட்டது பாரேன்! வீடும் கல்யாணமும் ஒரு மனிதனுக்கு நல்லபடியா அமைவது அவனின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. ராஜீவுக்கு ரெண்டுமே நல்லா இருக்கு. வாழ்த்துக்கள்'' என்று மனமார வாழ்த்திவிட்டு, இருவரும் அன்று இரவே கிளம்பி விட்டனர்.

இரவு ரயில் நிலையத்தில் அம்மா அப்பாவை வழி அனுப்ப அவர்கள் வேண்டாம். வேண்டாம் என்று மறுத்தாலும், ராஜீவன் சந்தியா இருவரும் உடன் வந்தனர்.

''கல்யாணம் முடிந்த இரண்டாவது நாள் இப்படி மாமனார் மாமியாரை வழி அனுப்ப ரயில் நிலையத்திற்கு வரும் மருமகள் நீயா தான் இருப்ப சந்தியா...'' என்று பெருமையாக சலித்துக் கொண்டார் விமலா.

''வழி அனுப்ப வந்ததா நீயா நினைத்துக் கொண்டால் எப்படி? அவங்க எதுக்கு வந்தாங்களோ?'' என்று மணிகண்டன் கேலியாகச் சொல்ல ராஜீவனும் சந்தியாவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டனர்.

''என்னடா! ரெண்டு பேரும் சிரிப்பதைப் பார்த்தால் அப்பா சொல்றதுதான் கரெக்ட் மாதிரி இருக்கு...?'' என்று கேலியாக ஆரம்பித்தவர் சட்டென்று... 'ஓ!' என்று இழுத்தார்.



''என்னம்மா ஓ!...'' என்று கேலியாகத் திருப்பிக் கேட்ட ராஜீவனுக்கு, தன் பையில் இருந்து ஒரு சாக்லேட் எடுத்துக் கொடுத்தார் விமலா.

''பூமி உருண்டை என்று நிரூபிச்சாச்சு. என்னிடம் இருந்து சாக்லேட் வைத்துக் கொள்ளும் பழக்கம் உனக்கு தொற்றி, உன்னிடம் இருந்து சந்தியாவுக்கு போய், அவளிடம் இருந்து மீண்டும் என்னிடமே வந்து சேர்ந்து விட்டது. நைட் வீட்டுக்குப் போகும் உத்தேசம் இருக்கா? இங்கேயே ஸ்டேஷனில் மலரும் நினைவுகளா?'' என்று கேலி செய்ய மற்ற மூவரும் புன்னகை செய்தனர்.

ஆட்டோவில் திரும்பி வரும்போது, ''அம்மா ஏதோ சாக்லேட் கொடுத்தாங்களே! எங்கே இருக்கு?'' என்று விசாரித்தாள் சந்தியா.

''ரெண்டு பேரையும் சேர்ந்து சாப்பிட சொல்லி இருக்காங்க. வீட்டுல போய் சாப்பிடலாம்...''

''ஏன் இங்கே சாப்பிட்டால் என்ன?''

''நான் நினைக்கிற மாதிரி இங்கே சாப்பிட முடியாது. அதனால் வீட்டில் போய் சாப்பிடலாம். ஏன் உனக்கு அவசரமா?'' என்றவன் குரலில் இருந்த தீவிரம் அவளை 'ம்ஹூம்!' என்று வேகமாக தலை அசைக்க வைத்தது. நடுவில் நிறைய இடம் விட்டு ஓரமாக அமர்ந்து இருந்த சந்தியாவை அருகே இழுத்தான் ராஜீவன்.

''ஷ்! என்னங்க இது...?'' என்று சன்னமாக சிணுங்கினாள்.

''என்ன என்னங்க இது? சென்னையில் இருந்த போது ஒரு நாளைக்கு நூறு தடவை பார்க்க முடிஞ்சது. ஆனால் கோவைக்குப் போன உடனே ஆளே கண்ணில் பட

மாட்டேன்னு ஓடிட்ட. நானே தேடி வந்தாலும் பவித்ரா கேலி தாங்க முடியலை. போதாக் குறைக்கு எங்க அம்மா வேறே. இந்த மூன்று நாளில் தரிசனமே கிடைக்கலை. இப்ப எல்லாம் முடிஞ்ச பிறகும் ரெண்டு கிலோ மீட்டர் தள்ளி உட்கார்ந்து இருக்கிறாய். முதலில் கிட்டே வா...''

''கிட்டே வந்து என்ன செய்யணும்?''

''இந்த ஒரு மாசத்துல நானே உனக்கு ரொம்ப இடம் கொடுத்துக் கெடுத்து விட்டேன். நீ ரொம்பப் பேசற...'' என்று மிரட்ட அவள் சிரித்தாள்.

''நீங்க தானே பேசு பேசு என்று பேச வச்சீங்க. இப்ப நீங்க சலிச்சுக்கறீங்க...''

''உன்னை எப்படிப் பேச வைக்க ட்ரெயினிங் கொடுத்தேனோ, அதே மாதிரி பேசாமல் இருக்க வைக்கவும் எனக்குப் பயிற்சி கொடுக்கத் தெரியும்...'' என்றவன் கண்கள் அவளின் இதழ்களில் பதிய அவளின் முகம் சிவந்து மூச்சடைத்தது. அதன் பிறகு ஆட்டோவில் பேச்சு இல்லை. வீட்டுக்குள் தனிமை இனிமையாக வரவேற்றது.

## 26

ரயில் கிளம்பும் வரை காத்திருக்கத் தேவை இல்லை, காலாகாலத்தில் கிளம்புங்க என்று விமலா, எட்டரை மணிக்கே கிளம்பி விட்டாலும், வீடு வந்து சேரும் போது மணி பத்தை நெருங்கிக் கொண்டு இருந்தது.

வெகு நேரமாக அவர்களுக்கு இடையே நிலவிய அமைதியைக் கலைக்க, ''சந்தியா, பசிக்கிற மாதிரி



இருக்கு. பிரிட்ஜ்ல ஏதாவது பழம் இருந்தால் கட் பண்ணி எடுத்துட்டு வாயேன்...'' என்று சொல்லி விட்டு தன் அறைக்குள் உடை மாற்ற சென்றான்.

அவனுக்குப் பிடித்த மாதிரி பழங்களைக் கழுவி தோல் சீவாமல், துண்டங்களாக்கி, லேசாக உப்பும் மிளகுத் தூளும் போட்டுக் கலந்து ஒரு சின்னக் கிண்ணத்தில் போர்க்குடன் கொண்டு வந்து வைத்துவிட்டு சோபாவில் அமர்ந்தாள்.

''நீ ட்ரெஸ் சேஞ்ஜ் பண்ணலையா?'' என்று அவளை உரசியபடி அமர்ந்து டீபாயில் இருந்த கிண்ணத்தை எடுத்ததும் அந்த பழக் கலவையைப் பார்த்தவன் கண்ணில் பாராட்டு இருந்தது.

''ட்ரெயின்ல சொல்லும்போது கூட உன்னை என்னவோ நினைத்தேன். அணு அணுவா என்னை எடை போட்டு வச்சு இருக்க போல...'' என்று பெருமிதமாகச் சொன்னவன் அவளின் கழுத்து வளைவில் முகம் பதித்து, ''எனக்குப் பிடிச்ச மாதிரி ஒரு கிண்ணம் பழம் எடுத்து வந்து விட்டாய். உனக்குப் பிடிச்ச மாதிரி இன்னொண்ணு வேண்டாமா?'' என்று கேட்டான்.

''ஒருத்தருக்கு பிடிச்சு இருந்தால் அதையே சாப்பிடலாம். தனியா இன்னொண்ணு எதுக்கு? நீங்க சொல்வது நல்லதற்கு தானே? பழங்களில் ஏற்கனவே இனிப்பு சத்து இருக்கும்போது தனியா சர்க்கரை தேவை இல்லை. தோல் சீவினால் சத்து வீணாகும். இந்த மாதிரி விஷயங்களுக்கு விவாதமோ, மறுப்போ தேவை இல்லையே? தப்பில்லை இப்படியே சாப்பிடலாம்...'' என்று எதார்த்தமாகச் சொன்னவள் அவன் ஒரு வாய் ஏற்கனவே உண்டு வைத்து இருந்த போர்க்கைப் பயன்படுத்தி அதே

கின்னத்தில் இருந்து. ஒரு பழத் துண்டை எடுத்துச் சாப்பிட அவன் அவளை ரசனையோடு பார்த்தான்.

''இந்த மாதிரி விஷயத்துக்கு விவாதம் தேவை இல்லை. இப்படியே சாப்பிடலாம்...'' என்று அவள் சொன்னதையே திருப்பிச் சொன்னவனின் குரலில் குறும்பு இருந்தது.

''என்ன... சொல்றீங்க...?'' என்றவளின் குரலில் தடுமாற்றமும் கண்களில் கேள்வியும் இருக்க அவனின் கரம் அவள் தோளை வளைத்தது.

''பழம் சாப்பிட சர்க்கரை தேவை இல்லை என்று சொல்கிறேன். ஏன்னா அது ஏற்கனவே ரொம்ப ஸ்..வீ..ட்..டா... இருக்கு என்று சொல்கிறேன்...'' என்றவன் 'ஸ்வீட்டா' என்ற வார்த்தைக்கு கொடுத்த அழுத்தமும் அவன் பார்வையும் அவளைச் சிவக்க வைத்தது.

''நான் போய் பால் எடுத்து வருகிறேன்...'' என்று அந்த இடத்தில் இருந்து நழுவ முயன்றவளை அவன் கரங்கள் இழுத்து அருகில் அமர வைத்தது.

''டயர்டா இருக்கா சந்தியா'' என்று தோளோடு சேர்த்து அணைத்து விசாரித்தவனின் கண்களில் ஆர்வமும் எதிர்பார்ப்பும் இருப்பதை அவளால் உணர முடிந்தது.

''ம்ஹூம். பால் வேண்டாமா?''

''இப்ப பால் வேண்டாம் சந்தியா...'' என்றவனின் கரங்கள் அவளின் காது மடலை வருட அவளின் கன்னம் சிவந்தது.

''வே...றே எ..ன்...ன வே...ண்..டு.. ம்...''



''கேட்டால் கிடைக்குமா...'' என்றவன் குனிந்து கழுத்து வளைவில் முகம் புதைத்து முகர்ந்தவனின் இதழ்கள் கழுத்தில் இருந்து காது மடல் வழியாக கன்னத்திற்கு பிரயாணம் செய்த அரையடி தூரத்தில் ஐம்பது முத்தங்களை பதித்து இருக்க அவள் மேலும் கிறங்கினாள்.

''சந்தியா, கடன் அன்பை முறிக்கும் தெரியுமா?'' என்றவனின் இதழ்கள் அவளின் கன்னத்தில் அழுத்தமாகப் பதிய, மூடி இருந்த கண்களை திறந்து பார்த்தாள். குறும்புச் சிரிப்பு அவன் முகத்தில் இருக்க அவள் கண்களில் குழப்பம் வந்தது. இவன் என்ன சொல்கிறான்?

''புரியலையா? வாங்கிட்டே இருந்தால் கொடுக்க வேண்டாமா?'' என்று கண் சிமிட்டியவனின் சுட்டு விரல் அவளின் இதழ்களை லேசாக வருட அவளின் குழப்பம் விலகி கன்னம் சிவந்தது. தயக்கத்துடன் அவன் கன்னத்தில் இதழ் பதிக்க முயன்றபோது அவன் முகத்தைத் திருப்ப அவன் இதழ்களில் அவள் இதழ்கள் பதிந்து முத்தமிட்டது. பல வினாடிகள் நீண்ட அந்த அழுத்தமான முத்தத்திற்குப் பிறகு மூச்சு வாங்க விலகியவளை இறுக அணைத்து, முகத்தை நிமிர்த்தினான்.

''கோவையில் உங்க வீட்டுல என்னை கிஸ் பண்ண விடாமல் முகத்தைத் திருப்பினாய் அல்லவா? அதற்கு பழிக்குப் பழி. எப்படி இருந்தது...?'' என்று சீண்டலாகச் சொல்ல அவன் கன்னத்தை லேசாகக் கிள்ளி, ''அங்கே யாரோ எனக்குத் தேவைப் பட்டால் டைம் கொடுக்கிறேன் என்று சொன்னாங்கப்பா...'' என்று அவளும் கேலியாக மடக்கினாள்.

Optimized by www.ImageOptimizer.net

''இப்பவும் நான் மறுக்கலையே? டைம் தேவைப் பட்டால் நிச்சயம் கொடுப்பேன்...''

''ம்ஹூம்...? டைம் தேவைப்படுது என்று நான் சொன்னால்...''

''பொய் சொல்கிறாய் என்று நான் சொல்வேன்...''

''நான் ஏன் பொய் சொல்லனும்...? நீங்க தான் பேச்சை மாத்தறீங்க...'' என்று அவள் கொஞ்சலாகச் சொல்ல அவன் சிரித்தான்.

''உன் கைகள் எங்கே இருக்கு என்று நீயே பாரு. உன் உதடுகள் சொல்வதற்கும் கைகள் செய்வதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கா என்று அப்புறமா சொல்லு...'' என்று அவன் முடிக்கும் முன்பே, அவன் கழுத்தை வளைத்து, பிடரி முடியை வருடிக் கொண்டு இருந்த வலது கரத்தையும், அவன் இடையை வளைத்து அணைத்து இருந்த இடது கரத்தையும் சந்தியா அவசரமாக விலக்க முயன்ற போது அவன் இரு கரங்களும் அவளைச் சுற்றி இறுக்கி அணைத்தது.

''ஹைஹ! அது போங்காட்டம். உன் மனசுல தயக்கமோ குழப்பமோ இருந்தால் உன் கைகள் அங்கே இருக்காது. இன்னும் சந்தேகம் இருக்கா?'' என்றவன் அவளின் கன்னத்தைப் பற்றி அருகே இழுத்து, தனது நெற்றியால் அவளின் நெற்றியில் செல்லமாக முட்டினான்.

''ம்ஹூம்...'' என்று கிசுகிசுப்பாகச் சொல்லி மறுப்பாக தலை அசைத்தவளின் மூக்கு அவனின் மூக்கை உரசி உறவாட, அவள் கண்களும் காதல் மயக்கத்தில் மூடியது.

''சந்தியா... சந்து... ஐ லவ் யூ...'' என்றவன் மேலும் மேலும் அவளுக்குள் இறங்கி, கரங்களாலும் இதழ்க



...ளாலும் தன் தேடலை நடத்த, தன்னை விரும்பி மணந்தவனுக்கு இல்லாத எதுவும் தன்னிடம் இல்லை என்ற காதல் மனைவியின் பூரண ஒத்துழைப்பும் அங்கே இருக்க, அங்கே ஒரு இல்லற காவியம் இனிதே துவங்கியது.

* * *

சந்தியா, மணி பனிரெண்டாகப் போகுது. பனியும் கிருஷ்ணாவும் வந்துடுவாங்க. இன்னும் என்ன பண்ற?'' என்று கேட்டபடி அவர்களின் தனி அறைக் கதவைத் திறந்தவன், சந்தியா சுடிதாரில் இருப்பதைப் பார்த்து விசில் அடித்தான்.

''வாவ்! இந்த கிரீன் உனக்கு சூப்பரா இருக்கு. இது ...ராம் பாட்டி கொடுத்தது தானே? சந்தியா, உன்னோட சமையல் சாப்பிடுற மாதிரி இருக்கும் இல்லையா?''

''அது நல்லா இருந்தாலும், நல்லா இல்லாவிட்டாலும் அந்த கிரெடிட் முழுக்க முழுக்க உங்களுக்குத் தான். என்னுடைய குருவே நீங்க தான்.''

''சந்தியா, சமையல் என்பது உப்பு புளி மிளகாய் சேர்த்து கொதிக்க வைப்பது மட்டும் இல்லை. நமக்கு வேண்டியவர்களுக்கு அக்கறையும் அன்பும் சேர்த்து சமைக்கும்போது நல்லா தான் இருக்கும். இந்த ஒரு மாதத்தில் நான் சொல்லிக் கொடுத்த பதார்த்தத்தை என்னைவிட சுவையா நீ செய்கிறாய் என்று நானே எத்தனை தடவை சொல்லிட்டேன்?''

''நமக்குள்ளே சாப்பிடுவது வேறே. இன்று பனியும் கிருஷ்ணாவும் வாராங்களே... அதான்...'' என்றவள் தயங்க, ''பனியும் உன்னை மாதிரி தானே? ஒன்றும் சொல்ல

மாட்டாள்..." என்று சமாதானம் சொல்லும்போதே அழைப்பு மணி ஒலித்தது.

"வாங்க வாங்க... அண்ணா... பவி... வெல்கம்... வெல்கம்..." என்று உற்சாகமாக வரவேற்ற சந்தியாவைப் பார்த்து பவித்ரா விழி விரித்தாள்.

"சந்தியா, ஒரு மாசத்தில என்ன ஒரு சேன்ஜ்? சப்பி சீக்ஸ். சோ கியூட். ரொம்ப அழகா இருக்கிறாய். ராஜீவ் கைங்கர்யமா?" என்று அவளின் கன்னத்தை வருடியபடி உள்ளே வந்த பவித்ராவின் கண்களில் உண்மையான பெருமிதமும் சந்தோஷமும் மிளிர்ந்தது.

"அதென்ன கிருஷ்ணா மட்டும் அண்ணா, அவள் மட்டும் பவியா? அண்ணி என்று மரியாதையா கூப்பிட மாட்டாயா? இதெல்லாம் கேட்க மாட்டாயா கிருஷ்ணா..." என்று மிரட்டியபடி அவர்கள் இருவரையும் வரவேற்ற ராஜீவன் தோளில் தட்டினான் கிருஷ்ணா.

"யப்பா! கல்யாணம் முடிஞ்சு ஒரு மாசம் ஆனதுக்கு ஏதோ விருந்து கொடுக்கிறாய் என்று நினைத்து தான் இங்கே வந்தேன். இப்படி சிண்டு முடியக் கூப்பிடுவாய் என்று எனக்குத் தெரிந்து இருந்தால் வந்தே இருக்க மாட்டேன்..." என்று கிருஷ்ணா சிரிக்க எல்லோரும் அவன் சிரிப்பில் இணைந்தார்கள்.

"இந்த புலவ் ரொம்ப நல்லா இருக்கு. யார் செய்தா?" என்று உற்சாகமாக விசாரித்தான் கிருஷ்ணா. "இதென்ன கேள்வி? இங்கே நல்ல சமையல் என்றால் ராஜீவாதான் இருக்கணும். குக்கிங் எக்ஸ்பெர்ட் இல்லையா?" என்று பவித்ரா சொல்ல ராஜீவன் தலை அசைத்து மறுத்தான்.

"நான் தியரியில் எக்ஸ்பெர்ட். இது இதைச் சேர்த்தால் இந்தச் சுவை வரும் என்று சொல்வேன். ஆனால் பிராக்



டிகலா பண்றதுல சந்தியா தான் எக்ஸ்பெர்ட். இம்பாக்ட் உங்களை லஞ்சுக்குக் கூப்பிடணும் என்று ஐடியா கொடுத்ததே அவள் தான்..."

"பார்த்து ஒரு மாசம் ஆச்சே! இத்தனை நாள் வீடு செட் பண்றதுல நிறைய வேலை இருந்தது. சாமான் வாங்க, அடுக்க, என்று பொழுது போய்டுச்சு. மூணு நாளா ஒரே போர். அதான் பவித்ராவைப் பார்க்கலாமே என்று நினைத்தேன்" என்று சந்தியா சொல்ல அவளின் உணர்வுகளை கணக்கெடுத்தான் ராஜீவன். நாம் காலையில் கிளம்பி மாலையில் வருவதில் இத்தனை நாளா இவள் என்ன செய்கிறாள் என்ன நினைக்கிறாள் என்பதைக் கோட்டை விட்டுட்டோமா? என்று எண்ணியபடி யோசனையில் ஆழ்ந்தான்.

"பவித்ரா வந்த பிறகாவது ஒழுங்கா மூணு வேளை சாப்பிடுறீங்களா இல்லையாண்ணா?" என்று அக்கறையுடன் விசாரித்தாள் சந்தியா.

"எங்கே! காலையில் ஆறு மணிக்கு கான்கிரீட் போடணும் என்று கிளம்பிப் போனால் நான் என்ன பண்ணட்டும்? எட்டு மணிக்குக் கிளம்பினால் சமையல் செய்யலாம். அதுவும் இல்லை என்றால் காலையில் சீக்கிரம் போகணும் என்று முதல் நாளே சொன்னால் பரவாயில்லை. அதுவும் அய்யாவால் முடியாது..." என்று பவித்ரா குறைப்பட, கிருஷ்ணா அக்கறையுடன் இடைமிட்டான்.

"அப்படி இல்லை சந்தியா. அவளும் வேலைக்குப் போயிட்டு எழு எட்டு மணிக்கு வருகிறாள். ரெஸ்ட் எடுக்கட்டும் என்று தான் சொல்வதில்லை..."

"ஹேய் நீயும் வேலைக்குப் போகிறாயா? சொல்லவே இல்லையே?" என்று விசாரித்த சந்தியாவை யோசனையோடு பார்த்தான் ராஜீவன்.



Optimized by www.ImageOptimizer.net

"அவரோட ஆபீஸ் தான். எந்த எந்த சைட்டுல எந்த தனை பேர் வந்தாங்க? என்ன வேலை என்ன வேலை நடந்தது. நடக்கலை என்று தகவல் சேகரிக்கும் வேலை தான். காலையில் லேட்டா பதினொரு மணிக்கு போனேன். ஆனால் சாயங்காலம் ஏழு மணி ஆகிடும். நடுவுல ஒரு [illegible] தான் நல்ல சாப்பாடு..." என்று பெருமையாக [illegible] சொல்ல சந்தியா முறைத்தாள்.

"பவித்ரா, காலைச் சாப்பாட்டை ஸ்கிப் பண்ணக் கூடாது என்று தெரியாதா? ராத்திரி லேட்டா சாப்பிடக் கூடாது என்று எல்லாம் சொன்னால் அப்ப தான் புரியும் என்று [illegible] உணவு பழக்கத்தை சாப்பாட்டை? நீ வந்து திருத்துவாய் என்று பார்த்தால் நீயும் அவரோடு சேர்ந்து விட்டாய்" என்று அதட்ட, அதில் அக்கறை இருந்ததை மூவருமே உணர்ந்தாலும் [illegible] பாணியில் பதில் சொன்னார்கள்.

"விடு சந்தியா..." என்று ராஜீவன் சமாதானம் சொல்ல, "எனி மேடம், இனிமேல் நீங்க சொன்னபடி செய்றோம் மேடம். இந்த ஒரு முறை மன்னித்து விடுங்க மேடம்" என்று பவ்யமாக பவித்ரா சொல்ல, "இருந்தாலும் சந்தியாவுக்கு நீங்க ரொம்ப இடம் கொடுக்கிறீங்க. [illegible] இருக்கு..." என்று ராஜீவன் புகழ்ந்து திரும்பி, [illegible] பத்திரிகை வாசித்தான் [illegible].

கலகலப்பாகப் பேசி, கையில் கொண்டு வந்த பரிசை கொடுத்து விட்டு, "ரொம்ப நாளைக்குப் பிறகு இந்த மாதிரி ஒரே இடத்தில் நாலு பேரும் சந்தித்து, பேசி சிரித்து சந்தோஷமா சாப்பிட்டது நல்லா இருந்தது. இனிமேல் அப்பப்போ இது மாதிரி சந்திக்கணும். கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுங்க..." என்று சொல்லி விட்டு



[illegible] மணி அளவில் கிளம்பியவர்களை வழி அனுப்பி [illegible] உள்ளே வந்தார்கள்.

"சந்தியா பகலில் ரொம்ப போர் அடிக்குதா?" என்று [illegible] வரும்போதே விசாரித்தான்.

"கொஞ்சம்... இத்தனை நாள் நிறைய வேலை இருந்தது [illegible] இல்லாவிட்டால் எனக்கு கஷ்டமா இருக்கு [illegible] கேட்கறீங்க?"

"நீ ஏதாவது வேலைக்குப் போகிறாயா?"

"ஹூஹீம்... நான் எங்கேயும் வேலைக்குப் போக [illegible]. எனக்கு அது சரி வராது. நீங்க வீட்டுக்கு வரும் [illegible] நான் வெளியே இருப்பது எனக்குப் பிடிக்காது..."

"நீ வீட்டுல் இருந்தால் எனக்கு சந்தோஷமா இருக்கு [illegible] என்று பொய் சொல்ல விரும்பவில்லை. ஆனால் [illegible] இருக்கத் தேவை இல்லை. இந்த உலகத்தில் [illegible] பேர் வேலைக்கும் போறாங்க...?"

"மத்தவங்களைப் பத்தி நான் பதில் சொல்ல விரும்ப[illegible] எனக்கு அது சரி வராது..."

"அப்ப ஏதாவது மேலே படிக்கிறாயா?"

"நான் ஏற்கனவே டிகிரி படிக்கிறேன். காலேஜ் வேண்[illegible] குழந்தை ஏதாவது வந்து விட்டால் காலேஜுக்கும் [illegible] ஒரு மாதிரி இருக்கும்..."

"நோ... குழந்தை வேண்டும்னால் தள்ளிப் போட்டு..." என்று சொல்ல முயன்றவன் வாயை அவசரமாகக் [illegible] மூடினாள்.

"அப்படி எதுவும் சொல்லாதீங்க. உங்க அம்மா அப்பாவை நினைச்சுப் பார்த்தீங்களா? அவங்க எவ்வளவு ஆசையா இருப்பாங்க தெரியுமா?

Optimized by www.ImageOptimizer.net

"எல்லாரைப் பற்றியும் நீ நினைக்கிறாய். உன்னைப் பற்றி யார் நினைப்பது? நீ சந்தோஷமா இருக்கணும் என்று நான் நினைக்கிறேன். உனக்கு சுயமா சம்பாத்தியம் இருக்கணும்..."

"அதுக்கென்ன, எனக்கு ரெண்டு வாரம் டைம் கொடுங்க. வீட்டில் இருந்தபடியே என்ன செய்யலாம்? என்னால் தனியா என்ன செய்ய முடியும் என்று யோசித்துச் சொல்றேன்" என்றவளின் அருகே படுத்துக் கண்களை மூடியவன் தூங்கவில்லை.

"என்ன ரொம்ப அமைதியா இருக்கீங்க? ஏதாவது மூட் அவுட்டா...?" என்றபடி கைகளை அவன் மேல் படர விட்டாள் சந்தியா.

"நீ இங்கே சந்தோஷமா இருக்கியா சந்தியா?" என்ற அவன் கேள்வி முடியும் முன்னே பதறி எழுந்தாள் சந்தியா.

"என்ன கேள்வி இது? உங்களுக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி எல்லாம் கேட்கறீங்க? உங்களுக்கு இந்த சந்தேகம் வரலாமா? இந்த வீட்டில் ராணி மாதிரி இருக்கேன். எனக்கென்ன குறைச்சல்?"

"பவித்ரா மாதிரி உனக்கு வேலைக்குப் போகத் தோன்றினால்..."

"எனக்கு அந்த மாதிரி ஆசை எல்லாம் இல்லை. இன்னும் சொல்லப் போனால் பவித்ராவைப் பார்த்தால் எனக்குப் பாவமா இருக்கு. தனியா அவளுக்கு என்று சமைத்துச் சாப்பிடவும் பிடிக்காமல். கிருஷ்ணாவுக்கும் சமைத்துக் கொடுக்க முடியாமல் சங்கடப் படுகிறாள்..."

"அதுக்கு இல்லை சந்தியா. உனக்கு ஒரு தேவை என்றால் யாரையும் கேட்காமல் சுதந்திரமா செலவு



...சம்பாத்தியம் தேவை இல்லையா? அதைத் ...சொன்னேன்..."

"இங்கே பாருங்க. இந்த மாதிரி இன்னொரு தடவை கேட்காதீங்க. பொருளாதார தேவையில் இருப்பவர்கள் வேலைக்குப் போகலாம். நமக்கு அந்த தேவை இல்லை. அதை விடுங்க. என்னைப் பற்றி அணு அணுவா தெரிந்து வைத்து இருக்கிறேன் என்று எப்போதும் பீற்றிக் கொள்ளும் ஒரு. கேள்வி கேட்டது எப்படி என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்..." என்று பாவனையோடு சொன்னவளை இழுத்துத் தன் மேலே போட்டுக் கொண்டான்.

"ஹேய்! யாரை மக்கு என்று சொன்னாய்?" என்றவன் குரலில் போலி மிரட்டலும் குறும்புத் தனமும் ...ந்து இருந்தது.

"இங்கே இருப்பது ரெண்டே பேர். வேறே யாரை சொல்லப் போறேன்?"

"இருப்பது ரெண்டு பேர் தான் என்று எப்படிச் சொல்றாய்? இன்னொருத்தர் கூட இங்கே இருக்கலாமே" என்றவன் கைகள் அவளின் வயிற்றை வருட, கையைத் தட்ட விட்டாள்.

"எனக்குத் தெரியாமல் யாரும் இங்கே வர முடியாது. அப்படி வந்தால் முதலில் உங்களிடம் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்லப் போறேன்? இப்போதைக்கு இங்கே யாரும் இல்லை..." என்று கொஞ்சலாகச் சொன்னவளை அருகே படுக்க வைத்தான்.

"இப்போதைக்கு இல்லை என்றால் என்ன? சீக்கிரமே வருவதற்கு ஏற்பாடு பண்ணிட்டால் போச்சு..." என்று

Optimized by www.ImageOptimizer.net

சொன்னவன் ஆசையுடன் அவளை அணைத்துக் கொண்டான்.

# 27

உடன் பணி புரியும் சக விரிவுரையாளருக்கு மறுநாள் திருமணம் என்பதால் வரவேற்பு நிகழ்ச்சிக்கு சந்தியாவை அழைத்து, அவள் தயங்கவே தான் சென்று வருவதாகவும், மாலை திரும்பி வரத் தாமதமாகும் நீ சாப்பிட்டு விடு என்றும் சொல்லிவிட்டு சென்று இருந்தான் ராஜீவன். எப்போதும் ஐந்தில் இருந்து ஐந்தரைக்குள் வீட்டுக்கு வந்து விடும் ராஜீவன் அன்று எட்டு மணியை நெருங்கிக் கொண்டு இருக்கும் போதும் வரவில்லை என்பது அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

அன்று பவித்ராவிற்கு பிறந்த நாள். இதுவரை அவளுக்கு முதலில் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்வது சந்தியா தான். பிறந்த நாள் அன்று அவளைப் பார்க்காமல் இருப்பது இதுதான் முதல் முறை. காலையில் போனில் வாழ்த்துச் சொன்னாள். மூன்று நாட்களுக்கு முன்னால் அவள் வந்து போய் இருந்ததால், ராஜீவனிடம் கேட்க ஒரு மாதிரி இருந்தது.

தன் பிறந்த நாள் யாருக்குமே நினைவில் இருக்காது. ஆனால் பவித்ரா தனக்கு எடுக்கும் உடைகளில் இருந்து ஞாபகமாய் ஒரு புது ட்ரெஸ் கொடுப்பாள். அன்று நானே சமைக்கிறேன் என்று ஸ்வீட் செய்து கொடுப்பாள். நேரில் போய் வாழ்த்துச் சொன்னால் பரவாயில்லை என்று தோன்றியது.



மணி எட்டரை. இனிமேல் அவன் வந்த பிறகு போகலாம் என்று கேட்பதும் நியாயமாக இருக்காது. மறுநாள் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். பவித்ராவின் வீடு செல்ல இங்கிருந்து முக்கால் மணி நேரம் ஆகும். தனக்குள்ளே குழம்பியபடி அமர்ந்து இருந்தாள்.

அவளின் அலைபேசி அழைக்க, ஆவலுடன் ஓடி வந்து எடுத்தவளுக்கு கோவையில் இருந்து சாவித்திரி அழைத்து இருப்பது தெரிய ஆச்சரியமானாள். ''அத்தை எப்படி இருக்கீங்க? பவித்ராவிடம் பேசினீங்களா? பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னீங்களா?'' என்று ஆர்வமாக விசாரித்தாள்.

''ம்ம்ம், பேசினேன். நீ எப்படி இருக்கிறாய்? உன் மாப்பிள்ளை வந்தாச்சா?''

''இன்னும் இல்லை அத்தை. வரும் நேரம் தான்...''

''இன்னும் வரலையா? காலேஜில் வேலை பார்க்கிறவங்களுக்கு எட்டரை மணி வரை வெளியே என்ன வேலை? காலேஜில் இருந்து வராமல் இன்னும் என்ன பண்ணுறான்? நல்லா இருக்கறவன் கூட உன்னைப் பார்த்தால், மாறிவிடுவானோ? உன் ராசி போல'' என்று போகிற போக்கில் நாவு என்ற சாட்டையைச் சுழற்றப் பதறினாள்.

''கூட வேலை பார்ப்பவர்களுக்குக் கல்யாணம். சொல்லிட்டு தான் போனாங்க...''

''வண்டியில தான் போறான்? பார்த்துப் போகச் சொல்லு. வேறே மாதிரி பழக்கம் எதுவும் இல்லையே? அனுசரிச்சு இரு'' என்று சொல்லி விட்டு போனை வைக்க அவளின் மனம் மேலும் கலங்கியது. 'அது உன்

Optimized by www.ImageOptimizer.net

ராசி போல' என்ற அத்தையின் வார்த்தைகள் மனை
மேலும் கனமாக்க சாமி அலமாரியின் முன் வந்
அமர்ந்தாள். பவித்ராவை சாப்பிடாமல் தவிர்க்காதே
என்று ஆலோசனை சொன்னவளால் இப்போது சாப்பி
முடியவில்லை. வாசல் அழைப்பு மணி ஒலித்ததும் ஓ
வந்தாள்.

''ஹேய்! என்ன இவ்வளவு வேகமா ஓடி வருகிறாய்?
அய்யாவை எதிர்பார்த்து வாசலிலேயே காத்திருந்தாயா?''
என்று கேலியாக சொன்னவன் மார்பில் வேகமாக
சாய்ந்து அணைத்துக் கொண்டாள்.

''சந்தியா, என்ன ஆச்சு? அம்மா பேசினாங்களா?
யாருக்காவது உடம்பு சரி இல்லையா? சாப்பிட்டாயா?''
என்று கேட்ட கேள்விக்கு தலையை மட்டுமே அசைக்க
முடிந்தது.

இவளை மூட் அவுட் ஆக்கும் சக்தி வேறே யாருக்கு
என்று அவசரமாக யோசித்தவன், அவளின் முகத்தை
நிமிர்த்தி, ''கோயம்புத்தூரில் இருந்து உங்க அத்தை
போன் பண்ணினாங்களா?'' விசாரித்தான். அவளின்
மௌனமே அவனுக்கு வேண்டிய தகவலைச் சொல்ல,
''நினைத்தேன்... என்ன சொன்னாங்க...'' என்று விசா
ரித்தவன் மார்பில் அழுத்தமாக புதைந்து கொண்டாள்.

''அவங்க ஏதாவது உன்னையோ என்னையோ குறை
சொல்லி இருந்தால் அதை இக்னோர் பண்ணிடு. வா,
ஏதாவது சாப்பிட செஞ்சு தரேன்...'' என்று அழைத்தவன்
மார்பில் இருந்து விலகவில்லை. மார்பு சட்டையை
அவள் கண்ணீர் நனைப்பதை உணர முடிந்தது.

''என்ன சந்தியா இது? என்ன ஆச்சு என்று சொல்
லாமல் அழுதால் என்ன பண்ணட்டும்? உங்க அத்தை



ல்லும் ஒரு வார்த்தைக்கு நீ மனம் உடைந்து அழு
என்றால், அப்ப விடிய விடிய, தைரியமா இருக்
, வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர் கொள்ள
என்று நான் சொல்லிக் கொடுத்த பாடம் மனசில்
வில்லை என்று அர்த்தமா? இது எனக்கு ரொம்பச்
டமா இருக்கு சந்தியா...''

''சந்தியா நான் உன்னை வெளியே கொஞ்சம்
ழைத்துப் போகலாம் என்று நினைத்தேன். இப்படி
ந்தால் என்ன பண்றது?'' என்று சொன்னதும் விலகி
ள்.

''எங்கே போகணும்? மணி ஒன்பதாகப் போகிறதே?''

''எங்கே போகணும் என்று சொன்னால் தான் வரு
யா?''

''அப்படி இல்லை...''

''ஷ்! மேலே ஒரு வார்த்தை பேசக்கூடாது முகம்
வி ட்ரெஸ் மாத்திட்டு வா. ரெண்டு தோசை எடுத்
டு வரேன். சாப்பிட்டுட்டு கிளம்பறோம்...'' என்று
ட்டியவன் வண்டியில் அழைத்துக் கொண்டு சென்ற
டம் பவித்ராவின் வீடு.

''இதுல பவித்ராவுக்கு ஒரு சாரி இருக்கு. கொண்டு
போய் கொடுத்து க்ரீட் பண்ணிட்டு உடனே கிளம்பிட
லாம். அவங்களை நைட் நேரத்துக்கு தொந்தரவு பண்ண
வேண்டாம். இறங்கு'' என்று சொல்லி வண்டியை
நிறுத்தி சில வினாடிகள் ஆன பின்னும் அவள் தன்
தோளில் இருந்து கைகளை விலக்கவோ இறங்க முய
லவோ இல்லை என்றதும் ஆச்சரியமாக திரும்பிப் பார்த்
தான்.

Optimized by www.ImageOptimizer.net

''என்ன தூங்கிட்டியா?'' என்றபடி திரும்பிப் பார்த்தவன் அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்தபடி இருப்பதைக் கண்டு பதறினான்.

''ஹேய் என்ன ஆச்சு...?''

''நான் சொல்லாமலே... என்ன நினைக்கறேன் என்று யூகித்து... உங்களுக்கு நான்... நான்...''

''ஹேய் லூசு. உன் கசின் என்ற முறையில் ஐநூறு ரூபாய்க்கு ஒரு ட்ரெஸ் வாங்கிக் கொடுத்ததுக்கு இவ்வளவு எமோஷனலா ஆகிறாய்? தொட்டதுக்கு எல்லாம் அழுகிறாய்? ஏற்கனவே அழாமல் இருக்க முயற்சி செய்கிறேன் என்று சொன்ன கதையை இனி நம்பக் கூடாது. இனிமேல் எதுக்குமே... அது நானே இந்த உலகத்தில் இல்லை என்றாலும் அழக்கூடாது...'' என்றவன் வாயைப் பொத்தினாள்.

''ஹையோ! ஏற்கனவே நானே பயந்து போய் இருக்கேன். நீங்க வேறே ஏன் இப்படி அச்சானியமா பேசறீங்க?''

''என்ன பயம்...?'' என்று உடனே திரும்பிக் கேட்டவனுக்கு பதில் கிடைக்கவில்லை.

''வாசலில் நின்று எவ்வளவு நேரம் கதை அளப்பது? அப்புறமா சொல்றேன். இப்பவே மணி ஒன்பதரை ஆகப் போகுது...'' என்றபடி அவள் முன்னால் நடக்க அவள் சொன்னது சரி என்பதால் அவனும் அப்போதைக்கு அந்தப் பேச்சை ஒத்தி வைத்தான்.

இரவு ஒன்பது மணிக்கு வீட்டுக்கு தேடி வந்து வாழ்த்து சொன்ன சந்தியாவை கட்டி அணைத்து முத்த மழை பொழிந்து பவித்ரா கொடுத்த கேக்கை உண்டு



பரிசை கொடுத்து விட்டு, 'ரொம்ப நேரமாச்சு, இன்னொரு நாள் சாவகாசமாய் தங்குகிற மாதிரி வருகிறோம்' என்று விடை பெற்று வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகு மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

''சந்தியா, ஏற்கனவே நம்முடைய கல்யாணம் அவசரமா நடக்கணும் என்று நான் நினைக்க என்ன காரணம் என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்...'' என்று பேச்சை ஆரம்பித்தான்.

''என்ன... திடீர் என்று...?'' என்று பதில் சொல்லத் திணறியவளைக் கூர்மையாக அளந்தான்.

''ஒரு மாசம் இல்லாமல் திடீர் என்று என்ன பயம் என்று நீதான் சொல்லணும்...''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. நாளைக்கு உங்களுக்குக் காலேஜ் இல்லையா? மணி ஆகுது படுக்கலாம் வாங்க.''

''சந்தியா, உன் மனசுல ஏதாவது கவலையோ பயமோ இருந்து அதை என்னுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்கினால் உனக்கு என் மேலே நம்பிக்கை இல்லை என்று நான் அர்த்தம் கொள்ள வேண்டும்...'' என்று அவன் கடினமான குரலில் சொல்ல அவள் ஓடி வந்து அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க? உங்களை நம்பாமல் இந்த உலகத்தில் வேறு யாரை நம்பப் போகிறேன்? எனக்கு மட்டும் என்று இந்த உலகத்தில் இருப்பது நீங்க மட்டும் தானே? நீங்க சந்தேகமா பேசினால் நான் என்ன செய்யட்டும்...?''

''நான் நம்புகிறேன். நீயும் என்னை நம்பினால், உன் மன சஞ்சலத்துக்கு என்ன காரணம் என்று சொல்லிடு. மன பாரம் குறையும்.''

Optimized by www.ImageOptimizer.net

''என்ன தூங்கிட்டியா?'' என்றபடி திரும்பிப் பார்த்தவன் அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்தபடி இருப்பதைக் கண்டு பதறினான்.

''ஹேய் என்ன ஆச்சு...?''

''நான் சொல்லாமலே... என்ன நினைக்கறேன் என்று யூகித்து... உங்களுக்கு நான்... நான்...''

''ஹேய் லூசு. உன் கசின் என்ற முறையில் ஐநூறு ரூபாய்க்கு ஒரு ட்ரெஸ் வாங்கிக் கொடுத்ததுக்கு இவ்வளவு எமோஷனலா ஆகிறாய்? தொட்டதுக்கு எல்லாம் அழுகிறாய்? ஏற்கனவே அழாமல் இருக்க முயற்சி செய்கிறேன் என்று சொன்ன கதையை இனி நம்பக் கூடாது. இனிமேல் எதுக்குமே... அது நானே இந்த உலகத்தில் இல்லை என்றாலும் அழக்கூடாது...'' என்றவன் வாயைப் பொத்தினாள்.

''ஹையோ! ஏற்கனவே நானே பயந்து போய் இருக்கேன். நீங்க வேறே ஏன் இப்படி அச்சானியமா பேசறீங்க?''

''என்ன பயம்...?'' என்று உடனே திரும்பிக் கேட்டவனுக்கு பதில் கிடைக்கவில்லை.

''வாசலில் நின்று எவ்வளவு நேரம் கதை அளப்பது? அப்புறமா சொல்றேன். இப்பவே மணி ஒன்பதரை ஆகப் போகுது...'' என்றபடி அவள் முன்னால் நடக்க அவள் சொன்னது சரி என்பதால் அவனும் அப்போதைக்கு அந்தப் பேச்சை ஒத்தி வைத்தான்.

இரவு ஒன்பது மணிக்கு வீட்டுக்கு தேடி வந்து வாழ்த்து சொன்ன சந்தியாவை கட்டி அணைத்து முத்த மழை பொழிந்து பவித்ரா கொடுத்த கேக்கை உண்டு



பரிசை கொடுத்து விட்டு, 'ரொம்ப நேரமாச்சு, இன்னொரு நாள் சாவகாசமாய் தங்குகிற மாதிரி வருகிறோம்' என்று விடை பெற்று வீட்டுக்குத் திரும்பி வந்த பிறகு மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

''சந்தியா, ஏற்கனவே நம்முடைய கல்யாணம் அவசரமா நடக்கணும் என்று நான் நினைக்க என்ன காரணம் என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்...'' என்று பேச்சை ஆரம்பித்தான்.

''என்ன... திடீர் என்று...?'' என்று பதில் சொல்லத் திணறியவளைக் கூர்மையாக அளந்தான்.

''ஒரு மாசம் இல்லாமல் திடீர் என்று என்ன பயம் என்று நீதான் சொல்லணும்...''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. நாளைக்கு உங்களுக்குக் காலேஜ் இல்லையா? மணி ஆகுது படுக்கலாம் வாங்க.''

''சந்தியா, உன் மனசல ஏதாவது கவலையோ பயமோ இருந்து அதை என்னுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்கினால் உனக்கு என் மேலே நம்பிக்கை இல்லை என்று நான் அர்த்தம் கொள்ள வேண்டும்...'' என்று அவன் கடினமான குரலில் சொல்ல அவள் ஓடி வந்து அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''என்னங்க இப்படிச் சொல்லிட்டீங்க? உங்களை நம்பாமல் இந்த உலகத்தில் வேறு யாரை நம்பப் போகிறேன்? எனக்கு மட்டும் என்று இந்த உலகத்தில் இருப்பது நீங்க மட்டும் தானே? நீங்க சந்தேகமா பேசினால் நான் என்ன செய்யட்டும்...?''

''நான் நம்புகிறேன். நீயும் என்னை நம்பினால், உன் மன சஞ்சலத்துக்கு என்ன காரணம் என்று சொல்லிடு. மன பாரம் குறையும்.''

Optimized by www.ImageOptimizer.net

"நான் வீட்டுல தனியா இருக்கேன். நிறைய டைம் இருக்கு. யாராவது எப்பவாவது சொன்ன வார்த்தைகளைப் போட்டுக் குழப்பிக்கிட்டு, வேண்டாத சிந்தனை வருது. அதான் அப்படி அழுகை சட்டுன்னு வந்துடுச்சு. தேவை இல்லாதவர்களின் சம்பந்தமில்லா வார்த்தைகள் என்னை பாதிக்க விடாமல் பார்த்துக் கொள்கிறேன். சாரி, இந்த மாதிரி இனிமேல் நடக்காது..." என்று நிதானமான குரலில் தெளிவாகச் சொல்ல அவனும் தெளிந்தான்.

"அந்த தேவை இல்லாதவங்க லிஸ்ட்ல நான் இல்லையே?" என்று கேட்டவனின் குரலில் இயல்பு நிலை திரும்பி இருந்தது.

"நீங்க, அத்தை, மாமா, யாருமே இல்லை, எனக்கு உங்க வார்த்தைகள் வேதம். போதுமா...?"

"நாளைக்கு நான் காலேஜ் போகும் போது என்னோட நீயும் கிளம்பி வா. உனக்கு தொழில் தொடங்க கடன் வாங்குவது தொடர்பா மேனேஜரிடம் பேசிப் பாரு. பாஸ்புக் எடுத்து வச்சுடு. இனிமேல் வீட்டுல நீ தனியா இல்லாமல் ஒரு வழி பண்றேன். ஓகே?"

"ஓகே. இப்ப படுக்கப் போகலாமா? தூக்கம் வருது..."

"படுக்கப் போகலாம். ஆனால் தூங்க முடியாது..." என்று சொன்னவன் கண்களில் கணவனின் ஆசை பார்வை வந்து இருக்க கைகள் அவளைச் சேர்த்து அணைக்க, அன்றைய அந்த இரவு பொழுது மேலும் சில மணி நேரம் அவர்களுக்கு நீண்டது.

* * *

காலை நேரம் கணவன் கல்லூரிக்குக் கிளம்பும் முன்பு அவனுக்கு உணவு தயாரிக்கும் அவசரத்தில் அடுக்



களையில் இருக்க, "சந்தியா, நைட் பேங்க் பாஸ் புக் எடுத்து வை என்று சொன்னேனே மறந்து விட்டாயா?" என்று ராஜீவனின் குரல் அறைக்குள் இருந்து கேட்டது.

"ரெண்டாவது டிராயரில் எடுத்து வச்சு இருக்கேன். பாருங்க..."

"மறந்துட்டேன் என்று உண்மை சொல்ல வேண்டியது தானே நானே தேடி எடுத்துக் கொள்கிறேன். எடுத்து வச்சு இருக்கேன் என்று ஏன் பொய் சொல்கிறாய்" என்று ராஜீவனின் குரல் வர வேகமாக வந்து மேஜை ட்ராயரைத் திறந்தவள் பாஸ் புக் இல்லாததைக் கண்டு திகைத்தாள்.

"பாஸ் புக் எங்கே சந்தியா..." என்று கேட்டவனின் குரலில், எதையும் தேடும் அவசரமோ, காணோம் என்ற பதட்டமோ இல்லை.

"ஹேய்... நீங்க தான் எங்கேயோ எடுத்து வச்சு இருக்கேங்க. எங்கே பாஸ் புக்..." திரும்பியவளை இழுத்து அணைத்தான்.

"பாஸ்புக் இந்த ரூமில் எங்கேயோ இருக்கு என்று தெரியும். ஆனால் எங்கே என்று தெரியாது..." என்றவன் அவளின் கன்னத்தில் இதழ் பதிக்க, "ஹையோ! என்னங்க நீங்க கிச்சனில் வேலை இருக்கு. விடுங்க..." என்றபடி தள்ளிவிட முயன்று தோற்றாள்.

"நீதானே கிச்சனுக்கு காலை நேரத்தில் என்னை வரக்கூடாது என்று தடா போட்டாய். அதனால் தான் உன்னை இங்கே வரவைத்தேன்..."

"காலை நேரத்தில வந்து வேலை செய்ய விடாமல் தொந்தரவு பண்ணினால் வேறென்ன பண்றது குளிச்ச

Optimized by www.ImageOptimizer.net

வந்து அப்படியே நிற்கறீங்க. முதலில் கிளம்புங்க. பொய் சொல்லி வரவழைச்சதும் இல்லாமல் நான் பொய் சொல்கிறேன் என்று குற்றச்சாட்டு வேறே... உங்களை...'' என்று பல்லைக் கடிக்க, காலையில் கொடுக்க மறந்ததை இப்ப கொடுத்துடறேன்'' என்று அவனின் கன்னத்தில் முத்திரை பதித்து விலகினாள்.

''சந்தியா, மணி ஆச்சு! காலேஜுக்கு போகும்போது இறக்கி விடுகிறேன் என்று சொல்லி இருந்தேனே! மறந்து விட்டாயா'' என்று மிரட்டி கொண்டு இருந்தான் ராஜீவன்.

''இதோ வந்துட்டேன்... சாரி...'' என்று சொல்லியபடி ஓடி வந்து பைக்கில் ஏறியவளை புன்னகையோடு பார்த்தான்.

''இந்த மாதிரி மிரட்டினால் சரியா சொல்வது? உனக்கு எப்படி ஒரு நல்ல பொண்டாட்டியா இருப்பது என்று தெரியவே இல்லை. உனக்கு நான் அப்பப்போ கொடுக்கும் பயிற்சி எல்லாம் காணாமல் போய்டுதே?'' என்று கேலியாகக் கேட்டான்.

''ஏன் வேறென்ன செய்யணும்?''

''கிளம்பும் போது வம்பு பண்ணி, லேட் ஆக்கினது யாரு? என்னைக் குறை சொல்றீங்க என்று சண்டை வளர்க்கணும்'' என்று சிரித்தான் ராஜீவன்.

''இப்படி பேசு என்று நீங்களே டையலாக் சொல்லி கொடுக்க வேண்டியது. அப்புறம் பேசும்போது, சந்தியா... நீ ரொம்ப மாறிட்ட. பேசுவது நீதானா என்று எனக்குச் சந்தேகமா இருக்கு என்று சொல்ல வேண்டியது...'' என்று சொல்ல, சிரித்தபடி பைக்கை நகர்த்தினான்.



''வண்டியை திருப்புங்க. வீட்டுக்குப் போகணும். ஒரு ...க்கியமான விஷயம் மறந்துடுச்சு...'' என்று அவசர ...க சொன்னாள் சந்தியா.

''அதென்ன முக்கியமான விஷயம்? எனக்குத் தெரி ...மல்...'' என்றபடி அவள் பின்புறம் திரும்ப, அவன் ...துகில் ஒரு அடி வைத்தாள்.

''வண்டி ஓட்டும்போது பின்னால் திரும்பாதீங்க ...று எத்தனை தடவை சொல்றது?''

''இங்கே ட்ராபிக் இல்லையே சந்து...''

''இங்கே ட்ராபிக் இல்லை என்று திரும்பும் பழக்கம் ...டுக்குள்ளே போகும்போது வராது என்று என்ன ...யம்?''

''மிரட்டறதைப் பார்த்தால் பயமா இருக்கே? சரி ...கிரம் வா. லேட் ஆகிடுச்சு. உன்னை நான் பேங்க்ல ...க்கி விட்டுட்டு காலேஜ் போகணும்...'' என்றவன் ...டியில் இருந்து இறங்காமலே காத்திருந்தான். போன ...கத்தில் திரும்பி வந்தவள் ஹெல்மெட்டை அவ ...டம் நீட்டி, 'போகலாம்' என்று பின்புறம் ஏறி அமர்ந் ...ள்.

''என்ன சைலேண்ட்டா கொடுக்கிற? எப்பவும் ஒரு ...ச்சனை நடக்குமே! காணோம்...'' என்று வாங்கி ...ந்து, வண்டியைக் கிளப்பிய பின்னும் அவளிடம் ...ருந்து பதில் இல்லை.

''கிளம்பும்போது வண்டி சாவி எடுக்கறீங்களே! ...க்கு நேர் கீழே தானே ஹெல்மெட் இருக்கு. அதை ...ப்பதில் என்ன சிரமம் உங்களுக்கு?'' என்று அவன் ...ல்வதைப் போல நடித்துக் காட்ட, ''உங்க தலை

Optimized by www.ImageOptimizer.net

மேலே உங்களுக்கு அக்கறை இல்லை என்றால் நா...
என்ன செய்ய முடியும்?'' என்று சொன்னாள் சந்திய...

''என் தலை மேலே எனக்கு அக்கறை இல்லையா யா...
சொன்னா? நிறைய இருக்கு. அதுவும் உனக்காகவே...''
என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் ராஜீவன்.

''சொல்றது ஒண்ணு செய்றது ஒண்ணு. என் மேலே...
நிஜமாவே அக்கறை இருந்தால் ஹெல்மெட் போட...
எப்படி மறக்கும்?''

''மறக்கலை சந்து. வேண்டாம் என்று விடுவது உன...
காக என்று சொன்னேன்...''

''எனக்காக ஹெல்மெட் போடாமல் இருக்கீங்களா?
என்ன உளறல் இது...?''


''இப்ப நான் தொடர்ச்சியா ஹெல்மெட் போட்டால்,
வேர்க்கும். வேர்த்தால் பொடுகு வரும். பொடுகு வ...
தால் முடி உதிரும். அப்புறம் முப்பது வயசுல தலை...
சொட்டை ஆயிடும். அப்புறம் உனக்குப் பொருத்தம...
எப்படி இருப்பது...?''

''சொட்டையா ஆனாலும் நாம் ரெண்டு பேரும்
சந்தோஷமா இருக்கலாம். ஆனால் தலையே இல்லாம
இருக்க முடியாது. அதை முதலில் புரிஞ்சுக்கோங்க...''
என்று சொன்னவளின் குரல் கலங்கி இருக்க அவ...
பதறினான்.

''ஹேய்! என்ன நீ இவ்வளவு சீரியஸா ஆகிட்ட...
ஆம் சாரி. சும்மா உன்னைச் சீண்டச் சொன்னே...
இனிமேல் ஹெல்மெட் எந்தக் காரணம் கொண்டு...
மறக்கவே மாட்டேன். அது என் மேலே இருக்கு...
அக்கறையினால் மட்டும் இல்லை. உன் மேல் இருக்கு...



அக்கறையினால். போதுமா? கொஞ்சம் சிரியேன்!
இப்படி உம்முன்னு இருக்கறவங்களை எல்லாம் பாங்கு
உள்ளே விட மாட்டாங்களாம்! அவங்க கையெழுத்து
செல்லாது என்று சொல்லிடுவாங்களாம்! அவங்க
கொடுக்கும் செக்கை ஈ.எம்.ஐ.க்கு ஏற்றுக் கொள்ள
மாட்டாங்களாம்!'' என்று அடுத்தடுத்து கேலியாகச்
சொல்லி அவள் கையால் முதுகில் ஒரு அடி வாங்கிய
பின்பே ஓய்ந்தான். கல்லூரிக்குச் சென்ற உடனே
அம்மாவுக்குப் போன் பண்ணி, அவளின் அக்கறையை
யும் அன்பையும் பற்றி சொல்லவும் மறக்கவில்லை.



## 28

வீட்டின் பின்புறம் இருந்த மல்லிகை பந்தலின்
அடியில், பாய் விரித்து, சந்தியாவின் அருகில் அமர்ந்து
பௌர்ணமி நிலவின் அழகோடு காதல் மனைவியின்
அழகை ஒப்பிட்டு ரசித்தபடி, புளியோதரையையும் வட
த்தையும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான் ராஜீவன்.

''இந்த மாதிரி நிலா சோறு அம்மா கையால் சாப்
பிட்டது. மூணு வருஷம் ஆன பிறகு இப்பதான் உன்
கையால் வெளியில உட்கார்ந்து சாப்பிடறேன். ரொம்ப
நல்லா இருக்கு'' என்று அவன் சொல்ல அவள் கனிவுடன்
புன்னகை செய்தாள்.

''போன மாசமே சொன்னீங்க. அதான் இந்த மாசம்
ஞாபகமா செய்து வெளியே எடுத்து வந்தேன். சாப்பாடு
எப்படி இருக்கு...''

''சூப்பரா இருக்கு. நீ இப்படி சமைத்துச் சாப்பாடு போட்டால், ரெண்டு மாசம் கழித்து என்னை யாருக்குமே அடையாளமே தெரியாது. திருவான்மியூரில் இருக்கும் வரைக்கும் பீச்சில் ஒரு மணி நேரம் ஓடினேன். இப்ப இங்கே வந்த பிறகு அதுவும் நின்னாச்சு...''

''நாளைக் காலையே எழுந்து போங்க. நானா போக வேண்டாம் என்று சொன்னேன்?''

''நீதான் என்னை நைட்டும் ஒழுங்கா தூங்க விடுவ தில்லை. காலையிலும் ஒழுங்கா எழுந்திரிக்க விடுவ தில்லை'' என்று கேலியாகச் சொன்னவன் கரங்கள் அவள் கன்னத்தில் விளையாட, ''நீங்க விடுற ஜொள்ளுல, ரெண்டு நாளைக்குத் தோட்டத்துல இருக்கும் செடிக்கு தண்ணி விட வேண்டாம் போல...'' என்று சிரித்தாள்.

''இதெல்லாம் நல்லா பேசு. ஆனால் முக்கியமான விஷயத்தை மட்டும் கண்டுக்காதே!'' என்று சலித்துக் கொண்டான்.

''என்ன விஷயம் கண்டுக்கலை? சொல்லுங்க உடனே செஞ்சுடறேன்.''

''பார்த்தியா, என்ன உறுதி மொழி கொடுத்தோம் என்பது கூட உனக்கு ஞாபகம் இல்லை. இதைத்தான் சொன்னேன்...'' என்று முறைத்தவனின் கன்னத்தை வருடினாள்.

''எனக்கு ஞாபகம் இருக்கு. உங்களுக்கு எப்படி கோபம் வரும் என்று பார்க்க எனக்கு ஆசையா இருந்தது. அதான் அப்படி நடித்தேன்...''

''மக்களே கேளுங்கப்பா! புருஷனை கோபப்படுத்திப் பார்க்க நடித்தேன் என்று ஒரு பொண்டாட்டி சொன்னால்



...ன் என்ன செய்யணும் என்று நீங்களே...'' என்று ...மாகச் சொல்ல அவன் வாயைப் பொத்தினாள்.

''...றைய்யோ! ராத்திரி நேரத்துல ஏன் இப்படிச் சத்தம் ...டுறீங்க?''

''என்ன பிசினஸ் செய்கிறேன் என்று சொல்ல ...ண்டு வாரம் டைம் கேட்டாய். நானும் கொடுத்தேன். ...து முடிஞ்சாச்சு. அதுக்கு நடுவில் நானே உன்னை ...க்க அழைத்து போய் ஆபீசர் ஒருத்தரை அறிமுகப் ...த்தி பேசிட்டு வா, என்று சொன்னேன். அதுக்கு பிறகு ...ஒரு வாரமாச்சு. என்ன பண்ணணும் என்று முடிவு பண்ணாமல் இருந்தால் என்ன அர்த்தம்?''

''நான் உங்களிடம் சொல்லல என்று சொல்லுங்க. அது சரி. முடிவு பண்ணலை என்று சொல்லாதீங்க. அது தப்பு...'' என்று சந்தியா சொல்ல அவன் புருவம் உயர்த்தி ...னான்.

''ஹேய்! நிஜமாவா? ஏன் என்னிடம் முன்பே சொல் ...லை?''

''நீங்க ஏன் மூன்று வாரமா என்னிடம் இது பற்றி ஒன்றுமே கேட்கலை?'' என்று அவள் மடக்க அவன் புன்னகை செய்தான்.

''உன்னை ரொம்ப வற்புறுத்துவது மாதிரி இருக்கக் கூடாது. உனக்கு உண்மையிலேயே ஆர்வம் இருந்தால் அதைப் பற்றி நீயே பேசுவாய் என்று காத்திருந்தேன். நாலு விஷயத்தை ஆராய்ந்து நீ முடிவெடுக்கப் பழக வேண்டும் என்று எதிர்பார்த்தேன். அதனால் கேட்கலை.''

''உங்களுடைய எதிர்பார்ப்பை முழுமையா நிறைவேற் ...றணும் என்று தான் நானும் உங்களிடம் எதுவும் சொல் ...லலை...''

Optimized by www.ImageOptimizer.net

''இங்கே பாருடா! சந்தியா தொழில் என்ன என்று முடிவே பண்ணியாச்சா? சும்மா உப்புக்கு சப்பாணி கூட என்னிடம் பேசத் தோன்றவில்லையா சந்தியா?''

''என்ன அப்படிச் சொல்லிட்டீங்க? நீங்க எப்போ பேச்சை ஆரம்பிப்பீங்க என்று காத்திருந்தேன். ஒரு நிமிஷம் இருங்க...'' என்று சொல்லி வீட்டினுள் சென்றவள் திரும்பி வரும்போது ஒரு ஃபைலுடன் வந்தாள்.

''நான் உத்தேசமா என்ன பண்ணலாம். அதற்கு என்ன செலவாகும் என்று ஒரு கணக்குப் போட்டு வச்சு இருக்கிறேன். பாருங்க. உங்களுக்கு தான் பேங்க் நடைமுறை தெரியும். இதை பாங்க்ல எப்படிக் கொடுத்தால் செல்லுபடி ஆகுமோ அதுக்குத் தகுந்த மாதிரி கம்ப்யூட்டரில், கொஞ்சம் ஜிகினா வேலை செய்து லோன் ஏற்பாடு பண்ணி கொடுத்தால், ஜனவரியிலேயே தொழில் தொடங்கிடலாம் என்று நினைக்கிறேன்...'' என்று நீட்டிய ஃபைலை பார்த்தவன் வியப்பில் விழி விரித்தான்.

அவளுடைய கையெழுத்தில் இருபது பக்கங்கள் இருந்த கோப்பு அது. ப்ளஸ் டூ வரை படித்த, பொருளாதார சூழ்நிலையில் பின் தங்கி, ஆதரவு இல்லாத நிலையில் வளர்ந்த ஒரு பெண், கல்லூரியில் படித்த பெரும்பாலான பட்டதாரிகளை விட நன்றாகத் தயார் செய்து இருந்த ப்ராஜெக்ட் அது. இந்த உலகத்தில் மனித இனம் வாழும் வரை, எந்த நாளும் டிமாண்ட் குறையாத, ஒரு தொழில். அவள் கையில் திறமை இருக்கும் தொழில்.

''சந்தியா, நான் கூட உன்னை என்னவோ நினைத்தேன். பிரமாதமாக கலக்குகிறாய். நீ தயார் பண்ணி



இருக்கும் விபரங்களே போதும். இதை நான் ப்ராஜெக்ட் ரிப்போர்ட்டா ரெண்டு நாளில் ரெடி பண்ணிடறேன். ஆனால் பாங்க்ல நீதான் பேசணும். அங்கே என்ன மாதிரி கேள்வி கேட்பாங்க. அதுக்கு நீ என்ன மாதிரி பதில் சொல்லணும் என்று அதுக்கு உன்னை நான் தயார் பண்ணப் போகிறேன். ரெடியா?'' என்று கேட்க அவள் விழித்தாள்.

''என்னங்க நீங்க! நானே என்னவோ நாலு பேப்பரில் கிறுக்கி வச்சு இருக்கேன். இதை வச்சுட்டுப் பேங்க் மேனேஜரிடம் பேசச் சொன்னால் எப்படி?''

''ஷ்! இப்ப நான் தான் பேங்க் மேனேஜர். இப்படி எல்லாம் சிணுங்கக் கூடாது. நீ அங்கே கொண்டு போக வேண்டியதை ப்ராஜெக்ட் ரிப்போர்ட்டா ரெண்டு நாளில் ரெடி பண்ணி தந்துடுவேன். நீ எப்படி பாங்க்ல லோன் கேட்பாய். அதைச் சொல்லு. ம், ஆரம்பி...''

''சார்... சார்...'' என்று இரண்டு முறை அழைத்தும் அவன் கண்டு கொள்ளாமல் இருக்க, ''ப்ச்! என்னங்க நீங்க உங்களிடம் தானே பேசுகிறேன்? இப்படி பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?'' என்று அவள் அவன் முதுகில் ஒரு அடி வைத்தாள்.

''இப்படி பண்ணினால் உனக்கு எந்த பேங்க்லயும் லோன் கிடைக்காது. நீ கூப்பிட்ட உடனே யாரும் உன்னை பார்க்க மாட்டாங்க. சொன்ன உடனே ப்ரோபோசலை ஏற்று கொள்ளவும் மாட்டாங்க. ப்ராஜெக்ட் நல்லா இருந்தால் மட்டும் போதாது. அது நல்ல ப்ராஜெக்ட் என்று அவங்களை நம்ப வைக்கணும். அது உன் பேச்சுத் திறமையில் இருக்கு. உன் முதல் வாக்கியம், உன்னுடைய தன்னம்பிக்கையை பிரதிபலிப்பதாக

Optimized by www.ImageOptimizer.net

இருக்கணும். இப்பவே சொல்லிட்டேன். நான் நிறைய கேள்வி கேட்பேன். தொட்டதுக்கு எல்லாம் குறை சொல்வேன். மனசு தளராமல் குரலில் பயம் தயக்கம் வராமல், நம்பிக்கை குறையாமல் பதில் சொல்லணும். ஆரம்பி...'' என்று சொல்ல, அவள் ஆழமாக மூச்செடுத்தாள்.

''எக்ஸ்கியூஸ் மீ சார், மே ஐ கம் இன்?'' என்று இம்முறை ஆரம்பித்த சந்தியாவின் குரலில் தெளிவும் தன்னம்பிக்கையும் இருக்க அவன் நிமிர்ந்து மெல்ல தலை அசைத்தான்.

''சார், என் பேர் சந்தியா. உங்க பாங்க்ல சுய தொழில் தொடங்க கடன் உதவி பெறுவது சம்பந்தமா வந்து இருக்கேன்...''

''காலை நேரத்துல பிசியா இருப்போம், இப்ப எல்லாம் பார்க்க முடியாது. அப்புறம் வாங்க...'' என்று முகத்தில் அடித்தாற் போல சொல்ல அவளுக்கு முகம் வாடியது.

அவன் ஆரம்பத்தில் சொன்ன வார்த்தையை நினைவு வைத்து, ''சார், எப்போ வரணும் என்று சொன்னால் அப்போ வருகிறேன். பிற்பகல் இரண்டு மணிக்கு வரட்டுமா சார்...?'' என்றவளின் பதிலை மனசுக்குள் பாராட்டினாலும் காண்பித்துக் கொள்ளவில்லை.

''அது லஞ்ச் டைம்...''

''அப்ப மூணு மணிக்கு வரேன் சார். ஏற்கனவே உங்க பீல்ட் ஆபீசர் தாமோதரன் சார் என்னுடைய ப்ராஜெக்ட் பார்த்துட்டார் சார். அவருக்கு ஓகே. நீங்க மனசு வச்சால்...''



''இந்த வருஷம் டார்கெட் முடிஞ்சுடுச்சும்மா. ...க்கு மேலே வாங்க பார்க்கலாம்...''

''இது ரொம்ப சின்ன ப்ராஜெக்ட் தான் சார். நீங்களே ...டுக்கலாம். எங்க வீட்டு லோன் இந்த பாங்க்ல ...க்கு. என் கணவர் சம்பளக் கணக்கு கூட இங்கே தான் ... இருக்கு...''

''ஓ! சரி, மூணு மணிக்கு வாங்க பார்க்கலாம்'' என்று ...ங்க் மேனேஜராக இறுகிய குரலில் பேசி முடித்தவன் ...ந்து அவளின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு, ''...ப்பரா பேசற செல்லம். இப்படி தான் பேசணும். ...ராஜெக்ட் பத்திப் பேசும்போது இன்னும் தைரியமா ...சணும். வீட்டுக்குள்ளே போய்டலாம். ஆபீஸ் மாதிரி ...ருக்கணும். ஸ்டார்ட்...'' என்று சொல்லி நாற்காலியில் ...மர்ந்து கொண்டான்.

இப்போது அவள் உள்ளே வர அனுமதி கேட்டபோது ...வனைத் தெரியாத மாதிரியான பாவனையைக் காட்ட ...வள் ஒரு வினாடி குழம்பினாள்.

''சார், நான் சந்தியா. லோன் வாங்குவது சம்பந்தமா ...ச நீங்க மூன்று மணிக்கு வரச் சொல்லி இருந்தீங்க. ...ற்கனவே காலையில் கூட வந்தேனே சார்...''

''ஓ! நீங்களா? ம்ம்ம், என்ன ப்ராஜெக்ட் வச்சு இருக்...ங்க? சொல்லுங்க...''

''பீல்ட் ஆபீசர் தாமோதரன் சார் பார்த்துட்டார்...''

''அவர் பார்த்தால் போதும் என்றால் லோனும் ...வரிடமே வாங்கிக்கோங்க போங்க...''

''சரி சார். அது ஒரு தகவலா தான் சொன்னேன். இது ...ன்ன ரெஸ்டாரண்ட் வைப்பதற்கான ப்ராஜெக்ட் சார். ...ங்க வீட்டு முன்னாடி கொஞ்சம் இடம் இருக்கு...''

Optimized by www.ImageOptimizer.net

"எவ்வளவு இடம்...?"

"அஞ்சு செண்ட் இருக்கு..."

"ஹலோ ரெஸ்டாரண்ட் என்றால் என்ன என்று தெரியுமா? அஞ்சு செண்டில உங்க வீட்டு முன்னாடி வைக்கப் போறீங்களா? உங்க வீடு நேஷனல் ஹை வேலையா இருக்கு?"

"இல்லை சார்..."

"அஞ்சு செண்ட்டில் ரெஸ்டாரண்ட் வைக்க முடியாது. என் நேரத்தை வீணாக்காமல் சுருக்கமா என்ன சொல்ல வந்தீங்களோ அதைச் சொல்லுங்கம்மா..." என்றவன் குரலில் சலிப்பு இருந்தது.

"எங்க வீடு இருப்பது அவுட்டர் ஏரியா. இது ஆட்கள் வந்து சாப்பிடும் ஹோட்டல் இல்லை சார். நான் சொன்னது சமைப்பதற்கான இடம் மட்டும். அதுக்கு அஞ்சு செண்ட் போதும்."

"யார் சமைப்பது? அதை என்ன பண்ணுவீங்க? சமையல் சரியா வரலை என்றால் என்ன செய்வீங்க?"

"ஆரம்பத்தில் நானே சமைப்பேன் சார். உதவிக்கு சிவானந்தா ஆசிரமத்தில் இருந்த பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட மூன்று பெண்களை வைத்துக் கொள்வேன். சமையல் குறித்து ஆலோசனை சொல்ல, சாப்பாட்டின் தரத்தை பரிசோதனை செய்ய கேட்டரிங் இன்ஸ்டிடியூட்டில் இருந்து எக்ஸ்பெர்ட் வருவாங்க சார்..." என்று சொல்ல அவன் புன்னகை செய்தான்.

"சரி நீங்க சமைச்சால் மட்டும் போதாதே! அதை என்ன பண்ணுவீங்க?"



"என்னுடைய அண்ணா கன்ஸ்ட்ரக்ஷன் பிஸினஸில் இருக்கார். அவருக்கு அஞ்சு சைட்ல வேலை நடக்குது. மொத்தமா நூற்றி இருபது பேர் வேலை செய்றாங்க. அவங்களுக்கு காலை டிபன், மதிய உணவு, இரண்டும் ...களிடம் இருந்து வாங்க ஒப்பந்தம் போட்டு இருக் ...ார் சார். அந்த தேவைக்கு மட்டும் தான் உணவு தயாரிக் ...கப்படும் என்பதால் அதில் வீணாகப் போக வாய்ப்பு இல்லை சார்..."

"அஞ்சு இடத்துல வேலை என்று சொல்றீங்க? ...கால் முளைச்சு நடந்து போக முடியாதே? ...த்துல சமைக்கும் சாப்பாடு அங்கே எப்படி போகும்?"

"ஒரு மாருதி ஆம்னி வண்டி வாங்க இருக்கேன் சார். ...துல போய் சாப்பாட்டை டெலிவரி செய்து விடு...வோம் சார்..."

"திட்டம் பெரிசா போடுறீங்க. அதுல லாபம் இருக்கா...?"

"நிச்சயம் இருக்கும் சார். முதலில் வாங்க வேண்டிய ...ரிய பாத்திரங்கள், கமர்சியல் கேஸ், ஒரு ஆஸ்பெஸ் ...ாஸ் கூரை போட்ட சமையலறை அமைக்க ஆகும் ...லவு, வாகனம், ஒரு மாதத்திற்கான மளிகை பொரு ...ள் எல்லாம் வாங்க எட்டு லட்சம் ரூபாய் ஆகும். அதில ...லட்சம் சொந்த பணம் முதலீடு செய்யலாம். மீத ...த்துக்கு நீங்க கடன் உதவி செய்தால்..."

"முதலீடு பற்றி மட்டும் பேசுறீங்க. சாப்பாடு தயா ...ன ஆகும் செலவு பற்றி பேசலையே? எப்படி ...னைத் திருப்பிக் கட்டுவீங்க?"

"வண்டி ஓட்ட ஒரு டிரைவர், சமையல் செய்ய ...ற்று பேர், பாத்திரங்கள் சுத்தம் செய்ய, மற்ற

வேலைகள் செய்ய இரண்டு பேர், மொத்தம் ஆறு பேர் வேலைக்கு வைக்கலாம் என்று இருக்கிறேன் சார். பொருட்கள் வாங்குவது, கணக்கு பராமரிப்பது நானே பார்த்துக் கொள்வேன் சார்...''

''ஆறு பேருக்கான சம்பளம், மற்ற செலவு எல்லாம் போக என்ன நிறைய போகுது?'' என்று அசால்ட்டாக கேட்டவனை முதலில் முறைத்தாள். பின் மீண்டும் ஒரு முறை ஆழ மூச்செடுத்து, தன் பார்வையை சரி செய்து கொண்டு, தொடர்ந்தாள்.

''ப்ராஜெக்டோட வரவு செலவு கணக்கு சுருக்கம் கடைசி பக்கத்தில் இருக்கு சார். முதலில் ஆகக் கூடிய செலவு எட்டு லட்சம். ஒரு மாசத்துக்கு ஆகக் கூடிய செலவு ஒரு லட்சத்தி இருபதாயிரம். சாப்பாடு விற்பனை மூலம் கிடைக்கக் கூடிய வருமானம் ஒன்றரை லட்சம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். அதில் இருந்து உங்களிடம் வாங்கக் கூடிய கடனை மாதத்திற்கு பதினைந்தாயிரம் என்ற விகிதத்தில் திருப்பிக் கட்டி விடுவேன் சார்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி முடிக்க, அவன் நாற்காலியில் இருந்து எழுந்து ஓடி வந்து அவளை அப்படியே தூக்கி தட்டாமாலைச் சுற்றினான்.


''ஹேய்! சந்தியா, மை ஸ்வீட் டார்லிங் செல்லகுட்டி, உம்மா..! இந்த மாதிரி நம்பிக்கையோடு உன்னைப் பார்க்க எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?'' என்று பாராட்டு மழை பொழிந்தபடி அவளைத் தூக்கிச் சுற்றியவன் அவ்வப்போது கன்னம் கழுத்து, என்று அகப்பட்ட இடத்தில் முத்திரை பதிக்க தவறவில்லை.

''இதுக்குக் காரணமே நீங்க தானே? நான் நல்லா இருக்கிறேன் என்றால் அதுக்கு உங்களை தான்



[illegible]டணும். அப்ப நானும் இதே மாதிரி உங்களைத் தூக்கி சுத்தணுமா? ஹலோ... விடுங்க... ராஜீவ்... [illegible]...'' என்று சிணுங்கியவளை இறக்கி விட்டாலும் தன் அணைப்பிலேயே நிறுத்திக் கொண்டான்.

''இரண்டு மாசத்துக்கு முன்னாடி திருவான்மியூர் பஸ் ஸ்டாப்பில், கண் எல்லாம் கண்ணீரோடு முட்டியில தலை கவிழ்த்து வாழ்க்கையை வெறுத்து போய் இருந்த அதே சந்தியா தானா இது எனக்கே சந்தேகம் வந்துடுச்சு, [illegible] கண்ணம்மா நீ! என்ன தெளிவு? என்ன தன்னம்பிக்கை? இதே மாதிரி போய் எந்த பேங்க் மேனேஜரிடம் நீ பேசினாலும், யாருமே உனக்குக் கடன் இல்லை என்று சொல்ல மாட்டாங்க. ஜமாய். வாழ்க்கையில் இனி வெற்றி முகம் தான். ஒரு அஞ்சாறு வருஷம் கழித்து [illegible]டம் பார்க்கணும் என்றால் முன் அனுமதி வாங்கிட்டு தான் பார்க்கணும் என்று சொல்லு'' என்று சிரித்தவன் மார்பில பெருமையோடு சாய்ந்து கொண்டாள் சந்தியா.



# 29

கடந்த மூன்று வாரங்களாக தனக்குள்ளே யோசித்து, தன்னிடம் இருக்கும் திறமை மற்றும் பொருட்களை வைத்து தனக்கு வேண்டியவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் தொழிலை தேர்ந்தெடுத்த விதத்தையும் அது வெற்றி பெறும் என்பதில் அவள் வைத்து இருந்த நம்பிக்கையையும் வெகுவாக மதித்தான் ராஜீவன், அவள் நம்பிக்கையுடன் பேசிய விதத்தில் தோன்றிய

Optimized by www.ImageOptimizer.net

அபரிதமான சந்தோஷம் குறைந்த பிறகு, சந்தேகம் தோன்றியது.

'தன் அண்ணன் தன்னிடம் நூற்றி இருபது பேருக்கான உணவை இரண்டு வேலைக்கு வாங்க ஒப்பந்தம் செய்து இருக்கிறான் என்று சொன்னானே!' தன்னிடமே இதைப் பற்றி சொல்லாத போது அவனிடமும் பேசி இருக்க வாய்ப்பு இல்லையே என்ற கவலை தோன்ற அதைப் பற்றி விசாரித்தான்.

''இன்னும் பேசலை. அவங்களுக்கு அது வசதி தானே?'' என்று ஆர்வமாகக் கேட்டாள்.

''வசதி தான். ஆனால் அது அவங்க ரெண்டு பேர் மட்டும் சம்பந்தப்பட்ட முடிவு இல்லையே? அங்கே வேலை செய்யும் எல்லா நபர்களும் ஒத்துக் கொள்ள வேண்டும். அதற்கு பணம் தர வேண்டுமே...'' என்றவன் குரலில் யோசனை இருந்தது.

''சாப்பிட போயிட்டு ரெண்டு மணி நேரம் கழிச்சு வருவதை விட அங்கேயே சுடச் சுட சாப்பாடு கொடுத்தால், இவங்களுக்கு வேலை வேகமா நடக்குமே!'' என்று அவள் தயக்கத்துடன் சொல்ல அவன் புன்னகைத்தான்.

''நல்ல ஐடியா தான். ஆனால் அவங்க தான் முடிவெடுக்கணும். கம்மி விலையில் என்றால் நமக்குக் கட்டுப்படி ஆகணுமே! அதனால் தொழிலாளர்களிடம் என்ன விலை வாங்கினாலும் நமக்கு வரும் விலை வந்தாக வேண்டும் அப்ப தான் நாம் தொடர்ந்து உணவு வழங்க முடியும். இப்பவே பேசிடலாம்'' என்று போனை எடுத்தான்.



''ஐயையோ! இப்ப ராத்திரி நேரத்துல ...ன்ன வேண்டாம். நாளை சாயங்காலம் டிஃபன் ...டுக்கு போய் பேசலாமே'' என்று சந்தியா தயங்கி... ...லும் அவன் விடவில்லை. மூன்று முறை மணி ...டிப்பதற்குள் எடுத்தால் பேசலாம் என்று முயன்றவன் ...தல் மணியிலேயே கிருஷ்ணா போனை எடுக்க ...வளிடம் கட்டை விரலை உயர்த்திக் காண்பித்தான்.

''ராஜீவ், இந்நேரத்தில் கிருஷ்ணாவை தேடுகிறாய்? ...ன விஷயம்?''

''கிருஷ்ணாவை தேடணும் என்றால் ஏதாவது ...ஷயம் இருக்கணும்? சும்மா நலம் விசாரிக்க அழைக்க கூடாதா? லேட் ஆகிடுச்சோ என்று தயங்கிட்டே ...ான் போட்டேன். இப்ப பேசலாமா?''

''...களிடம் பேச என்ன தயக்கம் மேன்? பௌர்ணமி ...தால் நானும் பவியும் பீச்சுக்கு போயிட்டு ...டலுக்கு வந்தோம். வீட்டுல சமைக்காமல் இருக்க ...து ஒரு காரணம். அதை விடு. நீ எதுக்குப் போன் ...ணினாய் என்று சொல்லு...''

''ஆஹா! நல்ல இடம், நல்ல விஷயம் தான் பேசப் ...க்றேன். தினமும் நீங்க கஷ்டப்பட்டு சமைக்காமலே ...ம் பவித்ராவும் நல்ல சாப்பாடு சுடச் சுட சாப்பிட ...ா? அதுக்கு நான் ஏற்பாடு பண்றேன்...'' என்று ...மித்து சந்தியாவின் திட்டத்தை சுருக்கமாக சொல்ல ...ஷ்ணா வியந்தான்.

''சந்தியாவுக்குள்ளே ஒரு ஸ்மால் ஜாப்ஸ் ஒளிஞ்சு ...ந்து இருக்கார் பாரேன். பிரமாதமா ப்ளான் பண்ணி ...க்காளே? நல்ல ஐடியா தான். இங்கே தினமும்

சந்தியாவுக்கு நீங்க இத்தனை நாளில் என்ன செஞ்சீங்க என்று கிடைக்கும் அர்ச்சனைக்கு ஒரு விடிவு காலம் பிறக்கட்டும். ஆஅ...! கிள்ளாதேடீ. நீ சொல்றதை தானே சொன்னேன்? நான் என்ன பொய்யா சொன்னேன்?''

''சந்தியாவுக்கு ஹெல்ப் பண்றதா நினைச்சு உனக்கு பொருளாதார ரீதியில் சிரமமா இருக்கக் கூடிய எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டாம். எப்படிச் செய்தால் எல்லாருக்கும் வசதியா இருக்கும் என்று யோசித்து முடிவெடுக்கலாம். அவசரமில்லை கிருஷ்ணா'' என்று ராஜீவன் இடையிட்டதும் அவன் சிரித்தான்.

''ஆறிய கஞ்சி பழங்கஞ்சி. இதெல்லாம் அப்படி ஆறப் போடக்கூடாது. அடுத்தடுத்த அடி வச்சு முன்னால் போயிட்டே இருக்கணும். நாளைக்கே நான் எல்லோருக்கும் ஒரு சர்க்குலர் போட்டு விருப்பம் கேட்டு விடுகிறேன். ரெண்டு நாளில் எனக்கு எவ்வளவு தேவைப்படும் என்ற விபரம் சொல்கிறேன். அதுக்குத் தகுந்த மாதிரி சமைக்கும் அளவை முடிவு பண்ணிக் கலாம்.''

''அதை தான் நானும் சொல்ல நினைத்தேன். அவங்களோட சம்மதம் ரொம்ப முக்கியம். ஆனால் அவங்க ஒத்துக் கொள்வாங்களா?''

''இப்போதைக்கு வேலை நடக்கும் அஞ்சு சைட்டில சிட்டிக்குள்ளே ஒண்ணு இருக்கு. அதுல இருக்கவங்க தயங்கலாம். மற்ற நாலுல இருக்கவங்க ஒத்துக் கொள்வாங்களா?''

''ம்ம். ரேட் அவங்களுக்கு கட்டுப்படி ஆனால் சந்தோஷமா ஒத்துக் கொள்வாங்க...''



''நீ என்ன ரேட் என்று சொல்லு. பாதி பணம் அவர்களிடமும், பாதிப் பணம் கம்பெனியில் இருந்தும் போட்டால் தொழிலாளர்கள் மறுக்காமல் ஏற்றுக் கொளவார்கள். ஒரு ஆறு மாசம், கழித்து கணக்குப் பார்த்துவிட்டு, மறுபடியும் விலை பிக்ஸ் பண்ணிக்கலாம்.

''அப்பப்போ ஆபத்பாந்தவன் மாதிரி வந்து என் காரியம் எல்லாம் நிறைவேற்றி வைக்கிறாய். உனக்கு தான் கிருஷ்ணா என்ற பேர் பொருத்தமா இருக்கு. தேங்க்ஸ் கிருஷ்ணா...'' என்று சொல்ல அவன் சிரித்தான்.

''அது நான் சொல்ல வேண்டிய டையலாக் ராஜீவ். சந்தியாவுடையது பிரமாதமான ஐடியா. கொஞ்ச நாளில் பாரு. பிசினஸ் நல்லா வொர்க் அவுட் ஆச்சுன்னா, நீ கூட காலேஜ் வேலையே விட்டுட்டு சந்தியாவோட பார்ட்னரா சேர்ந்துடுவ...''

''இந்த ஐடியா கூட நல்லா இருக்கு மேன். அண்ணனும் தங்கையும் பெரிய பெரிய ஆராய்ச்சி பண்ண வேண்டியதை ரெடிமேடா வச்சு இருக்கீங்க போல. சர்வ சாதாரணமா அள்ளி விடுறீங்க'' என்று ராஜீவ் சொல்ல, அவர்களின் பேச்சை ஸ்பீக்கரில் கேட்டு கொண்டு இருந்த பவித்ராவும் சந்தியாவும் சந்தோஷமாகச் சிரித்தனர்.

* * *

காலை பத்து மணி அளவில் போனில் ராஜீவனின் அழைப்பை பார்த்த விமலா வியப்புடன், ''ஹேய் ராஜீவ், என்னை மறந்து போய்ட்ட என்று நினைத்தேன். ஞாபகம் வைத்து போன் பண்ணுற? இன்னிக்கு காலேஜ் லீவா?'' என்று கேலியாக கேட்டார்.

Optimized by www.ImageOptimizer.net

''லீவா? இன்னிக்கு என்ன லீவு? உங்களிடம் போனில் பேசியதே இல்லை என்பது மாதிரி என்ன பில்ட் அப் கொடுக்கிறீங்க? தினமும் ராத்திரி, குட்நைட் சொல்றேன் தானே?''

''தினமும் சொன்னாய். ஆனால் நேற்று சொல்லவில்லையே? அதான் என்னை மறந்து விட்டாயோ என்று நினைத்தேன்...'' என்று விடாமல் சீண்ட, ''ம், மறந்து விட எனக்கும் ஆசை தான். ஆனால் நான் மறக்க நினைத்தாலும் உங்க மருமகள் விடுவாளா தெரியலை...'' என்று சிரித்தான்.

''அப்படி போடு! பக்கத்துல இருக்காளா? கொடு...''

''நான் காலேஜில் இருக்கேன். அவள் வீட்டுல இருக்கிறாள். எப்படி பேச முடியும்? நான் போன் பண்ணின விஷயமே வேறே. நேற்று சந்தியா சுய தொழில் தொடங்குவது சம்பந்தமா ஒரு ப்ராஜெக்ட் பண்ணி வச்சு இருந்தாளா? அதை எப்படி பாங்க்ல ப்ரசன்ட் பண்ணணும் என்று பேசிட்டு இருந்தோம். அதுல நேரம் போனதே தெரியல. அதான்...''

''டேய்! நான் சும்மா கேலிக்கு சொன்னேன். அதுக்கு போய் நீளமா விளக்கம் சொல்லணுமா? தனியா தொழில் பண்ணும் அளவுக்கு சந்தியா தெளிவா இருக்கிறாளா? கொஞ்ச நாள் முன்னாடி அவங்க அத்தை ஏதோ சொன்னாங்க என்று மூட் அவுட் ஆகிட்டாளே? ஏதாவது கஷ்ட நஷ்டம் வந்தால் தாங்குவாளா?'' என்று கவலையுடன் கேட்டார் விமலா.

''நேற்று அவள் பேசியதை அவளுக்கே தெரியாமல் நான் மொபைலில் பதிவு பண்ணினேன். அதை சீடி-ல



போட்டு இன்று கொரியர்ல அனுப்பி வைக்கிறேன். அதை பாருங்க. உங்க மருமகள் எப்படி டெவலப் ஆகி இருக்கா என்று உங்களுக்கே புரியும்.''

''நீங்க இருவரும் வளர்ந்த சூழல், உங்களுக்கு கிடைத்த கல்வி, வெளி உலகம் கற்று கொடுத்த பாடம் இதை எல்லாம் வைத்துப் பார்த்தால், உன்னை விட அவள் தெளிவு தான். பெண் என்பதாலும், ஆதரவில்லாமல உறவினர் வீட்டில் வளர்ந்ததாலும், பொருளாதார சுதந்திரம் இல்லை என்பதாலும் தான், பயந்த சுபாவமாய் தெரிகிறாளே தவிர, அவளுடைய புத்திசாலித் தனத்திற்கு ஒரு குறைச்சலும் இல்லை...''

''இப்ப நான் என்ன குறையா சொல்ல வந்தேன்? புத்திசாலித்தனம் நிறைய இருக்கு என்று சொல்லத் தான் போன் பண்ணினேன்...''

''உன்னை ஹெல்மேட் போட வைக்க அவள் பண்ணிய பிளான்ல அவளின் புத்திசாலித்தனம் மட்டும் இல்லாமல் உன் மேலே இருக்கும் அக்கறையும் தெரிந்ததே. இன்னிக்கு தான் புதுசா கண்டு பிடித்த மாதிரி கதை சொல்ற?''

''அதில்லைம்மா! அவள் புத்திசாலி என்பதில் எனக்கு எப்போதுமே சந்தேகம் இல்லை. ஆனால் சட்டுன்னு உடைஞ்சு போய்டுவாளோ என்ற கவலை இருக்கு. தனியா அவள் வீட்டுல இருப்பதால் சில நேரம் யாராவது எதையாவது பேசி குழப்பினால், அதில் அவள் அப்செட் ஆக வாய்ப்பு இருக்கு. அதுக்கு மாற்றா தான் இந்த பிசினெஸ் பண்ற ஐடியா தோன்றியது. வீட்டுல நாலு ஆளை வச்சு வேலை வாங்கும் போது தனிமை உணர்வு தோன்றாது பணமும் கிடைக்கும்'' என்று



Optimized by www.ImageOptimizer.net

அவன் சாவித்திரியை குறிப்பிடாமல் பேசினாலும் அவனின் உணர்வுகளைச் சரியாக படித்தார் விமலா.

"ஓ! தனியா இருப்பது தான் பிரச்சனை என்று நினைக்கிறாயா? புதுசா கல்யாணம் ஆனவங்க கொஞ்ச நாள் தனியா இருக்கட்டும் என்று நினைத்தேன். சீக்கிரமே ஒரு குழந்தை வந்து விட்டால், அப்பாவை வீ.ஆர்.எஸ் கொடுக்க சொல்லி விட்டு நாங்களும் அங்கே வந்து விடுவோம். பக்கத்தில் நானும் இருந்தால் நல்லா தேறி விடுவாள்..."

"இப்படி ஒரு ஐடியா இருக்கா? இத்தனை நாள் மகன் தனியா கஷ்டப்படும்போது கூட வந்து இருப்போம் என்று தோன்றவில்லை. இப்ப நேற்று வந்த மருமகளுக்கு சப்போர்ட் பண்ண, இன்னமும் வராத பேரக் குழந்தையைப் பார்த்துக்க எல்லாம் அப்பாவை வீ.ஆர்.எஸ் கொடுக்கச் சொல்வீங்களா? இதெல்லாம் ஓர வஞ்சனைம்மா..." என்று சிரித்த மகனுடன் தானும் இணைத்தார்.

"காலங்கள் மாறினால் காட்சிகளும் மாறும். சரி என் மருமகளை விசாரிச்சதா சொல்லு. காலேஜில் கொஞ்ச நேரமாவது வேலை பாரு" என்று கேலியாகச் சொல்லி போனை வைத்தவரின் மனம் மருமகளை பற்றிய பெருமிதத்தில் மலர்ந்து இருந்தது.

* * *

ராஜீவன் கல்லூரிக்குக் கிளம்பும் நேரத்தில், "என்னங்க, இதுக்கு முன்னாடி ஏதாவது உங்களிடம் கேட்டு இருக்கேனா? நானே எப்பவாவது ஒரு முறை தானே உங்களிடம் கேட்கிறேன். அதுக்கும் வர முடியாது என்றால்



...டி..?" என்று அவன் பின்னால் ஒட்ட நின்றபடி ...யா சிணுங்க, கையில் இருந்த சீப்பை டிரெசிங் ...பிளின் மேல் போட்டவன் திரும்பி அவளை தன் ...தில் இழுத்து ஒரு கையால் அணைத்து மறு கையால் ...ளின் முகவாயை நிமிர்த்தி நேராக பார்த்தான்.

"உனக்கு ஒரு காரியம் பண்ண வர முடியாது என்று ...ன் சொல்வேனா சந்தியா? இது முக்கியமான ...லைம்மா. புரிஞ்சுக்கோ ப்ளீஸ்..."

"என்னுடன் பாங்க்குக்கு வரேன் என்று நேற்று வரை ...ல்லி நம்ப வச்சுட்டு, கடைசி நேரத்துல நான் ...லேஜ் போறேன் என்று சொன்னால் என்ன அர்த்தம்?"

"நீ தனியாவே சமாளிப்பாய் என்று உன் மேலே ...றைய நம்பிக்கை இருக்கு என்று அர்த்தம்..." என்று ...ளின் கன்னத்தை வருடி, முத்தமிட குனிந்தவனை ...ளி விட்டாள்.

"இந்த ஐஸ் எல்லாம் வேண்டாம். உண்மைக் கார...ணத்தைச் சொல்லுங்க..."

"அடேயப்பா! பிசினஸ் ஆரம்பிக்கும் முன்னாடியே ...டம் இவ்வளவு டெரரா இருக்காங்க. இன்னும் கொஞ்ச ...ள போனால்..."

"பேச்சை மாத்தாதீங்க. என்ன திடீர் என்று காலே...ஜுக்கு கிளம்பிட்டீங்க..."

"எங்க காலேஜ் அங்கீகாரம் புதுப்பிப்பது, மற்றும் ...டுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பா ...த்திய அரசாங்கத்துல இருந்து இன்ஸ்பெக்ஷன் டீம் ...து. ஆசிரியர் மாணவர் விகிதாசாரம், மாணவர்களின் ...ண்ணிக்கை, அவர்களுக்கு பாடம் நடக்கும் விதம்

Optimized by www.ImageOptimizer.net

எல்லாமே இன்று தணிக்கைக்கு உள்ளாகும் என்பதால், இன்னிக்கு யாருக்கும் லீவ் கொடுக்க முடியாது என்று சொல்லிட்டாங்க. பொதுவா அந்த மாதிரி சொல்ல மாட்டாங்க. அதனால் தான் என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை கண்ணம்மா. நீ இவ்வளவு தயங்குற அளவுக்கு ஒன்றுமே இல்லை. ஏற்கனவே உன் ப்ரோபோசலை பீல்ட் ஆபீசர் பார்த்துட்டார். மேனேஜர் பார்த்து பத்து நிமிஷம் பேசினால் வேலை முடிந்தது. வேண்டுமானால் பவித்ராவை போன் பண்ணி வர சொல்லட்டுமா?''

''அவளும் வேலைக்கு போகிறாளே! முன்னாடியே சொல்லி இருந்தாலும் பரவாயில்லை. நானே சமாளித்துக் கொள்கிறேன். நீங்க பக்கத்துல இருந்தால் என் நம்பிக்கை கூடுதலாகும் என்று தான்...''

''அம்மாடியோவ்! இருப்பதே ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. இன்னும் கூடுதலா ஆனால் தாங்க முடியாதும்மா...''

''ப்ச்! இப்படிப் பேசிப் பேசியே என் வாயை அடைக்காங்க. சாயங்காலம் வரட்டுமா என்று பேங்க் மேனேஜரிடம் கேட்கட்டுமா?''

''சந்தியா, சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடிக்கக் கூடாது. எல்லாம் கூடி வந்து இதோ சாங்ஷன் என்ற நேரத்தில் போய் அப்புறம் வரட்டுமா என்று கேட்டால் அவங்க என்ன நினைப்பாங்க? உனக்கு தொழில் செய்வதில் ஆர்வம் இல்லை என்று நினைக்க மாட்டாங்களா? நீ போகிறாய், காரியத்தை முடிக்கிறாய். ரெண்டு மணிக்கு போன் பண்ணி, 'ராஜீவ் எனக்கு லோன் சாங்ஷன் ஆகிடுச்சு...' என்று என் காது ஜவ்வு பிய்ந்து



...ரும் அளவுக்கு கத்தி சந்தோஷமா சொல்ற. ஓகே?'' ...று அழுத்தமாக சொன்னவன் பார்வை கைகடிகாரத் ...ல் பதிய. ''ம்ம்ம், சரி...'' என்று வேறு வழி இன்றி ...லகினாள்.

''காது ஜவ்வு பிஞ்சு போற மாதிரி சத்தமா சொல்...லை என்றாலும் காதில கேட்கிற அளவுக்காவது ...ணும் இல்லையா? இப்படி கிணற்றுக்குள் இருந்து ...சற மாதிரி சொல்றது? நல்ல சத்தமா சந்தோஷமா ...ங்க என்று சொல்லு பார்ப்போம்...''

''சரிங்க. நீங்க கிளம்புங்க. மணியாச்சு...'' என்று சொன்னவளின் குரல் சாதாரணமாக இருந்தாலும் ...ஞ்சம் குறையும் இருந்தது.

''தன்னம்பிக்கை லெவல் கம்மியா இருக்கே! இன்னும் நிறைய நான் எதிர்பார்க்கிறேன்...'' என்று விடாமல் அவளை உற்சாகப்படுத்தும் முயற்சியில் இறங்கினான்.

''தேங்க்ஸ் மிஸ்டர் ராஜீவன். போயிட்டு வாங்க...'' என்று அவனின் மனம் புரிந்து, குரலில் மேலும் சந்தோஷம் சேர்த்து கேலியாக இரு காத்தையும் கூப்பி வழி அனுப்ப முயன்றாள்.

''அடிங்க...! புருஷனை மிஸ்டர் போட்டு கூப்பிடுற? இரு இரு அம்மாவிடம் போன் பண்ணிச் சொல்றேன்...'' என்று செல்லமாக அவளின் பின்புறம் தட்ட அவள் சிரித்தாள்.

''நீங்க போன் பண்ணின கொஞ்ச நேரத்துல எனக்கு போன் போட்டு, 'மிஸ்டர் போட்டா கூப்பிட்டாய்? டேய் ராஜீவ என்று நான் சொல்ற மாதிரி கூப்பிட்டு. தாய்க்கு பின் தாரம் என்று நிலை நிறுத்த வேண்டாமோ?' என்று

சொல்வாங்க. அது ஓகே என்றால் தாராளமா சொல்லிக்கோங்க..'' என்று சிரித்தவனின் குரலிலும் முகத்திலும் தன்னம்பிக்கை நிறைந்து வழிய அவள் புன்னகை செய்தாள்.

''இது. இதை தான் எதிர்பார்த்தேன். குட் லக் கண்ணம்மா. பாங்கல பேசிட்டு கூப்பிடு...''

''காலேஜில் எப்படி இருக்குமோ? மிஸ்ட் கால் கொடுக்கிறேன். நீங்க ப்ரீயா இருக்கும் போது திருப்பி கூப்பிடுங்க'' என்று சந்தியா சொன்னதை ஒத்துக் கொண்டு, அவளின் கன்னத்தில் தட்டி, 'ஓகே. பை...' என்று விடை பெற்றுச் சென்றான் ராஜீவன்.

அன்றைய பொழுதில் அவர்கள் எதிர்பார்த்த எல்லாமே நடந்தது. அதோடு அவர்கள் எதிர்பாராத ஒன்றும் நடந்தது. காரணம் ஒருவர் மீது ஒருவர் வைத்த அதீத அன்பு.

''மிஸ்ட் கால் விடுகிறேன்'' என்று சொன்ன சந்தியா அதை செய்து இருக்கலாம். செய்யவில்லை. காரணம், தன் சாதனையை மனம் கவர்ந்தவனிடம் உடனே பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற தவிப்பு.

''ப்ரீயாக இருக்கும் போது கூப்பிடுங்க'' என்று சந்தியா சொன்னதை ராஜீவன் கேட்கவில்லை. மனைவியுடன் கூட சென்று இருக்க வேண்டிய சூழலில் அவளைத் தனியாக அனுப்பி விட்டோமே என்ற தவிப்பு. அவள் அழைத்ததும், தான் வண்டியில் அவளை காண வங்கிக்கு சென்று கொண்டு இருந்ததை மறந்து, பேச வைத்தது.

போனை எடுத்து அவன் ஹலோ சொன்ன வேகத்தில் அவன் எங்கே இருக்கிறான் என்ன செய்து கொண்டு



இருக்கிறான் என்பதை கூட கேட்காமல், சந்தியா, அவன் காது ஜவ்வு பிய்யும் அளவுக்கு சத்தமாக சொன்ன, ''ராஜீவ் என் லோன் சாங்ஷன் ஆகிடுச்சு...'' என்ற வாக்கியம், அவனின் கவனத்தை முழுவதுமாக திசை திருப்ப, ப்ரேக் அடித்து ஒதுங்க நினைத்தவன் எண்ணம் செயலாக்கப்படும் முன்பு, வண்டி, கட்டுப்பாடு இன்றி சென்று அருகே இருந்த மின் கம்பத்தில் மோதி, அவன் தூக்கி எறியப்பட்டான்.

# 30

காலையில் கல்லூரிக்கு கிளம்பும் போதே, தன்னுடன் வங்கிக்கு வர சொல்லி அழைத்த மனைவியுடன் செல்லவில்லை என்ற ஆதங்கம் அன்றைய பொழுதில் ராஜீவனின் மனதில் நிலைத்து இருந்ததால், மத்திய அரசில் இருந்து வந்த ஆய்வு குழு பகல் பனிரெண்டரை மணி அளவில் பணி முடித்து கிளம்பிய அடுத்த வினாடியே அனுமதி கோரி கடிதம் கொடுத்து விட்டு அவசரமாக கிளம்பினான் ராஜீவன்.

பதினோரு மணிக்கு வங்கியில் வர சொல்லி இருந்தனர். முடியும் நேரமாக இருந்தால் கூட பரவாயில்லை. தன்னை அங்கே கண்டால் அவள் உற்சாகத்தில் துள்ளி குதிக்கக் கூடும் என்ற எண்ணத்தில் கிளம்பிய ராஜீவன் வண்டியை கிளப்பிய பின்பே, ஹெல்மெட் ஆசிரியர்களின் ஓய்வு அறைக்குள் இருப்பதை உணர்ந்தார். நாளைக்கு எடுத்து கொள்ளலாம் என்ற எண்ணத்திற்கும்,

Optimized by www.ImageOptimizer.net

மறக்காமல் அணிய வேண்டும் என்ற சந்தியாவின் வேண்டுகோளுக்கும் சில வினாடிகள் போராட்டம் நடந்து. இறுதியில் சந்தியாவின் கண்ணீரே வெற்றி பெற்றது.

வண்டியை நிறுத்தி ஓட்டமும் நடையுமாக சென்று அதை எடுத்து அணிந்தபடி திரும்பி வந்து வண்டியை கிளப்பியவன், அந்த சில நிமிட தாமதத்தை கூடுதல் வேகத்தில் சரிக்கட்டி விடலாம் என்று ஆக்சிலரேட்டரை முறுக்க, ''உயிரின் உயிரே, உனது விழியில் என் முகம் நான் காண வேண்டும்...'', என்று அவன் அலைபேசி பாடி அழைப்பது சந்தியா என்று உணர்த்தியது.

கண் முன்னால் சாலை காலியாக இருப்பதை அளந்தவன், போனில் அவசரமாக 'ஹாய்' என்று அழைக்கும் முன்பே 'ராஜீவ் எனக்கு லோன் கிடைச்சுடுச்சு...'', என்ற அவளின் சந்தோஷ குரல் காதில் விழ, அவன் கவனம் சிதறிய வினாடியில் வேகத்தை குறைக்க நினைத்தவன் எண்ணமும் கைகளும் ஒன்றுக்கு ஒன்று முரணாக செயல்பட்டது.

அவனின் வாகனம் அருகே எதன் மீதோ மோதி தூக்கி எறியபட்டவன் தரையில் விழும் முன்பு, 'ஹெல்மெட் அணிய என்னை கட்டாயப்படுத்தியதற்கு தேங்க்ஸ் சந்தியா'', என்று எண்ணியபடியே நினைவிழந்தான் ராஜீவன் அவன் கையில் இருந்த போன் எங்கோ பறந்து போய் கீழே விழுந்ததில் பகுதி பகுதியாக கழன்று விழுந்து உயிரை விட்டது.

* * *

கணவன் தன்னுடன் வந்தால் தேவலை என்ற எண்ணம் தோன்றியதால், கட்டாயப்படுத்தினாலும், அவன்



...லை புரிந்ததால், வங்கிக்கு சென்றவளின் மன... உற்சாகமாகவே இருந்தது ஒன்றரை மணி நேரம் ...யில் காக்க நேர்ந்த போதும், மனதிற்குள் சஷ்டி ... சொல்லி மருதமலை முருகனை துணைக்கு ...த்தபடி, ஏற்கனவே இருபது நாட்களாக இந்த ... பற்றித் திரும்பத் திரும்பப் பேசி இருந்ததால ...க்கையுடன் காத்திருந்தாள் சந்தியா.

...கியின் மேலாளர் அழைத்த உடன் உள்ளே ...று தன்னுடைய திட்டத்தை விளக்க அவளுக்கு ... நிமிடங்கள் போதுமானதாக இருந்தது. சின்ன ...ஜெக்ட் என்பதாலும் ஏற்கனவே மூன்று ஆண்டு ... அங்கே கணக்கு வைத்து இருக்கும் ராஜீவனின் ...னைவி என்பதாலும் அவளின் பேச்சும் நம்பிக்கை ...ளிப்பதாக இருக்க, உரிய கடன் பத்திரத்துடன் ...தால், உடனே கடனுதவி அளிக்கிறேன் என்று அவர் ...றுதி அளித்தார்.

வெளியே வந்த வினாடியில், வானத்தில் பறப்பது ...போல இருக்க, தன்னுடைய முயற்சியில் வந்த ...வெற்றியை உடனே தன் மனம் கவர்ந்தவனுடன் பகிர்ந்து ...கொள்ள வேண்டும் என்ற ஆவல் உந்த, தள்ள, மணியை ...பார்த்தாள். பனிரெண்டரை, சாதாரணமாக கல்லூரியில் ...த்து உணவு இடைவேளை நேரம்.

...வேலையாக இருக்கலாமோ என்ற தயக்கத்தை மீறி, ...அவனே முன்பு கிருஷ்ணாவிடம் பேச நிர்ணயித்த ...டிலக்கு மாதிரி மூன்று மணி அடிப்பதற்குள் எடுத்தால் ...பேசலாம் என்று முயன்றாள். முதல் மணியிலேயே ...அவன் எடுக்க உற்சாகம் பொங்க, 'ராஜீவ் எனக்கு லோன் ...கிடைச்சாச்சு', என்று சத்தமாகச் சொன்னவள் அவனின்

Optimized by www.ImageOptimizer.net

பிரதிபலிப்பிற்காக காத்து இருக்க எதிர் முனை அமைதி காத்தது.

சத்தமே இல்லை. மீண்டும் முயன்றால் நாட் ரீசபிள் என்ற தகவல் வந்தது. வேலை இன்னும் முடியவில்லை போலும். முடிந்த பிறகு அவனே மீண்டும் அழைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் வீட்டுக்குக் கிளம்ப வெளியில் வந்து ஆட்டோ பிடித்தாள்.

''டிரைவர், சாந்தி காலனி நாலாவது தெரு போகணும், அதுக்கு முன்னாடி, நீல்கிரிஸ்ல ரெண்டு நிமிஷம் நின்னுட்டு போகணும் எவ்வளவு கேட்கறீங்க?''

''நீல்கிரிசா? அதுக்கு முன்னாடி ட்ராபிக் ஜாம். இப்ப தான் கண் முன்னால ஒரு சின்ன ஆக்சிடெண்ட் நடந்தது. இடுப்புக்கு கீழே சரியான அடி. கூட்டமா இருக்கும்மா, என்ன வாங்கணும் என்று சொன்னால், வேறெங்கே அதை வாங்கலாம் என்று சொல்றேன்..''

''இல்லைப்பா.. முளை விட்ட பயிறு அங்கே தான் நல்லா இருக்கும். வேறே இடத்துல கிடைக்காது. நாம் போவதற்குள் ஹாஸ்பிடல் எடுத்து போக மாட்டாங்களா என்ன?''

''எங்கேம்மா? ஆக்சிடென்ட் என்றால் கூடி நின்று வேடிக்கை பார்க்கறாங்களே தவிர ஹாஸ்பிடல் போகணும் என்று யாரும்மா நினைக்கறாங்க. ஆம்புலன்ஸ் வரட்டும், போலீஸ் வரட்டும் என்று தான் பொழுதை தள்ளுறாங்க...''

''என்ன சார் பேசறீங்க? நாம் போகலாம், ஏற்கனவே ஹாஸ்பிடல் போய் இருந்தால் சந்தோஷம் இல்லை என்றால் நாம் ஹாஸ்பிடலில் சேர்க்கறோம் வாங்க...''



''உங்களை மாதிரி நாலு பேர் இருந்தால் தான் நல்லா இருக்கும். போலீஸ் விசாரணை, கோர்ட், கேஸ், என்று அலையணுமே என்று பாதி பேர் நல்லது செய்ய யோசிக்கிறாங்க...''

''என்னை யார் என்றே தெரியாத போது எனக்கு தானாக வந்து உதவி செய்தவர் இப்போ என்னுடைய கணவர். அவர் சொல்லி கொடுத்த பாடத்தை மறக்கலாமா?'' என்று சொல்லியபடி வந்தவள் அங்கே இருந்த கும்பலை பார்த்து முகம் சுளித்தாள்.

''இன்னும் ஹாஸ்பிடல் போகலை போல, சீக்கிரம் போங்க சார்...'' என்றவள் ஆட்டோவில் இருந்து இறங்கி கூட்டத்தை விலக்கி உள்ளே எட்டி பார்க்க அதிர்ந்தாள். அந்த மின்விளக்கு கம்பத்தில் மோதி சரிந்து இருந்தது ராஜீவனின் பைக் அல்லவா...?

கடவுளே! இருக்காது... இருக்கக் கூடாது... அவனுடைய பைக்கை வேறு யாராவது எடுத்து வந்து இருக்கலாம்... என்று அவசரமாக ஆண்டவனை பிரார்த்தனை செய்தபடி, பயத்துடன் தலையை மெல்ல திருப்பியவள் மேலும் நிலைகுலைந்தாள்.

பாய்ந்து வந்து அவன் அருகே அமர்ந்து முகத்தை திருப்பினாள். தலை கவசத்திற்குள் பத்திரமாக அவனின் தலை எந்த அடியும் படாமல் பத்திரமாக இருக்க, அவனின் வலது கால் மின் கம்பத்தின் அடிபாகத்திற்கும் பைக்கிற்கும் இடையே சிக்கி கிடந்தது.

சாலை போட குவித்து வைத்து இருந்த அந்த ஜல்லி குவியலில் பைக் டயர் போட்டு மின்கம்பத்தின் மேல் மோதி இருக்க வேண்டும். வண்டி சரிந்த வேகத்தில்

Optimized by www.ImageOptimizer.net

அவனின் முதுகு புறம் முழுவதுமாக அந்த ஜல்லியில் உரசி இழுக்கப் பட்டு இருக்க அவனின் அந்த இளநீல வண்ண சட்டை முழுவதும் முதுகுபுறத்தில சிவப்பாக மாறி இருக்க அவள் ''ராஜீவ்... ராஜீவ்!'', என்று கதறினாள்.

''யாரோ மூன்றாம் ஆளுக்கு உதவி செய்ய உங்களை காரணம் காட்டினால்... கடைசியில் அடிபட்டு கிடப்பதே.. கடவுளே..'' என்று கண்ணீரோடு கதறியவள், சுற்றிலும் நின்று வேடிக்கை பார்த்த கும்பலை பார்த்து ''உங்களுக்கு எல்லாம் மனசாட்சியே இல்லையா? இப்படி சுத்தி நின்னு வேடிக்கை பார்த்துட்டு இருக்கீங்களே? யாராவது பிடிங்க சார்.... ஹாஸ்பிடல் எடுத்து போகலாம்..'' என்று அதே கண்ணீருடன் திரும்பி அதட்டினாள்.

''யாரும்மா... இது உங்களுக்கு தெரிந்தவரா...? போலீஸ் வராமல்..'' என்று ஏதோ சொல்ல முயல, ''போலீஸ் வந்தால் நீங்க யாரும் பதில் சொல்ல வேண்டாம். முதலில் ஹாஸ்பிடல் போகலாம். ஒரு கை பிடிங்க சார்...'', என்று சொல்லியபடி அவளே குனிந்து அவனை தூக்க முயல அவசரமாக ஆட்டோ டிரைவர் ஓடி வந்தார்.

''உங்களுக்கு தெரிந்தவரா? ஐய்யோ! சீக்கிரம் வாங்கம்மா. பக்கத்துல பாரத் ஹாஸ்பிடல் இருக்கு. அஞ்சு நிமிஷத்துல போய்டலாம். காலில் தான் அடி பயப்படாதீங்கம்மா... அவருக்கு ஒண்ணும் ஆகாது...'', என்று அவளை தேற்றியபடியே ஆட்டோ ஓட்டியவர் சொன்னது எதுவுமே அவள் காதில் ஏறவே இல்லை.

சில நிமிடங்களுக்கு முன்பு தானே பேசினான்? அதற்குள் எப்படி விபத்து நடந்தது என்று யோசித்த



போதே சுரீர் என்றது. தன்னுடைய போனை அவன் எடுத்ததால் தான் இந்த விபத்தே நிகழ்ந்து இருக்கிறது. தன்னுடைய அழைப்பு தனியாக தெரிய வேண்டும் என்று தனியாக ரிங் டோன் வைத்து இருந்தானே! உயிரின் உயிரே... உனது விழியில்... என்ற பாட்டு... அதனால் வண்டி ஓட்டிக் கொண்டு இருக்கும் போது கூட அவசரமாக எடுத்து இருக்கிறான்?

முதலில் தன்னை தனியாக அனுப்பியதை எண்ணி மறுகி கொண்டே இருந்ததால், தன் மேல் வைத்த அன்பினால் தான், அங்கே ஆய்வு குழு கிளம்பிய உடனே ஊருக்கு வந்து இருக்கிறான். இப்போது அவனுக்கு ஒரு விபத்து அந்த அன்பே காரணமாகி விட்டதா?

அவசரப்பட்டு அவனை அழைத்ததும், இல்லாமல் என்ன செய்கிறான் என்பதை கேட்டு அறிந்து கொள்ளும் அடிப்படை அறிவு கூட இல்லாமல் உப்பு பெறாத ஒரு விஷயத்திற்காக, அவன் காதுக்குள் கத்தி, அவன் கவனத்தை சிதறடித்து, இப்போது அவனை எந்த நிலைக்கு ஆளாக்கி இருக்கிறாள்?

''ராஜீவ்.... ராஜீவ்... உங்களுக்கு ஒண்ணும் ஆகாது... நான் கூப்பிடுறது... காதில் விழலையா? கண்ணை திறந்து பாருங்க.. ப்ளீஸ்... எனக்கு ரொம்ப பயமா இருக்கு... நீங்க இல்லாமல் நான் என்ன ஆவேன்? கடவுளே! ரெண்டு மாசம் சந்தோஷமா இருந்தது அந்த கடவுளுக்கே பொறுக்கலையா?

என்னை கஷ்டப்படுத்தணும் என்பதற்காக உங்களுக்கு இப்படி நடக்கணுமா? இது எனக்கு நடந்து இருந்தால் கூட பரவாயில்லையே? உங்களுக்கு... அவங்க எல்லாம்

Optimized by www.ImageOptimizer.net

சொன்ன மாதிரி ஆகிடுச்சே...? நான் எப்படி அத்தையை பார்ப்பேன்? அவங்களுக்கு என்ன பதில் சொல்லு வேன்? எல்லாம் என்னால் தான்....

நீங்க எனக்கு கிடைத்த விலை மதிப்பில்லா பொக்கிஷம். அதை பத்திரமா பார்த்துக்க தெரியாமல்... இப்படி... தொலைத்து விட்டு நிற்கிறேனே! இனிமேல் உன் கண்ணில் இருந்து கண்ணீரே வரக் கூடாது என்று சொன்னாயே! இப்படி என் கண்ணில் இருந்து அருவியா கொட்டுதே! என்னை திட்டவாவது கண்ணை திறந்து பாரேன்.'' அவனை தன் மடியில் கிடத்தி, அவன் முகத்தை வருடியபடி மானசீகமாக புலம்பியவள் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து அவன் முகத்தில் பட்டு தெறித்தது.

''அம்மா..! இங்கே பாருங்க ஹாஸ்பிடல் வந்துடுச்சு... ஸ்ட்ரெச்சர் கொண்டு வந்து இருக்கேன் பாருங்க'', என்ற ஆட்டோ டிரைவரின் குரல் கேட்டு நிமிர்ந்தவள் விழிகளில் கடலளவு சோகம் தேங்கி நிற்க, விபத்து விபரம் குறித்து அவளை விசாரிக்க நினைத்த பணியாள கூட அதை மறந்து போய் ராஜீவனை ஸ்ட்ரெச்சரில் வைத்து தள்ளி சென்றான்.

''அம்மா... கொஞ்சம் என்னை பாருங்க...'', என்று குரல் உயர்த்தி சத்தமாக அழைக்கவும் சுற்றுப்புறம் மறந்து தனக்குள் மூழ்கி இருந்தவள் நிமிர்ந்து அவரை பார்த்த பார்வையில் வெறுமை மட்டுமே இருந்தது.

''நீங்க தனியா வந்ததினாலயும் உயிருக்கு ஆபத்தில்லை என்பதாலும் ஹாஸ்பிடலில் அதிகம் கேள்வி கேட்காமல் ட்ரீட்மெண்ட் ஆரம்பிச்சுட்டாங்க. ஹாஸ்பி



...பணம் கட்ட சொல்றாங்க. அண்ணா, தம்பி, ...ர், அப்பா, யாரையாவது போன் பண்ணி வர ...ங்கம்மா.. உங்களுக்கு துணையா இருக்குமே! ...வேறே அங்கேயே இருக்கு இல்லையா? அதை ...க்கணும்...'' என்று அவர் நினைவுபடுத்திய பிறகு ...இதுவரை தான் யாருக்குமே தகவல் சொல்ல ...லை என்பது புரிந்தது.

...ரை அழைப்பது? இப்போதைக்கு அருகில் இருப்பது ...த்தான். அவளிடம் சொன்னால் உடனே கிருஷ்ணா ...வந்து விடுவாள். பவித்ராவை பற்றி எண்ணிய ...அழையாத விருந்தாளியாக, சாவித்திரி அத்தை ...ன வார்த்தைகள் மீண்டும் நினைவில் வர, கண் ...ல் கண்ணீர் புதிதாக பெருக்கெடுத்தது.

''பவித்ரா, தாம்பரம் பாரத் ஹாஸ்பிடலுக்கு கொஞ்சம் ...ரே வரியா...?'', என்ற ஒற்றை கேள்வியை கேட்டு ...ப்பதற்குள் அவளின் தைரியம் நிலைகுலைந்து ...து. ''என் கசின். தகவல் சொல்லுங்க... ப்ளீஸ்...'', ...குரல் வெளியே வராமல் ஜாடையில் சொல்லி ...ணீரோடு ஆட்டோக்காரரிடம் போனை கொடுத்தாள் ...ளா.

...லையில் அடிபடவில்லை. உயிருக்கு ஆபத்தில்லை. ...து காலில் எலும்பு முறிவு இருக்கலாம். முதுகில் ...ரய காயம், ரத்த சேதாரம் இருக்கு. மூணுமணி ...துல அவர் கண் விழித்து பேசுவார் என்று டாக்டர் ...னாங்க. இவங்களுக்கு பயமும் அதிர்ச்சியும் தான் ...தியா இருக்கு. நீங்க வந்தால் சரியாகிடுவாங்க'', ...று ஆறுதலாக பேச பவித்ரா ஆசுவாச பெரு மூச் ...சை வெளியேற்றினாள்.

Optimized by www.ImageOptimizer.net

''சார், நான் கிண்டில இருக்கேன். அரை மணி நேரத்திற்குள்ளே அங்கே எப்படியும் வந்துடுவேன், ப்ளீஸ், நான் வரும் வரைக்கும் கூட இருங்க சார், அவளை பார்த்துகோங்க சார்.. ப்ளீஸ் சார்... தைரியம் சொல்லுங்க... என் ஹஸ்பண்டுக்கும் போன் பண்ணி வர சொல்றேன். எங்க ரெண்டு பேருல யாராவது ஒருத்தர் வரும் வரைக்கும் இந்த போனை நீங்களே வச்சு எங்களுக்கு பதில் சொல்லுங்க சார்... அவள்.. எனக்கு...'', என்று திருப்பித் திருப்பிக் கண்ணீரோடு கெஞ்சிய பவித்ராவின் குரல் அவரையே உலுக்கியது.

''என்னம்மா நீங்க, இதுக்கு இத்தனை ப்ளீஸ் போடணுமா? நான் ஆட்டோக்காரன் என்றாலும் முதலில் மனிதன் இல்லையா? இந்த பொண்ணை தனியா விட்டுட்டு போக எப்படிம்மா மனசு வரும்? நீங்க கிளம்பி வாங்கம்மா... நீங்க யாராவது வரும் வரை நிச்சயம் கூட இருக்கிறேன். இன்னும் வேறு யாருக்காவது தகவல் சொல்லணும் என்றாலும் நீங்களே சொல்லிடுங்க....'', என்று ஆறுதல் சொல்ல நன்றி சொல்லிப் போனை வைத்த பவித்ரா வேகமாக இயங்கினாள்.

கிருஷ்ணாவிற்கு தகவல் சொல்லி சைட்டில் இருந்து கிளம்பி பதினைந்து நிமிடங்களுக்குள் மருத்துவமனை வளாகத்திற்கு வர வைத்தாள். தானே அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தாள். விமலாவிற்கு போன் பண்ணி விஷயம் சொல்லிவிட்டு, அவர்கள் காரில் கிளம்பினால் இரவு பத்து மணி அளவில், அல்லது ரயிலில் கிளம்பினால் மறுநாள் காலையிலும் வரலாம் என்று எதிர்பார்த்தாள். ஆனால் போனில் தகவல் வந்த உடனே பெங்களூரில் இருந்து விமானத்தில் கிளம்பி,



...லை ஆறு மணியை நெருங்கிய போது நான்கே மணி ...த்தில் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார் விமலா.

# 31

மாலை ஆறு மணி அளவில் விமானத்தில் பறந்து ...து, கால் டாக்சியில் மருத்துவமனை வளாகத்தில் ...றங்கிய விமலாவின் கண்ணில், மருத்துவமனையில் ...சலில் இருந்த 'வினை தீர்த்த விநாயகர்', முன் கண் ...டி, கை கூப்பி, கன்னங்களில் கண்ணீர் வழிய, கண ...வனின் உடல் நலத்திற்காக ஆத்மார்த்தமாக பிரார்த் ...தனை செய்து கொண்டு இருந்த சந்தியாவின் உருவம் ...ட அவரின் மனம் உருகியது.

ராஜீவனுக்கு ஐந்து மணி அளவில் நினைவு திரும்பி ...ட்டதையும், அவன் சில வார்த்தைகள் பேசி விட்டு, ...ண்டும் மருந்துகளின் வேகத்தில் இயல்பாக தூங்கிக் ...கொண்டு இருப்பதை, வரும்போதே, கிருஷ்ணாவிடம் ...கேட்டுத் தெரிந்து கொண்டதால், உள்ளே போக அவசரம் ...காட்டாமல் அவனின் அருகே சென்றார். அவரை ...பார்த்ததுமே தாவி வந்து அவரின் தோளில் சாய்ந்து ...கொண்டவளின் கண்களில் கண்ணீர் புதிதாக புறப்பட, ...அவர் ஆறுதலாக துடைத்து விட்டார்.

''ஷ்! சந்தியா, அழக்கூடாது. நீங்க சந்தோஷமா ...இருப்பது பொறுக்காமல் உங்கள் மேலே மற்றவங்க வச்ச ...கண்ணை திருஷ்டி என்று நினைத்து கொள். ஏதோ கெட்ட ...நேரம், தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு

என்று நினைக்கனும். ராஜீவன் சீக்கிரமே எழுந்துடுவான். முதலில் இப்படி அழுது கரைவதை நிறுத்து. இந்த ஜூஸைக் குடி'', என்று குடிக்க வைத்த காட்சியைப் பார்த்த பவித்ரா பிரமிப்பின் எல்லைக்குச் சென்றாள்.

சந்தியா வெளியே வந்து பதினைந்து நிமிடங்களுக்கு மேலே ஆகிவிட்டதே! இவள் எங்கேயாவது மயங்கி விழுந்து விட்டாளோ என்று பார்ப்பதற்காக வெளியே வந்த பவித்ரா மாமியாரும் மருமகளும் சேர்ந்து இருந்த காட்சியைப் பார்க்க நேரிட்டது.

''அத்தை. வந்துட்டீங்களா! உங்களைப் பார்த்ததும் தான் எனக்கு உயிரே வந்தது. ராஜீவனின் உடல் நிலை பற்றிய கவலையை விடச் சந்தியாவின் மன நிலையைச் சமாளிப்பது தான் எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது. வாங்க அத்தை உள்ளே போகலாம்...'', என்று சொன்ன பவித்ரா ஓடி வந்து விமலாவின் அருகில் கீழே இருந்த பையை குனிந்து எடுத்தாள்.

''ராஜீவ். எப்படிடா இருக்கே'', என்று அறைக்குள் நுழையும் போதே லேசாக அசைந்து கண் விழித்த மகனை பார்த்ததும் ஓடி வந்து, அவன் படுக்கைக்கு அருகில் குனிந்து கனிவாக விசாரித்தார்.

அவருக்கு 'நல்லா இருக்கேன்', என்ற பாவனையில் ஒரு சின்ன புன்னகையை தந்து தலை அசைத்தவன், ''எப்பம்மா வந்தீங்க?'', என்று சின்னக் குரலில் விசாரித்தான். குரல் பலகீனமாக இருந்தாலும் தெளிவாகவே இருந்தது.

''இப்ப தான் நுழைகிறேன், வலி இருக்கா?'', என்று கேட்க, அவன் பார்வை அவரை தாண்டி அவர்



ன்னால் நின்று இருந்த மனைவியின் முகத்தில் திந்து, அவள் கண்ணில் கவலையையும் ஈரத்தையும் ண்டதும், புறம் தன் இடது கையை நீட்டி கண்ணால் அருகில் வரும்படி அழைத்தான் ராஜீவன்.

மகனின் பார்வை மனைவியிடம் பதிந்ததை ண்டதும் தான் இருந்த இடத்தை விட்டு விமலா நகர, ரீ எட்டில் அவன் அருகில் வந்து படுக்கைக்கு அருகில் ண்டியிட்டு அவன் கையில் தன் கையை வைத்து அழுத்திய சந்தியாவின் கண்ணில் ஈரம் கூடியது.

''ஷ், பயப்படாதே! நீ இருக்கும் வரை அவ்வளவு கிரம் எனக்கு ஒன்றும் ஆகாது...'', என்று தேற்ற, அந்த வார்த்தைகளும் அவளை மேலும் இளக்கி அழுகையை கூடுதலாக்கவே செய்தது.

''நான் உன் கண் முன்னால் முழுசா இருக்கேன் இல்லையா? இப்ப எதுக்கு சந்தியா அழற?'', என்று சொன்னதும் அவள் அவசரமாக கண்களை துடைத்து கொண்டாள்.

''இனி அழலைங்க. பவித்ரா கிருஷ்ணா எல்லாம் இருக்காங்க பாருங்க...'', என்று பேச்சை மாற்ற அவனும் பார்வையை அவர்களின் புறம் திருப்பி பலவீனமாக புன்னகைத்தான்.

''இன்னொரு முறை நன்றி சொல்ல வைத்து ட்டாய். சந்தியாவை தனியா விடாமல் உடனே இங்கே வந்து சேர்ந்ததுக்கு தேங்க்ஸ் கிருஷ்ணா...'', என்று சொல்ல, ''முட்டாள் மாதிரிப் பேசாதே! நன்றி எல்லாம் நமக்குள்ள அவசியமில்லை. நீ சீக்கிரம் நல்ல படியா எழுந்து வந்தால் அதுவே போதும்...'', என்று அவன் தோளில் தட்டினான்.

"எனக்கும் எழுந்து ஓடி வர ஆசைதான். ஆனால் கால் பேண்டேஜ் பார்த்தால் பயமா இருக்கே? டாக்டர் என்ன சொன்னார்?" என்று விசாரித்தவன் குரலில் கவலை இருந்தது.

"பயப்பட ஒன்றுமே இல்லை. முதுகில், கைகளில் இருக்கும் கிராய்ப்புகள் ஆற இரண்டு வாரம். வலது காலில் இருக்கும் எலும்பு முறிவு ஒன்று சேர ஆறு வாரம் பெட் ரெஸ்ட். அதிக பட்சம் இரண்டு மாதங்கள். அப்புறம் நீ ஓடலாம். ஆடலாம். போதுமா?", என்று கிருஷ்ணா நம்பிக்கையோடு சொன்ன விதத்தில் ராஜீவன், விமலா இருவரின் முகத்திலுமே லேசான புன்னகை மலர்ந்தது. விமலா வந்த பிறகு, மருத்துவமனையில் ஒருவர் மட்டுமே தங்கலாம் என்பதால், பவித்ராவும் கிருஷ்ணாவும், அவர்களுக்கு உணவு வாங்கி கொடுத்துவிட்டு கிளம்பினார்கள்.

"எந்த டைம் என்றாலும் ஏதாவது பிரச்னை என்றால் என்னை அழைக்கத் தயங்க வேண்டாம். கம்பெனி கார் வீட்டிலேயே இன்று நிறுத்தி வைக்கிறேன். நீங்க போன் பண்ணின இருபது நிமிடத்தில் இருப்பேன்." என்று உறுதி அளித்துவிட்டு கிளம்பினான் கிருஷ்ணா.

"நாளை மதியம் வரை அவருக்கு திரவ ஆகாரம் கொடுங்க. ட்ரிப்ஸ் ஏறிக்கொண்டு இருப்பதால் களைப்பாக உணர மாட்டார். ஏழரை மணிக்கு குடிக்க ஏதாவது கொடுத்து மாத்திரையை சாப்பிட சொல்லுங்க. பத்து பனிரெண்டு மணி நேரம் அவர் தூங்கினாலும் பயப்பட வேண்டாம்", என்று மருத்துவர் சொல்லி விட்டுப் போனதால், விமலா "பால் வாங்கி வருகிறேன் சந்தியா, ஹார்லிக்ஸ் கொடுக்கலாம்" என்று எழுந்தார்.



"இல்லைம்மா நீங்க இருங்க நான் போய் வாங்கி
...கிறேன்..", என்று சந்தியா சொல்ல இருவருக்கும்
...த சின்ன வாக்குவாதத்தை, "சந்தியா போகட்டும்மா.
... உங்களிடம் கொஞ்சம் பேசணும். அப்பா எப்படி
...க்காங்க? ரொம்ப பயந்துட்டாங்களா? உங்களை விமா
...துல தனியா அனுப்பி இருக்காங்க? எப்ப வராங்க?",
...று ராஜீவனே இடையிட்டு அமர வைத்தான்.

"பயப்படாமல் இருக்க முடியுமா ராஜீவ்? இரவு
...லில் கிளம்பி காலையில் வந்துடுவாங்க. என்னால்
...ங்கே ஒரு நிமிஷம் கூட இருக்க முடியலை. அதான்
...டனே கிளம்பிட்டேன். இவ்வளவு தூரம் சந்தோஷமான
...சரணையான வாழ்க்கை வாழ்ந்து அனுபவப்பட்ட
...ங்களே விபத்து செய்தி கேட்டு ஒரு நிமிஷம் ஆடி
...ட்டோம். அந்த இடத்துல சந்தியா எப்படித்தான்
...ளிச்சு உன்னை ஹாஸ்பிடல் கூட்டி வந்து சேர்த்
...ளோ? எனக்கு நினைச்சுப் பார்த்தாலே நடுங்குதுடா.
...த விதத்துல அவள் தைரியமா மாறி விட்டாள் என்று
...ட்ட வேண்டும்...", என்று கண்களை மூடி, ஒரு
...டம் அந்தச் செய்தி தங்களை வந்து சேர்ந்த நிமி
...த்தின் தாக்கத்தை மீண்டும் அனுபவித்து நடுக்கத்
...ன் சொன்னார் விமலா.

"ஆமாம்மா! அந்த நேரத்தில் அவள் எப்படி அங்கே
...தாள் என்றே தெரியலை. அது வங்கிக்கு செல்லும்
...லை தான். ஆனால் அங்கே இருந்து வீட்டுக்கு போக
...த் திசை..."

"எப்படி வந்தால் என்ன? யார் பண்ணிய புண்ணி
...மோ! சரியான நேரத்தில் அங்கே அவளே வந்து

Optimized by www.ImageOptimizer.net

இருக்கிறாள். ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டான். போலீஸ் வந்து உன் முகவரி கண்டு பிடித்து தகவல் சொல்வது என்றால் எவ்வளவு நேரம் நீ தனியாக இருந்து இருக்க வேண்டுமோ?'', என்று பெருமூச்சு விட்டார்.

''உண்மை தான்மா. கிருஷ்ணாவும் பவித்ராவும் உடனே வந்துட்டாங்க இல்லையா? அந்த விதத்துல சந்தியாவுக்குத் தனிமை கஷ்டம் கொஞ்சம் குறைந்து இருக்குமே! அவங்க ரெண்டு பேருக்குமே எங்களிடம் அப்படி ஒரு ஓட்டுதல்...'', என்று பெருமையாகச் சொல்ல ஒப்புதலாக தலை அசைத்தார் விமலா.

''பொதுவா தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்று சொல்வாங்க. ஆனால் இப்படி ஒரு அன்பான மனசுள்ள பவித்ரா எப்படி தான் அந்த மாதிரி ஒரு அம்மா வயிற்றில் ஜனித்தாள் என்று தெரியலை. அவள் அவங்க அப்பா மாதிரி குணம் போல...''

''ஏன்மா அவங்க அம்மாவைப் பற்றி இப்ப பேசறீங்க? இன்னிக்கு எதுவும் சந்தியாவிடம் பேசி அவளை அப் செட் பண்ணினாங்களா என்ன?''

''உன் விபத்து குறித்த தகவல் பவித்ரா சொல்லி இருப்பாளே! தெரிந்த பிறகு பேசாமல் இருக்க முடியுமா? அவளிடம் என்ன பேசினாங்க என்று எனக்குத் தெரியாது. ஆனால் என்னிடம் என்னென்னவோ பேசிட்டாங்க. இவங்க ஆறுதல் சொல்றாங்களா? இல்லை மனசை குத்தி கிளறி விடுறாங்களா என்று எனக்கே ஒரு மாதிரி இருந்தது...''

''ஓ....!'' என்றவன் மனமும் குரலும் ஓய்ந்து போனது அடுத்தவர் கஷ்டத்தில் என்ன இன்பம் இவங்களுக்குக் கிடைக்குமோ?

''பவித்ரா ஜாதகம் பொருத்தம் எல்லாம் பார்த்து சம்மதம் சொன்னீங்க. ஆனால் சந்தியாவுக்கு ஜாதகமே



ங்க பார்க்கலை. அவளுக்கு ஏதோ நல்லது செய்வதா நினைத்து அவசர அவசரமா கல்யாணம் முடிச்சீங்க. அவளுக்கு பிறந்ததில் இருந்தே அப்படித்தான். ஜனிச்ச கொஞ்ச நாளில் அப்பாவை முழுங்கியாச்சு. அப்புறம் ஆதரவு கொடுத்த மாமா.... ஆறு மாசம் முன்னாடி அவங்க அம்மா... இப்ப... என்று என்னென்னவோ...''

''பச்! அந்தப் பேச்சை விடுங்கம்மா...''

''எனக்கும் பேசப் பிடிக்கலை. ஆனால் இதை நீ தெரிஞ்சுக்கணும். சந்தியாவோட ஜாதகத்தை முதலிலேயே ஆராய்ந்து இருந்தால் இந்த மாதிரி நிலை நமக்கு வந்து இருக்காது. பையனுக்கு கீழ் பாகத்தில் அடி என்று சொல்றீங்க. குழந்தை பிறக்கும் பாக்கியம் எப்படி இருக்குமோ? நம்ம வம்சம் தழைக்குமோ தழைக்காதோ...''

''அம்மா, சந்தியா வந்துட போகிறாள். வேறே ஏதாவது பேசறீங்களா?''

''அவள் மனசுடைஞ்சு போய் இருக்கும்போது நான் இதை சொன்னேன் என்றால் அவளுக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் உண்மை நிலை என்ன என்று உனக்கு தெரிய சொன்னேன். இனிமேல் நான் இதைப் பற்றிப் பேச மாட்டேன். நீயே யாரிடம் எப்படிப் பேச வேண்டுமோ அப்படி பார்த்து நடந்து கொள் . போதுமா? இப்போதைக்கு நீ உன்னுடைய உடல் நலம் தேறுவதைப் பற்றி மட்டும் யோசி...'', என்று முடித்தார் விமலா.

கடைசி வரிகளை பிளாஸ்க்கில் பாலுடன் உள்ளே நுழைந்த சந்தியா கேட்க நேரிட்டது அவளின் துரதிர்ஷ்டமே! விமலாவின் வார்த்தைகள் அவளை உலுக்கினாலும், அந்த அதிர்ச்சியை வெளிக்காட்டாமல், அமைதியாக உள்ளே வந்தவள் ஹார்லிக்ஸ் கலந்து ராஜீவனை குடிக்க வைத்தாள். மருந்துகளை இரவு

வேளைக்கு என்று தனியாக நர்ஸ் எடுத்து வைத்து
இருந்ததை விழுங்க வைத்தாள். விமலாவும் ராஜீவனும்
கேட்ட சாதாரணக் கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தையில்
பதில் சொன்னாள்.

சில நிமிடங்களில் ராஜீவன் துயிலில் ஆழ்ந்து விட
அருகே இருந்த சோபாவில், "நீங்க கொஞ்ச நேரம் தூங்
குங்கம்மா. இரண்டு மூணு மணிக்கு நான் படுத்து கொள்
கிறேன். நீங்க எழுந்து கொள்ளலாம்" என்று விமலாவை
படுக்க சொன்னவள் ராஜீவனின் படுக்கைக்கு அருகே
இருந்த நாற்காலியில் அமர்ந்து படுக்கையில் சரிந்து
கண்களை மூடிக் கொண்டாள்.

உங்களுடன் பேசணும் என்று ராஜீவன் விமலாவை
இருக்க சொன்னான். அவர் பேசிய வார்த்தைகள் கவலை
பொருந்தியவை. சொன்ன விஷயங்கள் மறுக்க முடியாத
உண்மைகள்! தனக்கு ஒரு நல்ல விஷயம் நடக்க
போகிறது என்று எப்போது எல்லாம் நம்பிக்கையோடு
நிமிர்கிறோமோ, அதற்கு அடுத்த நாளே ஏதாவது கெட்ட
விஷயம் நடந்து விடுகிறது.

தான் ப்ளஸ் டூ படிப்பை முடித்து மேற்கொண்டு
மருத்துவம் படிக்க ஆசையுடன் இருந்த போது நிகழ்ந்த
மாமாவின் மறைவு. ஆசிரமத்தில் வேலை கிடைத்து நம்
வாழ்க்கை நல்ல நிலையை அடையப் போகிறது என்ற
நிலையில் நிகழ்ந்த திருட்டு. ராஜீவன் தன்னை விரும்பு
கிறான் என்பதை அறிந்த வினாடியில், அவன்
பவித்ராவுக்கு பார்த்த மாப்பிள்ளை என்று தெரிந்த
விஷயம், இப்போது தனக்கு லோன் கிடைத்து விட்டது
என்ற விஷயத்தை அவனிடம் சொல்ல முயன்ற வினாடி
யில் அவனுக்கு நிகழ்ந்த விபத்து... கடவுளே!

இதை எதையுமே யாருமே மறுக்க முடியாதே. இது
எல்லாமே கடந்த கால உண்மைகள். இனி வருங்காலம்



...படி இருக்குமோ என்று நினைக்கவே பயமாக
...ருக்கது. இப்போது லோனை பெற்று தான் தொழிலில்
...ற்றி அடையும் ஒவ்வொரு நேரத்திலும், இது மாதிரி
...ஏதோ நிகழ்வு அவனுக்கு நேர்ந்தால் தன்னால் தாங்க
...டியுமோ இல்லையோ, விமலா அம்மாவால் தாங்க
...டியாது. ஏற்கனவே அதற்கான அறிகுறி இன்று இதோ
...வெளியே வந்துவிட்டது.

தன்னைக் குறை சொல்வதையே வேலையாக வைத்து
...ருக்கும் நபர்களின் போகிற போக்கிலான வார்த்தை
...களை மதிக்க வேண்டாம் என்று அவன் சொன்னது வேத
...க்காக மனதில் பதிந்து இருக்கிறது. ஆனால் தான்
...பெரிதும் மதிக்கிற ஒருவரின் ஆதங்கத்தை, தான் மதிக்
...காமல் இருக்க முடியாதே!

ராஜீவனுக்கு இன்று நிகழ்ந்த விபத்து தனக்கு
சொல்லப்பட்ட ஒரு சகுனம். ஒரு வேளை நான் அவன்
வாழ்க்கையில் இல்லாமல் இருந்தால் அவன் நலமாக
இருப்பானோ என்ற எண்ணம் தோன்றி மெல்ல மெல்ல
வலுவடைய ஆரம்பித்தது.

காலை சீக்கிரம் எழுந்து வீட்டுக்கு போய் வருகிறேன்
என்று விமலாவிடம் சொல்லி விட்டு அப்படியே கிளம்பி
...டலாம். எங்கே போவது? என்ன செய்வது? என்ற
எண்ணம் தோன்றி தயங்க வைத்தாலும், 'எங்கேயாவது
...ராக, வடக்கே கண் காணாத தூரம் போய் விட
வேண்டும்', என்ற முடிவில் மாற்றம் ஏற்படவில்லை.

தான் போனால் அவன் விட்டு விடுவானா என்ற
சந்தேகம் தோன்றியதும் கண்ணில் நீர் துளிர்த்தது.
தேடுவான். தேடலாம். ஆனால் கொஞ்ச நாள் கழித்து
அம்மாவிற்காக தன்னை மறந்து விடுவான்... என்ற
எண்ணத்தைக் கூடத் தாங்க முடியாமல் கண்ணீர் இமை
என்ற கரையைத் தாண்டி கன்னங்களில் வழிந்தது.

Optimized by www.ImageOptimizer.net

இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம். பண்ண முடியுமா என்ற சந்தேகம் தோன்ற தன் கல்யாணம் பதிவு செய்யப்படாததால் அவனுக்குப் பிரச்சனை இருக்காது என்று அவளே தேற்றிக் கொண்டாள் தனக்காக பேச பவித்ராவும் கிருஷ்ணாவும் இல்லையா என்ற எண்ணம் தோன்றி மறைந்தது.

தானே எங்கே இருக்கிறோம் என்பதை அறியாத போது அவர்களும் என்ன செய்ய முடியும் என்றெல்லாம் எண்ணியவளுக்கு 'இருக்கும் இடம் தெரியவில்லை என்றாலும் வேறு திருமணம் செய்து கொள்ள முடியாது', என்ற சட்டம் தெரியாததால் இஷ்டத்திற்கு கற்பனை செய்து கொண்டு விமலா கண் விழிக்கக் காத்திருந்தாள்.

அதிகாலை நான்கு மணி அளவில் வழக்கம் போல கண் விழித்த விமலா, ''சந்தியா., இப்படி அசந்து தூங்கி விட்டேனே! ராத்திரி எல்லாம் விழித்து இருந்தாயா? ஒரு சத்தம் கொடுத்து இருக்கக் கூடாதா?'', என்று கேட்டபடி பதறி எழுந்தார்.

''பிரச்சனை இல்லை அத்தை. அவரும் விழிக்கவில்லை. நானும் நல்லா தூங்கிட்டேன். வீட்டுக்கு போய் குளித்து விட்டு வருகிறேன்'', என்று எழுந்தாள் சந்தியா.


''வீட்டுக்கா? இந்நேரத்திலா? இருட்டா இருக்கே! பொழுது விடிஞ்சதும் போகலாமே?'', என்று வியப்புடன் கேட்க, ''இல்லை அத்தை, அவர் கண் விழித்து விட்டால், போக விட மாட்டார்...'', என்று முனகினாள்.

''அப்படி கட்டாயமா போகணும் என்று என்ன அவசியம் சந்தியா? இங்கேயே பாத்ரூம் இருக்கே? குளிக்கலாமே!''

''கொஞ்சம் திங்க்ஸ் எடுக்கணும் அத்தை. வரேன்...'' என்று அவர் முகத்தைப் பார்க்காமலே சொல்லிவிட்டு



வெளியே சென்றவளை 'இவ்வளவு அவசரமாக எங்கே செல்கிறாள்?', என்று புரியாமல் பார்த்தர் விமலா.



## 32

சந்தியா மருத்துவமனையில் இருந்து கிளம்பி பதினைந்து நிமிடங்களுக்குள் வீட்டை அடைந்தாள். வீட்டில் இருந்து எடுக்க வேண்டிய பொருட்களை முடிவு பண்ணி வைத்து இருந்ததால், ஆட்டோவை காத்திருக்கச் சொல்லி விட்டு, தனது படிப்பு சான்றிதழ், கோவையில் அடகு வைத்து தன் பணத்தில் மீட்கப்பட்ட நகைகள், ராஜீவன் தனக்கு வாங்கி கொடுத்ததில் எளிமையான நான்கு செட் உடைகள், கொஞ்சம் பணம் எடுத்து கொண்டு, வீட்டை விட்டு வந்து, சென்ட்ரல் ரயில் நிலையத்திற்குப் போக சொன்னாள்.

வெளியே அறிவிப்பு பலகையில், அடுத்த அரை மணி நேரத்தில் கிளம்பக் கூடிய வெகு தூரம் வடக்கே செல்லக் கூடிய ரயில் எந்த ஊருக்காக இருந்தாலும், அதில் தன் பயணத்தை துவக்க வேண்டும் என்ற முடிவில் ரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தாள் சந்தியா.

அறிவிப்பு பலகையின் முன்பு நின்று, தோளில் சிறு பையுடன், அடுத்து கிளம்பும் ரயில்களின் பயண அட்டவணையை கவனமாக ஆய்ந்து கொண்டு இருந்த போது ''ஹேய் சந்தியா, இந்நேரத்துல இங்கே என்ன பண்ணுகிறாய்?'' என்ற கேள்வியுடன் அவளின் தோளில் ஒரு கரம் விழ, திரும்பி பார்த்தவள் அதிர்ச்சியில் உறைந்தே போனாள்.

Optimized by www.ImageOptimizer.net

"மாமா... நீங்க...?" என்று திணறியவளுக்கு அவருக்கு பொருத்தமாக ஒரு பதில் சொல்ல முடியவில்லை. 'இவரை இங்கே இந்த நேரத்தில் சந்திப்போம் என்று நினைக்கவே இல்லையே! இன்று காலை ரயிலில் வருவதாக அத்தை சொன்னதை மறந்து விட்டோம்! இப்போது எப்படிச் சமாளிப்பது? இவரிடம் எந்த பதிலுமே சொல்ல முடியாதே!'

அவளின் முக பாவனையையும், குழப்பத்தையும் பார்த்தவரால், ஏன் என்ற காரணம் புரியவில்லை என்றாலும், ஏதோ தவறான முடிவிற்கு அவள் வந்து விட்டாள் என்பதை ஊகிக்க முடிந்தது. தன்னை அவள் இந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை என்பதையும் உணர முடிந்தது. அவளை வீட்டிற்கு அழைத்து சென்று விடலாம். என்ன நடந்தது என்பதை அறிந்த பிறகு, நிலைமை பார்த்து இதை சொல்வதா வேண்டாமா என்பதை பிறகு முடிவு பண்ணிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தார் மணிகண்டன்.

"ஓ ! என்னை பார்க்க தான் வந்தாயா? நீ வருவது எனக்குத் தெரியாதே! நல்ல வேளை உன்னை இங்கே விட்டுட்டு நான் பாட்டுக்கு கிளம்பிஇருப்பேன். வா போகலாம்...", என்று இயல்பாக பேசி, அவளின் கையை பற்றி இழுத்தபடியே வெளியே நடந்தார்.

அவரின் கையை விட்டு விலகத் தெரியாமல், இவரின் எண்ணத்தை திருத்த வழி தெரியாமல் திரு திருவென்று விழித்தபடி அவரின் பின்னே நடந்தவளுக்கு உலகமே வெறுத்துப் போனது. இந்த உலகில் தான் நினைத்தது எதுவுமே நடக்காதா? என்ன நேரத்தில் பிறவி எடுத்தோம் என்று தன் விதியை நொந்தபடி பின்னே நடந்து வந்தாள்.

வெளியே வந்து ஆட்டோ பிடித்து வீட்டு விலாசம் சொல்லி போக சொன்னவர் அவள் புறம் திரும்பி,



"ராஜீவன் எப்படி இருக்கிறான்? கண் விழித்து பேசினானா? எங்கே அடி பட்டு இருக்கிறது?", என்று நலம் விசாரித்தார்.

"வலது காலில் பிராக்சர். கைகளில், முதுகில் சிராய்ப்பு கொஞ்சம் ரத்த சேதம். இப்ப பரவாயில்லை. ராத்திரி அத்தையிடம் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருந்தார்..."

"நைட் தூங்க வில்லையா சந்தியா? கண் எல்லாம் சிவப்பா வீங்கின மாதிரி இருக்கே! இதோட ஸ்டேஷன் வாட்டி என்ன? நான் என்ன சின்னக் குழந்தையா? நானே ஆட்டோ பிடித்து ஹாஸ்பிடல் வர மாட்டேனா?", என்று அதட்ட அவள் விழித்தாள்.

இப்போதைக்கு நிலையை சமாளிக்க வேறு வழி இல்லை. இதையே உண்மையாக்கி விடலாம் என்று முடிவு பண்ணி, "நானா தான் வந்தேன் மாமா. ஹாஸ்பிடலில் ரொம்ப டென்ஷனா இருந்தது. அதான்..." என்று நிறுத்தினாள். உங்களைப் பார்க்க வந்தேன் என்று பொய் சொல்ல வாய் வரவில்லை.

"ஓ ! நீ வருவது அங்கே யாருக்கும் தெரியாதா?", என்று அவளின் முக பாவனையை ஆராய்ந்தபடி கேட்க வேகமாக தலை அசைத்தாள்.

"சரி அப்படியே இருக்கட்டும். நானே ஆட்டோவில் வீட்டுக்கு வந்து உன்னுடன் ஹாஸ்பிடலுக்கு வந்ததா சொல்லிடுவோம். ஓகே?" என்று அவள் தலை அசைத்த வேகத்திலேயே தன்னுடைய ஊகம் சரி என்பதை கண்டு, அவள் மனநிலையை ஒட்டிப் பேசினார் மணிகண்டன்.

"சரி மாமா...",என்று முனகலாக சொன்னவளுக்கு மேற்கொண்டு என்ன செய்வது என்றும் புரியவில்லை. இனி ஒரு முறை இது மாதிரி நழுவ முடியாது என்பதும் புரிந்தது.

''நேற்று நைட் உங்க அத்தை நீ இந்த இரண்டு மாசத்துல எவ்வளவு தூரம் வளர்ந்து இருக்கிறாய் என்று ரொம்ப பெருமையாகப் பேசி கொண்டு இருந்தாள்...'', என்று அவளை பேச வைக்க முயன்ற மணிகண்டனுக்கு தோல்வியே கிடைத்தது. ஆனாலும் அவர் பேசுவதை வீடு வந்து சேரும் வரை நிறுத்தவே இல்லை.

அமெரிக்க ஜனாதிபதி, ஆபிரகாம் லிங்கன் பள்ளியில் படிக்கவில்லை என்பதில் ஆரம்பித்து, காது கேளாத, கண் தெரியாத ஹெலன் கெல்லர் என்ற அமெரிக்க எழுத்தாளரின் சாதனைகள் பற்றிச் சொல்லி, சமீபத்தில் மரணம் அடைந்த ஸ்டீவ் ஜாப்ஸ், கல்லூரி படிப்பை பாதியில் கை விட்டு வெளியேறியவர் என்பது முதலான பல கதைகளைச் சொல்லிக் கொண்டே வந்தவர் வீடு வந்த பிறகே நிறுத்தினார்.

''கொஞ்ச நேரம் இருப்பா! அஞ்சு நிமிஷத்தில் வந்து விடுகிறோம். பக்கத்தில் ஹாஸ்பிடல் போகணும்...'', என்று ஆட்டோக் காரரை நிறுத்தி விட்டு இறங்க அவள் தயங்கினாள்.

''ஹாஸ்பிடல் போகலாமே...''

''போகலாம் சந்தியா. அதுக்கு முன்னாடி உன்னிடம் சில விஷயம் தனியா பேசணும். உள்ளே வா. அந்த பையை வச்சுட்டு போக வேண்டாமா?'', என்று சொன்னவரின் குரலில் அதட்டல் இருந்தது. சில நேரத்தில் வேறு வழி இல்லை. மிரட்டலை பயன்படுத்த வேண்டியது தான். தயக்கத்துடன் இறங்கி வந்தவளை பார்த்துப் பரிதாபம் வந்தாலும் காண்பிக்க இது நேரம் இல்லை என்று அடக்கி கொண்டார்.

''ஆட்டோவில் வரும்போது மூணு கதை ஏன் உன்னிடம் சொன்னேன் என்று இப்போ புரிந்து இருக்குமே!'' என்று கேட்க அதற்கு அவள் மௌனமே சாதித்தாள்.



''சரி விடு. நானே சொல்கிறேன். எந்தக் கஷ்டமுமே நாம் நினைக்கிற அளவுக்கு பெரியதல்ல. நமக்கு என்ன வேண்டும் என்பதை நம்மை காட்டிலும் நன்றாக அறிந்தவன் இறைவன். உனக்கு இறை நம்பிக்கை உண்டா?'', என்று கேட்க ஒரு தலை உருட்டல் பதிலாக கிடைத்தது.

நாங்க மூன்று பேருமே கடவுளை நம்புகிறவர்கள். நேர்மையாக நடக்க வேண்டும். நம்மால் முடிந்த எளிய உதவிகளை தெரிந்தவர் தெரியாதவர் பாகுபாடு இன்றி செய்ய வேண்டும் என்று எண்ணுகிறவர்கள். நீயும் நல்லவள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் குழப்பத்தில் இருக்கிறாய். அதற்கு யார் காரணம் என்று தெரியவில்லை....'' என்று மணிகண்டன் நிறுத்த, அவள் அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள்.

''அதெல்லாம் இல்லை மாமா அவருக்கு அடி பட்டதுல கொஞ்சம் மனசு கஷ்டமா இருக்கு. அவ்வளவு தான்...'', என்று மெல்லிய குரலில் சொல்லிச் சமாளித்தாள்.

''அது இல்லாமல் இருக்குமா சந்தியா? ஆனால் ஒரு சோக சம்பவம் நடந்தால் அதுக்காக அப்படியே மனசு ஒடிஞ்சு போய்டக் கூடாது இல்லையா? இது நல்ல நேரம். ஆண்டவன் புண்ணியத்தில் பெரிசா அடி இல்லாமல் கால் பிராக்சரோடு போச்சே என்று நினைத்து கொள்ளலாமே? சந்தியா.. நீ எனக்கு ஒரு ப்ராமிஸ் பண்ணித் தரணுமே!'' என்று கை நீட்டினார் மணிகண்டன்.

ப்...ரா...மி...ஸா...?''

''ம்ம்ம்.... ஏன் செய்து தர மாட்டாயா?''

''செய்வேன்... என்ன விஷயம் என்று தெரிந்தால்...''

''உனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் வீட்டை விட்டு வெளியேற மாட்டேன் என்று எனக்குப் ப்ராமிஸ் பண்ணி

கொடு...'', என்று அவர் நிதானமாகக் கேட்க அவள் அதிர்ச்சியின் எல்லைக்குப் போனாள். இவர் தான் வெளியே வந்ததை ஊகித்து அழைத்து வந்து இருக்கிறார். இவர் வீட்டில் இதை சொன்னால் ராஜீவன், 'ஏன் இப்படி செய்தாய்?' என்று தன்னை கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வது?

''பயப்படாதே சந்தியா, நான் உன்னை ஸ்டேஷனில் பார்த்ததை நான் மறந்து விட்டேன். இதை நான் யாரிடமும் விமலா உட்பட யாரிடமும் சொல்ல மாட்டேன். நீ இனி ஒரு முறை இந்த மாதிரி செய்ய மாட்டேன் என்று எனக்குப் ப்ராமிஸ் பண்ணு. சீக்கிரம்...'', என்று அழுத்த தலை கவிழ்ந்து அமர்ந்து இருந்தவள் கண்ணில் நீர் வழிந்தது.

''ஒரு பிரச்சனை வந்தால், அதை நேருக்கு நேர் நின்று சந்திக்க வேண்டுமே தவிர, அதை விட்டு தூரம் ஓடிப் போவது எப்படி தீர்வாக முடியும்? உன் குடும்பம், உன்னுடைய நலன் சார்ந்த விஷயங்களில் நீ கவலைப் பட வேண்டிய ஒரே ஆள், ராஜீவன் மட்டும் தான். உன்னை அவன் ஏதாவது சொல்லி இருந்தால், நீ எங்களிடம் வந்து இருக்க வேண்டும். நானோ விமலாவோ சொல்லி இருந்தால் ராஜீவனிடம் போய் இருக்க வேண்டும். அதைப் புரிஞ்சுக்கோ. உன்னை யார் என்ன சொல்லி இருந்தாலும்....''

''என்னை யாருமே எதுவும் சொல்லலை..''

''அப்ப நீ இந்த மாதிரி ஒரு முடிவுக்கு வந்து இருக்க வேண்டிய அவசியமே இல்லையே? உனக்கு யாருடன் என்ன பிரச்சனை என்று எனக்குப் தெரியாது. தெரியவும் வேண்டாம். உனக்கு என்ன பிரச்சனை இருந்தாலும் அதை ராஜீவனிடம் பேசி தீர்த்து முடிவெடு...''



''நான் ஏன் அப்படி செய்தேன் என்று உங்களுக்குப் புரியாது மாமா...''

''புரிய வைப்பது உன் கடமை இல்லையா சந்தியா? ஒரு வேளை ராஜீவன்தான் உன் பிரச்சனை என்றால், நீ அவனை விட்டு பிரியணும் என்ற முடிவில் தீவிரமாக இருந்தால், அதை அவன் முகத்தை பார்த்து நேருக்கு நேர் சொல்லிவிட்டுக் கிளம்பு. அது உன் உரிமை. அப்ப நான் அதை தடுக்க மாட்டேன். ஆனால் அவன் அடிபட்டு நடமாட்டம் இல்லாமல் மருத்துவமனையில் படுத்து இருக்கும் இந்த நேரத்தில் அவனிடம் சொல்லாமல் இந்த மாதிரி போவது சரி இல்லை. அது என் கண் முன்னால் நடக்க நான் விட மாட்டேன். எந்த முடிவெடுத்தாலும், ராஜீவனை கலந்து கொண்டு எடுப்பேன் என்று ப்ராமிஸ் பண்ணலாமே! இதில் உன் சுதந்திரம் எந்த விதத்திலும் பாதிக்கப் படாது. ம்ம்ம்... சத்தியம் செய்... நேரமாகுது. ஹாஸ்பிடல் போக வேண்டாமா?'', என்று விடாமல் வற்புறுத்த, அவரை மறுக்கும் வகை தெரியாமல், வேறு வழி இன்றி தயக்கத்துடன் அவரின் கையில் தன் கையை வைத்து அழுத்தினாள்.

''தேங்க்ஸ் சந்தியா, முகம் கழுவிட்டு வரேன். ஒரே ஒரு காபி மட்டும் கிடைக்குமா? இல்லை உனக்கு மனசு சரி இல்லை என்றால்...''

''ஹய்யோ! என்ன மாமா இப்படிச் சொல்லிட்டீங்க, காபி ஒரு நிமிஷத்தில் ரெடி பண்றேன். அத்தைக்கும் சேர்த்து எடுத்துப் போகலாம்'', என்று கண்களை துடைத்து கொண்டு சொன்னவளை வியப்புடன் பார்த்தார் மணிகண்டன். அதன் பிறகு இருவரும் கிளம்பி ஒன்றாக மருத்துவமனையில் இறங்கிய போது விமலாவுக்கு வியப்பே! அதை தொடர்ந்து, ராஜீவனோ விமலாவோ எதிர்பாராத பல விஷயம் நடந்தது.



Optimized by www.ImageOptimizer.net

முதலாவதாக ராஜீவன் மருத்துவமனையில் இருந்த இரண்டு வாரங்களுமே மணிகண்டன் விடுப்பு எடுத்து கொண்டு சென்னையில் தங்கி இருந்தது. ராஜீவனின் அறையை விட்டு சந்தியா வெளியே கிளம்பிய அது மருந்து வாங்கவோ, மருத்துவரை அழைக்கவோ, குடிக்க பால், ஜூஸ் என்று எதையாவது வாங்கவோ, எதற்காக இருந்தாலும் ஒவ்வொரு முறையும் அவளை நிழலாக பின் தொடர்ந்தார் மணிகண்டன்.

"மாமா நீங்க என்னுடைய பிராமிசை நம்பலையா?" என்று சந்தியாவே நேருக்கு நேர் கேட்ட பின்பும், "நம்பிக்கை வேறே, அக்கறை வேறும்மா, எனக்கு உன் மேல் ரெண்டுமே இருக்கு", என்று சொல்லிவிட்டு அவரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தது.

"சந்தியாவை வேண்டாம் என்று உங்க அப்பா சொல்லிட்டாரே என்று நான் பயந்தேன் ராஜீவ். இப்ப பாரேன். அவர் உன்னைப் பார்க்க வந்தாரா, மருமகளை தேற்ற வந்தாரா என்று தெரியாத அளவில் இருக்கு...", என்று விமலா கண்டு கேலி செய்த அளவில் அவரின் நடவடிக்கைகள் இருந்தது. அதை ராஜீவனும் கவனிக்கத் தவறவில்லை.

"வலது காலை ஊன்றாமல் இருக்க வேண்டும், கூடுமான வரையில் வலது காலை சமதளத்தில் படுக்க வைத்தே இருக்க வேண்டும். வலி நிவாரணி, கால்சியம், மாத்திரைகளை சாப்பிட வேண்டும். சத்துள்ள ஆகாரங்களை எடுத்துக் கொள்ள வேண்டும்", என்ற அறிவுரைகளுடன் விபத்து நடந்து பதினைந்து தினங்கள் கழித்து மருத்துவமனையில் இருந்து ராஜீவனை டிஸ்சார்ஜ் செய்து அழைத்து வந்தனர்.

இரண்டு தினங்கள் இருந்து அவர்களின் வசதிக்கு எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து விட்டு, மணிகண்



ம் விமலாவும் பெங்களூருக்கு விடை பெற்றுச் சென்ற ரு ராஜீவன் படுக்கையில் இருந்து ஊன்று கோலுடன் க்கு வந்து வலது காலை பாதுகாப்பாக ஸ்டூலில் த்து விட்டு சோபாவில் அமர்ந்தான். அவன் படுக்கை றையில் இருப்பான் என்ற எண்ணத்தில், பால் டம்ளர ன் அடுக்களையில் இருந்து வெளியே வந்தவள் னை ஹாலில் அமர்ந்து இருப்பதைக் கண்டு முதலில் ர்ந்தாள்.

"என்ன நீங்களே தனியா வந்துட்டீங்க? ஒரு சத்தம் டுத்து இருந்தால், நான் வந்து கை கொடுத்து ருப்பேன் இல்லையா?" என்று சோபாவின் அருகே ந்து அமர்ந்தாள்.

"அம்மா அப்பா இப்போ இல்லை நீ இனிமேல் நடிக்க ண்டிய அவசியம் இல்லை, என் தேவையை நான் னே பார்த்துக் கொள்ள வேண்டும். அதான் எழுந்து ந்து பார்த்தேன்...", என்று குரலில் உணர்ச்சி இன்றி ஜீவன் சொல்ல அவள் மேலும் அதிர்ந்தாள்.

"நீங்க என்ன... சொல்றீங்க? நான் ஏன் நடிக்கணும்...?"

"ஏன் நடிக்கணும் என்று உனக்கு தானே தெரியணும்? ன் வேண்டாம் என்று கிளம்பி போனவள் ஏன் திரும்பி ந்தாய்? உள்ளார்ந்த நம்பிக்கையுடன் என்னுடன் இன்ப ம்பத்தில் இணைந்து வாழ விருப்பம் இல்லை என்றால் ன் உன்னைக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. ராளமாக நீ இப்போதே கிளம்பிப் போகலாம். உன் பை கூட தயாராக இருக்கு போலவே!"

"ராஜீவ். என்ன பேசறீங்க....? நான்... அன்று... எந்த லையில்.... பச்! சொல்ல மாட்டேன் என்று உறுதி ளித்த மாமா கடைசியில்...", என்று சொல்லிவிட்டு ரையில் சரிந்து அமர்ந்தவள் முட்டியில் முகம் புதைத்து ம்மி அழ ஆரம்பித்தாள்.

Optimized by www.ImageOptimizer.net

அவளின் கண்ணீர் மீண்டும் அவனுக்கு எரிச்சலை மூட்ட, "ஷ்! சந்தியா, இன்னும் ஒரு மாசத்துக்கு என்னால் நினைத்த மாதிரி நகர முடியாது. முதலில் இங்கே வந்து என் பக்கத்தில் உட்கார்...", என்று அழைக்க அவனின் அதட்டலில் மேலும் கசங்கி, அவனின் கோபத்தை கூட்ட விரும்பாமல் எழுந்து வந்து அவன் அருகில் அமர்ந்தாள்.

"நீ என்னையும் புரிந்து கொள்ளவில்லை. அப்பாவையும் புரிந்து கொள்ளவில்லை. அப்பா என்னிடம் எதுவும் சொல்லவில்லை. அவர் சொல்லி நான் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. எனக்கு உன்னை தெரியும் என்று இன்னும் நம்பலையா சந்தியா?" என்று அவன் அதட்டலாகக் கேட்ட விநாடியில் மேலும் கரைந்தவள் விம்மலுடன் அவன் தோளில் சரிந்து கண்ணீர் பெருக்க ஆரம்பித்தாள்.

சில கணங்கள் அவள் அழுவதை வேடிக்கை பார்த்தவனால் ஒரு சில விநாடிகளுக்கு மேல் தாங்க முடியவில்லை. அவளை ஒற்றை கரத்தால் அணைத்து, மறுகையால் தலையை வருடியவன் மனதில் இரண்டு வாரங்களாக அவள் மேல் ஏறி இருந்த கோபம் கொஞ்சம் கொஞ்சமாக கரைய ஆரம்பித்தது.

## 33

கடந்த இரண்டு வாரங்களாக, மருத்துவமனையில் தனக்கு வேண்டிய வேலைகளை உரிய நேரத்தில் பார்த்து பார்த்து செய்தாலும், அவள் தன்னை ஏதோ காரணத்திற்காக தவிர்க்கிறாள் என்பதை முதல் நாளி



...யே கண்டு கொண்டான் ராஜீவன் அதோடு, அப்பா ...வோடு ஒன்றாக வந்து இறங்கியதும் அவனுக்கு ...சரியமே.

அவன் அறிந்த அப்பா, தனியாக வீட்டிற்கு போக ...ப்பு இல்லை. சந்தியா மருத்துவமனையில் ராஜீ...வை விட்டு விட்டு வீட்டிற்கு போக வாய்ப்பு இல்லை ...யா மருத்துவமனையில் ராஜீவனை விட்டு விட்டு ...ற்கு செல்வாய் என்பதே அவனால் நம்ப முடிய...லை என்றால் அப்பா அதை எப்படி எதிர்பார்த்து ...று இருக்க முடியும் என்ற சந்தேகம் ஒரு பொறியாகத் ...ன்றியது.

அம்மா பேச்சு வாக்கில், சந்தியா தொழில் துவங்குவது ...றிய பேச்சு வந்த போது, லோன் சாங்ஷன் ஆக...லை என்ற சந்தியாவின் வார்த்தை அந்த சந்தேகத்...கு நெய் ஊற்றி வளர்த்தது. லோன் சாங்ஷன் ஆனதை ...னிடம் போனில் சொன்னாளே! அம்மாவிடம் அதை ...றைக்க வேண்டிய அவசியம் என்ன?

...ஊகமாக இருந்த சந்தேகத்தை, இரண்டு நாட்களுக்கு ...ன்பு மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்த ...போது, அவர்களுடைய அலமாரியில் திணிக்கப் பட்டு ...ருந்த அந்த பையில் நான்கு உடைகளும், சர்ட்டி...கேட்டும், நகையும் இருந்தது உறுதி செய்தது.

சில நிமிடங்கள் அவளின் அழுகை குறைவதற்காகக் ...ந்திருந்த ராஜீவன், தன் மனம் இளகியதை அவளுக்கு ...ட்ட விரும்பவில்லை. ஏற்கனவே பல முறை அவ...ளுக்கு சாதாரணமாகச் சொல்லி இருந்த அறிவுரைகள் ...ழுக்கு இறைத்த நீராகி விட்டது. இம்முறையும் அந்த ...வறை செய்யக் கூடாது என்று முடிவெடுத்தான்.

"உன்னை அழ வேண்டாம் என்று சொல்லிச் சொல்லி ...னக்கு அலுத்து போய் விட்டது. இனிமேல் ஆசை தீர

Optimized by www.ImageOptimizer.net

அழு என்று தான் சொல்ல வேண்டும். நீ அழுது முடிக்கும் வரை காத்திருக்கிறேன். அதன் பிறகு பேசலாம்....'' என்று விட்டேற்றியாக சொல்ல, அவன் தோளில் இருந்து சந்தியா நிமிர்ந்தாள். கைகள் தானாக உயர்ந்து கண்ணீரை துடைத்தது.

''அழுது முடிச்சாச்சா? இப்ப பேசலாமா?'', என்று உணர்ச்சியற்ற குரலில் கேட்க, அவன் அந்த மாதிரி சொல்வான் என்று எதிர்பார்க்காததால் முகம் வாட விலகி அமர்ந்தவள் தயக்கத்துடன் அவனை நோக்கினாள்.

''இங்கே இப்போ நம்ம ரெண்டு பேர் மட்டும் தான் இருக்கிறோம். உண்மையை மட்டும் பேசலாம். யாருக்காகவும் நடிக்கத் தேவை இல்லை. வேறு யாரும் எனக்குத் தெரிந்து உன்னைக் குறை சொன்னதாகத் தெரியலை. சாவித்திரி அத்தையின் பேச்சு மரியாதை கொடுக்கத் தேவை இல்லை என்று குறிப்பா உன்னிடம் சொன்ன பிறகும், நீ வீட்டை விட்டு வெளியேறலாம் என்று முடிவெடுக்க என்ன காரணம்?'' பேசாமல் இருந்து பொழுதை கழிக்கலாம் என்று நினைக்காதே. பதினஞ்சு நாளா உன்னிடம் பேச காத்திருக்கிறேன். ஒரு முடிவு தெரியாமல் இன்று நான் தூங்கப் போவதாக இல்லை. சொல்லு...''

..........''

'அவர் அதிக பட்சமாக என்ன சொல்லி இருக்க போகிறார்? எனக்கு விபத்து நிகழ்ந்ததுக்கு நீதான் காரணம் என்று சொல்லி இருப்பார். அந்த மாதிரி பேச்சை இக்னோர் பண்ணு என்று படிச்சுப் படிச்சு நான் சொன்ன வார்த்தைக்கு அவ்வளவு தான் மரியாதையா? உன் மேல் உயிரா இருக்கும் எங்களை விட உன்னை குறை சொல்லும் அவரின் வார்த்தைகள் தான் உன்னை பாதிக்குது. அப்படிதானே?''



''இல்லை, சாவித்திரி அத்தை பேச்சை நான் மதிக்கவில்லை. அவர் சொன்ன எந்த வார்த்தைக்காகவும் நான் வீட்டை விட்டு கிளம்பவும் இல்லை...'', என்று மறுத்துப் பேசியவளை வியப்புடன் பார்த்தான்.

''பின்னே வேறெதுக்கு வீட்டை விட்டு கிளம்பினாய்?''

''..........''

''சந்தியா, எதுவா இருந்தாலும் மனசுக்குள் வைத்து புழுங்காதே. மனசை திறந்து பேசு சந்தியா. உனக்காக உன் தன்னம்பிக்கையை வளர்க்க, உனக்கு நான் இருக்கிறேன் என்ற நம்பிக்கையை ஊட்ட நான் இன்னும் என்ன செய்ய வேண்டும்? எங்கே கோட்டை விட்டேன் என்று நான் என்னை நினைத்தே குழம்பிப் போய் இருக்கிறேன். வேறென்ன உன்னை அப்செட் பண்ணுச்சு சொல்லு பவித்ரா கிருஷ்ணா யாராவது ஏதாவது சொன்னாங்களா?''

''இல்லை.''

''நான் அன்று காலையில் கிளம்பும் வரை உன் மனசைப் பாதிக்கிற மாதிரி எதுவும் சொல்லவில்லை. வெளியிடத்தில் உள்ளவர்கள் பேசிய வார்த்தைகளுக்காக நீ கவலைப் பட வேண்டியதில்லை. அப்ப மிச்சம் இருப்பது அம்மா தான்.. அம்மா உன் மனசு உடைஞ்சு போற அளவுக்கு என்ன சொன்னாங்க?''

''தப்பா எதுவும் சொல்லலை....''

''தப்பா எதுவும் சொல்லலை என்றால் நீ ஏன் வீட்டை விட்டு வெளியேறணும்? உனக்கென்ன பைத்தியமா?''

''ஆமா! பைத்தியம் தான். உங்க மேலே பைத்தியம். நீங்க நல்ல இருக்கணுமே என்று ஒவ்வொரு நிமிஷமும் விடாமல் இறைவனை வேண்டிக்கிற பைத்தியம். உங்களுக்கு எந்தக் குறையும் வந்துடக் கூடாது என்று சதா

Optimized by www.ImageOptimizer.net

சர்வ காலமும் துடிக்கிற பைத்தியம். உங்களுக்குக் குழந்தை இல்லை என்று ஒருத்தர் குறை சொல்லிடக் கூடாதே என்று துடிக்கும் பைத்தியம். என்னால் அதற்கு எந்தத் தடையும் வந்து விடக் கூடாது என்று உங்க வழியில் இருந்து ஒதுங்கிப் போக நினைக்கிற பைத்தியம்...'', என்று ஆவேசம் வந்தவளைப் போல அவள் வேகமாக பேசிக் கொண்டே போக, அவன் அவசரமாக இடையிட்டான்.

''எனை உளறுகிறாய? எனக்குக் குழந்தை வா நீ என் என்னை விட்டு விலகணும்? அப்படி யார் சொன்னா? அம்மாவா! சான்சே இல்லை. அரை குறையா எதை யாவது காதில் வாங்கிட்டுப் பேசாதே. அவங்களுக்கு நான் பிறந்து ஐந்து வருடம் கழித்துதான். இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன்னால் ஐந்து வருடம் குழந்தை இல்லாத ஒரு பெண்ணை இந்த உலகம் எப்படி எல்லாம் அவமதிக்கும் என்பதை அனுபவிச்சவங்க. அதனால், ஒரு பொண்ணோட மனசை எந்த மாதிரி விஷயங்கள் காயப்படுத்தும் என்று நல்லாத் தெரிஞ்சவங்க. அவங்க இந்த மாதிரி ஒரு வார்த்தையைச் சொல்லி இருக்கவே மாட்டாங்க''

''நான் ஒன்றும் அத்தையைக் குறை சொல்லவில்லை. அவங்க மேலே எனக்கு மரியாதை. அன்பு எல்லாமே இருக்கு'', என்று தன்னிலை விளக்கம் அளிக்க அவனின் வேகம் குறைந்தது. உங்க அம்மா என்று அவள் சொல்ல வில்லை. அத்தை என்று சொல்கிறாள் அதோடு அன்பும் இருக்கு என்று வலியுறுத்துகிறாள் என்ற நிம்மதி பரவியது.

''சந்தியா, நீயாக எதையாவது கேட்டு, அரை குறையாக யோசித்து முடிவும் எடுத்து செயலாக்குவது என்றால் எனக்கு என்ன சொல்வது என்றே புரியலை. என்னை விட்டு விலகிப் போகலாம் என்று முடிவெடுக்க உனக்கு எப்படி மனசு வந்தது சந்தியா?''



''அந்த மாதிரி முடிவெடுப்பது ஒன்றும் சுலபமா இல்லை ராஜீவ். நான் அந்த இரவில் எவ்வளவு தவித் தேன் என்று உங்களுக்குத் தெரியாது...''

''அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு அந்த மாதிரி ஒரு முடிவை ஏன் எடுக்கணும்? எனக்குப் புரியலையே! உன் மனசை எந்த விஷயம் குழப்பது என்று வெளிப் படையா பேசினால் அதுக்கு நான் விளக்கம் சொல்ல முடியும். மனசுக்குள் ஒளித்து வைத்தால் நான் என்ன செய்வது சொல்லு?''

''உங்களுக்காக... நீங்க நல்லா இருக்கணும் என்ப தாக...''

''மண்ணாங்கட்டி! உனக்குக் கொஞ்சமாவது அறி விருக்கா? நீ என்னை விட்டுப் போனால் நான் எப்படி நல்லா இருப்பேன் என்று ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த் தாயா? என்னைப் பார்த்தால், 'ஆஹா! என் பொண்டாட்டி காணாமல் போய்ட்டா...'' என்று நடுரோட்டில குதித்து கும்மாளம் போடும் காமெடி பீஸ் மாதிரி தெரிஞ்சுதா உனக்கு? நீ என்னை எதற்காகக் கல்யாணம் பண்ணி னாயோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் உன்னை விரும்பிக் கல்யாணம் பண்ணினேன்டீ நீ இ...ல்...லா.. வி...ட்...டா...ல். செத்து போய்டுவேன் என்று டயலாக் பேச முடியாது தான். ஆ...னா...ல்... மனசு உடைஞ்சு போய்டுவேன் என்று கூடத் தோணலையா?'', என்று ஆவேசமாக ஆரம்பித்தவன் குரல் கொஞ்சம் கொஞ்ச மாக உடைந்து கடைசியில் காற்றாக முடிந்தது.

ஆவேசமாக ஆரம்பித்து அழுகையில் முடிந்த அந்த சில வினாடி பேச்சில் ஆடிப் போய் விட்டாள் சந்தியா. அவன் தன்னை தேடுவான் என்று தெரியும். இதை எதிர்பார்க்கவில்லையே? அவன் அன்பை ரொம்ப குறைத்து மதிப்பிட்டு விட்டதாக இப்போது தோன்றியது

Optimized by www.ImageOptimizer.net

தான் செய்தது தவறில்லை என்று இன்னமும் எண்ணினாலும், அவன் தவிப்பதை அவளால் தாங்க முடியவில்லை.

''ராஜீவ்... ஐ ஆம் சாரி....'' என்று வருத்தமான குரலில் சொல்லி அவனின் தோளில் கை வைத்தாள்.

''முதலில் கையை எடு...''

''ராஜீவ்... நான்...''

''கையை எடுத்துட்டு எதுவா இருந்தாலும் பேசு...'' என்று கடினமான குரலில் சொல்ல அவள் விலகி, ''நான் ஏதோ குழப்பத்தில்... உங்களுக்கு நன்மை செய்வதாக எண்ணி...'', என்று முனகலாகச் சொன்ன போதே, ''என்ன நன்மை..?'',பட்டென்று அவன் கேள்வி வெடித்த விதத்தில் அழுகை மீண்டும் பொத்துக் கொண்டு வந்தது.

தன் மனநிலை பற்றி எதுவுமே யோசிக்காமல் தன்னை குற்றவாளிக் கூண்டில் நிற்க வைத்துக் கேள்வி கேட்கும் இவன் முன்னால் அழவும் அவமானமாக இருந்தது. சிரமப்பட்டு இமைகளை தாழ்த்தி கண்ணீரை கட்டுப் படுத்தி, எச்சிலை விழுங்கித் தொண்டையை சரிப்படுத்தி, சில கணங்கள் எடுத்து தன்னை ஆசுவாசப்படுத்தி கொண்டு நிமிர்ந்து அமர்ந்து, நேராகப் பார்த்துத் திடமான குரலில் பேசினாள்.

''சூழ்நிலை ஒன்றாக இருந்தாலும், தனி நபர்கள் எடுக்கும் முடிவுகள் அவரவர் திறமைக்கு ஏற்ப மாறுபட லாம். அன்றைய என் மன நிலையில் எனக்குத் தோன்றி யதைச் செய்தேன். நான் செய்தது சரியல்ல என்று மாமா சொன்ன போதே உணர்ந்து விட்டேன். முடிந்து விட்ட ஒரு விஷயத்திற்கு போஸ்ட்மார்ட்டம் அவசியம் இல்லை என்பது என் கருத்து. இதுக்கும் மேலே நீங்க விசாரணை நடத்தியே தீரணும் என்று முடிவு பண்ணினால், உங்



களுக்கு என்ன கேள்விகள் இருக்கோ கேளுங்க, பதில் சொல்றேன்...'', என்று சொன்னவளை பார்த்தான்.

''இந்த விஷயம் முடிந்து விட்டதால் கிளற வேண் டாம் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் இது போல இன்னொரு மோசமான சூழ்நிலை வரவே வராது என்று என்னால் உத்திரவாதம் கொடுக்க முடியாதே! வாழ்க்கையில் மேடு பள்ளம் மாறி மாறி வரும். அப் போது யாராவது எதையாவது சொன்னால்...''

யாரையாவது எதையாவது சொன்னால்.... என்று திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டாம். நான் மதிக்கும் ஒருவர் சொன்னதால் தான். அதுவும் நான் உங்களை என் உயிராய் நினைத்து இருப்பதால் தான், உங்களுக்கு ஒரு கஷ்டம் வர என்னுடைய துரதிர்ஷ்டம் காரணமாக....''

''புல்ஷிட்... எனக்கு வர ஆத்திரத்தில் ஓங்கி ரெண்டு அடி வைக்கலாமா என்று கூடத் தோணுது...'', என்று சொல்லி முடிக்கும் முன்பு அவன் முன்னே வந்து நின்று கன்னத்தைத் திருப்பி காட்டினாள்.

''அடிங்க.. நல்லா அடிங்க... உங்க ஆத்திரம் தீரும் வரைக்கும் அடிங்க...'', என்று சொன்னவளை ஆயாசத் துடன் பார்த்தான்.

''முட்டாள்.... மர மண்டை... உன்னை எனக்கு என்ன பண்ணுவது என்றே தெரியலை. போ. போய் உட்கார். எனக்கு உடம்பு சரியான பிறகு நல்லா நாலு போடுகிறேன். இப்ப எனக்கே தெம்பு இல்லை.....'' என்று சொல்லிவிட்டு, 'இவளின் குழப்பத்திற்கு என்ன காரணம்?', என்று தலையை பிய்க்காத குறையாக யோசிக் கையில் புரிந்தது.

''உங்க அத்தை போனில் பேசிய விஷயத்தை அம்மா என்னிடம் சொன்னதை கேட்டுத் தப்பாக புரிந்து கொண்

டாய் என்று நினைக்கிறேன். எனக்கு விபத்து நடந்ததற்கு உன் துரதிர்ஷ்டம் காரணம் என்று சொன்னது. இன்னொண்ணு எனக்குக் குழந்தை பிறக்குமோ பிறக்காதோ என்று கவலைப்பட்டது. இது ரெண்டுக்கும் நம்ம ஜாதகத்தைப் பார்க்கச் சொல்லி சாவித்திரி தி கிரேட் அட்வைஸ் பண்ணியதாக அம்மா என்னிடம் சொன்னாங்க. இதை அம்மாவுடைய எண்ணமாக நினைத்து நீ குழம்பி இருக்கலாம். ஆனால் நீ வருத்தப் பட என்ன இருக்கு? ரெண்டுமே உனக்கு சாதகமா தானே இருக்கு?''

''உங்களுக்கு விபத்து நடந்ததுக்கு நான் காரணம் என்பது எனக்குச் சாதகமான விஷயமா?''

''எங்கே இருந்து எங்கே தாவுகிறாய்? முதலில் நான் சொன்ன அடிப்படை விஷயத்தைப் புரிந்து கொள். அம்மா சொன்னது ஒரு தொலைபேசித் தகவல். அது அவர்களுடைய அபிப்ராயம் இல்லை என்பது உன் மண்டையில் உரைத்ததா இல்லையா?''

''அது அன்றே கொஞ்சம் நிதானமாக யோசிக்கும் போது புரிந்தது....''

'''ஹப்பா! இப்பயாவது அவசரத்துல எடுக்கும் எந்த முடிவும் சரியானதா இருக்காது என்று புரிந்ததா? இல்லை இன்னும் அதிர்ஷ்டம் பற்றிய எண்ணம் ஒட்டி கொண்டு தான் இருக்கா?'' என்று அவன் கேட்டதற்கு அவளிடம் பதில் இல்லை.

''இவ்வளவு நேரம் வாய் கிழிந்தது. இப்ப எங்கே சத்தத்தை காணோம்?''

''அம்மா மேலே வருத்தம் இல்லை என்று சொன்னேன். அவ்வளவுதான்...'' என்று தலை கவிழ்ந்தபடி முணுமுணுத்தாள்.

''அப்ப இன்னும் இந்த பைத்தியம் தெளியலையா? ஓஹோ! அதனால் தான் அம்மா உன் லோன் பற்றி



கேட்ட போது சாங்ஷன் ஆகலை என்று சொன்னாயாக்கும்?''

''..........''

''சந்தியா நான் நினைவை இழக்கும் போது என் காதில் விழுந்த கடைசி வார்த்தைகள், ராஜீவ் எனக்கு லோன் சாங்ஷன் ஆகிடுச்சு. கடைசி சிந்தனை, ஹெல்மெட் போட வைத்த சந்தியாவிற்கு நன்றி. நான் உயிர் பிழைத்ததே நீ எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்று நான் என்னைப் பார்க்க வருபவர்களிடம் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இது எல்லாம் உனக்குத் தெரியுமா?'' என்று வேகமாகக் கேட்டவனைத் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

## 34

இதுவரை அதிர்ஷ்ட கட்டை என்று பலரால், பல சமயங்களில் தூஷிக்கப் பட்ட தனக்கு, உன்னால் தான் இன்று நான் உயிரோடு இருக்கிறேன் என்ற ராஜீவனின் வார்த்தைகள் பெருத்த நிம்மதியையும் சந்தோஷத்தையும் அளித்தது. நான் உயிர் பிழைத்ததே நீ எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம் என்று நான் என்னைப் பார்க்க வருபவர்களிடம் சொல்லிக் கொண்டு இருக்கிறேன் ராஜீவனின் வார்த்தைகள் சந்தியாவுக்குள் ஏற்படுத்திய இனிய அதிர்வலைகளை உலகத்தில் இன்று வரை கண்டு பிடிக்கப்பட்ட எந்த நவீன கருவியாலும் அளக்க முடியாது.

அவளுக்குள் ஏற்படும் இனிய மாற்றங்களை உணராமல் கோபத்தோடு ராஜீவன் தொடர்ந்து பேசினான்.

''அதிர்ஷ்டம் இல்லை இல்லை என்று பைத்தியம் மாதிரிப்

பேசுகிறாயே? இன்று நான் உன் முன்னால் முழுசா நின்று சண்டை போடுவதற்குக் காரணம் நீ என்னைக் கட்டாயப்படுத்தி போட வைத்த ஹெல்மெட். விபத்து நடந்த இடத்தில் இருந்த ஜல்லிக் குவியலைப் பார்த்தாயா? அதில் வெறும் தலை மோதி இருந்தால் என்ன ஆகி இருக்கும்? அதை விடு. குழந்தை பிறப்பதற்கு ரெண்டு பேரும் முழு ஆரோக்கியத்துடன் மருத்துவ தகுதியோடு இருக்க வேண்டும். இந்த விபத்துக்கு பிறகு நீ என்னை விட்டுப் பிரிவது என்றால், அதற்கு என்ன அர்த்தம் என்று யோசித்தாயா?''. என்று கேட்க அவளுக்குத் திக் என்று இருந்தது.

தாலி கட்டிய கணவனை சிரமமான சூழலில் தவிக்க விட்டுப் போகிறாய் என்று பேச ஒரு வாய்ப்பு இல்லையா? அவளின் திகைப்பை உணராமல், ராஜீவன் கோபம் தொடர்ந்தது.

''என் நன்மைக்காக விலகினாய் என்று வைத்துக் கொண்டாலும், இனி எனக்குக் குழந்தை பிறக்காது என்று இருந்தால் வேறு பெண்ணால் எனக்கு என்ன பயன்? ஏற்கனவே நாம் வாழ்ந்த வாழ்க்கையில் உனக்கு ஒரு குழந்தை உருவாகி இருந்தால் அது பயனை அளிக்கும்...'' என்ற அவனின் கோப வார்த்தைகளில் 'குழந்தை' என்று வார்த்தை சந்தியாவுக்குள் பூமழை பொழிந்தது. நிஜமாவா! இதை அவள் யோசிக்கவே இல்லையே?

''என்னவோ சொல்ல வருவது மாதிரி இருக்கு... என்ன?'' என்று அவளின் முக மாற்றத்தை உணர்ந்து அதட்டலாகக் கேட்டவனுக்கு 'ஒன்றும் இல்லை' என்று தலையை அசைத்தாள்.

அவன் சொன்ன ஏற்கனவே நாம் வாழ்ந்த வாழ்க்கையில் ஒரு குழந்தை உருவாகி இருந்தால் என்ற வாசகத்தில் அவளின் சிந்தனை வேறு திசைக்குச் சென்றது. அவன் பேசியது காதில் ஏறவே இல்லை. இந்த இரண்டு வாரங்கள் மருத்துவமனையில் வேலையாக இருந்ததில்,



…வனிக்கவில்லை. ஆனால் ஒருவேளை அலைச்சலில்
…யான நேரத்தில் வரவில்லையா என்ற சந்தேகம்
…ன்றிய வேகத்தில் மறைந்தது.
…ஹூம்! நாற்பத்தி ஐந்து நாட்கள் ஆகி விட்டதே!
…ந்த விபத்து நாளுக்கு இரண்டு மூன்று தினங்கள்
…ப்பே அவளுக்கு மாத விலக்கு வந்து இருக்க வேண்
…ம். வரவில்லை என்றால் தனக்குள் அவனின் வாரிசு
…வாகிறதா? மற்ற கவலைகள் எல்லாமே பின்னால
…க அவளின் சிந்தனை வேகம் பெற்றது.
…தேய்ந்து போன இசைத்தட்டு மாதிரி. 'உங்களுடைய
…ன்மைக்காக உங்களை விட்டுப் பிரிய முற்பட்டேன்'
…று திருப்பித் திருப்பிச் சொன்ன சந்தியாவின் வார்த்
…தகளில் பொறுமை இழந்து, 'என்னிடம் உன்னைப்
…ற்றி விசாரிப்பவர்களுக்கு நான் பதில் சொல்வதை விடு.
…எங்கே எந்த இடத்தில் எப்படிக் கஷ்டப்படுகிறாயோ
…ற எண்ணம் என்னைத் தூங்க விடுமா சந்தியா?
…தைப் பற்றிக் கவலைப்படாத ராட்சசன் என்றா
…ன்னைப் பற்றி நினைத்து வைத்து இருக்கிறாய்?'' என்று
…ண்டை போட்ட ராஜீவனுக்கு தன்னுடைய கோபம்
…வளை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பது
…யப்பை அளித்தது. அவளின் முகத்தில் இருந்த மலர்ச்
…யும் பிரகாசமும் அவன் வியப்பைக் கூட்டியது.
''சந்தியா... நான் பேசறது உன் காதில் விழுகிறதா?''
…று சப்தமாகக் கேட்ட ராஜீவனின் குரலில் யோசனை
…லைந்து அவனைத் திரும்பிப் பார்த்தவள் புன்னகை
…த்தாள்.
''கடைசியா சொன்ன சில வார்த்தைகள் கேட்கலை.
…னால் உங்கள் கோபம் புரியுது. நான் செய்தது தப்பு
…பதை உணர்ந்து வெகு நாட்களாகி விட்டது. அதற்கு
…ன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதைய என்
…நிலை அப்படி. இனிமேல் இப்படி ஒரு சம்பவம்

Optimized by www.ImageOptimizer.net

நடக்காது. நான் ஏற்கனவே மாமாவிடம் ப்ராமிஸ் பண்ணி இருக்கேன். உங்களிடம் திருப்பிச் சொல்கிறேன். இதுடன் இந்தப் பேச்சை முடித்து விடலாமே!'' என்று கேட்டவளின் கண்ணில் கெஞ்சலும், ஆனால் அதை மீறிய சந்தோஷமும் தெரிந்தது.

''உன்னைக் கஷ்டத்திற்கு ஆளாக்குவது என் நோக்கமில்லை. நல்லதோ கெட்டதோ, நம் இருவருக்கும் கல்யாணமாகி விட்டது. மிச்சம் இருக்கும் வாழ்க்கையை நாம் இருவரும் சேர்ந்துதான் கழிக்கப் போகிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை. நல்லா கவனி. அந்த வாழ்க்கையில் ஏற்ற தாழ்வுகள் இருக்கலாம். என்ன நடந்தாலும் அதுக்குக் காரணம் நீதான் என்று எல்லாத்தையும் உன் தலையில் எடுத்துப் போட்டுக் கொள்ளாதே. வாழ்க்கையை இலகுவாக எடுத்துக் கொள்...''

''பதினைந்து நாட்களுக்கு முன்பு நான் இருந்த மனநிலை வேறே. இப்ப நான் இருக்கும் நிலை வேறே. இப்ப, இந்த நிமிஷம் நான் புது மனுஷி. எனக்குள் இருக்கும் எண்ணங்கள் புதுசு. அதோடு நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்...'' என்று விளக்கம் சொல்ல முயன்றவளை அவசரமாக இடையிட்டான்.

''கேட்க ரொம்ப நல்லா இருக்கு. ஆனால்...''

''ஆனால்... என்ன ராஜீவ்? அப்ப இருந்த தாழ்வு மனப்பான்மை இப்போ இல்லை. எனக்கு அவ்வளவா அதிர்ஷ்டம் இல்லையோ என்று நான் கலங்கியது பழைய விஷயம். நான் உங்களைப் பார்த்த நிமிடத்தில் இருந்து, ஏன் அதற்கு முன்னாலும் கூட எனக்கு நடந்த எல்லாமே நல்லதுக்கு தான் என்று என்னால் உணர முடிகிறது...''

''ஆனால் கொஞ்ச நேரம் முன்னால்கூட...''

''எஸ். கொஞ்ச நேரம் முன்னாடி தான் நான் எவ்வளவு லக்கி என்று ஞானம் பிறந்தது. அதுவும் நீங்க சொல்லித்



தான் தெரிந்து கொண்டேன். நமக்கும் கீழே இருப்பவர் கோடி. காலுக்குச் செருப்பு இல்லை என்று வருத்தப்படுபவர்கள் காலே இல்லாதவங்களைப் பற்றி ஒரு நிமிஷம் நினைத்தால் அவங்க வருத்தம் பறந்து போய்டும் என்று அடிக்கடி சொல்வீங்களே. அது இப்போ நினைவுக்கு வந்தது. அது மட்டும் இல்லை...'' என்று புன்னகையில் முகம் பூரிக்கச் சொல்லி நிறுத்தினாள்.

தான் தாயாகப் போகும் செய்தியைக் கேட்கும் மனநிலையில், அதன் சந்தோஷத்தை முழுமையாக அனுபவிக்கும் நிலையில் அவன் இருக்கிறானா என்று அவனின் மன நிலையை அளக்க முயல, அவன் அவள் பாவனையில் திகைத்து நின்றான்.

''என் வாழ்க்கையில் நான் இதுவரை அனுபவித்த ஒவ்வொரு கஷ்டமான சூழலிலும் ஆறுதல் சொல்ல ஒரு ஆளை அந்த ஆண்டவன் கொடுத்து இருக்கிறான். அப்பா இறந்தபோது, ஆதரவு கொடுத்த மாமா, மாமா இறந்த பின்னாலும் தங்க இடம் கொடுத்த அத்தை. இனிய தோழியாய் கூடவே இருந்து தைரியம் சொன்ன பவித்ரா, ஒரு ஆட்டோக்காரனால் பணத்தை தொலைத்து விட்டு, செல்லும் திசை அறியாமல் திகைத்து நின்ற போது என்னுடன் கூட நின்ற, இனி எப்போதும் நிற்கப் போகிற நீங்க, நமக்கு ஆதரவாக அம்மா அப்பா, இப்ப கூட இரண்டு வாரங்களுக்கு முன்பு விபத்து நடந்த இடத்தில் உங்களை பத்திரமாக மீட்க உதவி செய்த ஆட்டோக்காரர், என்று வாழ்க்கையில் சந்தோஷப்பட நிறைய விஷயங்கள் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது மாதிரி...'' என்று குழந்தையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தவள் நிறுத்தினாள்.

குழந்தை பற்றிச் சொல்லும்போது, அந்த சந்தோஷத்தை, அவனுடன் பகிர்ந்து கொள்ளும் நிமிடம் தன் வாழ்க்கையில் மறக்க முடியாத தருணமாக இருக்க வேண்டும்.



Optimized by www.ImageOptimizer.net

அதற்கு இந்த இடம் சரிப்படாது. அறைக்குள் சென்று விடலாம் படுக்கையில், அவன் அருகில், என்று அவள் இனிய நினைவுகளில் இருக்க அவன் குறுக்கே புகுந்தான்.

"இது எல்லாம் இன்று தான் உனக்குப் புரிந்ததா சந்தியா?"

"அதுக்கு ஒரு நேரம் காலம் வர வேண்டும் இல்லையா? ரொம்ப நேரமா உட்கார்ந்தே இருக்கீங்களே! கால் வலிக்கப் போகுது. ரூமில் படுத்துக்கொண்டே கூட கேள்விகள் கேட்கலாம். நான் கட்டாயம் பதில் சொல்வேன். ரூமுக்குப் போகலாமா?" என்று கேட்டவளின் திடீர் உற்சாகத்தின் காரணத்தை யோசிக்க முயன்றான்.

"உனக்குத் தூக்கம் வருதா?"

"அப்படி இல்லை..."

"ஓகே. நான் முடிச்சுடறேன். நீ சின்ன பெண் இல்லை. வயது வந்த தனி மனுஷி. உனக்கு சம உரிமை கொடுக்க விரும்புகிறேன். உன் வாழ்க்கையில் எல்லா முடிவுகளையும் நீ எடுக்கலாம். ஆனால் ஒரு குழப்பமான சூழ்நிலையில் முடிவெடுப்பதை தள்ளிப் போடு. அல்லது நம்பிக்கையான ஆளுடன் கலந்து பேசி முடிவெடு..."

"உங்களுடைய அட்வைஸ் நூறு சதவிகிதம் ஏற்று கொள்ளப் படுகிறது. இனி எப்போதும் உங்களைக் கலந்து கொள்ளாமல்..."

"நான் என்னிடம் பேச என்று சொல்லவில்லை. அது அம்மாவோ அப்பாவோ, பவித்ராவோ யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்..."

"விவாதமே தேவை இல்லை. ஒத்துக் கொள்கிறேன்..."

"கடைசியா ஒரே ஒரு விஷயம். வாழ்க்கையில் கஷ்ட நஷ்டம் வரத்தான் செய்யும். அந்த மாதிரி சூழலில் எனக்கு மட்டும் தான் இந்தக் கஷ்டம் என்று நினைத்து மனை ஒடிஞ்சு போகக் கூடாது. அடுத்து என்ன என்று யோசிக்க வேண்டும். முயற்சி பண்ண வேண்டும். வாழ்க்கை எப்படி இருக்கு என்பது நம் பார்வையில் தான்



இருக்கு. பார்வையை பாசிடிவா மாற்றிக் கொள். அவ்வளவு தான். நான் ரூமுக்குப் போகிறேன்..." என்று முடித்துவிட்டு எழுந்தவனின் அருகில் வந்து கை கொடுக்க முயன்றாள்.

"இல்லை, பரவாயில்லை... நானே..."

"நானே என்ன நானே...? நீங்களே எல்லாத்தையும் செய்து கொள்வதற்கு இங்கே பெண்டாட்டி என்று ஒருத்தி எதுக்கு இருக்கேன்?" என்று அவன் இடது கரத்தை தன் தோளில் போட்டு அவன் இடுப்பை வளைத்து அணைத்தபடி நடந்தவளின் பேச்சும் உரிமையும் இதமளிக்க, அதை ரசித்தபடி மெல்ல நடந்தான்.

"நீங்க கலகலப்பாப் பேசுவதைப் பார்த்து உங்க அம்மா மாதிரி என்று முன்னால் நினைத்து இருக்கறேன். ஆனால் நீங்க உங்க அப்பாவின் மறு பிரதிபலிப்பு. ஊருக்குப் போகும்போது இதே வார்த்தைகளை மாமா சொன்னாங்க. தன்னம்பிக்கை, நேர்மை, விடா முயற்சி, இறைவன் துணை இருந்தால் வாழ்க்கையில் ஜெயிக்கலாம். பிரச்சனை என்று ஒன்று இருந்தால் அதற்குத் தீர்வும் ஒன்று இருக்கும். உன்னால் கண்டு பிடிக்க முடியலை என்றால் எங்களிடம் வா எந்த சூழலிலும் தயங்கக் கூடாது என்று சொன்னார். அவர் சொன்னதும் நீங்க சொன்னதும் கிட்டத்தட்ட ஒன்று தானே?" என்று சிரிப்புடன் கேட்டவளைப் பார்த்துத் தலை அசைத்தான்.

"என்ன இது? கொஞ்ச நேரம் முன்னாடி வரை என்னை லெப்ட் அண்ட் ரைட் வாங்கிட்டு இருந்தீங்க. இப்ப நான் பேச ஆரம்பித்த உடனே, உங்களிடம் இருந்து சத்தமே காணோம்? என்ன விஷயம்? மௌன விரதமா? இல்லை களைப்பாகிட்டீங்களா?" என்று கேட்டபடி, அவன் படுக்க உதவி செய்தாள்.

வலது காலைப் பற்றித் தூக்கிக் கட்டிலில் கிடத்தி, அருகே தலையணை ஒன்றையும் வைத்துவிட்டு, நிமிர்

Optimized by www.ImageOptimizer.net

வதற்கு முன்பாக அவனின் தலையைக் கோதி, அவன் நெற்றியில் முத்தமிட, அவன் விழித்தான்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க?'' என்று கேலியாக விசாரித்தாள்.

''பத்து நிமிஷம் முன்னாடி இருந்த கோபம், வருத்தம், அழுகை எல்லாம் காணாமல் போய் திடீர்னு ரொம்ப உற்சாகமா இருக்கிற மாதிரி இருக்கு. அதான்...''

''ம், குஷி தான். என் மேல உயிரா இருக்கிற உங்களை மாதிரி ஒரு கணவர் கிடைத்தால் குஷியா இருக்க வேண்டியதுதானே?''

''ஆனால் இந்தக் கணவன் வேண்டாம் என்று...'' ஆரம்பித்தவன் இதழ்கள் அவளுடைய விரல்களால் அழுந்த மூடப்பட்டது.

''நீங்க இன்னும் அந்தக் கோபத்தில் இருந்து வெளியே வரலையா? எவ்வளவு நேரம் அதையே பிடிச்சு வச்சு இருக்கப் போறீங்க? கோபம் வந்து சண்டை போட்டாச்சு. நான் மன்னிப்பும் கேட்டு, இனி நடக்காது என்று உத்திரவாதமும் கொடுத்தாச்சு. அது முடிஞ்சு போன கதை...'' என்று மிரட்டலாகச் சொல்லிவிட்டு கட்டிலின் மறுபக்கம் வந்து ஏறிப் படுத்தாள்.

என்ன போடு போடுகிறாள்? கொஞ்ச முன்னால் கண் கலங்க, முகம் சிவக்க தலை கவிழ்ந்து நின்றதென்ன? இப்போது மிரட்டுவதென்ன? இவள் இப்படி இருக்க வேண்டும் என்பது தானே தன் விருப்பம் என்ற எண்ணம் தோன்றி அவன் முகத்தை மலர வைத்தது.

அவன் முகத்தைத் திருப்பி, ''அதென்ன எப்பப் பார்த் தாலும் நீங்களே உத்தரவாதம் கேட்பது? இப்ப நான் கேட் கிறேன். இப்ப மட்டுமில்லை, இனி எப்போதுமே முடிஞ்சு போன இந்தக் கதையைப் பேச மாட்டேன் என்று நீங்க ப்ராமிஸ் பண்ணுங்க...'' என்று கை நீட்ட, அவள் மேல் இருந்த கோபம் காணாமல் போக, பிரமிப்பாகப் பார்த்தான்.



தன் வலது கரத்தை அவனின் கையில் வைத்து அழுத்தி, 'இனி ஒரு கதை நீ உருவாக்கா விட்டால், இந்தக் கதையை இந்த நிமிடத்தோடு விட்டு விடுவேன்' என்று அவள் கேட்ட உத்திரவாதத்தை மனப்பூர்வமாக கொடுக்கும்போதே தன் எதிர்பார்ப்பை அழுத்தமாகச் சொல்லவும் ராஜீவன் மறக்கவில்லை.

''ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கெட்டி எங்க வீட்டுக்காரர்'' என்று பெருமையாகச் சொல்லி அவனின் கரத்தை தன் கன்னத்தில் அழுத்தியவள் அவனை இன்னும் நெருங்கி ஒட்டிப் படுத்தாள்.

''கோபம் இல்லாதது மட்டும் இல்லை சந்தியா, இன்னொரு விஷயம் எனக்குப் பிடிக்கலை என்றாலும் பெருமையாச் சொல்லியே ஆகணும்...'' என்று இடை வெளி விட அவள் கேள்வியாகப் பார்த்தாள்.

''ஆசிரமத்தில் ஒரு வேலை, ஒரு அறிமுகமான இடம். இரண்டையும் வைத்துக் கொண்டே கோவையில இருந்து சென்னைக்கு கிளம்ப, நீ எவ்வளவு யோசித் தாய்? பவித்ரா உனக்கு தார் குச்சி போட்டு அனுப்ப வேண்டி இருந்தது. ஆனால், இப்போ, அறிமுகம் இல்லாத ஒரு ஊருக்கு, எந்த உத்திரவாதமும் இன்றி கிளம்பத் தயாராகி விட்டாய். அதோடு இன்னொரு விஷயம் கூட பாராட்டணும். மறக்காமல் நீ எடுத்து கொண்ட சர்ட்டிபிகேட், ப்ராஜெக்ட் ரிப்போர்ட் எல்லாமே உன் எதிர்காலத் திட்டத்தை காட்டியது. எதிர்காலம் குறித்த உன் நம்பிக்கையை காட்டுது. நீ மேலே படிப்பு படிக்கவோ, அல்லது வங்கியில் லோன் வாங்கவோ தேவைப்படும் என்று யோசித்து எடுத்துக் கொண்டது ஒரு விதத்தில் திருப்தி தான்...'' என்று சொல்ல அவள் புன்னகையுடன் அவன் வாயை மூடினாள்.

''இது பற்றிப் பேச வேண்டாம் என்று சொல்லலையா?''

Optimized by www.ImageOptimizer.net

''குறை சொல்வது தான் வேண்டாம் என்று சொன்னேன். அதில் உள்ள பாராட்டத் தக்க அம்சங்களைப் பேசலாமே!...''

''இல்லை... எதுவா இருந்தாலும், வேண்டாம். அதை விட நல்ல விஷயங்களைப் பேச நமக்கு நிறைய இருக்கு...''

''ம்ஹூம்! வேறென்ன முக்கியமான விஷயம் பற்றிப் பேசணும்?''

''நம்மைப் பற்றி, நம் எதிர்காலம் பற்றி, நம் குடும்பம் பற்றிப் பேசலாமே.''

''தாராளமாப் பேசலாமே! முதலில் பாங்க்ல உன்னோட லோன் என்ன ஆச்சு என்று சொல்லு. அம்மாவிடம் ஏன் லோன் சாங்ஷன் ஆகவில்லை என்று சொன்னாய்?''

''சாங்ஷன் ஆகலை என்று நான் சொல்லலை. இன்னும் பைனலைஸ் ஆகலை என்று சொன்னேன். இரண்டு வாரம் கழிச்சு அக்ரிமென்ட் எடுத்துட்டு வரச் சொன்னார். இரண்டு நாளில் ஒரு நல்ல வக்கீலைப் பார்த்து அக்ரிமென்ட்டோடு பேங்க் மேனேஜரைப் போய் பார்க்கணும். அதுக்கு முன்னாடி இன்னொரு விஷயம் சொல்லணும். உங்களுக்கு இன்னும் கோபம் கொஞ்ச நஞ்சம் எங்கேயாவது ஒட்டிகிட்டு மிச்சம் இருக்கா...?'' என்று காதோரம் ரகசியம் பேசியவளின் குரல் அவன் உயிர் தொட்டது.

''கோபமா! நீ இப்படி பக்கத்துல படுத்துக் கேட்டால், அதுக்கு இன்னும் இங்கே இருக்க தைரியம் இருக்கா என்ன? உன் கண்ணீரைக் கண்ட நிமிடத்தில் காணாமல் போய் விடுவேன் என்று செல்லமாகச் சண்டை போட்டு மிரட்டிய என் கோபத்தை இவ்வளவு நேரம் நான் இழுத்து வைத்து இருந்ததே பெரிய விஷயம்தான்...'' என்று புன்னகையோடு சொல்ல அவள் சந்தோஷமாக அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.



''தேங்க்ஸ் ராஜீவ்... ஜீவா... ஜீவரேகா கேட்டரிங் சர்விசஸ் என்ற பேர் எப்படி இருக்கு? உங்களுக்குப் பிடிச்ச இருக்கா'' என்று கன்னத்தில் கோலமிட்டபடி, வார்த்தைகளுக்கு துழாவியவளை ஆராய்ந்தான்.

''கஷ்டப்பட்டு வேலை செய்யப் போறது நீ. நீ செய்யப் போகும் தொழிலுக்கு ஏன் என் பேரை வைக்கணும்? உன் பேரையே வைக்கலாம். இப்பதான் நீ ரொம்ப லக்கி என்று சொன்னாய்...'' என்று சொல்ல அவன் கன்னத்தில் செல்லமாகக் குத்தினாள்.

''ம்கூம்... நினைப்பு தான். இது உங்களுக்காக வைத்தது என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். இது எனக்கு நானே வைத்துக் கொண்ட பேர். என்னில் உருவான என்னுடைய ஜீவன். என் எதிர்காலத்தின் நம்பிக்கை கோடு. உங்களில் இருந்து உருவானது. இனி வரும் காலத்தில் உங்களின் பேரை சமூகத்தில் நிலை நாட்டப் போவது... என்ற அர்த்தத்தில் வைத்தது...'' என்று அவள் கனவும் நனவும் கலந்து நம்பிக்கையுடன் சொல்ல அவன் முகம் பூரித்தது.

# 35

'என்னில் உங்களால் உருவான ஜீவன், என் எதிர்காலத்தின் பற்றுக் கோடு' என்ற அடைமொழிகளுடன் சந்தியா பூடகமாகப் பேசியது அவளுக்குள் உருவாக்கி இருக்கும் தன் வாரிசைப் பற்றி என்றதை ராஜீவன் உணர்ந்த வினாடியில் உற்சாக வானில் பறந்தான்.

''ஹேய்! இது... இந்த பேர்... கேட்டரிங் சர்வீசுக்கு மட்டும் சொல்ற மாதிரி தெரியலையே? வேறே ஏதோ

Optimized by www.ImageOptimizer.net

அர்த்தம் வச்சுப் பேசற மாதிரி...'' என்று அவன் உற்சாகமாகக் கேட்ட உடனே அவன் விஷயத்தை ஊகித்து விட்டான் என்ற சந்தோஷத்தில் அவனைக் கட்டிக் கொண்டு மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''இதுக்காக தான் ஹாலில் இருந்து ரூமுக்குப் போகலாமா என்று கேட்டாயா? ஹலோ! மேடம், கொஞ்சம் நிமிர்ந்து என் முகத்தைப் பாருங்க மேடம். இவ்வளவு முக்கியமான விஷயத்தை இவ்வளவு சாவகாசமா சொல்றீங்க? எப்போ கண்டு பிடிச்சீங்க? டாக்டர் பார்த்தாச்சா?'' என்று ஆர்வமாகக் கேட்டவனின் கன்னத்தை ஆசையுடன் வருடினாள்.

''முதலில் உங்களிடம் தான் சொல்வேன் என்று ஏற்கனவே சொல்லி இருக்கேன். இல்லையா? இப்போ தான்... கொஞ்ச நேரம் முன்னாடி நீங்க என்னை திட்டும்போது தான் கண்டு பிடித்தேன். டாக்டரிடம் நாளைக்கு தான் போகணும். பவித்ராவை வரச் சொல்லி போயிட்டு வரேன்...'' என்று சொல்லத் தலையில் செல்லமாகக் குட்டினான்.

''பவித்ரா எதுக்கு? நம்ம குழந்தைய கன்பர்ம் பண்ண நான் தான் வருவேன். அதுக்குத் துணைக்கு அடுத்த ஆளைக் கூப்பிடுவாயா? உதை தான் விழும்...'' என்று மிரட்ட, ''உங்க கால்...'' என்று இழுத்தாள்.

''நாம் ரெண்டு பேரும் குழந்தைங்க கிடையாது. நீ என்னைத் தூக்கிச் செல்லப் போகிறாயா? இல்லை நான் உன்னைத் தூக்கிச் செல்லப் போகிறேனா? இந்த சென்னை பட்டினத்துல கிளினிக் போல வண்டி வசதி கிடையாதா? என்னால் குடுகுடுன்னு ஓட முடியாதே தவிர, உன் கூட வண்டியில் வரவோ, லேபில் டெஸ்ட் ரிப்போர்ட் வாங்க காத்திருக்கவோ என்னால் முடியும் புரிஞ்சுதா? இப்பக் கூடப் பாரு, உன் பாதி வெயிட்டை நான்தான்...'' என்று சொன்ன உடனே அவசரமாக விலகினாள் சந்தியா.

''ஹையோ! நான் பழைய ஞாபகத்தில்... வலிக்குதா...? சாரிங்க...'' என்று பதறியவளை இழுத்துத் தன் மார்பில் சாய்த்தான்.



''என்னுடைய வலது கால் மட்டும் தான் இப்போதைக்கு நான் சொல்ற பேச்சைக் கேட்காது. அங்கே உன் வெயிட் படாமல் பார்த்துக்கோ. அதுவும் இன்னும் ஒரு மாசத்துக்கு மட்டும்தான். மற்றபடி, நான் ஸ்ட்ராங். அதுவும் மேல் பாதி பாடியும் கையும் செம ஸ்ட்ராங். புரிஞ்சுக்கோ. இனிமேல் அங்கே இங்கே நகரும் வேலைக்கே இடமில்லை...'' என்று அழுத்தமாக சொன்னபடி, அவளை தன்னோடு சேர்த்து இறுக்கி அணைத்தான்.

''ஓகே ஹீமேன். உங்க பலம் எனக்குத் தெரியும். ஆனாலும் கொஞ்ச நாளைக்கு ப்ளீஸ்...!'' என்று கொஞ்சலாக சொல்லி விலகி, அவனை ஒட்டிப் படுத்துக் கொண்ட சந்தியாவின் மனம் மட்டும் இன்றி, அவளை பட்டும் படாமல் தன்னோடு சேர்த்து அணைத்து கொண்ட ராஜீவன் மனமும் எல்லை இல்லா மகிழ்வில் நிறைந்து இருந்தது.

சந்தியாவின் கர்ப்பம் உறுதியான உடனேயே, விமலா தன் கணவன் சாப்பாட்டுக்கு கஷ்டப்படுவார் என்ற எண்ணம் கூடத் தோன்றாமல், அடுத்த ஒரு மாதத்தில், தன்னுடைய மருமகளை கவனிக்க சென்னைக்கு இடம் பெயர்ந்தார்.

அதற்கடுத்த மாதத்தில், வங்கி லோன் கிடைத்து விட, ராஜீவனும் முழு குணம் அடைந்து விட, தகுந்த முன்னேற்பாடுகளுடன், விமலாவின் துணை இருக்கும் தைரியத்தில், சந்தியாவின் காலை நேர மசக்கையையும் ஒதுக்கி வைத்து, ஜீவா கேட்டரிங் சர்வீசஸ் நிறுவனம் வெற்றிகரமாக செயல்படத் துவங்கியது.

அதற்கு அடுத்த மாதத்தில், விருப்ப ஓய்வு கொடுத்த மணிகண்டன், பெங்களூரை விட்டு குடி பெயர்ந்து நிரந்தரமாகச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். இந்த இடைப்பட்ட தொண்ணூறு நாட்களில் இரண்டு மாதங்களுக்கும் மேலே விடுப்பு எடுத்து கொண்டு சென்னையில் இருந்தார் என்பது வேறு விஷயம்.

Optimized by www.ImageOptimizer.net

அடுத்தடுத்த மாதங்களில் தன்னம்பிக்கை, தொழில் பக்தி, கடுமையான தர கண்காணிப்பு, எல்லாமே சேர்ந்து, சந்தியாவிற்கு லாபத்தை மட்டுமில்லாமல் நல்ல பெயரையும் ஈட்டித் தந்தது. லோன் கட்டியது போக கையில் இருபதாயிரத்திற்கும் மேலே தாராளமாக நிற்க, கிருஷ்ணாவிடம் பணி புரியும் தொழிலாளர்களுக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்தி, வீட்டில் நடைபெறும் சின்ன விசேஷங்களுக்கு விருந்து தயார் செய்யும் பணியையும் ஏற்றுச் செய்ய ஆரம்பித்தனர்.

தனது வளைகாப்பு விழாவில் சந்தியா தனக்கு மட்டும் இல்லாமல் பவித்ராவுக்கும் சேர்த்தே மூவாயிரம் ரூபாய் மதிப்பிலான பட்டுப் புடவை எடுத்து கொடுத்த சமயத்தில் தான் ஐநூறு ரூபாய்க்கு ஒரு சாதாரண புடவை வாங்கக் கணக்கு பார்த்ததே அவரின் குற்ற உணர்ச்சியை தூண்டி இருக்க வேண்டும்.

அதன் பிறகு ஒரே மாதத்தில் நடந்த பவித்ராவின் வளைகாப்பிற்கு, 'எந்த நேரத்திலும் பிரசவம் நடக்கலாம்' என்ற நிலையில் இருந்த தனது பெரிய வயிற்றையும் பொருட்படுத்தாமல், தானே முன்னின்று, எடுத்து செய்தாள் சந்தியா.

கிருஷ்ணா பணம் கொடுத்தாலும், பவித்ரா உள்ளிட்ட, நெருங்கிய உறவினர்களுக்கு எடுக்க வேண்டிய உடைகள், விழா அன்று தேவையான உணவு, மற்ற ஏற்பாடுகள், அழைப்பாளர்கள், அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சின்னச் சின்ன பரிசுகள், என்று ஒவ்வொன்றையும் திட்டமிட்டு, பிரமாதமாக நடத்திய சந்தியா பரிசளித்த இரண்டு தங்க வளையல்களை பார்த்து வாய் அடைத்து போனார் சாவித்திரி.

அவளுக்கு வளைகாப்பு நடந்த போது, ஐநூறு ரூபாய்க்கு ஒரு புடவை எடுக்க தான் அவ்வளவு தூரம் கணக்குப் பார்க்க, அவள் நின்ற நிலையில், ஐம்பதாயிரம் ரூபாய்



மதிப்பிலான மூன்று பவுன் வளையல்களை பவித்ராவின் கையில் அணிவிக்க அவர் அசந்து தான் போனார்.

அவளை தான் கவனிக்காத போதும், தன் கையால் உணவு உண்டதை நன்றி மறவாமல், சந்தியா செய்த பொருட்களால் ஆன உதவி மட்டுமில்லாமல் அளித்த கௌரவமும் சேர்ந்து சாவித்திரி என்ற கல்லையும் கரைய வைத்தது.

பவித்ராவின் வளைகாப்பு முடிந்த மூன்றாவது நாள், அழகான ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்த சந்தியாவின் குழந்தைக்கு, தனது சொந்த செலவில், ஒரு பவுனில் சங்கிலி பிறந்த வீட்டு சீராக தன் சொந்த காசில் கொண்டு வந்து போட்டது. சந்தியாவின் வாழ்க்கையில் ஒரு முக்கிய மைல் கல் என்பதை சொல்லவும் வேண்டுமா?

ஆறு மாதங்களுக்கு பின்பு....

''சந்தியா, ஜீவா தூங்கிட்டு இருக்கும்போதே ரோட்டரி க்ளப் சார்பில் நடத்தும், 'சாலை பாதுகாப்பு வார' விழாவிற்கு போயிட்டு சீக்கிரம் வரணும் என்று சொல்லி இருந்தேனே! மணியாச்சும்மா இன்னும் என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறாய்?'' என்று கேட்டபடி உள்ளே வந்த ராஜீவன், அவள் 'ஒரு நிமிஷம்' என்று போனை ஜாடை செய்து காட்ட சிரிப்போடு அருகில் அமர்ந்து கவனித்தான்.

''அதுக்கென்ன ஆன்ட்டி, உங்க பொண்ணு வளைகாப்பு விழாவை பிரமாதமா செய்துடலாம். எத்தனை பேர் வருவாங்க?''

''..........''

''ஐம்பது பேரா? நாற்பது கேசரி பொங்கல், ஆளுக்கு ரெண்டு இட்லி சட்னி சாம்பார் பண்ணிடறேன். வடை மட்டும் கூடுதலா பத்து வாங்கிகோங்க ஆன்ட்டி...''

''..........''

''நிச்சயமா என் பிசினசுக்காக சொல்லலை ஆன்ட்டி. யாருக்கும் எதுவும் இல்லை என்ற பேர் வராமல் நிறைவா

இருக்கும். அதுக்காகத் தான் சொன்னேன். அந்த பத்து வடைக்கு நீங்க பணமே தர வேண்டாம். உங்க பொண்ணு வளைகாப்புக்கு என்னுடைய கிப்டா இருக்கட்டும்...''

''.........''

''எல்லாம் உங்களை மாதிரிப் பெரியவங்க ஆசீர்வாதம் தான் ஆன்ட்டி. மதியத்திற்கு கலந்த சாதம் ஏழு வகை பண்ணி தந்துடறேன். உருளைக்கிழங்கு காரக்கறி, அப்பளம், சிப்ஸ், ஊறுகாய் என்று ஜமாய்ச்சுடலாம் ஆன்ட்டி...''

''சொல்லிட்டீங்க இல்லையா? சாப்பாடு பற்றிய கவலையை விடுங்க. நீங்க சொல்ற டைமுக்கு சூப்பரான சாப்பாட்டை உங்க வீட்டு அடுக்களைக்குள் கொண்டு வந்து இறக்குவது என் பொறுப்பு'' என்று உறுதி அளித்த சந்தியாவைப் பெருமையாக பார்த்தான் ராஜீவன்.

''ஹலோ! இப்படி என்னையே பார்த்துக் கொண்டு நின்றால் எப்படி? மணியாச்சு என்று கொஞ்ச நேரம் முன்னால் குதிச்சீங்க. நான் இப்ப ரெடி. கிளம்பலாம்...'' என்று அவன் கண் முன்னால் தன் கைகளை ஆட்டிய சந்தியா, பேபி பிங்க் வண்ணத்தில், வெள்ளை ஜரிகை பூக்கள் போட்ட டிசைனர் சாரி அணிந்து, பொருத்தமான அணிகலன்களுடன் அவளே பெரிய ரோஜாவாக மின்னி கொண்டு இருந்தாள்.

''இப்படி கண் முன்னால் ஐந்தரை அடி ரோஜாவாக ஒயிலாக நிக்கும்போது, சாலை பாதுகாப்பு வார விழாவுக்கு கட்டாயம் போகணுமா என்று யோசிக்கிறேன்...''

''அதென்ன எப்ப பார்த்தாலும் பொண்ணு என்றால் அழகை மட்டும் சொல்றது? அவங்க அறிவு திறமை எல்லாம் சொல்றது கிடையாதா? அதெல்லாம் உங்க கண்ணில் படாதா? ராஜீவ்... நோ... கிட்டே வராதீங்க. டைம் ஆச்சு. குழந்தை முழித்து விடுவாள். வேண்டாம். போயிட்டு வந்து பேசிக்கலாம்...'' என்று அதட்டலாக



ஆரம்பித்தவளின் குரல், அவனின் பார்வை மாற்றத்திலும், நெருக்கத்திலும் குழைந்து ரகசியமாக மாறியது.

''இன்னும் பத்து நிமிஷத்துல கிளம்பலாம்'' என்றவன் கரங்கள் அவளை அருகே இழுத்தது.

''அழகு என்பது பார்த்த உடனே கண்ணில் படும். புத்திசாலித்தனமும் திறமையும் பார்த்து பழகினால் தானே கருத்தில் பதியும். உனக்கு அதிலும் குறைச்சல் இல்லை அம்மணி. என் செல்லக் குட்டி செம ஸ்மார்ட் தான்...'' என்று சொல்லியவன் அவளை அணைத்து கன்னத்தில் இதழ் பதித்தான்.

''அப்படி நான் ஸ்மார்ட் என்றால் அது உங்க பயிற்சி தானே? அதனால் பாராட்டும் உங்களுக்கு தான்...''

''ம்ஹூம்!... கிடையாது. நான் ஒரு டீச்சர். கிளாஸ்ல இருக்கும் எல்லோருக்கும் ஒரே பாடத்தை ஒரே மாதிரி சொல்லி கொடுத்தாலும், வகுப்பில் இருக்கும் மாணவர்கள் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மார்க் வாங்கறது எப்படி? அது உன் திறமை தான். அதனால் பாராட்டு உனக்கு தான்...''

''இல்லை உங்களுக்கு தான்...''

''இல்லை உனக்கு தான்...''

''ப்ச்! நான் எதை சொன்னாலும் கேட்கவே கூடாது என்று முடிவே பண்ணி வச்சு இருக்கீங்களா?'' என்று அதட்டலாக கேட்டவளை இழுத்து ஆசையுடன் அணைத்தான்.

''நீ என்ன சொன்னாலும் கேட்கணும் என்று தான் நினைத்துக் கொண்டு இருக்கிறேன். நீ சொல்றது சரி இல்லை. உண்மையிலேயே உன்னைப் பாராட்டணும்...''

''அப்படி எல்லாம் இல்லை. உங்களால் தான்...''

''சரி உன் திருப்திக்காக இப்படிச் சொல்கிறேன். என்னை பார்க்கும் முன்பு கல்லாய் இருந்தாய். உனக்குள் ஒளிந்து இருந்த சிற்பத்தை நான் கண்டு பிடித்து வெளி கொணர்ந்தேன். அவ்வளவு தான். ஆனால் எல்லா கல்லையும் சிற்பமாக வடிக்க முடியாது. உனக்குள் இருந்த திறமை என் கையால் வெளி வந்து இருக்கு ஓகே?'' என்று கேட்டான்.

Optimized by www.ImageOptimizer.net

அவள் புன்னகையுடன் 'கரெக்ட்' என்று தலை அசைத்த நேரம், அவளின் அலைபேசி 'வெற்றி மீது வெற்றி வந்து உன்னைச் சேரும். அதை வாங்கி தந்த பெருமை எல்லாம் உன்னைச் சேரும்' என்று அலைபேசி பாடி ஒலி எழுப்ப ராஜீவன் புன்னகை செய்தான்.

''ஆஹா! அடுத்த போன் வந்தாச்சே! போன் ரிங் டோனை பாரேன். கலக்கல் போ. இனி மேடம் தொட்டது எல்லாம் வெற்றி தான். மணியாச்சு. வா வண்டியில் போயிட்டே பேசலாம்'' என்று இறுக்கி அணைத்து அவசர மாக முத்தமிட்டு, விடுவித்தான்.

பைக் சாவியோடு, தனக்கும் தன் மனைவிக்கும் சேர்த்து இரண்டு ஹெல்மெட்டையும் மறக்காமல் எடுத் தான். பேசி முடித்து வண்டியில் ஏறியவள், ''தேங்க்ஸ் ராஜீவ்...'' என்று சொல்லி மறக்காமல் ஹெல்மெட்டை அணிந்தாள்.

தன்னம்பிக்கை மிளிரும் தனி மனுஷியாக மட்டுமில் லாமல், ஒரு குடும்பத் தலைவியாக, ஒரு தொழிலை துவங்கி வெற்றிகரமாக நடத்துவதோடு, சமூக அக்கறை யுடன், தான் கடைபிடித்து பலன் பெற்ற கொள்கைகளை சாலைப் பாதுகாப்பு வார விழாவில், பகிர்ந்து கொள்ள, இதோ கை பிடித்த கணவனுடன் கிளம்பி விட்டாள் சந்தியா.

இந்த இனிய பயணம் தடைகற்களை படிகற்களாக மாற்றி வெற்றி என்ற சிகரத்தை தொடும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு ஆண்மகனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால் இங்கே, அந்த வெற்றி இலக்கை சந்தியா தொட, அவள் கைப்பிடித்த கண்வன் நிழலென அவள் பின்னால் என்றென்றும் துணை நிற்பான் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இனி எல்லாம் சுகமே!

*

Optimized by www.ImageOptimizer.net